D
V211,31'N97
N97.31.1
216831

வெளியீடு 17-6-98 Issued 17-6-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 16, 1997 – தொகுதி 31 – எண் 1

Wednesday the 16th April, 1997 – Volume 31 – No. 1

ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

16–04–1997

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-xi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| 1. அறிக்கைகள் அளித்தல்-- | |
| மதிப்பீட்டுக் குழு | 1 |
| 2. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | 2-4, |
| (அ) கோரிக்கை எண் 51--தமிழ் வளர்ச்சி-பண்பாடு; (ஆ) கோரிக்கை எண் 28--தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் | 4-7,9-132 |
| *மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 4 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 7,110-127 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 9-17 |
| திரு. ச. க. வெங்கடேசன் | 18-21 |
| *திரு. கே. சுப்பராயன் | 22-31 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 31-43 |
| *திரு. ஆ. நடராசன் | 44-50 |
| *திரு. பி. என். வல்லரசு | 50-53 |

| | பக்கங்கள் |
|---|---|
| 2. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| திரு. சீ. வெ. கிருஷ்ணன் | 53-56 |
| *திரு. டி. மணி | 56-64 |
| திரு. ஏ. ராசேந்திரன் | 64-67 |
| *திரு. முகம்மது கோதர் மைதீன் | 67-69 |
| திரு. சி. வேலாயுதன் | 69-75 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 75-77 |
| திரு. ந. பூ. இராமஜெயம் | 77-81 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 82-86,88-93 |
| திரு. பி. வெங்கடசாமி | 94-97 |
| *திரு. வி. ஜி. தனபால் | 98-100 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 100-109 |
| 3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்-- | |
| (அ) அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குதல் | 7-9 |
| (ஆ) மாநில மனித உரிமைகள் ஆணையம், தலைவர், உறுப்பினர்கள் நியமனம் | 97-98 |
| 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 133 |


216831



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே.என். நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பாற்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், நிறுமப் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன் :
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி :
வனம், சின்கோனா, கால்நடைப் பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passports.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugham :**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan :** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** : **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** : **The Hon. Dr. M. Thamizhkudimagan :** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution and Co-operation** : **The Hon. Thiru K.N. Nehru :** Food, Price Control and Civil Supplies and Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** : **The Hon. Thiru K. Sundaram :** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan :** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** : **The Hon. Thiru V. Thangapandian :** Commercial Taxes.



15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N.K.K. Periasamy :** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneerselvam :** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** : **The Hon. Thiru Pongalur N. Palanisamy :** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi :** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy :** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan :** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** : **The Hon. Pulavar B.M. Senguttuvan :** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** : **The Hon. Tmt. S.P. Sarkuna Pandian :** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

| | | |
|---|---|---|
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | : | **The Hon. Thiru N. Suresh Rajan :** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi and Printing** | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu :** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| 26. **Minister for Fisheries** | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran :** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ. சு. ஜானகிராமன்

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்**
**முக்கிய அலுவலர்கள் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | திரு. டி. சாலமன் ஜெயபால்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| *2.* | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| *3.* | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| *4.* | திரு. டி. சுந்தரராஜலு,<br>எம். ஏ. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| *5.* | திரு. கா.ப. இராஜன்,<br>டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *6.* | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *7.* | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *8.* | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *9.* | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *10.* | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *11.* | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புச் செயலாளர் |
| *12.* | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| *13.* | திரு. எம். ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| *14.* | திருமதி வீ. நா. உமா,<br>பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| *15.* | திரு. சு. ராஜகுரு, | .. | குழு அலுவலர் |
| *16.* | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| *17.* | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 31. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 32. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 35. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகர்ராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
32. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன் தா... சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

65. கோபால், திரு. பா. .. மேட்டூர்
66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்
75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... சமயநல்லூர் (செ.வ.)
78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
80. சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் [illegible]தாகிருஷ்ணன் நகர்
81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
90. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
91. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
99. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
101. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
104. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை

109\. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110\. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

111\. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

112\. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

113\. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

114\. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

115\. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

116\. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

117\. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை

118\. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

119\. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

120\. தங்கவேல், திரு. அ.ல. .. சேலம்-2

121\. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)

122\. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)

123\. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்

124\. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

125\. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

126\. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

127\. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

128\. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

129\. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்

130\. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



131\. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

132\. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி

133\. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

134\. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்

135\. துரை, திரு. க. .. திருவெறும்பூர்

136\. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

137\. துரைமுருகன், திரு. .. காட்பாடி

138\. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

139\. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

140\. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

141\. நடராஜன், திரு. டி. .. செஞ்சி

142\. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

143\. நன்னன், திரு. கொ.வி. .. செங்கம் (செ.வ.)

144\. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

145\. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி

146\. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்

147\. நேரு, திரு. கே.என். .. லால்குடி

148\. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)

149\. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1

150\. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)

151\. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

152\. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு

153\. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

| | | |
|---|---|---|
| 154. பன்னீர்செல்வம், திரு. மு. | .. | சீர்காழி (செ.வ.) |
| 155. பாண்டுரங்கன், திரு. என். | .. | பெரணமல்லூர் |
| 156. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. | முதுகுளத்தூர் |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | .. | பவானி |
| 158. பாலசுப்பிரமணியன், திரு. ப. | .. | பட்டுக்கோட்டை |
| 159. பிச்சாண்டி, திரு. கு. | .. | திருவண்ணாமலை |
| 160. புகழேந்தி, திரு. இ. | .. | கடலூர் |
| 161. புரட்சிமணி, திரு. எஸ். | .. | மங்களூர் (செ.வ.) |
| 162. பூவேந்தன், திரு. த. | .. | பழனி (செ.வ.) |
| 163. பெரியசாமி, திரு. இ. | .. | ஆத்தூர் |
| 164. பெரியசாமி, திரு. என். | .. | தூத்துக்குடி |
| 165. பெரியசாமி, திரு. என்.கே.கே. | .. | ஈரோடு |
| 166. பெரியசாமி, திரு. நா. | .. | பெருந்துறை |
| 167. பெருமாள், திரு. வி. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 168. பெர்னார்டு, திரு. இரா. | .. | குளச்சல் |
| 169. பொங்கலூர் நா. பழனிச்சாமி, திரு. | .. | சிங்காநல்லூர் |
| 170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். | .. | பல்லடம் |
| 171. பொன்முடி, டாக்டர் க. | .. | விழுப்புரம் |
| 172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 173. மகேந்திரன், திரு. ஆர். | .. | நாட்ராம்பள்ளி |
| 174. மணி, டாக்டர் அ. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. | .. | நெல்லிக்குப்பம் |



| | | |
|---|---|---|
| 176. மணி, திரு. கோ.சி. | .. | கும்பகோணம் |
| 177. மணி, திரு. டி. | .. | விளவங்கோடு |
| 178. மணி, திரு. ஜி.கே. | .. | பெண்ணாகரம் |
| 179. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. | .. | திருநாவலூர் |
| 180. மணிநாடார், திரு. எஸ்.எஸ். | .. | சாத்தான்குளம் |
| 181. மணிமாறன், திரு. இரா. | .. | திண்டுக்கல் |
| 182. மணிவர்மா, திரு. கே. | .. | தண்டராம்பட்டு |
| 183. மதிவாணன், திரு. இரா. | .. | இராயபுரம் |
| 184. மதிவாணன், திரு. செ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 185. மனோகரன், திரு. கு. | .. | தர்மபுரி |
| 186. மாயவன், திரு. தி.ப. | .. | ஸ்ரீரங்கம் |
| 187. மாரி அய்யா, திரு. | .. | புதுக்கோட்டை |
| 188. மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். | .. | அரவக்குறிச்சி |
| 190. முகம்மது கோதர் மைதீன், திரு. | .. | பாளையங்கோட்டை |
| 191. முத்து, திரு. வி. | .. | சங்கரி (செ.வ.) |
| 192. முத்துராமலிங்கம், திரு. எம். | .. | திருமங்கலம் |
| 193. முபாரக், திரு. பா.மு. | .. | கடலூர் |
| 194. முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 195. முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 196. முனிரத்தினம், திரு. ஆ.மு. | .. | சோளிங்கர் |
| 197. மூக்கப்பன், திரு. இரா. | .. | சின்னசேலம் |

198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
201. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி
204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
213. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை
218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி



220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
221. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
222. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
223. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
225. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 3, ஈஸ்வர — திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 ஏப்ரல் 16, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*" நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு. "*

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

[**குறிப்பு:—** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிக்கைகள் அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளிக்க மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.*

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான் மதிப்பீட்டுக் குழுவின் ஒன்று முதல் மூன்று வரையிலான அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்.*

## 2. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51 —தமிழ் வளர்ச்சி - பண்பாடு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.16,88,39,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2720, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அரசு அலுவலகங்களில் கோப்புகள் அனைத்தும் தமிழில்தான் எழுதப்பட வேண்டும் என்ற நிலை கடைப்பிடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,88,39,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2722, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,88,39,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2723, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,88,39,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2731, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ் நாடு அரசு நடத்தும் அரசு பொருட்காட்சி அரங்கில் ஒரு நாளாவது தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுகிற நிகழ்ச்சியை வைத்து சிறந்த பாடல்களுக்கு பரிசு வழங்கி, கௌரவப்படுத்தி தமிழர் பண்பாடு வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,88,39,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1224, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir,

'To discuss the need to expedite the sanction of pension to those who fought for the development of Tamil', I move—

"That the amount of Rs.16,88,39,000/- allocated under Demand No.51 - Tamil Development-Culture be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, பேரவையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) மானியக் கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28, தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.82,02,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2365, திரு. சி. ஞானசேகரன்.

@ 135 முதல் 176 பக்கங்கள் வரை இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2371, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2372, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2348, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை மாவட்டம், பசுமலை மகாலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் 8-10-1996 முதல் மூடிக் கிடப்பதை உடனடியாகத் திறந்து 600

தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2385, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2357, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY :** Hon. Speaker Sir, 'To discuss the need to stop the contract labour system in the State of Tamil Nadu' I move—

"That the amount of Rs.82,02,63,000/- allocated under Demand No.28 - Labour including Factories be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2375, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் ஒப்பந்தப் பணியாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,02,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்ற பதிவேட்டில் பதிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கான விளக்கத்தினை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

### (அ) அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அகவிலைப்படி வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குவதற்கு முன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அகவிலைப்படி வழங்குவது சம்பந்தமாக ஓர் அறிக்கையை அவையிலே வைப்பதற்கு அனுமதி கோரியிருக்கின்றார்கள். அதற்கான அனுமதியைத் தருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் மைய அரசு அலுவலர்களுக்கு இணையாக அகவிலைப்படி வழங்கப்படும். அதன்படி மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 159 விழுக்காடு என்பது

@ 177 முதல் 265 பக்கங்கள் வரை இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

170 விழுக்காடு எனவும், மாதம் ரூ.3,000/-க்கு மேல் ஊதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும் உயர்த்தி அகவிலைப்படி வழங்கப்படும். இதனால், குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.82/- ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ. 513/- ஆகவும் இருக்கும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய முறையில் சம்பளம் பெறும் அனைத்து அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் வருவாய்த் துறையிலே பணிபுரியும் கிராம உதவியாளர்களுக்கும் பொருந்தும்.

அரசு அலுவலர்களின் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கு 1-1-1997 முதல் பின்வருமாறு ஊதிய உயர்வு (adhoc increase) வழங்கப்படும்:-

மாதம் ரூ.150/-க்குக் குறைவாக மதிப்பூதியம்
அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ. 10/-

மாதம் ரூ.150/-ம் அதற்கு மேலும் மதிப்பூதியம்
அல்லது தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு .. மாதம் ரூ. 20/-

இந்த உயர்வு சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்கள் உள்ளிட்ட மதிப்பூதியம் மற்றும் தொகுப்பூதியம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும். மேலும், ஊதியக் குழுவின் சம்பள விகிதங்களுக்கு அப்பாற்பட்டு சம்பள ஏற்றமுறையில் உள்ள சத்துணவு அமைப்பாளர்கள் போன்றவர்களுக்கு ஏற்கெனவே 125 விழுக்காடு அகவிலைப்படியும், 23 விழுக்காடு கூடுதல் அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்குக் கூடுதல் அகவிலைப்படி 23-லிருந்து 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு சனவரி 1997 முதல் ரொக்கமாக வழங்கப்படும். இதனால் சுமார் 12 இலட்சம் அலுவலர்கள் பயன்பெறுவார்கள்.

அதேபோல், தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசில் கொடுத்திருப்பதுபோல், மேலும் ஒரு அகவிலைப்படி தவணை 1-1-1997 முதல் வழங்கப்படும்.





அதன்படி ரூ.1,750/- வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 159 விழுக்காடு என்பது 170 விழுக்காடு எனவும், ரூ.1,750/-க்கு மேல் ரூ.3,000/- வரை பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 119 விழுக்காடு என்பது 128 விழுக்காடு எனவும், ரூ.3,000/-க்கு மேல் பெறுபவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் அகவிலைப்படி 103 விழுக்காடு என்பது 110 விழுக்காடு எனவும் உயர்த்தி அளிக்கப்படும். இதனால், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்கு குறைந்தபட்சம் ரூ.41/-ம், அதிக பட்சம் ரூ.315/-ம் பணப்பயன் அடைவார்கள்.

முற்பகல் 9-40

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி, தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், உள்ளாட்சி மற்றும் அரசு மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் மாதம் ரூ.150/- கருணைத் தொகை பெறுபவர்கள் உட்பட, எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால், ஏறக்குறைய 2.86 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு மொத்தமாக 206.19 கோடி ரூபாயாகவும், நடப்பாண்டில் இச்செலவினம், 274.92 கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி-பண்பாடு**— *தொடர்ச்சி.*

**(ஆ) கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்** — *தொடர்ச்சி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று, இந்த இனிப்பான அறிக்கையோடு, இந்த விவாதம் தொடங்குகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களை விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு அழைக்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிப்பான செய்தியோடு இந்த அவை தொடங்குகிறது

என்று குறிப்பிட்டீர்கள். அதேபோல், நேற்று ஒரு விழாவிலே பேசிய தமிழக முதலமைச்சர் அவர்கள், புதுடில்லியிலே இருந்த உஷ்ணமான காற்று, இன்றைக்கு மாறியிருக்கிறது என்ற குளிர்வான செய்தியைத் தமிழர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் நன்றி சொல்லி, தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும் இந்த நல்ல வேளையிலே, 'தமிழ் வளர்ச்சி-பண்பாடு' பற்றிப் பேசுகிற வாய்ப்பு கிடைத்ததற்கு, நான் நன்றி கூறுகிறேன்.

'காவிரி' வேண்டுமானால், நடுவர்மன்றத்தில் இருக்கலாம்; ஆனால், காவிரியின் மைந்தர்களோ, இன்று இந்தியாவின் நடுவர்களாக, நாயகர்களாக நிற்கின்ற இந்த இனிய வேளையிலே பேசுகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றமைக்காக உண்மையிலேயே மகிழ்கிறேன்.

'அன்பு கொள்வோம்' என்ற தலைப்பிலே, 'அன்பின் வழி' என்று செயல்படும் தமிழக முதலமைச்சர் அவர்களையும் பண்பின் சிகரமாக விளங்குகிற மக்கள் தலைவர் ஐயா அவர்களையும் நான் இங்கே வணங்கி, என் விவாதத்தைத் தொடங்குகிறேன்.

சித்திரை 3-ஆம் நாளான இன்று, தமிழர்களுக்கு ஒரு புரட்சிகரமான செய்தியை, நான் இங்கே எதிர்பார்க்கிறேன். தமிழ்ப்புத்தாண்டு, சித்திரை முதல் நாள் அன்று வழக்கமாகக் கொண்டாடப்படுகிறது. வட மொழிகளிலே சொல்லப்படுகிற 60 ஆண்டுகளின் பெயர்களைக் கொண்டு, இந்த ஆண்டு வழக்கம் இருந்து வருகிறது. தை முதல் நாளே, தமிழர்களுக்குப் புத்தாண்டாக இருப்பதற்குத் தகுதி என்ன? இந்தக் கேள்விக்கு என்னிடத்தில் ஒரே ஒரு பதில்தான் உண்டு. "மானமங்கையர் மஞ்சள் நிற முகத்திலே குங்குமப் பொட்டு வைக்க என்ன தகுதியோ, அந்தத் தகுதி, தைப் பொங்கலில், தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாட உண்டு. தரம் உண்டு. தமிழர்களுக்குத் தாய்மொழியாம் தமிழ் உண்டு; தாம் உண்டு. தமிழ் இலக்கியத்தில் நன்மான வரலாறு உண்டு. இவ்வுலகில் ஆனால், ஆண்டு மட்டும் அவளைவிட்டு மாண்டது ஏனோ? கோட்டை கட்டி ஆண்ட தமிழ் மன்னர்கள், தமிழ் ஆண்டை மட்டும் கோட்டை விட்டனர். பிறமொழி ஆண்டுகளுக்குத் தமிழர் அடிமை ஆனதால், ஆண்டு அதனால்தான் 60 வருடம் என்று நம் ஆண்டுக் கணக்கு ஆயிற்று. இதற்கு ஓர் கதையும் அன்றே பிறந்தது" என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.





சென்னை மாகாணத்தை, தமிழ் மாநிலம், தமிழ்நாடு என்று அறிவித்த பெருமை, பேரறிஞர் அண்ணா அவர்களையே முதலமைச்சராக இருந்தபோது—சாரும் என்பதிலே யாருக்கும் ஐயப்பாடு இல்லை. அதேபோல், பம்பாயை மும்பையாக்கிய தருணத்திலே, மதராஸ் என்று இருந்ததை, சென்னை என்று ஆக்கி, இன்றைக்கு வெளி மாநிலங்களுக்குச் செல்கிறபோது, மெட்ராஸ் என்பதற்குப் பதிலாக, சென்னை என்று அவர்கள் உச்சரிக்கும்போது, நாம் புளகாங்கிதம் அடைகின்ற ஒரு நிலையை ஏற்படுத்திய பெருமையும், இந்த கலைஞர் அரசுக்கு உண்டு.

சொல்வதைச் செய்கின்ற அரசாக இந்த அரசு இருப்பதனால், தமிழ்ப் புத்தாண்டைத் தமிழ் முதல் நாளாக, தமிழ் முதல் நாள் பிறப்பதாக, அரசு பூர்வமாக விழாவிலே அறிவித்ததுபோல— அதேநேரத்தில் அவ்வாறு அறிவித்ததை—அதிகாரபூர்வமாக, அரசு முத்திரையுடன் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அறிவிப்பதன் மூலமாக, உலகமெல்லாம் கொண்டாடுகிற பொதுமறையின் நாயகனாக இருக்கின்ற திருவள்ளுவர் அவர்களுடைய பெயரிலேயே, 'திருவள்ளுவர் ஆண்டு' விளங்கும் என்பதிலே ஐயம் இல்லை. அந்தவகையிலே, ஓர் அதிகாரபூர்வமான அறிவிப்பினைத் தமிழக அரசு இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே வெளியிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழுக்கு என்று ஒரு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தி, தமிழைப் பரவலாகப் பரப்புகிற பணியிலே இந்த அரசு சிறப்பாகச் செயல்படுகிறது. அதற்காக, தமிழக முதல்வரையும், தமிழக அரசின் சார்பிலே பணியாற்றுகிற தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி அவர் செய்கிற செய்கைகள் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45

விளம்பரப் பலகைகளிலே, தமிழ் இடம் பெற வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் கடுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. தமிழிலே பெயர்ப் பலகை இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருந் தாலும்கூட அதையும் மீறி இன்றைக்கு ஆங்கிலத்திலே, பிற மொழிகளில் பெயர்ப் பலகைகள் வைக்கின்ற வழக்கம்தான் நம்மிடையே காணப்

படுகிறது. இதற்குத் தண்டத் தொகை, அபராதத் தொகை விதிக்கப்பட்டிருந்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்தும் வண்ணம் ஒரு கடுமையான சட்டம் இயற்றப்பட வேண்டும். தமிழிலே பெயர்ப் பலகை இல்லையென்றால் அந்தப் பண்டகசாலைக்கு அல்லது அந்த நிறுவனத்திற்கு உரிமம் புதுப்பிப்பதிலே அனுமதி கொடுக்கக்கூடாது என்ற ஒரு கடுமையான வரையறையை நாம் நிர்ணயிக்க வேண்டும். அப்படி நிர்ணயித்தால்தான் நாம் சொல்கிற அந்த நல்ல நடைமுறையை அவர்கள் பின்பற்றுவார்கள். Relaxation என்று சொல்லப்படுகின்ற அந்தத் தளர்வு செய்கிற வழக்கத்தை நாம் கொண்டிருப்போமானால் நிச்சயமாக என்னதான் சட்டம் போட்டாலும்கூட, அந்தச் சட்டம் நடைமுறைக்கு வர ஏதுவாக இருக்காது.

அதேபோல தமிழகத்திலே இருக்கின்ற ஊர்களின் பெயர்கள் அனைத்தும் தமிழிலே இருக்க வேண்டும் என்பது தமிழர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். மாயூரம் என்பது மயிலாடுதுறை என்று ஆனதைப்போல, எப்படி அண்மையிலே இருக்கின்ற கேரளாவில் ட்ரிவேன்டிராம் என்று சொல்லப்படுகிற ஊர் திருவனந்தபுரம் என்று அழகான சொல்லிலே வழங்கப்படுவதைப் போல, நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை ஊர்களும் தமிழிலேயே பெயரிடப்பட வேண்டும். அதற்கான சட்டத் திருத்தங்கள் கொண்டுவந்து, நடுவண் அரசினுடைய இசைவைப் பெற்று தமிழில் இல்லாத பெயர்களே தமிழ்நாட்டிலே இல்லை என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

அதேபோல தமிழ்வழிக் கல்வியிலே பொறியியலையும், மருத்துவ இயலையும் நாம் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். பொறியியலைப் பொறுத்தவரையில் பல முன்னோடிகள் அதற்கான முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள். மருத்துவத்தைப் பொறுத்தவரையில் எனக்குக் கற்பித்த போராசிரியர், குறிப்பாக மறைந்த பண்டிதர் கதிரேசன் போன்ற பேராசிரியர்கள் மருத்துவத்தைத் தமிழ்ப்படுத்துவதிலே ஒரு முனைப்பை ஏற்படுத்தி சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் பல மருத்துவர்கள் அதிலே முனைப்புக் காட்டி தமிழிலே மருத்துவத்தை மொழி பெயர்க்க வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஊக்கப்படுத்துகிறவண்ணம் சிறப்பான ஒரு நிறுவனம் நிறுவப்பட்டு, அவர்கள் அதிலே பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு உண்டான வாய்ப்பை வழங்கி நாம் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



கணினி என்பது அழகான மொழிபெயர்ப்பு. இண்டர்நெட் என்று சொல்லப்படுகிற அந்த ஆங்கில வார்த்தையை அழகாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். 'தொலைவலை அச்சு' என்று அழகான மொழிபெயர்ப்பை வழங்கியிருக்கிறார்கள், தமிழ் மொழிபெயர்ப்புத் துறையினர். அந்த வகையிலே பல்வேறு கோணங்களிலே முன்னேறிக் கொண்டிருக்கிற நாட்டிலே நம்முடைய பதவி நாட்களிலேயே தமிழ் மொழியை பல நிறுவனங்களில், பல்வேறு நிலைகளில் நாம் நிலைப்படுத்த வேண்டும்; அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே விடுக்க விரும்புகிறேன்.

பொதுவாக பெயர்ப் பலகை என்று சொல்லும்போது நான் வருத்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையிலே ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளிலுள்ள பெயர்ப் பலகையைப் பார்த்தோமானால்கூட சில பெயர்கள் ஆங்கிலத்தில் இருப்பதை அப்படியே தமிழில் எழுதியிருப்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரால் விளங்குகின்ற கலைஞர் கருணாநிதி நகர், கே.கே.நகர் என்று வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கே.கே.நகரினுடைய எக்ஸ்பேன்ஷன் அல்லது விளக்கம் என்ன என்று தெரியாதவண்ணம் அந்தப் பெயர் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதை எல்லாம் தடுக்கும்வண்ணம் ஆராய்ந்து மீண்டும் அதைச் சுருக்கமாக கலைஞர் நகர் என்று வைக்கலாம்; அல்லது கலைஞர் கருணாநிதி நகர் என்று வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் சுருக்கமாகச் சொல்வது எப்போதும் ஆபத்து என்று என்னுடைய ஆங்கிலப் பேராசிரியர் சொல்வார். L.P. என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதை Long Pay Record என்று சொல்லலாம். அல்லது Lumbar Puncture என்று ஆங்கிலத்திலே எங்களுடைய மருத்துவத்திலே சொல்லலாம். சினிமா தியேட்டரிலே லலிதா, பத்மினி என்றுகூடச் சொல்லலாம். ஆகவே சுருக்கமாக வழங்கப்படுவதை நாம் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். அந்த வகையிலே இப்போது வழங்கப்படுகிற பெயர்களைச் சிறப்பாக, அதேநேரத்திலே தெளிவாக நாம் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக நம்முடைய ஆதிக்கத்தில் இருக்கக்கூடிய, நம்முடைய நிர்வாகத்தில் இருக்கக்கூடிய பல நிறுவனங்களில் தமிழ் கோலோச்ச வேண்டும் என்ற விருப்பத்தை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல கலைக் களஞ்சியம். கலைக் களஞ்சியம் தொடங்கிய பணி இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. மறைந்த திரு. பெ. தூரன் அவர்கள் குழந்தைகள் கலைக் களஞ்சியத்தைச் சிறப்பாக உருவாக்கினார்கள். அந்த சிறப்பான பணி இன்னும் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டும். அதற்குண்டான வல்லுநர்கள் குழுவை தமிழக அரசு நியமிக்க வேண்டும். அகரமுதலியைப் பொறுத்தவரையில் 1974-ஆம் ஆண்டு தேவநேயப்பாவாணரால் துவங்கப்பட்டு இன்றைக்கு சிறப்பான முறையில் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*முற்பகல் 9-50*

நான் நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டபோது மேற்கொண்டு 2, 3 தொகுதிகள் இந்த ஆண்டே வந்துவிட்டன என்று சொன்னார்கள். நான் இங்கே இந்த 5 ஆண்டுக் காலத்திலேயே அகரமுதலி தொகுக்கின்ற ஒரு அரிய பணியை முடிக்க வேண்டுமென்ற விருப்பத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன். அப்படி அந்தப் பணி முடிக்கப்பட்டால் அது தமிழ் அன்னைக்குச் செய்கின்ற சிறப்பான ஒரு பணியாக அமையும் என்ற கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழக முதல்வர் அவர்களிடம் பூம்புகாரைப் பற்றிய ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். பூம்புகாரில் சித்திரைத் திருநாள், சித்திராபௌர்ணமி அன்று, சித்திரை முழு நிலவு அன்று விழாக்களை நடத்தி வந்தார்கள். ஆனால் இப்போது அந்த வழக்கம் எல்லாம் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறபோது அதை மீண்டும் புதுப்பித்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணமும், அதேபோன்று தொன்மை வாய்ந்த நமது நகரங்களை கௌரவிக்கும் வண்ணமும் அந்த விழாக்களை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக திரைப்படங்கள் என்பது நாட்டு மக்களுக்கு நல்ல செய்திகளைச் சொல்லக்கூடிய கருவியாக இருக்க வேண்டுமென்று நேற்றைய விழாவில்கூட நம்முடைய தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் திரைப்படங்களைப் பொறுத்தவரையில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். திரைப்படங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழக அரசு சிறந்த சலுகைகளை அளித்து வருகிறது. குறிப்பிட்ட நகல்களைக் கொண்ட திரைப்படங்களுக்குப் பொருள் உதவியும், அதேபோல் சிறந்த திரைப்படங்களுக்குப் பரிசுகளையும் வழங்கி வருகிறது. இதிலே



ஆங்கிலப் பெயர் கொண்ட திரைப்படங்களுக்கு அத்தகைய சலுகைகள் தரப்படமாட்டாது என்ற வரையறை வருமானால் நிச்சயமாக ஆங்கில பெயரிடுகின்ற மோகம் குறையும் என்ற கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக தமிழ்த் திரை உலகத்திலே இன்று தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலத்தில் பெயரிடுகின்ற மோகம் வளர்ந்து வருகிறது. இதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். ஆனால் அப்படிப் பெயரிடப்படுகின்ற திரைப்படங்களுக்கு அரசினுடைய சலுகையைப் பெற நுழைவு மறுக்கப்பட வேண்டும். நம்முடைய பரிசு பெறுகின்ற சலுகை மறுக்கப்பட வேண்டும். அப்படி மறுக்கப்படுமானால் நிச்சயமாக அவர்களுடைய எண்ணம் மாறும், அவர்களுடைய நிலை மாறும் என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தமிழ் நூல்களிலும், கதைகளிலும் பல தமிழ்ப் பெயர்களைக் கொண்டுவந்த பெருமை பலரைச் சாரும். குறிப்பாக தமிழ்வாணன் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் எழுதிய அத்தனை கதைகளிலும் அவர் அழகான தமிழ்ப் பெயர்களைக் கொடுத்தார். தற்போது வெளிவந்திருக்கின்ற 'அருணாச்சலம்' திரைப்படத்தில்கூட வருகின்ற கதாபாத்திரங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களான உமையாள், வேதவல்லி போன்ற தமிழ்ப் பெயர்களாக இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய நிலையை நாம் ஊக்குவிக்க வேண்டும். இப்படி வருகின்ற திரைப்படங்களையும், நூல்களையும் நாம் பாராட்டி, பரிசளிக்க வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்து, தமிழைக் கட்டாயக் கல்வியாக அறிவித்திடும் நேரத்திலே அந்தச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறை சிறந்த எழுத்தாளர்களுக்குத் தருகின்ற தொகையான 5 ஆயிரம் ரூபாயை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் நிச்சயமாக மாறியுள்ள சூழ்நிலையிற்கு அது வழிவகுக்கும். பலரை ஊக்கப்படுத்தும். அதேபோன்று 2-வது, 3-வது பரிசுகளிலும் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையிலே உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். அந்த தமிழ்ச் சங்கம் தொடர்பாக அவர் ஒரு குழுவைக்கூட நியமித்தார். ஆனால் இன்றைக்கு அந்தச் சங்கம் செயல்படவில்லை. ஏற்கெனவே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் என்பது நம்முடைய அரசில் இருந்து கொண்டிருக்கிறது.

இப்போது இராமர் பிள்ளை என்ற அலுவலர்கூட அங்கே இருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். இந்த உலகத் தமிழ்ச் சங்கத்தையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தையும் ஒருங்கே இணைத்தால் சிறந்த முறையில் தமிழ் ஆராய்ச்சி நடைபெறும் என்ற கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் வளர்ச்சித் துறைக்கு நான்-ஐ.ஏ.எஸ்., தமிழ் படித்த சிறந்த தமிழறிஞர்களைச் செயலாளர்களாக நியமிக்க வேண்டும். அந்த வகையிலே இப்போது இருக்கிற நடைமுறையை ஒழித்துவிட்டு, எப்படி சட்டத்துறையில் நான்-ஐ.ஏ.எஸ்-ஐ அந்தத் துறையினுடைய செயலராக நியமிக்கிறோமோ அதேபோல தமிழ் வளர்ச்சித் துறையிலே தமிழ் படித்த வல்லுநரை அரசுச் செயலராக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். சென்னையிலே 2-வது உலகத் தமிழ் மாநாடு சிறப்புற நடைபெற்றது. அதற்குப் பின்பு நடைபெற்ற மாநாடுகள் எல்லாம் எப்படி நடைபெற்றன என்பது நமக்குத் தெரியும். அதிலும் குறிப்பாக கடைசியாக நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டினுடைய அலங்காரமும், அலங்கோலமும் நமக்கெல்லாம் நெஞ்சைவிட்டு அகலாத காட்சியாக இருக்கிற நேரத்திலே, நடைபெறவிருக்கின்ற உலகத் தமிழ் மாநாட்டை சென்னையிலே நடத்தி, ஒரு சிகரமாக அந்த உலகத் தமிழ் மாநாடு நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக அமையப் பெறவேண்டும்.

*முற்பகல் 9-55*

அடுத்து, இன்றைக்கு இருக்கின்ற அரங்கங்களை, அரசுத் துறையிலே இருக்கின்ற அரங்கங்களை எடுத்துக்கொண்டால், கலைவாணர் அரங்கம்தான் இன்றைக்கு இருக்கின்ற ஒரு சிறந்த அரங்கமாக அரசுத் துறையில் இருக்கிறது. அந்த நிலையைப் போக்கி பல்வேறு வசதிகளைக் கொண்ட 'புது தில்லி விக்ஞான் பவன்' போன்ற சிறந்த ஒரு நுண்கலை அல்லது தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு அரங்கத்தை, வரலாறு கூறும் வண்ணம், தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் உருவாக்கவேண்டுமென்றுதான், நான் தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஒரு சிறந்த அரங்கம் உருவாக்கப்படும்போது, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழ்ப் பேரறிஞர்களும் தமிழைக் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கவேண்டும். 'பார்லிமெண்ட் அனெக்ஸ்' என்று சொல்லப்படுகிற பாராளுமன்றக் கட்டிடத்தில் இருக்கின்ற கருத்தரங்குக் கட்டிடங்களைப் போல பல்வேறு (மணியடிக்கப்பெற்றது) மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்ட ஒரு சிறந்த கருத்தரங்கத்தை அல்லது கலையரங்கத்தை நம்முடைய சென்னையிலே உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேருந்துகளில் பெயர்களைச் சுருக்கி எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். 'தியாகராய நகர்' என்ற பெயரைக்கூட 'தி.நகர்' என்றுதான் எழுதிக்கொண்டிருந்தார்கள். இரண்டு மாதத்திற்கு முன்னால், அந்தப் பெயரை 'தி.நகர்' என்பதை 'தியாகராய நகர்' என்றுதான் எழுத வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல, 'கே.கே.நகர்' என்ற பெயர்கூட எழுதப்பட்டு, அது எதற்காக வரலாற்றுச் சின்னமாக இருந்ததோ, அதை மறைத்திருந்தார்கள். இப்போது முழுவதுமாக பெயரை எழுதுவதற்குப் பதிலாக 'கலைஞர் நகர்' என்று எழுத வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. 'கலைஞர் நகர்' என்றே இனி பேருந்துகளில் எழுதப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே, அண்ணா போக்குவரத்துக் கழகம் என்றுதான் இருக்கிறது. 'அறிஞர் அண்ணா போக்குவரத்துக் கழகம்' என்று இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அப்படி இருந்தால் 'ஏ.ஏ.' போக்குவரத்துக் கழகம் என்று ஆக்கிவிடுவார்கள். அதனால்தான் வேண்டுமென்றே, அப்போது 'அறிஞர்' என்ற இடத்தில் எல்லாம் - அண்ணா பல்கலைக் கழகம் வந்த போது கூட 'அறிஞர் அண்ணா' என்று இல்லாமல் 'அண்ணா' என்ற அளவிலே இருக்க வேண்டுமென்றுதான் அரசு தீர்மானித்தது. இல்லையென்றால், 'ஏ.ஏ.' என்று போட்டுவிடுவார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால், இருக்கையில் இல்லை. திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே தமிழ்ப் பண்பாட்டுத் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் இதற்கு முன்பாக, சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது, கூடுமானவரை கையிலே எழுதி வைத்துப் படிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று கூறினார்கள். அவருடைய அறிவுரையை நான் ஏற்று, இன்று முதன்முதலாக கையிலே எந்தவிதமான பேப்பரையும் வைத்துக்கொள்ளாமல் பேச முடிவு எடுத்துள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளியிலே தெரியாமல் இருந்தாலும் உள்ளேகூட வைத்துக்கொள்ளலாம், அதனாலே பரவாயில்லை. *(சிரிப்பு)*

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அப்படிப் பேசத் தொடங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய, இந்தத் தமிழ்ப் புத்தாண்டு துவக்க நாளில் எனக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்பைத் தந்ததற்காக என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மதுராந்தகம் தொகுதி மக்கள் சார்பாக இந்த மாமன்றத்திலே உள்ள அனைவருக்கும் பணிவான தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவையிலே உள்ள வசந்தா மில்ஸ் ஆலையையும், இராஜ பாளையத்திலே உள்ள அழகப்பா ஸ்பின்னிங் மில்லையும், சென்னையிலே உள்ள பி & சி ஆலையையும் - அனைத்துத் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, அந்த மூன்று ஆலைகளையும்—திறந்து வைத்தமைக்காக தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர் பண்டிகைகளான, தீபாவளி, பொங்கல் ஆகிய பண்டிகை நாட்களில், 1989-ஆம் ஆண்டிற்கு முன்பாக மூடப்பட்ட 26 தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுடைய நலனைக்கருதி, தீபாவளிப் பண்டிகைக்கு ரூ.400 வழங்கியதோடு, தாயுள்ளம் கொண்ட, கருணையுள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பண்டிகைக்கும் ரூ.400 வழங்கி, 16919



தொழிலாளர்களுக்கு பொங்கல் பண்டிகைக்காகவும், தீபாவளிப் பண்டிகைக்காகவும் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து இருநூறு ரூபாயை வழங்கியதற்காக என்னுடைய மனப்பூர்வமான நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

மதுராந்தகம் தொகுதியிலே படாளம் சர்க்கரை ஆலைக்கு அருகாமையிலே தேசிய நெடுஞ்சாலையில் பெப்சி கோலா என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது. அந்த நிறுவனத்திலே பணிபுரியக்கூடிய ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒருமாத காலமாகப் பணிக்குச் செல்லாமல், அவர்களுடைய உரிமையை நிலைநாட்டு வதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இப்பிரச்சினையில் கவனம் செலுத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்குமாறு நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதற்கு முன்பாக நாங்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது, கிராமங்களிலே உள்ளவர்கள் தங்களுக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ளது, சாலைப் பிரச்சினை உள்ளது, அதைத் தீர்த்து வையுங்கள் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இப்போது எங்களைச் சந்திக்கும்போது, தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கக்கூடிய நிலைமை உள்ளது. கிராமப்புறங்களிலே 10-ஆம் வகுப்பு முதல் பிளஸ் டூ வரை படித்த மாணவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு முறையும் என்னைச் சந்திக்கும்போது, நீங்கள் வேலைவாய்ப்புப் பெற்றுத்தர வேண்டுமென்ற விண்ணப்பத்தை வைத்தாலும்கூட, நான் வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து இண்டர்வியூ கார்டு வந்தால்தான் வேலைவாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும் என்று அவர்களிடம் பலமுறை விளக்கிச் சொன்னாலும்கூட, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், நீங்கள் தமிழக முதல்வர் அவர்களிடத்திலே சொன்னால், பேராசிரியர் அவர்களிடத்திலே சொன்னால், வேலை வாங்கித் தரமுடியும் என்றுதான் மறுபடியும் மறுபடியும் அதே கருத்தை என்னிடத்திலே வலியுறுத்துகின்றார்கள். நான் எத்தனை முறை எடுத்துச்சொன்னாலும், அவர்களுடைய கருத்தைத்தான் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையை—மதுராந்தகத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான பேர்கள்

10-ஆம் வகுப்பு முதல் பிளஸ் டூ வரை படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பிரச்சினையை—நீங்கள் எவ்வாறு தீர்க்கப் போகின்றீர்கள் என்பதையும், அதற்காக என்ன விளக்கம் அளிக்கப் போகிறீர்கள் என்பதையும் நான் அறிந்துகொள்ள ஆவலாக இருக்கின்றேன்.

அதேபோல, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே 35 இலட்சம் பேர்கள் வேலை வேண்டி பதிவு செய்திருந்தாலும்கூட, ஆண்டுக்கு 25 ஆயிரம் பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்புத் தரமுடியும் என்று அமைச்சர் அவர்கள் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது தெரிவித்தார்கள். அப்படி 25 ஆயிரம் பேர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றால், மீதமுள்ளவர்களுக்கு வேலை வழங்கும்போது, அவர்கள் தங்களுடைய 58-ஆவது வயதை நிறைவு செய்யக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டு விடக்கூடிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால், அரசுத் துறைகளுக்கான மானியங்களை அதிகமாக வழங்கிக் கொண்டிருப்பதைத் தவிர்த்துவிடுவீர் களேயானால், அந்தப் பணத்தைக் கொண்டு தமிழகத்திலே தொழிற் சாலைகளை நீங்கள் நிறுவுவீர்களேயானால், கண்டிப்பாக வேலை வாய்ப்புப் பிரச்சினை குறையும்; வேலை வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு பேருந்துகள் வழங்கியதைப்போல—(சிரிப்பு) தவறு, தொகுதிக்கு இரண்டு வழித் தடங்களை வழங்கியதைப்போல—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுதான் எனக்கு முதல்வர் அவர்கள் முன்பாகப் பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அந்த மகிழ்ச்சியிலே நான் இருக்கின்றேன். அதனால், இடையிலே ஒருசில தவறுகள் ஏற்பட்டாலும், அதற்காக என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு எப்படி மகிழ்ச்சியாக இருக்கிறதோ அதேபோல எனக்கும் மகிழ்ச்சியாக இருப்பதால்தான் நான் மணியடிக்காமல் இருக்கின்றேன். (சிரிப்பு)

**திரு. ச.க. வெங்கடேசன்**: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிக்கும் இரண்டு பேருந்து வழித்தடங்களை



வழங்கியதைப்போல, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், இரண்டு தொழிற்சாலைகளை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

குறிப்பாக மதுராந்தகம் தொகுதி, லத்தூர் ஒன்றியத்தில் தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போதுகூட, அந்த லத்தூர் ஒன்றியத்தை கருவாட்டு ஒன்றியம் என்று கூறியுள்ளார்கள். அந்த அளவிற்கு இது மிகவும் பின்தங்கிய ஒன்றியமாகும். அந்த ஒன்றியத்தில், நீங்கள் ஒரு தொழிற்சாலையையாவது துவங்க வேண்டுமென்று பணிவன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியில், 3000 தொழிலாளர்கள் மூன்றாண்டுகளுக்கு மேலாகியும், வேலைவாய்ப்பில்லாமல் இருக்கின்றார்கள். தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள, தாயுள்ளம் கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், அந்த 3000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை மீண்டும் பெற்றுத்தர வேணடுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை முன் வைக்க விரும்புகிறேன். அவர்களுக்குச் சேரவேண்டிய சம்பளப் பாக்கித் தொகை மற்றும் அவர்களுக்குச் சேர வேண்டிய இதர தொகைகளை முதலிலே அவர்களுக்குப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை மூலமாக, இசைக் கலைஞர்களுக்கு எல்லாம் பரிசுகள் வழங்கப்படுகின்ற திட்டத்தை, நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய மனப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் கேட்டுக் கொண்டதுபோல, ஒரு சிறப்பான உலகத் தமிழ் மாநாட்டை சென்னையிலே நடத்தி, தமிழ் உள்ளங்கள் எல்லாம் மனமகிழ்ச்சி கொள்ளும் அளவிற்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு இரண்டு மூன்று தடவை வாய்ப்பு கிடைத்திருந்தாலும், இந்த வாய்ப்பினை என்னுடைய வாழ்க்கையிலே கிடைத்த மிகப் பெரிய பேறாகக் கருதி, மன மகிழ்ச்சியுடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், உங்களுக்கு அதிகமான நேரம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறேன். அதற்குமேல் பேசக்கூடாது. உங்கள் உரையை குறிப்பிட்ட நேரத்திற்குள் பேசி முடிக்க வேண்டும். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இரண்டு முக்கியமான பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த இரண்டு முக்கியமான பிரச்சினைகளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில விஷயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் தலைமை)**

தமிழ் வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், அது பற்றிப் பேசுவதற்கு நிறைய பெருமக்கள் இங்கே இருக்கின்றார்கள். தமிழாய்ந்த தமிழர் என்ற முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் அதிக சிரத்தை கொண்டவர்கள் என்பதனால், கவனிப்பதற்கு அதிக ஆட்கள் உள்ள அந்தத் தமிழ்த் துறையை விட்டுவிட்டு, கவனிப்பதற்கு ஆள் இல்லாத தொழிலாளர் துறையைப் பற்றிக் குறிப்பான சில விஷயங்களை நான் முன்வைக்க விரும்புகிறேன். கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தி.மு.க. அரசு, தன்னுடைய ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை தமிழகத்தின் எல்லாத் தரப்புகளிலும், அரசு இயந்திரங்களுக்குள்ளேயும் கொண்டு செல்வதைப் போலவே, தொழிலாளர் துறையிலும் சில குறிப்பான நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறது என்பது தெரிந்த ஒரு விஷயம்தான். ஆனாலும், தெரியாத சில விஷயங்களை பொறுப்பான எதிர்க்கட்சி என்கிற முறையில், முதுகிற்குப் பின்னால் ஒன்றும், முகத்திற்கு முன்னால் ஒன்றும் பேசத் தெரியாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நேர்பட சில விஷயங்களை முன்வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இங்கே தொழிலாளர் துறை, அதனுடைய நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே நான் இங்கே குறிப்பாகச் சொல்ல விரும்புவது, நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள்; அவர்கள் இருக்கிறபோது சில விஷயங்களைச் சொன்னால்தான் ஏதோ சில காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்ற மலிவான நோக்கத்தில் குறிப்பிட விரும்பவில்லை; எந்தச் சிக்கலான விஷயத்தையும் மிக எளிதில் புரிந்து கொண்டு, மிக விரைவில் தீர்வளிப்பதைத் தன்னுடைய இயல்பாகக் கொண்டிருக்கிற



கலைஞர் அவர்கள், இந்தச் சிக்கலான, நெருக்கடியான சில பிரச்சினைகளிலும் தீர்வு அளிப்பார் என்ற நம்பிக்கையோடு இந்த மாமன்றத்திற்கு வெளியிலே வாழ்கிறவர்களின் உணர்ச்சிகளை வடிக்கிற பிரதிநிதியாக நான் இங்கே சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். தொழிலாளர் துறையில் பல்வேறு நல்ல அம்சங்களும் இருக்கின்றன. ஆனால், நான் நல்ல அம்சங்களுக்குள்ளே இப்போது அதிக நேரம் எடுத்துக் கொண்டால், சொல்ல வேண்டிய சில குறிப்பான விஷயங்களைச் சொல்ல முடியாமல் போகும் என்பதால், அந்த விவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை.

*முற்பகல் 10-10*

எடுத்த எடுப்பில் நான் ஒன்றைப் பாராட்ட விரும்புவது, பொங்கல் பண்டிகையின்போது, மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று எந்தத் தொழிற்சங்கமும் கோரிக்கை வைக்கவில்லை; கம்யூனிஸ்ட்டுகள்கூட கோரிக்கை வைக்கவில்லை. ஆனால், மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் தானே உணர்ந்து, பொங்கல் இனாம் என்ற முறையில், மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கு அறிவித்த அந்த நல்ல நிகழ்ச்சியை மனநிறைவோடு நான் பாராட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய நல்ல உள்ளம் படைத்த ஒரு மாமனிதர் தலைமையேற்று இருக்கிற இந்த அமைச்சரவையில் அவருடைய தலைமையின்கீழ் இயங்குகிற இந்தத் தொழிலாளர் துறையில் இருட்டுப் பகுதியில் நடைபெறுகிற சில விஷயங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுதான் பொறுப்பான எதிர்க்கட்சியின் கடமை என்பதனால், நான் சில விஷயங்களைக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். நான் முதலில் எடுத்துக்கொள்ள விரும்புவது, இந்தக் குறிப்பினுடைய துவக்கத்திலேயே சில விஷயங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த விவரங்களுக்குள்ளேகூட நான் இப்போது போக விரும்பவில்லை. நான் முதலில் எடுத்துக்கொள்ள விரும்புவது, தனியார் துறை போக்குவரத்து. இந்தத் தனியார் துறை போக்குவரத்தைப் பொறுத்தவரையிலும், இந்த மாநிலத்தில் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு இணையான சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்வதற்குரிய எல்லாவித நியாயங்களும் இருக்கின்றன. ஆனால், அந்தக் கோரிக்கையை நான் இங்கே முன்வைக்கவே இல்லை. நான் முன்வைத்து இருப்பது எல்லாம் மினிமம் வேஜஸ் நோட்டிஃபி-கேஷன்படியான சம்பளம் அமலாக்கப்பட வேண்டும்; பஞ்சப்படி

அமலாக்கப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், துரதிருஷ்டவசம் தமிழ்நாட்டில் என்னவென்றால், ஒரு ஐந்தாண்டு காலம் சட்டவிரோத நடவடிக்கைகளையே தங்கள் சட்டபூர்வமான உரிமைகளாகக் கொண்டு வாழ்ந்து வருகிற தனியார் மோட்டார் முதலாளிகள், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை, கிஞ்சிற்றும் மதிப்பதே இல்லை. நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்; தொழிலாளர்களை மனிதர்களாகக்கூட இந்தத் தனியார் மோட்டார் முதலாளிகள் மதிப்பதே இல்லை. அவர்கள் கையில் செல்வம் இருக்கிறது; சில குறிப்பான அதிகாரிகளை வளைத்துப் போடுகிற வல்லமை இருக்கிறது. இந்த வல்லமைக்கு முன்னால், செல்வத்திற்கு முன்னால் தொழிலாளி சுடுமண்ணில் துடிக்கிற புழுப்போல் துடிக்கிறான். அவனுக்கு உண்மையிலேயே எந்தப் பிரச்சினையையும் வெளியிடுகிற உரிமைகூட இல்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், 1950-ல் தொழிற் சங்கம் வைத்துக் கொள்கிற உரிமை, அடிப்படை உரிமை என்று அங்கீகரிக்கப்பட்டு இருந்தும்கூட, உடுமலைப்பேட்டையில், அதேபோல, ஈரோட்டில், சத்தியமங்கலத்தில், கரூரில், திண்டுக்கல்லில், பழனியில், அரூரில் — இப்படிப் பல இடங்களில் அந்தத் தனியார் துறைத் தொழிலாளர்கள் புதிய கோரிக்கைகளையே வைக்கவில்லை; சட்டம் என்ன சொல்கிறதோ, அவற்றை அமலாக்குங்கள் என்று கோரிக்கை வைத்தது ஒரு தண்டனைக்கு உரிய குற்றமாகக் கருதப்பட்டு, 506 (1) (2) செக்ஷன்களின்கீழ் ஜாமீனில் வெளிவர முடியாமல் இன்றைக்கும் வழக்கு இருக்கிறது. நான் மிகவும் வேண்டி வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, எங்கெங்கெல்லாம் சங்க உரிமைக்காக, சட்ட உரிமைகளை அமலாக்குவதற்காகத் தொழிலாளர்கள் கோரிக்கை வைத்துப் போராடிய இடங்களில் அவர்களின்மீது காவல் துறை தலையிட்டு, முதலாளிகளின் பொய்ப் புகார்களின்மீது வழக்குப் போட்டார்களோ, அந்த வழக்குகளை தயவுசெய்து ரத்து செய்வதோடு, தொழிற்சங்கம் அமைத்ததால் கிட்டத்தட்ட 400-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள்—நான் இப்போது பட்டியலை வைக்க விருமபவில்லை; நான் தனியாக முதலமைச்சர் அவர்களிடம்கூட கொடுத்துவிட இருக்கின்றேன்—எல்லா இடங்களிலும் வேலையில் இருந்து இறக்கி விடப்பட்டு விட்டார்கள். இப்போதும் ஒரு துயரம் என்னவென்றால், தொழிலாளர் துறை இருக்கிறது; நீதிமன்றம் இருக்கிறது; சுப்ரீம் கோர்ட் இருக்கிறது; எல்லா கோர்ட்டுகளும் இருக்கின்றன. ஆனால், இவை எவையும் தொழிலாளர்களுக்கு எட்டாக்கனிகள்தான்; தொழிலாளர்



களுக்கு அவை கிடைப்பது இல்லை. இந்நிலையில் என்னாகிறது என்றால், ஒரு தொழிலாளியை சட்டவிரோதமாக ஒரே நிமிடத்தில் டிஸ்மிஸ் செய்துவிடலாம். இது சட்டவிரோதம் என்பதை நிலைநாட்டுவதற்கு அவன் சட்டபூர்வமாகத்தான் போராட வேண்டும். அதுவும் கீழே இருந்து மேலே போவதற்குள் அவன் செத்து சுண்ணாம்பு ஆகிவிடுவான். இதுதான் நடப்பில் நிலவிக் கொண்டிருக்கிறது. எனவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், சட்டவிரோதமாக டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள தொழிலாளர் துறையில் எஃபெக்டிவ் ஸ்டெப்ஸ் என்று சொல்வார்களே, அதேபோல அழுத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தத் தொழிலாளர் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

இந்த விஷயத்தில் மூன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று, தொழிற்சங்கம் வைத்துக்கொள்கின்ற உரிமை எங்கெல்லாம் பாதிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் தொழிற்சங்க உரிமைகளை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இரண்டு, தொழிற்சங்கத்தை நிலை நாட்டிக் கொள்ளவும், அதேபோல் குறைந்த பட்சக் கூலிச் சட்ட அறிவிப்பை அமலாக்க வலியுறுத்தியதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும். மூன்றாவதாக அவர்கள்மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை வாபஸ் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தங்களுடைய நாவாலும் பேனாவாலும் உழைக்கின்ற வர்க்கத்தை உயர்த்தியது போல யாரும் அவர்களை உயர்த்தவில்லை. உழைக்கின்ற அந்த வர்க்கத்தின் நலன்களைக் காப்பாற்றுவதற்காக, அவர்களை ஒடுக்குகிற சக்திகளுக்கு எதிராக, உங்கள் பேனா முனை சிந்திய மை கொஞ்சமல்ல. இன்றைக்கும் நான் நல்ல நினைவோடு சொல்ல விரும்புகிறேன். அத்தகைய தொழிலாளர்கள்தான் இன்றைக்குத் தங்கள் ஆட்சியில் எதிர்கொள்கின்ற ஒரு துயர நிலையை, இதே ஈரோட்டில் கண்டு வருகிறார்கள். மிக முக்கியமான தவறு அங்கே நிகழ்ந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னிடம் வருகின்ற கடிதங்களைக்கூட, ஃபில்டர் செய்யாமல் நான் முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்து விடுவதில்லை. நான் எழுதிக் கொடுக்கிற ஒவ்வொரு வரிக்கும் சொல்லுக்கும் நான் பொறுப்பு ஏற்றுக்கொண்டுதான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், ஒரு விஷயத்தை முன்வைக்கிறபோது, அந்த விஷயத்திற்கு முழுப் பொறுப்பு நாம்தான் என்று உணராமல் முன்வைப்பது பொறுப்பற்ற நடவடிக்கை என்பதை நான் உணர்ந்திருப்பதால்தான் இப்போதும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈரோட்டில், டி.டி.எஸ். என்கிற ஒரு பஸ் கம்பெனியில் முறைப்படி, இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட் 22, பிரிவு I-ன்கீழ் ப்ராப்பர் நோட்டீஸ் கொடுத்து வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. அந்த கம்பெனி முதலாளி அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுடைய முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுடைய வலது கை. அவ்வளவு நெருக்கமானவர். அந்த கம்பெனியில் வேலை நிறுத்தம் நடக்கிறது. அதுவும் தொழிலாளிகளுடன், தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்னிலையிலும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வராததால் வேலை நிறுத்தம் நடக்கிறது. அந்த வேலை நிறுத்தத்தை, காங்கேயத்தைச் சேர்ந்த சிவசபாபதி என்பவர் ஒரு அறுபது பேரோடு சேர்ந்து வந்து கொடிகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, அந்தத் தொழிலாளர் களையும் அடித்து விரட்டிவிட்டு, பஸ்ஸையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டார். இப்போதும் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உடனடியாக பஸ்கள் நிறுத்தப்பட்டன. நான் சென்னையிலிருந்து போன் செய்தேன். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்கெதிரான போராட்டமாக வந்துவிடக்கூடாது, யாராவது இதை திசை திருப்பி விடக்கூடும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பஸ்ஸை நிறுத்தாதீர்கள் என்று சொல்லி, இந்தப் பிரச்சினையை முதலமைச்சர் அவர்களிடம் உள்ளபடியே முறையிட்டால் அதற்குத் தீர்வு வரும், எனவே ஒரு ரியா ர்ஷுவா வாவிடாது தடுத்தோம். நீங்கள் செக்-அப் செய்து பார்த்துக் கொள்ளலாம். தடுத்தும் இந்த நிமிஷம் வரை அங்கே எதுவும் செய்யவில்லை. துரதிருஷ்டம் என்னவென்றால் அவர்கள் பஸ்ஸை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், எந்தத் தடையும் யாரும் செய்யவில்லை. தொழிலாளர்கள் அறுபது பேர் போலீசுக்குப் புகார் செய்யப் போனதும், அவர்களை உள்ளே வைத்தார்கள். அப்போது நான் உடனடியாக முதல்வர் அவர்களிடம் தொடர்பு கொண்டு சொன்னபோது, அவர்கள் உடனடியாகத் தகவல் சொல்லி, எந்த



வழக்கும் இல்லாமல் அவர்களை விடுவிக்க ஆணை பிறப்பித்தார்கள் என்பதை நன்றியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆனால் முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற வேலைப் பளுவுக்கிடையில் - தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அரசியலிலேயும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற சுமைகள் - பல்வேறு அரசியல் மாற்றங்கள், இப்படிப்பட்ட அவர்களுடைய வேலைப் பளுவுக்கு இடையில் அவர்களை அணுகுவது என்பதே நல்லதல்ல என்பதால் கொஞ்சம் குறைத்துத்தான் அணுக வேண்டியிருக்கிறது. அவருடைய வேலைப் பளுவுக்கு இடையில் இவற்றையெல்லாம் கொண்டுபோய் சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல என்பதால் நான் விடுவித்துக் கொள்கிறேன். ஆனாலும் நெருக்கடி ஏற்படுகிறது என்பதால்தான் இந்த விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஒரு விஷயத்தில் கொஞ்சம் கவனத்தைக் கொண்டு, இந்த டிரான்ஸ்போர்ட் பிரச்சினையில் ஒரு நல்ல நிலைப்பாட்டை உருவாக்க வேண்டுமென்று நான் குறிப்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோல இன்னொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சத்தியமங்கலத்திலே எஸ்.பி.எஸ். என்ற ஒரு பஸ் கம்பெனி. அந்த முதலாளியும் அண்ணா தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனுக்கு மிக மிக வேண்டியவர். இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிறது. இந்த ஆட்சிக்கு நேர் எதிராகச் செயல்படுபவர்களுடைய கம்பெனிகளில் நடக்கும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகக்கூட அந்தத் தொழிலாளர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏன் ஈரோட்டைக் குறிப்பிடுகிறேன் என்றால், ஈரோட்டில் இருக்கும் அவர், அண்ணா தி.மு.க.காரரின் சம்பந்தி என்பதால் உடனடியாக அதில் தலையிட முடியவில்லை. அரசியலை எவ்வ..?வு லாவகமாக அந்த பஸ் கம்பெனி முதலாளிகள் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தயவுசெய்து பார்க்க வேண்டும். ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த காலத்தில் இதே நிலைமை நடந்தது சத்தியமங்கலத்தில். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, அவையில்

இல்லாத முன்னாள் அமைச்சரைப் பற்றிக் கூறுகிறார்கள். (சிரிப்பு) அவையில் இல்லாத முன்னாள் அமைச்சரைப் பற்றி (குறுக்கீடு) பஸ் கம்பெனியை விடுங்கள், முன்னாள் அமைச்சரைப் பற்றி எந்த ஆதாரத்தோடு அவர் பேசுகிறார்?

*முற்பகல் 10-20*

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேறு எந்த ஆதாரங்களும் வேண்டியதில்லை. நாடே நாறிக் கிடக்கிறது. கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பது பற்றி நாடே காறி உமிழ்ந்ததற்குப் பின்னரும் அவர் இப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்புவது பொருள் அற்றது. நான் இங்கே எல்லா ஆவணங்களோடு தான் இருக்கிறேன். ஆவணங்களோடுதான் பேசுகிறேன். ஏனென்றால் ஆவணங்கள் இல்லாமல் பொறுப்பற்று விஷயங்களைச் சொல்லிவிட்டு, பின்னர் சிக்கலில் ஆப்பு அசைத்த குரங்கு போல மாட்டிக் கொள்கிறவர்கள் நாங்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் ஒரு விஷயத்தைச் சொல்கிறோம் என்றால் சொல்கிற விஷயத்துக்கு முழுப் பொறுப்பு எடுத்துக்கொண்டுதான் சொல்கிறோம். நான் கேட்க விரும்புவது, இன்றைக்கும் செக்-அப் செய்யலாம். சத்தியமங்கலத்தில் எஸ்.பி.எஸ். பஸ் கம்பெனியின் முதலாளி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் மந்திரிக்கு மிக நெருக்கமானவர்தான். அந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மந்திரிக்கு நெருக்கமான அவர், தன்னுடைய பஸ் கம்பெனியில் எந்தத் தொழிலாளிக்கும் சட்ட உரிமை தரவில்லை. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு பேப்பர் கட்டிங்கை கொடுத்தேன். இங்கே லாரி ஸ்ட்ரைக் நடந்து கொண்டிருந்தபோது, அந்த லாரி ஸ்ட்ரைக்கைத் தூண்டி விட்டவர் இவர். எந்த ஒரு பிரச்சினையையும் அரசியலாக்கி ஆளுகிற கட்சிக்கு எதிராகக் காய் நகர்த்துவதையே தங்கள் அரிப்பாகக் கொண்டு அரசியல் நடத்துவதில் அக்கறை கொண்டவரின் கம்பெனிதான் அந்த எஸ்.பி.எஸ். பஸ் கம்பெனி. அவரும் தொழிலாளர்களுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்து, 'நான்-பெய்லபிளில்' கைது செய்ய வைத்து, இன்றைக்கு 34 தொழிலாளர்கள் வழக்கிலே சிக்கிப் பெரும் துயரத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அந்த விஷயத்தையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய தொழிலாளர் நீதிமன்றங்களைப் பொறுத்த வரையிலும் ஒரு பிரச்சினை இருக்கிறது. பெரும்பாலான இடங்களில்



தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை வயதான காலத்தில் தான் போடுகிறார்கள். அவர்கள் 2, 3 மாதங்கள் ஆனவுடன் போய் விடுகிறார்கள். போனவுடன் எல்லா வழக்குகளும் தேங்கி விடுகின்றன. ஒருவர் ரிடையராகிப் போனால் உடனடியாக அந்த இடத்திற்கு நீதிபதியை நியமித்து விட வேண்டுமென்ற ஒரு கொள்கை நிலையை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் எல்லா வழக்குகளையும் 3 மாத காலத்தில் தீர்க்க வேண்டுமென்று லேபர் கோர்ட்டுகளுக்கு அனுப்புகிறோம். ஆனால் எந்த வழக்கும் 3 மாதத்தில் தீர்க்கப்படுவதில்லை. அதிலே காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் நீதிபதிகள் பற்றாக்குறைதான். எனவே, தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாத காலி இடம் என்பது இருக்கக்கூடாது. இதனை தயவுசெய்து மாநில அரசு மனதில் கொண்டு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நிரந்தரப்படுத்துதல் சட்டம். 480 நாட்களானால், தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று 1981 ஆம் ஆண்டில் இந்த மாமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 480 நாட்களானால், அந்தத் தொழிலாளி பெர்மனென்ட் செய்யப்பட வேண்டும். அந்தச் சட்டத்தில் கூட பல பலவீனங்கள் இருக்கின்றன. அதாவது 'கன்டினியுவஸ் சர்வீஸ்' என்று போட்டிருக்கிறார்கள். ஐ.டி. ஆக்ட்டில்கூட 240 நாட்கள்தான் நிரந்தரத் தொழிலாளர்களுக்கான ஒரு தகுதியாக வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த சட்டத்தைப் பொருத்தமான முறையில் திருத்தம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. அடுத்து குறைந்தபட்ச ஊதியம். குறைந்தபட்ச ஊதியம் ஒரு பாதுகாப்பு வளையம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலே ஒரு சிக்கலான விஷயம் என்னவென்றால் நடைமுறையில் அது பாதுகாப்பு வளையமாக இல்லை. என்ன காரணம் என்றால் எந்த அறிவிப்பை வெளியிட்டாலும் உடனடியாக நீதிமன்றங்களுக்குச் சென்று தடையாணையைப் பெற்று விடுகிறார்கள். தடையாணையைப் பெற்று விடுவதன் மூலம் அரசு அறிவிக்கிற அந்த அறிவிப்பை அனுபவிக்கிற வாய்ப்பு தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. அப்படிக் கிடைக்காமல் போய் விடுகிற நிலையில் மாநில அரசு தொழிலாளர் நலத் துறையில் பலவீனம் இருப்பதை உணர்ந்து அதைச் சரிப்படுத்த வேண்டும். ஏனென்றால் இவற்றை வெக்கேட் செய்வதற்கான நடவடிக்கைகளை

மேற்கொள்வதில் ஒரு வரையறுக்க முடியாத காலதாமதம் ஏற்படுகிறது. அதனை உடனடியாக மாநில அரசு கவனத்தில் கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின்கீழ்—நான் முன்னர் குறிப்பிட்டதைப்போல அந்தக் கூலிச் சட்டத்தின்கீழ்—அறிவிக்கப் பட்டிருப்பதில் நம்முடைய நீலகிரியில் 'பாட் லீஃப்' தேயிலைத் தொழிற்சாலையில் அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சக் கூலி மறு நிர்ணயம் நிறைவேற்றப்படவில்லை; ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். அந்த ஸ்டேவை இன்றைக்கு வரையிலும் 'வெக்கேட்' செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேற்கொள்ளாததனாலேயே 4000 தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக ஒரு தீர்வு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

நிறைவாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர் பிரச்சினையில் இப்போது ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பு என்னவென்றால்,—நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி, அவர்களும் ஒரு அனுசரணையான நிலையை மேற்கொண்டு வந்தார்கள். இவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்காது என்ற நிலையில் கூட அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்ற அறிவிப்பைப் பேரவையில் அறிவித்தார்கள். அதிலே 1070 தொழிலாளர்களுக்கான தீர்ப்பு தொழில் தீர்ப்பாயத்தில் வந்திருக்கிறது. 1980-85 இந்த ரேஞ்சில் சர்வீஸ் கன்டினுவிட்டி கொடுப்பதோடு, பேக் வேஜசில் 25 சதவீதத்தை வழங்க வேண்டுமென்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு தொழிலாளர் துறைக்கு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின்மீது நடவடிக்கை மேற்கொள்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் விண்ணப்பித்து கேட்டுக்கொள்ள விரும்புவது, தொழிலாளர்கள 1980-லும், இப்போதும் 18 (1) செட்டில்மென்ட் போட்டு வேலைக்கு வந்துவிட்டார்கள். இந்த 18 (1) செட்டில்மென்ட் போட்டதன் மூலம் இந்தத் தீர்ப்பின் அனுகூலங்களை அனுபவிக்கின்ற வாய்ப்பை அவர்கள் இழந்து விடுவதாகத்தான் சட்ட ரீதியாகப் பொருள்படுகிறது. ஆனால் தாங்கள் பெரிய மனது வைத்து, கருணை உள்ளத்தோடு, தயவுசெய்து அவற்றை விலக்கி, 18 (1) செட்டில்மென்ட் தொழிலாளர்கள் தன்னிச்சையாகப் போட்டு இருந்தாலும்கூட அதிலிருந்து விலக்கு அளித்து கோர்ட் தீர்ப்புக்கு மேல் அப்பீல்



செய்யாமல், 18 (1) செட்டில்மென்டை வைத்து அவர்களுக்குத் தீர்ப்பு மறுக்கப்படாமல், மாதவரம் பால்வளத் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில் தீர்ப்பாய தீர்ப்பின்படியான அனுகூலம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்பதை நான் ரெக்வஸ்ட்-ஆக அதற்குக் கீழான நிலையிலிருந்துகூட நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் தொழிலாளர்கள் இதனால் உண்மையிலேயே பாதிக்கப்படுகிறார்கள். நான் வருகிறபோது, நீங்கள் சொன்னால் நிச்சயமாகக் கலைஞர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று கூறிவிட்டு அவர்கள் வெளியே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் உங்களுடைய நாவசைவை எதிர் பார்த்திருக்கிறார்கள். எனவே தயவுசெய்து நீங்கள் அறிவித்து விட்டால் தான் தொழிலாளர்களுடைய நாளைய இரவு சிக்கல் இல்லாமல் உறங்கும். அதற்காக நீங்கள் தயவுசெய்து இந்த விஷயத்தில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அறிவிக்க வேண்டும் என்பதைக் கேட்டு நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் ஆகிய இரண்டு துறைகளையும் இணைத்து இங்கே விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் போதிய அளவுக்குப் பேசி இருக்கிறார்கள். ஆகவே தமிழ் வளர்ச்சித் துறையைக் குறித்து சிலவற்றைச் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன். படிக்கும்போதே தமிழ் ஆர்வத்தோடு 'சாத்தையா' என்ற தன்னுடைய பெயரை 'தமிழ்க்குடிமகன்' ஆக மாற்றிக்கொண்டு இன்றைக்கு மாண்புமிகு தமிழ்க்குடிமகன் என்ற நிலையில் தமிழுக்காகச் சிந்தித்து செயல்படக்கூடிய திறமையான ஒருவரை, தமிழாகவே வாழ்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்த் துறை வளர்ச்சிக்காக அமைச்சராக நியமித்து இருப்பதை நான் பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழைக் குறித்து, நாம் இன்றைக்கு மேற்கொண்டிருக்கிற, அதனுடைய வளர்ச்சியைக் குறித்து நாம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலிலே ஏற்றம் பெற்ற பிறகுதான் முறையாகத் தொடங்கியது என்பது என்னுடைய கருத்து. மற்றவர்களுக்கு வேறு கருத்து இருக்கலாம். ஆனால் பேச்சாலேயே நாட்டில், அரசியலில் ஒரு திருப்பத்தை, ஒரு மாற்றத்தை,

ஒரு ஏற்றத்தைக் கொண்டு வந்து, தமிழ்மொழிக்கு இவ்வளவு ஆற்றல் உண்டு, பண்பாடு உண்டு, பின்னணி உண்டு, தொன்மை உண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்தியவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. நிறைய மாற்றங்கள் எல்லாம் இப்போது வந்து இருக்கின்றன. ஒரு காலத்தில் உங்களையெல்லாம் பார்த்து அக்ராசனாதிபதி அவர்களே என்று சொல்வது இருந்தது. அது கலைஞர் அவர்களுக்கே தெரியும். அவர் காலத்திலேகூட அக்ராசனாதிபதிகள், மசோதாக்கள் என்றெல்லாம் கூட்டங்களிலும் மன்றங்களிலும் சொல்வார்கள். அபேட்சகர்கள்—திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள்—அந்த அபேட்சகர்கள் எல்லாம் இன்றைக்கு மறைந்து வேட்பாளர்கள் என்று அழகான தமிழிலே நாம் சொல்லத் தொடங்கி இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய காலத்திலே இருந்து தமிழுக்கு நல்ல காலம் பிறந்தது என்ற அடிப்படையிலேதான் இன்றைக்கு வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. பிரச்சினைக்குரிய ஒரு விஷயத்தைப் பற்றி நான் பிரச்சினைக் காகப் பேசவில்லை. உண்மையைச் சொல்லப் போனால், தமிழுக்காக மட்டும்தான் இன்றைக்குச் சில கருத்துக்களைச் சொல்லப் போகிறேன்.

*முற்பகல் 10-30*

*1956*-லிருந்து தெலுங்கு நாடு எது, தமிழ்நாடு எது, மலையாள நாடு எது என்றெல்லாம் பேசி முடிந்து, போராட்டம் எல்லாம் முடிந்த பிறகு, ஒரு எல்லை நிர்ணயிக்கப்பட்டு முடிவாகிவிட்டது. இருந்தாலும் நம்முடைய தமிழகத்தினுடைய எல்லை, நாட்டினுடைய எல்லை இன்றைக்கு நாம் வைத்திருக்கிற அந்த எல்லை மட்டுமல்ல, அதற்கு அப்பாற்பட்டும் தமிழ் மொழி ஏற்றம் பெற்று விளங்கியது. அது ஆந்திராவாக இருந்தாலும், கேரளாவாக இருந்தாலும் அந்த இடங்களிலே எல்லாம் தமிழ்தான் பேசப்பட்டது. இது உண்மையை முதல்வர் அவர்களே ஒப்புக் கொள்வார்கள். நான் அரசியலை இதிலே கலக்காமல் சொல்கிறேன். முதலமைச்சருடைய உள்ளத்தில் நீக்கமற இடம் பெற்றிருப்பது சிலப்பதிகாரம். அந்த சிலப்பதிகாரம் யாக்கப்பட்டது அல்லது எழுதப்பட்ட இடம் எது? தமிழகத்தின் இன்றைய பகுதியிலா? கேரளாவினுடைய மையப் பகுதியான திருச்சூர் மாவட்டத்தில் இருக்கின்ற கொடுங்கலூர் என்கிற ஊரிலேயிருந்துதான், செங்குட்டுவனுடைய தம்பி, அவனுடைய இளவல் இளங்கோ அந்தச்



சிலப்பதிகாரத்தை எழுதினான் என்பது வரலாறு. நான்கூட அந்த இடங்களை எல்லாம் போய்ப் பார்த்து விட்டுவந்தேன். இளங்கோ எங்கே உட்கார்ந்து சிலப்பதிகாரத்தை எழுதினான்? சேரப்பறம்பு என்று இன்றைக்குக் கூட சொல்லப்படுகிற கொடுங்கலூரிலே இருக்கிற அந்த இடத்தில் உட்கார்ந்துதான் சிலப்பதிகாரத்தை, நம்முடைய ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மிக உயர்ந்த இலக்கியமான சிலப்பதிகாரத்தை அவன் யாத்தான். அப்படியென்றால், அந்தப் பகுதியிலே எவ்வளவு தூரம் தமிழ் இடம் பெற்று இருந்து இருந்தால், சிலப்பதிகாரத்தை அவன் எழுதியிருக்க முடியும். அவன் சோழநாட்டிலேயிருந்து தொடங்கினாலும், கேரளா வரையில் சென்று, அது திருச்சூர் மாவட்டம் இன்றைக்கு மலையாளம் அதிகமாகப் பேசப்படுகிற உத்தர கேரளம் என்று சொல்லப்படுகிற அந்த உத்தர கேரளம், நம்முடைய மலையாள மாவட்டங்களாக இருந்த அந்த மாவட்டங்கள் கொங்கன் பகுதியிலே, மங்களூரிலிருந்து தொடங்கி, அது பாலக்காடு வரையிலும் வரக்கூடிய அந்தப் பகுதியிலே இருந்தாலும் கூட மிக அருமையான தமிழ் பேசப்பட்ட இடம், அருமையான கலவெட்டுக்கள் தமிழைக் குறித்த புராதன நூல்கள், புராதனக் குறிப்புகள் கிடைக்கக்கூடிய ஒரு இடம் அந்த இடம். திருவாங்கூர் கொச்சியும் அப்படித்தான். எனவே, அந்த இடங்களிலே நாம் இன்றைக்கு நிலத்தைக் கேட்பதற்காக அல்ல. அந்த நிலம் கேரளக்காரர்களுக்குத்தான். அது முடிந்து போன பிரச்சினை.

ஆனால், அந்த இடத்தில் நம்முடைய மக்கள் இருந்து உண்மையான தமிழைப் பேசினார்களே, அதுகுறித்து இருக்கக்கூடிய குறிப்புகள் என்ன, கல்வெட்டுக்கள் என்ன, நம்முடைய தமிழ் நாகரீகத்தினுடைய விடுபட்டுப்போன சின்னங்கள் என்ன? இவைகளைக் குறித்து நாம் முயற்சி செய்தால், குறைந்தபட்சம் நம்முடைய கோவை மாவட்டம் போன்ற பகுதிகளில் கிடைப்பதைவிட மிக அதிகமான குறிப்புகள் அங்கே கிடைக்கும், அதற்கு வாய்ப்புண்டு, அது எனக்குக்கூடத் தெரியும். எனவே இவைகளை எல்லாம் குறித்து, நாம் ஏன் ஆய்வு செய்யக்கூடாது? செய்திருக்கிறீர்களா? செய்திருந்தால் நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் செய்ய வேண்டும் என்று நம்முடைய தமிழ்க்குடிமகனார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து - அந்தப் பகுதியிலே உங்களுக்குள்ளே ஏதாவது இதிலே அரசியல் பிரச்சினை வருவதற்கு இடமே இல்லை - மாண்புமிகு அமைச்சர் அவர்களோ அல்லது தாங்களோ அந்த அரசோடு பேசி, நம்முடைய நாகரீகம், நம்முடைய மொழி வளம் குறித்து ஆராய

வேண்டும். அவைகள் எல்லாம் 500 வருடங்களுக்கு முன்பு தமிழ் இருந்த இடம். முழுக்க முழுக்கத் தமிழ் இருந்த இடம். அதற்குப் பிறகு அங்கே வேறு கலப்பு கொஞ்சம் ஏற்பட்டது, அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. நம்முடைய மணிப்பிரவாள நடை, கொடுந்தமிழ் என்றெல்லாம் சில உருவங்களை எடுத்த பிறகு, மலையாள மொழி வந்தது. அதுவும் எழுத்தச்சனுக்குப் பிறகு, வள்ளத்தோலுக்குப் பிறகு, எழுத்தச்சனுக்குப் பிறகுகூட மலையாள மொழி உருவாகவில்லை. (குறுக்கீடு) ஐயாளே அறியும்; வெகுமானப்பட்ட நம்முடைய ரெவின்யூகாரிய மந்திரி மலையாளத்தைக் குறித்து நல்லா அறியும், அது பறையும். *(சிரிப்பு)*

*முற்பகல் 10-35*

ஆகையினால் நான் கேட்டுக்கொள்வது, நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அருள்கூர்ந்து அந்த இடங்களிலே எல்லாம் எவ்வளவு தூரம் நம்முடைய தமிழ் இருந்தது; அதனுடைய குறிப்புகள் என்ன, கல்வெட்டுக்கள் என்ன, வேறு அடையாளங்கள் என்ன? என்னைக்கூடக் கூப்பிடுங்கள். நான் உங்களோடு வருகிறேன். தமிழ் எப்படி இருந்தது என்பதையெல்லாம் தயவுசெய்து ஆய்வு செய்யவேண்டும். இது ஒன்று. இன்னொன்று, எவ்வளவுதான் நாம் தூய்மையான தமிழ் என்று சொன்னாலும், அதிலே பிற மொழிக் கலப்பு வந்துவிடுகிறது. தூய்மையான தமிழா அல்லது பிற மொழிக் கலப்பு அதில் இருக்கிறதா, இல்லையா என்றால் தமிழ் மட்டும் தெரிந்தால், அதை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது. வேறு மொழியும் தெரிந்திருந்தால்தான் அதிலே எந்த மொழி நம்முடையது, எது எதிலே கலப்பு உடையது என்பதெல்லாம் நமக்குத் தெரியும். சிலரது காலத்தில் நல்ல தமிழ் இருந்தது. யாரும் அதைத் தவறாகக் கருதக்கூடாது. பல்லவர்கள் காலத்திலேயிருந்துதான் இந்தத் தீவிரமான கலப்புகள் தொடங்கின. அதைக்கூட நீங்கள் ஆய்வு செய்யவேண்டும். களப்பிறர்களுடைய படையெடுப்புக்குப் பிந்தியோ அல்லது பல்லவர்கள் வந்தபிறகோ—பல்லவர்கள் காலத்திலேதான்—தமிழிலே பிற மொழிக் கலப்பு அதிகமானது. அதற்கு முந்தியும் கொஞ்சம் இருந்தது. ஆனால் அது தீவிரமானது பல்லவர்கள் காலத்திலேதான் என்பதை நாம் எண்ணிப் பார்த்து, அதற்கு முன்பு தமிழ் எதுவாக இருந்தது என்பதைக் கொஞ்சம் ஆழமாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும், பரவலாக ஆய்வு செய்து பார்க்கவேண்டும். அது ஒன்று.



இன்னொன்று, நம்மிடம் இருக்கிற பழைய இலக்கியம் என்பது முதல் சங்கம், கடைச் சங்கம், இடைச் சங்கம் காலத்தியது. இன்றைக்கு கடைச் சங்கம் வரையிலேதான் நம்முடைய இலக்கியம் இருக்கிறது. முதல் சங்க இலக்கியங்கள் எது என்று இது வரையிலேயும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. தொல்காப்பியம் பற்றிச் சொல்கிறோம். தொல்காப்பியத்திலே கூட கலப்பு இருக்கிறதோ என்ற ஐயம் எனக்கு அடிக்கடி ஏற்படுகிறது. ஏனென்றால் இந்தக் காப்பியம் என்ற அந்தச் சொல்லேகூட சமஸ்கிருதத்திலே பயன்படுகிறது, மலையாளத்திலே பயன்படுகிறது, தென்னாட்டு மொழிகள் எல்லாவற்றிலும் பயன்படுகிறது. ஆகையினால் அந்தத் தொன்மையை எடுத்துவிட்டு காப்பியம் என்று பார்த்தால், இது தமிழா, சமஸ்கிருதமா அல்லது வேறு என்ன அதனுடைய மூலச் சொல், மூலம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இவைகளையெல்லாம் நாம் சுத்தப்படுத்தி, நம்முடைய தமிழை நாம் தூய்மைப்படுத்த வேண்டும். உதாரணமாக முதல் சங்க காலம் லெமுரியா கண்டத்திலே இருந்தது. குமரி கண்டத்திலே இருந்தது. அங்கே பக்ருளி ஆறு என்ற ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. கலைஞர் நன்றாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார். என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்று. நான் கலைஞரைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் இலக்கிய ஆராய்ச்சி உடையவர். அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் முடிவு எடுப்பார். ஆகையினால்தான் நான் இன்றைக்குச் சொல்கிறேன். வழங்கப்பட்ட காலம் போதுமானதாக இல்லாவிட்டாலும் இதிலே பேசித்தான் ஆகவேண்டும் என்பதால் பேசுகிறேன். முதல் சங்க காலத்தில் ஒரு கண்டம் இருந்தது. குமரிக் கண்டம், லெமுரியாக் கண்டம். பக்ருளி ஆறு என்ற ஒரு ஆறு ஓடிக் கொண்டிருந்தது. பக்ருளி என்பது தமிழ். அதில் சந்தேகம் இல்லை. உருது எப்போதோ வந்துவிட்டது. 200, 500 ஆண்டுகளுக்கு முன்பு, ஷாஜஹான் காலத்தில் வந்த மொழி உருதுமொழி. அது ஒரு கலப்பு மொழி. அதற்கென்று தனி அடிப்படை இல்லை. தூய்மையான சீரிளமை குலையாத நம்முடைய தமிழ். அதற்கு என்ன காரணம், இப்படிக் கலப்பு ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்யவேண்டும் அந்தத் துறை. நான் அதற்காகச் சொல்கிறேன். அதற்கு கபாடபுரம் தலைநகரமாக இருந்தது என்று எழுதப்பட்டிருக்கிறது. கபாடபுரம் என்பது தமிழாக இருக்க முடியாது. அது தமிழே அல்ல. ஆனால் அதற்கு கபாடபுரம் தான் தலைநகரம். பக்ருளி ஆறு ஓடிய அந்தக் குமரிக் கண்டத்தில், அந்த லெமுரியா கண்டத்தில், கபாடபுரம் தான் தலைநகரம் என்று சொன்னால், அதைத் தமிழ் என்று தமிழ்க்குடிமகன் ஏற்றுக் கொள்கிறாரோ என்னமோ எனக்குத் தெரியாது.

நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் சொல்வதற்கு இப்போது நேரமில்லை.

துணைத் தலைவர் அவர்கள் மணியடித்து விடுவார். அதற்காக நான் அந்த விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆகவே தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது. உண்மையான தமிழ் ஆராய்ச்சி வேண்டுமென்றால் பிற மொழிக் கலப்புகள் நிறைய இருக்கின்றன. எல்லாவற்றிலும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் வடமொழிக் கலப்பு இல்லாத தென் மொழிகளே இல்லை. அதிலே தமிழனுடைய ஆற்றல் என்னவென்றால், எல்லோரும் கலக்க அனுமதித்து விட்டார்கள். 80 சதவீதம் மலையாளத்திலே எடுத்துக்கொண்டால், நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், மலையாளத்திலே இருக்கிற அந்தச் சொற்கள் எல்லாம் சமஸ்கிருதம் என்று.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லாததை அவர் சொல்ல வேண்டாம்.

*முற்பகல் 10-40*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. அதனுடைய வியாகிரணம் சமஸ்கிருத வியாகிரணம், அதாவது இலக்கணம். அவர்கள் அதை எடுத்துக் கொண்டார்கள். அதற்கு வள்ளத்தோல் உருக்கொடுத்தார், மெருகு கொடுத்தார், உரம் ஊட்டினார், இன்றைக்கு அதை அந்த மக்கள் ஏற்றுக் கொண்டார்கள், அது அவர்களுடைய இஷ்டம், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. மலையாள நாடு என்ற கேரள நாடு இருக்கிறது, அப்படியே இருக்கட்டும். ஆனால் ஒன்று, இடுக்கி மாவட்டத்தில், திருவாங்கூர் மாவட்டத்தில், கோட்டயம் மாவட்டத்தில், பாலக்காடு மாவட்டத்தில் — நான் யாருக்கும் விரோதமாகச் சொல்லவில்லை. எனக்கு எல்லோரும் ரொம்ப நெருக்கமானவர்கள்தான். அடிக்கடி நான் கேரளாவிற்குப் போவதுமுண்டு. இல்லாவிட்டால் உள்ளே நுழையவிட மாட்டார்கள். எனவே நான் கேட்பது, இங்கே நம்முடைய சென்னையிலே ஆசான் பள்ளிக்கூடங்கள் என்று பல பள்ளிக்கூடங்கள் நடக்கின்றன, ஆசானுடைய பெயரிலே. அங்கேயெல்லாம் ரொம்ப நன்றாக நடத்துகிறார்கள். மலையாளம் படிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. தெலுங்கு படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், நம்முடைய தமிழைப் படிப்பதற்கு இடுக்கி மாவட்டத்தில் என்ன ஏற்பாடு செய்து இருக்கிறார்கள்? சித்தூர் நகரம் என்ற ஒரு இடத்தைத்



தவிர எத்தனை மாவட்டங்களில் தமிழ் பேசப்படுகிறது? ஆந்திராவிலே, கர்நாடகாவிலே.

பெங்களூர் என்றால் மெஜாரிட்டி கன்னடக்காரர்கள் இல்லை. மெஜாரிட்டி கன்னடக்காரர்கள் இல்லவே இல்லை, பெங்களூர் நகரத்தைப் பொறுத்தவரையிலே. நாம் திருவள்ளுவர் சிலை வைப்பதற்குக்கூட நம்முடைய ஆட்களுக்கு சுதந்திரம் இல்லாமல், அவர்கள் எல்லாம் தாக்கப்பட்டார்கள். திருவள்ளுவர் சிலைகூட வைக்க முடியவில்லை. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசியலுக்காகச் சொல்லவில்லை; மொழி அடிப்படையிலே மட்டும் நான் பேசுகிறேன். திருவள்ளுவர் தமிழுக்கு ஆக்கம் தந்தவர், உயிர் தந்தவர், இன்னும் சொல்லப் போனால், திருவள்ளுவர் இல்லாவிட்டால் தமிழே இல்லை. அப்படிப்பட்ட திருவள்ளுவருக்கு, அங்கே பெங்களூரிலே சிலை வைப்பதற்கு அவர்கள் இடம் கொடுக்கவில்லை. தமிழர்கள் அதிகமாக வாழ்கிற பெங்களூரிலே இந்த நிலை. பத்ராவதியில் ஷிமோகாவில், இன்னும் சொல்லப் போனால், காமராஜர் நகர், முங்கனூர் என்ற இடங்களிலே எல்லாம் தமிழ்தான் பேசப்படுகிறது. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, அதற்காக சண்டைக்குப் போக வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை நான் வைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அரசோடு பேசி, நாம் எப்படி அவர்களுக்கு, அவர்களுடைய மொழி வளர்ச்சிக்கு இடமளித்து இருக்கிறோமோ, வாய்ப்பு கொடுத்திருக்கிறோமோ, வசதி படைத்துக் கொடுத்திருக்கிறோமோ, அதே மாதிரியாக அந்தப் பகுதியில் உள்ளவர்களும் செய்து கொடுக்க வேண்டும். இடுக்கி மாவட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரியும், இடுக்கி மாவட்டத்திற்குப் போய் இருப்பவர்களுக்கு. அங்கு எல்லாம்—சின்ன வயதிலே நான் பள்ளிக் கூடத்திலே படித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவன், தேவிகுளம், பீர்மேட்டுக்காக பள்ளியிலே இருக்கும்போதே போராடினேன், அது போய்விட்டது, அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அது முடிந்துவிட்ட கதை—ஆனால் எதற்காக நாம் போராடினோம், பெரும்பான்மையோர் தமிழர்கள் என்பதற்காகப் போராடினோம். அவர்கள் இன்றைக்கு தங்களுடைய பண்பாட்டை, கலாச்சாரத்தை, தமிழ் உணர்வை வளர்த்துக் கொள்வதற்கு அங்கு இருக்கக்கூடிய அரசாங்கம் வசதி செய்து தரவேண்டும், அது அவர்களுடைய கடமை. எனவே, அதுகுறித்து ஆய்வு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய தமிழர்களுக்கு அங்கே வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

நம்முடைய அவைத் தலைவர் மாண்புமிகு திரு. பி.டி.ஆர். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் உத்தமபாளையத்தைச் சேர்ந்தவர். கொஞ்சம் அங்கேயிருந்து போனால், குமுளியிலே ½ மைல் தூரத்தில் லோயர் அணைக்கட்டிலேயிருந்து ஆரம்பம். அந்தக் குமுளியிலே இருந்து கோட்டயம் வரையில், காஞ்சனம்பள்ளி உள்ளிட்டு—மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது—அத்தனை பேரும், எல்லோரும் தமிழ் பேசக்கூடியவர்கள், தமிழ் இனத்தவர்கள். இன்னும் சொல்லப் போனால், நான் பேசக்கூடாது, ஏனென்றால் கவர்னரைப் பற்றி பேசக்கூடாது. ஆனால் கவர்னர் என்ற முறையிலே இல்லை, இன்றைக்கு நம்முடைய மேதகு ஆளுநர் பாத்திமா பீவி இருக்கிறார்கள், அவர்களேகூட அந்த இடத்தைச் சார்ந்தவர்கள்தான். காஞ்சனம்பள்ளியில் இப்போது புதியதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற பட்டனம்திட்டா ஜில்லா, அந்த ஜில்லாவிலிருந்து வந்தவர்தான். அவர்களுடைய மூதாதையரைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால், இதிலே பிரச்சினை வரும், வராமலும் போகலாம். ஆனால், ஒன்றை நான் சொல்கிறேன், தயவு செய்து இந்த ஏரியாவிலே இருக்கிறவர்கள் எல்லாம் தமிழர்கள், சித்தூர் நகரிலே இருக்கிற முக்கால்வாசி தமிழர்கள் (குறுக்கீடு) ஆனால், உண்மைதான். (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள். இப்போது எங்களுடைய ஊரிலே தெலுங்கர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய ஊரிலே வட ஆற்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலேயெல்லாம் நிறைய தெலுங்கர்கள். ஆகையினால், தெலுங்கர்கள் என்பதற்காக நாம் உதாசீனம் செய்துவிட முடியுமா? அவர்களுடைய கலாச்சாரம், அவர்களுடைய மொழி, அதற்கு நாங்கள் பாதுகாப்புத் தர வேண்டும், தந்து கொண்டு இருக்கிறோம், ஆனால், அதேமாதிரியாக......

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன் உதிரத்து உதித்தெழுந்து ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"



என்று பாடினார் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை. ஆகவே தமிழினுடைய வயிற்றிலிருந்து உருவானதுதான் கன்னடம், களிதெலுங்கு, கவின் மலையாளம், துளு என்று இருக்கின்றபோது அங்கு இருக்கக்கூடிய கன்னடத்துக்காரர்கள் ஆனாலும்சரி, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களானாலும்சரி, எல்லோருமே நம்முடைய குழந்தைகள் என்ற அளவில் எடுத்துக்கொண்டு, வேண்டுமானால் தமிழை அவர்கள் தாயை மறந்ததுபோல் தமிழை மறந்து இருக்கலாம். ஆகவே தமிழ் உணர்வை ஊட்டுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற வகையிலே அரசு ஆயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது கேட்டிருக்கலாம் அல்லவா? திரு. அப்துல் லத்தீப், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் எல்லாம் குழந்தைகளோ அல்லது சகோதரர்களோ நான் அதை மறுக்கவில்லை. அந்த ஆய்வுக்கும் நான் போகவில்லை. நாங்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். காரணம் என்னவென்றால் இவர்களை எல்லாம் கவனிப்பது நம்முடைய பண்பாட்டின்பாற்பட்டது. அவர்கள் எவ்வளவுதான் நம்மைப்பற்றி பாராமுகமாக இருந்தாலும், எல்லோருக்கும் நன்மை செய்வோம் என்பது நம்முடைய தமிழ்ப் பண்பாடு. அதைத்தான் நாங்கள் வளர்க்க விரும்புகிறோம். அது அவர்களுக்குச் சாதகமாகும். இப்போது அவர் சொல்கிறார், ஏதோ நாம் பாடுகிறோம் என்று. அந்த பாடறதே நம்முடைய பண்பாட்டிற்கு விளக்கம் ஆச்சே. நாம் நம்மைப்பற்றி மட்டும் சிந்திக்காமல் அவர்களைப் பற்றியும் சிந்தித்து, அவர்களையும் சேர்த்து நாமும் வளர வேண்டும் நம்மோடு அவர்களும் வளர வேண்டும் என்பதற்காகப் பாடப்பட்ட பாட்டுதானே அது. அதுதானே நம்முடைய யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது நம்முடைய பண்பாட்டினுடைய விளக்கம்.

அது இங்கே மட்டும் அல்ல; அங்கேயும் வளர வேண்டும்; என்னுடைய உள்ளத்தில் மட்டும் அல்ல; நான் பெற்றெடுத்த குழந்தைகளும் அந்தப் பண்பாட்டில் வளர வேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர யாருக்காகவும் நான் குறைவாகப் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் அரசியல் ரீதியாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. நான் 2, 3 தடவை சொல்லிவிட்டேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது

என்பதற்காக. அன்றைக்கு அவர் சொன்னார் ஒன்று. அது உண்மைதான். அது முடிந்துபோன கதை. அதைப்பற்றி நான் அங்கே வேண்டும் என்பதற்காகப் பேசவில்லை. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை நற்றமிழ்கூறு நல்லுலகு' என்று பாடினான். அதற்காக நான் சொல்லவில்லை. நமக்கு வேண்டும் என்பதற்காக அல்ல. அந்த இடத்திலே வடவேங்கடம் என்று நம்முடைய முன்னோர்கள் நம்முடைய வட எல்லையைக் குறிப்பிட்டார்களே, அந்த இடத்திலே நம்முடைய பண்பாட்டுச் சின்னங்கள் என்ன இருக்கின்றன? கல்வெட்டுக்கள் என்ன இருக்கின்றன? அடையாளங்கள் என்ன இருக்கின்றன? என்று ஆய்வு செய்வதற்குக்கூட நமக்கு உரிமை இல்லையா? செய்திருக்கிறான் அந்த ஆய்வை. மேலும் துரிதப்படுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது இதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சருக்கு எல்லாம் தெரியும். நம்முடைய ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஇராமானுஜருடைய கோயில் உடையவர் கோயில் என்று சொல்வார்கள். (குறுக்கீடு) ஸ்ரீபெரும்புதூர், நீங்கள் அதிலேயேதான். அவர் கவனம் அதிலேயேதான் இருக்கும். (குறுக்கீடு) தொழிலாளர் துறையிலே—நான் சொல்லிவிட்டேனே; அவர் பேசிவிட்டார்; நான் இதை எடுத்துக்கொண்டேன் என்று சொல்லிவிட்டேனே; ஒவ்வொருவர் ஒன்று பேசினார்கள்; டிவிஷன் ஆஃப் லேபர். டிவிஷன் ஆஃப் லேபர் செய்து கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். ஆகையினால் தொழிலாளர் பற்றியே திரு. லத்தீப் பேசவில்லை; அவருக்கு அக்கறையே இல்லை என்று தயவுசெய்து சொல்லிவிட வேண்டாம். எனக்கும் இருக்கிறது. நான் இப்போது பேசியது தொழிலாளர்கள் உள்ளிட்ட தமிழர்களைப் பற்றிப் பேசுகிறேன். (சிரிப்பு).

எல்லோரைப் பற்றியும் நான் பேசுகிறேன். ஆகையினால் தயவு செய்து சொல்ல வேண்டாம். இப்போது உடையவர் கோயில் தல புராணம். அது மாண்புமிகு முதலமைச்சருக்கும் தெரியும். உங்களில் பல பேருக்கும் தெரியும். நான் சொல்வது அதிலே எழுதி வைக்கப்பட்டிருப்பதைத்தான் சொல்கிறேன். நானாக ஒன்றும் சொல்லவில்லை. யாருக்கும் தெரியவில்லை என்று சொன்னால் நம்முடைய ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கக்கூடிய உடையவர் கோவிலுனுடைய தல புராணத்தைப் படித்துப் பாருங்கள். அந்த தல புராணத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. நீங்களே படித்துப் பாருங்கள். 'குன்றுதோறும் நின்றாடும் முருகன் எங்கே எங்கே ஆடினான், அவன் ஆடியதோடு இங்கேயும் ஆடினானா அங்கேயும் ஆடினானா என்பதை எல்லாம் ஒரு வைணவ தலம், உடையவருடைய வைணவ தலத்தினுடைய தல புராணத்தில் எழுதப்பட்டிருப்பது; யாரும் பொய் சொல்லக்கூடாது; அதை நான் சொல்ல மாட்டேன். அதை படித்துத்தான் நான் சொல்கிறேன். இன்னும் விவரங்களோடு நான் சொல்கிறேன். ஏன் ஆய்வு செய்யக்கூடாது. ஆய்வு செய்ய வேண்டும். இரண்டாவது திருப்பதி, திருமலை போன்ற இடங்களில் மட்டும் அல்ல; விஜயவாடா வரையிலேயும்கூட நான் சொல்கிறேன். தமிழ்ப் பள்ளிக்கூடங்களை அங்கே ஏற்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சிக்காக அங்கு ஏற்படுத்த வேண்டும். விஜயவாடாவிலே நிறைய பேர் இருக்கிறார்கள். கம்மத்திலே இருக்கிறார்கள். ஓங்கோலிலே இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் நம்முடைய எல்லைக்குட்பட்ட நம்முடைய மொழியைப் பேசக் கூடியவர்கள். அவர்களுக்கு நாம் சிறுபான்மையோர் என்ற முறையிலே மலையாளத்துக்காரர்களுக்கு, ஆந்திரர்களுக்கு, கன்னடர்களுக்கு இங்கே நாம் வசதிகளைச் செய்திருக்கிறோம்.



முற்பகல் 10-50

கன்னடியர்கள் என்றே இங்கே பல பேர் வாழ்கிறார்கள். இதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மலையாள வளர்ச்சிக்காகவும், தெலுங்கு வளர்ச்சிக்காகவும், நாம் எப்படி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறோமோ அதே வசதியை அங்கே இருப்பவர்கள் நம்முடைய தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக செய்து தரவேண்டும். அதற்கு இந்த அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) கேட்டுக் கொள்ளவில்லை காரணம் என்னவென்றால் இன்று இந்த அரசு இந்தத் துறைக்கு ஒரு தமிழன் அல்ல, தமிழ்க்குடிமகனே அதற்கு தலைமை ஏற்று நடத்துவதாலும் தமிழே வழி நடத்துவது மாதிரி தான்.

நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள் இனிமையாக ஆரம்பித்திருக்கிறது இன்றைக்கு என்று. ஏன் என்றால் இன்று பேசப்படுவதே இனிமை தான். தேனினும் இனிய தேமதுர தமிழ்மொழி பற்றி இன்றைக்கு நாம் பேசுகிறோம். அதை வளர்க்கிற தலைமகன் இங்கே வீற்றிருக்கிறவர் அதுவாகவே இருக்கிறார். எனவே, இன்றைக்கு எல்லாமே இனிமைதான். இனிமையான செய்தி என்னவென்றால் இங்கே நீங்கள் கடைசியாக பேசும்போது இந்த முயற்சியை நான் மேற்கொள்வேன் என்று

சொன்னால் முழுக்க, முழுக்க இனிமையாகவே இருக்கும் என்று இனிமையான உள்ளத்தோடு .... *(குறுக்கீடு)* அரேபியாவைப் பற்றி எனக்கு என்ன கவலை. நான் தமிழன்; எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. சிலபேர் சில விஷயங்களில் என்ன சொல்கிறார்கள் தெரியுமா; நான் முஸ்லீம், இவன் தமிழன் என்று சொல்கிறார்கள். ஆகவே கிராமங்களில் என்ன வந்துவிட்டது என்றால் அவன் முஸ்லீம், நான் தமிழன் என்று சொல்கிறான். அப்போது நான் தமிழன் அல்லவா; என்னுடைய நண்பர்கள் ஒருமுறை நீ முஸ்லீம், நான் தமிழன் என்று சொன்னார்கள். நான் என்னப்பா நான் அரபு நாட்டிலிருந்து வந்தவனா. அரபு நாட்டில் இருக்கிற மதத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதை மறுக்கவில்லை. ஆனால் அந்த மதத்தினுடைய பழக்கவழக்கங்கள் வேறு, மொழி கற்பிக்கிற பண்பாடு வேறு, அதை வளர்க்கிற பண்பாடு வேறு; நான் பிறந்தது, வளர்ந்தது, நான் வளர்த்தது, இன்னும் சொல்லப்போனால் நான் வளர்த்தது தமிழ். ஏன் என்றால் நான் பாண்டியன். பலருக்குத் தெரியாது. பலருக்குத் தெரியாது நான் தொண்டை நாட்டிலே இருந்தாலும் *(மணியடிக்கப்பெற்றது)* நான் அறிவிக்கிறேன், என்னுடைய மூதாதையர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்தவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையும் ஆய்வு செய்ய வேண்டுமா?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இல்லை, ஆய்வு செய்து நானே முடித்து விட்டேன். *(சிரிப்பு)* என்ன என்ன ஆய்வுகள் தேவையோ அந்த ஆய்வுகளை எல்லாம் நானே செய்து முடித்துவிட்டேன். வேண்டுமானால் புத்தகமாகப் போட வேண்டும். அதற்கு மாண்புமிகு கலைஞர் அவர்கள் உதவிட வேண்டும். அதுமட்டுமல்ல, ஒரு கோரிக்கை என்னிடத்திலே வைத்தார்கள், அவர் காவிரிக் கரையில் இருக்கிற 64 சிவ ஆலயங்கள் பற்றியும் மற்றவைகளைப் பற்றியும் எழுது என்று சொன்னார். நான் தொடங்கியிருக்கிறேன் திடீரென்று உங்களிடம் சொல்வேன். உங்களுடைய உதவி அப்போது எனக்குத் தேவை. இப்போது இந்த வரலாற்றைப் பற்றி நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதுவரையில் உடல் நலம் இருக்கவேண்டும்; உயிர் இருக்க வேண்டும். அவ்வளவுதான். *(குறுக்கீடு)* உயிர் இல்லை என்றால் எப்படி முடியும்.? ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, இப்படிச் சொல்வது தவறு. நான் இதைப் பயன்படுத்திக் கொண்டு தெளிவாகச் சொல்கிறேன், தமிழன், தமிழ்நாட்டில் இருக்கிற தமிழன், எவனோ திப்புசுல்தானோடோ



அல்லது ஐதர் அலியோடோ அங்கே இருந்து எவரும் வரவில்லை, இங்கே பிறந்தார்கள், சிலரோடு சிலர் வந்தார்கள், அவனை வைத்துக்கொண்டு இங்கே ஒரு பாரம்பரியம் என்ன உருவாகிவிட்டது என்றால்—அவுன் முஸ்லீம், இவன் தமிழன். அப்படி என்றால் நான் தமிழன் இல்லையா? நான் இன்னும் சொல்கிறேன், சவால் விட்டுச் சொல்கிறேன், பல தமிழ் அறிஞர்கள் இங்கே இருக்கிறார்கள். எங்கள் மூதாதையர்கள் தமிழை வளர்த்து விட்டது போல் ஒருசிலர் தான் இங்கே தமிழை வளர்த்து இருக்கிறார்கள். சங்க கால தமிழை மட்டும் அல்ல, இன்னும் சொல்லப்போனால் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்கு அடி கோலிட்டவர்களே எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவே யாரும் தனித்துப்பேசக் கூடாது. இந்த உணர்வை அகற்றி விட்டால் நீங்கள் தமிழ்ப் பண்பாட்டை காப்பாற்றிவிடுவீர்கள். மதம் எதற்கு மொழியில் குறுக்கிடுவது? கிருத்துவம் இருக்கிறது, எத்தனையோ வைணவம் இருக்கிறது; காணபத்தியம் இருக்கிறது; சாத்தம் இருக்கிறது; கௌமாரம் இருக்கிறது; சைவம் இருக்கிறது; இதுவெல்லாம் வந்து பிரித்து, பிரித்தா பேசப்படுகிறது. எல்லாம் தமிழன் தானே; *(குறுக்கீடு)* காளமுகம் என்று ஒன்று இருக்கிறது; அபாலிகம் என்று இருக்கிறது; சைவம் இருக்கிறது; வீரசைவம் இருக்கிறது; அதிலே பல பிரிவுகள் இருக்கின்றன. அவன் எல்லாம் தமிழன், நான் தமிழன் இல்லையா; நான் எனக்கு தனியாக ஒரு மதத்தை வைத்திருக்கிறேனா?

*முற்பகல் 10-55*

ஆகையினாலே, தமிழ்ப் பண்பாடு என்றால், நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, எவன் எவன் உண்மையான தமிழனோ, தமிழுக்காக வாதாடுகிறானோ, தமிழ் பேசுகிறானோ, தமிழுக்காகப் பிறந்து, தமிழுக்காகவே இறந்து போகிறானோ அவன் எல்லாம் தமிழன். இந்த மதத்தார், முஸ்லீம், அவன், இவன் என்று சொல்லி இனிமேல் பேசக் கூடாது. அதனாலே தமிழனைத் தமிழன் என்றுதான் சொலவ வேண்டும். இந்தப் பண்பாட்டை நாம் வளர்த்து விட்டாலே தமிழுக்கு மிகப் பெரிய சேவை செய்தவர்களாக இருப்போம் என்று சொல்லி, ஐயா அவர்களும் கையைத் தூக்கி விட்டார்கள்; *(மணியடிக்கப்பெற்றது)* எனவே ஐயாவுக்கும்—உங்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்து, தலைவருக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய இந்த உரையை நிறைவு செய்து கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மானியங்களின்மீது நடைபெறுகின்ற விவாதத்திலே பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விவாதம் துவங்குவதற்கு முன்னாலேயே, நம்முடைய முதல்வரவர்கள் அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தி, அதன்மூலம் நாட்டுக்கு ஒரு நல்ல செய்தியைத் தெரிவித்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும்.

தமிழகத்திலே தொழில் அமைதி நிலவுகிறது. அரசாங்கம் பல்வேறு துறைகளிலே ஒத்துழைப்புத் தந்து, அது தருகின்ற சலுகைகளின் காரணமாகத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டு, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வு பெறக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

தொழில் உறவு சுமுகமாக இருக்கிற காரணத்தினாலே, வெளி நாட்டவர்களும் அரசு உதவியின் காரணமாக இங்கே தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து துவங்கயிருக்கின்றார்கள். அதற்கு நம்முடைய கலைஞர் அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே, காட்டாட்சியின் காரணமாகப் பல தொழிற்சாலைகள் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்ற நிலைமைகளை நாம் பார்த்தோம். நம்முடைய தலைவர் முதல்வரவர்கள், உழைக்கின்ற தொழிலாளிகளினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகப் போராடிய மே நாளுக்கு விடுமுறை தந்து இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டுதலாக இருக்கிறார்கள். அதை எந்த நாளும் இந்தத் தொழிலாளிகள் மறக்க மாட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகின்றேன்.

[illegible]ாரக் காலச் [illegible] இருந்தபொழுது. போனஸ் 20 சதமானத்திற்கு மேல் கிடையாது என்று பஞ்சாலை முதலாளிகள் கொடுக்க மறுத்தபோது நம்முடைய தலைவரவர்கள் கோவையிலே முகாமிட்டு, சட்டத்தை மீறி 20 சதமானத்திற்குமேல் போனஸ் வாங்கிக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் ஆவார்கள். அவருடைய அரசு தொழிலாளர்களுக்கு என்றும் துணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள உயர்வைக் கடந்த ஆட்சிக் காலத்திலே 500 கோடி ரூபாய்க்கு வழங்கியவர்கள் நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள்.

பத்திரிகை ஊழியர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய்; அதைப்போல மக்கள் நலப் பணியாளர்கள், கடந்த ஆட்சிக் காலத்திலே அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பி அவர்களுடைய வயிற்றிலே அடித்த கொடுமைகளைக் களைய வேண்டும் என்கிற வகையில் இந்த ஆண்டிலே 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க இருக்கின்ற முதல்வரவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, துன்பத்திலேயும், துயரத்திலேயும் இருக்கக் கூடிய கிராம ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி அவர்களுடைய வாழ்த்துக்களையெல்லாம் பெற்ற கலைஞர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10,000 காவலர்களுக்குப் பணி வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே தேர்வு செய்யப்பட்டவர்களாக இருந்தாலும், பழி வாங்குகின்ற உணர்ச்சியில்லாமல் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு நந்திருப்பது உள்ளபடியே பாராட்டக் கூடிய காரியமாகும்.

அதைப்போல, 1989 ஆம் ஆண்டு நம்முடைய ஆட்சியிலே 2,000 காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த 2,000 பேருக்கு இன்னும் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல நெடுஞ்சாலையிலே இருக்கக்கூடிய பழுதுகளைச் சரி செய்வதற்காக சாலைப் பணியாளர்களாக 10,000 பேரை நியமிக்க இருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் எண்ணூரிலே 7,000 ஏக்கர் பரப்பளவில் பெட்ரோலிய ரசாயனத் தொழிற்சாலைப் பூங்கா அமைப்பதை வரவேற்கிறேன். இப்பூங்காவிலே பெட்ரோலிய ரசாயனத் தொழிற்சாலைகளும், இயற்கை வாயுவை எரிபொருளாகப் பயன்படுத்தி, மின்சக்தி நிலையம் உருவாக்குவதன் மூலம் நாட்டிலே தொழில் வளர்வதற்கு நிதிநிலை அறிக்கையிலே வாய்ப்பு அளித்ததற்காக நான் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த அரசு முடிவு செய்திருப்பது, விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒரு நல்ல மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-00

கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளிகள் பிரச்சினைகளை ஆய்ந்து அறிந்து தீர்வு காண்பதற்காகப் பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க தனித்தனியே குழுக்கள் அமைத்து, அதன் மூலம் அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றியதற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்தபட்ச ஊதியக் குழுவினால் அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூலி நிர்ணயம் செய்வதாக அறிவிக்கப்பட்டாலும், பல கட்டங்களிலே குறைந்தபட்ச ஊதியக் குழுவினால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் கூலியே நிர்ணயம் செய்யப்படுவதில்லை. அதை மாற்றி ஆண்டுக்கு ஒரு முறை கூலி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய பரிந்துரை ஆணையிலுள்ள ஊதியத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டதுபோல், தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் அமைத்து, அந்தத் தொழில் முன்னேற்றக் கழகம் மூலமும், அதைப் போலவே தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலமும், 10,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, தொழிற்பேட்டைகளை உருவாக்கி அந்தத் தொழிற்பேட்டைகள் மூலம் இலட்சக்கணக்கான உழைப்பாளிகளுக்கு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதை நான் வரவேற்கின்றேன். அந்தத் தொழிற் சாலைகள் உருவாகுமானால் ஆயிரக்கணக்கான கட்டுமானத் தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். அதற்காக உழைக்கின்ற மக்கள் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

என்னுடைய பேரூர் தொகுதியிலே இருக்கக்கூடிய செட்டிப் பாளையம், வெள்ளலூர், அதேபோல பொங்கலூர் ஆகிய பகுதிகளில்



2,000 ஏக்கர் நிலங்களை 'சிப்காட்' மூலம் கையகப்படுத்தவிருக்கின்றார்கள். அதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டுச் சென்றிருக் கிறார்கள். தோட்ட நிலங்களுக்கு விலக்களிக்கவும் புஞ்சை நிலங்களுக்கு உரிய விலையை வழங்கவும் அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், 1-7-1957-க்கு பின் தமிழ்நாடு மின்சாரவாரியம் அமைக்கப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு உள்ள அனைத்துச் சலுகைகளும் மின்வாரியத்திலும் தொடரும் என அரசாணை போடப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையிலே ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் 1-1-1997 முதல் அரசு ஊழியர்களுக்கு அளிக்க அரசாணை போடப்பட்டுள்ளது. அதற்காக 20 ரூபாய் ஓய்வுபெற்ற அரசு ஊழியரிடமிருந்து பிடிக்கவும், ஆனால் மின்வாரிய ஊழியரிடமிருந்து 40 ரூபாய் ஆண்டிற்குப் பிடிக்கவும் உத்தரவிட்டு இருப்பதை மாற்றி ஒரே மாதிரியாகப் பிடிக்க வேண்டுமென அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒரு சிறப்பு மருத்துவ சிகிச்சைத் திட்டத்தின் மூலம், இதய நோய் போன்ற சிகிச்சைகளுக்கு வருடம் 5 ரூபாய் செலுத்தினால் ரூபாய் 50,000 உதவித்தொகை வழங்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், மின்வாரிய ஊழியர்களுக்கு 1-4-1997-ல்தான் இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 50,000 ரூபாய் என்பதை 25,000 ரூபாயாகக் குறைத்துள்ளதை மாற்றி, அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போலவே, இவர்களுக்கும் 50,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் தலைமை அலுவலகமாக இருக்கக்கூடிய சேப்பாக்கத்தில் உள்ள அதன் கட்டிடம் மிகவும் பழுதடைந்து கிடக்கிறது. அதைப் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே, வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்திருப்பவர்கள், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதும் என்ற முறை ஆந்திர மாநிலத்திலே இருந்து வருகிறது. அந்த முறையை நம்முடைய தமிழ்நாட்டிலும் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்ய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[ திரு. ஆ. நடராசன் ] [1997 ஏப்ரல் 16

கடந்த ஆட்சியில் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் ஆகிய பதவிகளை, தற்காலிக பணியாளர்களைக் கொண்டு நிரப்ப, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஆட்கள் எடுக்கப்படுவது தடை செய்யப்பட்டது. அதை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் வை. இராமசாமி தலைமை)**

அதைப்போலவே, அலுவலக உதவியாளர்களை - ஓ.ஏ. பணியில் அமர்த்தத் தடை செய்து, கடந்த ஆட்சியில் உத்தரவு போட்டதை நீக்கி, பல அரசு அலுவலகங்களிலே அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் தொழிற்சாலைகள் மற்றும் இதர அலுவலகங்களிலேயும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம்தான் வேலைக்கு ஆட்களை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீவா இல்லத்திலே புதிதாக கட்டப்பட்ட அந்தக் கட்டிடம் விரிசல் அடைந்திருக்கிறது. அதை உடனடியாகச் சரி செய்து திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான, இடத்தினை நீண்டகாலமாக வாங்குவதற்கு முயற்சித்தும் இன்னும் வாங்கப்படவில்லை. அதை உடனடியாக வாங்கிக் கட்டிடம் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா ஒன்றியங்களிலும் ஐ.டி.ஐ. துவக்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்போடு, மேலும் மக்கட்தொகைக்கு ஏற்ப சில ஒன்றியங்களில் அதிகப்படியான ஐ.டி.ஐ.-களைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்ற காரணத்தால், இன்றையதினம் பல ஆலைகள் மூடப்பட்டிருப்பதால் பல இலட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். கோவையிலே இருக்கக்கூடிய பவுண்டரிகள், விஸ்கோஸ் தொழிற்சாலை, திருப்பூர், ஈரோடு போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய சாயத்தொழிற்சாலைகள் ஆகியவற்றில் ட்ரீட்மெண்ட் பிளான்ட் அமைப்பதற்குக் கால அவகாசம் கொடுப்பதற்கு ஏதுவாக சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். காரணம், நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு, அதன் மூலம் அந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற காரணத்தால், இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்பு அடைந்திருக்கிறார்கள்.



1997 ஏப்ரல் 16] [ திரு. ஆ. நடராசன் ]

*முற்பகல் 11-05*

கோவை மாவட்டத்திலும் மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் பல்வேறு பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இராதாகிருஷ்ணா மில்ஸ், ஜெயலட்சுமி மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், ஸ்ரீஹரி மில்ஸ், சிவானந்தா மில்ஸ், இராமலிங்க சூடாம்பிகை மில்ஸ், கே.ஜி.எஸ். ஸ்பின்னிங் மில்ஸ், மேட்டூர் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ், மற்றும் அலெக்ஸாண்டர் திரெட் டிவிஷன் உட்பட 14 பஞ்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. மேலும் ஏறத்தாழ 20 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அவை மூடப்பட்டிருப்பதால் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நம்முடைய அரசு வந்த பிறகு, தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் பஞ்சாலைகளை ஏற்று நடத்தி, கடந்த காலங்களிலே தந்ததைப்போல, வேலைவாய்ப்பை இந்தத் தொழிலாளர்களுக்கும் தந்து, வாழ்வளிக்க நம்முடைய அரசு முழு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலுள்ள பஞ்சாலைகளுக்கு அரசு 15 கோடி ரூபாய் நிதியுதவி தந்ததன் காரணமாக இன்றையதினம் பல ஆலைகள் சிறப்பான முறையில் செயல்பட ஆரம்பித்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று, வேலூர், சேலம், கரூர் மற்றும் மேலூர் போன்ற பகுதிகளில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளையும் கருத்திற்கொண்டு, அந்தத் தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மூடப்பட்டிருக்கும் ஆலைகளைத் திறப்பதற்கென்று பி.ஐ.எப்.ஆர். என்ற அமைப்பு டெல்லியில் உள்ளது. ஒவ்வொரு வழக்குக்கும் டெல்லி சென்று வரவேண்டிய நிலையிருப்பதால், தொழிலாளர்களுக்கும், தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் மிகுந்த துன்பங்கள் ஏற்படுகின்றன. டெல்லியில் நடக்கும் வழக்குக்கு பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் செல்வதற்குப் பதிலாக, சென்னையில் அதனுடைய துணை மன்றத்தை ஏற்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் பத்து உள்ளன. இந்த எண்ணிக்கை போதாது. எனவே

மாவட்டந்தோறும் தொழிலாளர் நீதிமன்றத்தை அமைத்திட வேண்டும். ஐந்தாண்டுகளுக்கும் மேலாக தீர்ப்புக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே இதனைக் கருத்திற்கொண்டு, மாவட்டந்தோறும் நீதிமன்றத்தைத் துவங்கிட முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர் தீர்ப்பாயம் ஒன்றை கோவையிலே துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒசூர், இராணிப்பேட்டை போன்ற தொழிற்பேட்டைப் பகுதிகளில் தொழி லாளர் நல அலுவலகங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலாளர் பாதிப்புச் சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் தற்போது கூட்டுறவுத் துறையிடம் உள்ளது. அதை மாற்றி, தொழிலாளர் நலத் துறையிடம் ஒப்படைக்கவேண்டும். அத்துடன், அத்திட்டத்தை அமல்படுத்துவதற்குக் கூடுதல் அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி):** அடுத்து, திரு. பி.என். வல்லரசு.

*** திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழாய்ந்த தமிழறிஞர் தமிழக முதல்வராக வரவேண்டுமென்ற தமிழக மக்களுடைய எண்ணம் இன்று ஈடேறி, தமிழக முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் இன்று ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற காரணத்தால்தான், "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழ் மொழி வளர்க்கப்பட வேண்டும், தமிழ் மொழி, தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக மட்டுமல்லாமல், மத்திய ஆட்சி மொழியாகவும் வரவேண்டுமென்ற எண்ணம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தால்தான், தமிழ் வளர்ச்சித் துறைக்கு 'தமிழ்க்குடிமகன்' என்ற அமைச்சரை நியமனம் செய்திருக்கிறார்கள்: அது மனதாரப் பாராட்டக் கூடிய ஒன்றாகும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஒரு அமைச்சர் நியமனம் செய்யப்பட்டிருப்பது கலைஞர் ஆட்சியில்தான் என்று சொன்னால் அதுவும் மிகையாகாது. அந்த அளவுக்கு தமிழ் மொழி வளர்க்கப்பட வேண்டும்; போற்றப்பட வேண்டும்; இந்தியா முழுவதும் அது ஒரு ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால்தான், இன்றையதினம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தனியாக ஒரு அமைச்சரை தமிழ்





வளர்ச்சித் துறைக்கு நியமனம் செய்திருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்த வகையில் இன்றைய தினம் தமிழ் மொழி வளர்க்கப்பட வேண்டுமென்பதற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழகமெங்கும் பெயர்ப் பலகைகள் தமிழிலேயே எழுதப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் போதனா மொழியாக ஆக்கப்பட வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழில் பட்டப் படிப்பு படிக்கின்றவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்ற நிலையை அரசு உருவாக்க வேண்டும். தமிழில் பட்டம் படித்து வருகின்றவர்களுக்குக் கூடுதல் சலுகை என்ற நிலையை அரசு ஏற்படுத்திட வேண்டும். உயர்நீதிமன்றத் தீர்ப்பைக்கூட தமிழில் வெளியிடக்கூடிய நிலையை உருவாக்கித் தரவேண்டும். உயர்நீதிமன்றத்தில் வாதமும் தமிழ், தீர்ப்பும் தமிழ் என்ற நிலையை உருவாக்கித் தரவேண்டும். மருத்துவத் துறையிலும் முழுமையாக தமிழைக் கையாளச் செய்ய வேண்டும். அரசு உத்தரவுகள் இன்னும் தமிழில் முழுமையாக வெளிவரவில்லை. வருங்காலங்களில் அரசு உத்தரவுகளை தமிழில் முழுமையாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னர் முதல்வராக இருந்த காலத்திலே, மத்தியில் தமிழ் ஆட்சி மொழி என்ற நிலையை உருவாக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். இப்போதும், மத்தியில் தமிழ் ஆட்சி மொழி என்ற நிலையை உருவாக்குவதற்கு, அவர் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் வளர்ச்சித் துறையோடு, பல்வேறு துறைகள் இணைந்திருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட பல்வேறு துறைகளை தமிழ்த் துறையோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்ததற்காக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன். மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபட்ட பாண்டித்துரைத் தேவர் பெயரை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்காவது தமிழ்ச் சங்கத்தை தமிழ்நாட்டில், குறிப்பாக மதுரையில்

[ திரு. பி.என். வல்லரசு ] [1997 ஏப்ரல் 16

நிறுவி தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஏற்றத்திற்கு பாடுபட்ட, பாண்டித்துரைத் தேவர் பெயரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட வேண்டுமாய் மீண்டும் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கள் தொழிலாளர்களுடைய தோழனாக தொழிலாளர்கள் தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவேதான் 'மே தினத்தை' அரசு விடுமுறையாக அறிவித்தார்கள். 'மே தினம்' தொழிலாளர்களுடைய தினம். 'மே தினத்தை' தொழிலாளர்களுடைய மேம்பாட்டை, நலத்தைப் பாராட்டுகிற வகையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விடுமுறை தினமாக அறிவித்து, தொழிலாளர்கள் தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

மதுரை மாநகரிலே பசுமலை மஹாலட்சுமி மில் 4, 5 மாதங்களாக மூடிக்கிடக்கிறது. 600, 800 தொழிலாளர்கள் வேலையிழந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் எப்படி பி.அன்டு சி. ஆலையைத் திறப்பதற்கு ஓரிரு நாட்களிலே நடவடிக்கை எடுத்து, பல ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்தார்களோ, அதேபோல், 4.5 மாதங்களாக மூடிக்கிடக்கின்ற மதுரை, பசுமலை மஹாலட்சுமி மில்லைத் திறக்க வேண்டுகிறேன். அங்கே 600, 800 குடும்பத்தினர் ரத்தக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அந்தக் குடும்பங்கள் வேலையிழந்து தவிக்கின்றன. அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தர, அந்த மில்லைத் திறக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை கடந்த மூன்று வருடங்களாக மூடிக்கிடக்கிறது. எப்படி பி. அன்டு. சி. மில்லைத் திறப்பதற்குத் துரித நடவடிக்கை எடுத்தார்களோ, அதே போன்று ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையைத் திறப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் படித்து, வேலைக்காகப் பதிவு செய்துள்ளவர்களுக்கு உடனே வேலை கிடைக்கும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அனைவருக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சட்டத்தில் வேலை வாய்ப்பு உரிமை வழங்கப்பட்டு இருப்பதைப்போல, அனைவருக்கும் வேலைவாய்ப்பு தருகின்ற ஒரு உத்தரவாதத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1997 ஏப்ரல் 16] [ திரு. பி.என். வல்லரசு ]

என்னுடைய உசிலம்பட்டி தொகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளதால், தொழில்துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'சிட்கோ மூலம் அங்கே தொழிற்கூடங்களை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு ஐ.டி.ஐ. கூட கிடையாது. உசிலம் பட்டியில் ஒரு ஐ.டி.ஐ. உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிற்சாலைகள் எதுவும் என்னுடைய தொகுதியில் இல்லாத காரணத்தால், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள உசிலம்பட்டி தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட பல தொழிற்கூடங்களை அங்கே உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செல்லம்பட்டி யூனியனிலும், உசிலம்பட்டி யூனியனிலும் இரண்டு ஐ.டி.ஐ. கூடங்களை நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி):** திரு. சீ.வெ. கிருஷ்ணன்.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் தமிழ் ஆட்சி மொழி பற்றிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பு தந்திருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பத்திரப் பதிவுத் துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையிலே என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

*முற்பகல் 11-15*

திண்டுக்கல்-மன்னர் திருமலை மாவட்டத்திலுள்ள வேடசந்தூர் தொகுதியில், வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய மூன்று ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த மூன்று ஒன்றியங்களில் 45-க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் இருக்கின்றன. அவற்றில், 20-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில், தொழிலாளர் நலச் சட்டத்திற்கு விரோதமாக குழந்தைத் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்தி வருகிறார்கள். அந்தப் பஞ்சுத் தொழிற்சாலைகளில் குழந்தைகள் வேலை பார்க்கின்ற நேரத்தில், குழந்தைகள் அங்கே வேலை செய்கின்ற காரணத்தினால், பஞ்சு பறந்து, அந்தக் குழந்தைகளுடைய நுரையீரலைப் பாதிக்கின்ற அளவிற்கு நோய் ஏற்படுகின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு

முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், அங்கே முறையான தொழிலாளர்களை வைத்து வேலை செய்திட ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். தொழிற்சாலைகள் சட்டத்திற்கு விரோதமாக அக்குழந்தைகளை வேலையில் ஈடுபடுத்தி வருகிறார்கள். அவர்களைக் கொத்தடிமைகளாக வைத்திருக்கிறார்கள். வறுமையின் காரணமாக சிறுவயதிலே அந்தக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதைத் தடுத்து, தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் பள்ளியிலே சேர்ந்து படிப்பதற்கு வசதி வாய்ப்பில்லாமல் இருக்கின்றார்கள். எனவே, தொழிற் சாலைகளுக்கு அனுப்பப்படுவதால், அவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றார்கள். எனவே, அவர்களுக்காக, வடமதுரை, வேடசந்தூர், தாடிக்கொம்பு ஆகிய பகுதிகளில் தொழிலாளர் ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழக மருத்துவமனைகளை, ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேடசந்தூர்-கரூர் ரோட்டில் உள்ள திருச்செந்தூர் முருகன் மில்லில் நிர்வாகக் கோளாறின் காரணமாக சுமார் 400 தொழிலாளர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டு ஓராண்டுக் காலமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு, ஓராண்டுக் காலமாக வேலைக்குச் செல்லாமல் இருக்கின்ற தொழிலாளிகளை மீண்டும் அந்த ஆலையிலே வேலைக்கு அமர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, வேடசந்தூர், தாடிக்கொம்பு, குஜிலியம்பாறை, வடமதுரை ஆகிய பகுதிகளிலே ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை அமைத்துத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஐ.எஸ்.ஓ. என்ற பெயரில், அந்தப் பகுதிகளில் தொழில் தொடங்க வந்த தொழில் அதிபர்கள், முதலில் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி, பின்னர் 4, 5 தொழிற்சாலைகளை உருவாக்கி, அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தங்களுடைய தொழிலை வளப்படுத்திக் கொள்கின்ற அளவிற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஆனால், அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய ஊதியத்திலேயிருந்து எந்தவிதப் பிடிப்பும் செய்வதில்லை. பி.எஃப். பிடிப்பதில்லை; இன்சூரன்ஸ் பிடிப்பதில்லை. அந்தத் தொழிற்சாலைகளிலே வேலை



செய்கின்ற தொழிலாளிகளைக் கொத்தடிமைகளாக வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற 40-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் எந்தச் சங்கமும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தொழிலாளர் முன்னேற்றச் சங்கமும் இல்லை. ஐஎ.ன்.டி.யூ.சி. தொழிலாளர் சங்கமும் இல்லை. அண்ணா தொழிலாளர் சங்கமும் இல்லை. எந்தவிதத் தொழிற்சங்கங்களும் இல்லை. இதனால் அவர்கள் கொத்தடிமைகளாக வைக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நேரடியாக இந்த விஷயத்திலே தலையிட்டு, அந்தத் தொழிலாளர்களுக்குரிய வசதிகளைப் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிலாளர்கள் 20 ஆண்டு காலமாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்களுக்குரிய சம்பளம் கிடைப்பதில்லை. அவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆட்படுகிறார்கள். அந்தத் தொழிற்சாலைகள் மூலம் அவர்களுக்கு உரிய மருத்துவ வசதியும் அளிக்கப்படுவதில்லை. 'கேன்டீன்' வசதி இல்லை;. சீருடையும் கொடுப்பதில்லை. எந்தவித வசதியும் இல்லாத நிலை இருப்பதால், உடனடியாக, போர்க்கால அடிப்படையில், நம்முடைய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'மே' தினத்தன்று, தொழிலாளர்களுக்குச் சம்பளத்தோடு கூடிய விடுமுறை நாளாக அறிவித்த தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், வேடசந்தூரில் கேட்பாரற்றுக் கிடக்கிற, நாற்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலே, கொத்தடிமைகளாகப் பணியாற்றுகின்ற இந்தக் குழந்தைத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதோடு, அந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் கிடைக்கவும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அதேபோல், என்னுடைய வேடசந்தூர் தொகுதியிலே, வேடசந்தூர் வடமதுரை, குஜிலியம்பாறை ஒன்றியங்களிலே இருக்கிற தொகுதிப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை. (மணியடிக்கப்பெற்றது) மாற்றுத் தலைவர் அவர்கள் கொஞ்சம் அனுமதி தரவேண்டும். தமிழ்நாட்டிலே வறட்சி என்று எப்போது சொன்னாலும், அந்த வறட்சிப் பட்டியலிலே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியையும் அறிவிப்பார்கள். அப்படிப்பட்ட அந்த வறட்சிப் பகுதியைப் பார்வையிடுவதற்கு,

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வணக்கத்திற்குரிய அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்களும். பொதுப்பணித் துறை அமைச்சர், வணக்கத்திற்குரிய அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும், என்னுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஐ. பெரியசாமி அவர்களும் வந்து பார்த்தார்கள்; அங்கே கால்நடைகளுக்குக்கூட, தீவனங்கள் கிடைப்பதற்கு அரிதாக இருக்கிறது. அங்குள்ள அடிக்குழாய்களில் எல்லாம் தண்ணீர் வராமல், குடிநீர்ப் பிரச்சினை மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்களும் தலையிட்டு, என்னுடைய தொகுதியில், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் வை. இராமசாமி):** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று முன்மொழியப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலேயும், இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் காணப்பட்டிருக்கிற, தொழிலாளர்களுடைய முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி அரசு ஒரு ஆய்வு நடத்தி, எந்த அளவுக்குப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன; இன்னும் தீராமல் இருக்கின்ற பிரச்சினைகள் எவ்வளவு? அவற்றில், யாருடைய தலையீட்டின் காரணமாக அல்லது அரசினுடைய மேல்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள் பெரிய அளவுக்கு இதிலே தலையிட்டதன் காரணமாக, இந்தத் தொழிலாளர் பிரச்சினைகள் தீராமல் உள்ளனவா என்பதையெல்லாம் முறையோடு சற்று ஆய்வு செய்வது கடந்த காலத்திலே நாம் எதைச் செய்திருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக அமையும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது, வேலைவாய்ப்பு சம்பந்தமாக, நம்முடைய அலுவலகங்களில், எவ்வளவு வேலைவாய்ப்புப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன; வேலையில்லாதவர்களுடைய பட்டியல் எந்த அளவுக்கு வளர்ந்துபோய் இருக்கிறது என்கிற விவரங்களையும் ஆய்வு செய்வதும் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.



மூன்றாவது, பொதுவாக, நம்முடைய 'அன்-ஆதரைஸ்டு செக்டார்ஸ்' என்று சொல்லக்கூடிய பகுதிகளில், எந்தப் பகுதியானாலும் சரி, இன்று வேலையில் இருக்கின்றவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படுகிறதா என்பதையும் ஒரு ஆய்வின் மூலமாக அறிய வேண்டும். ஏனென்றால், இன்று குறைந்தபட்சக் கூலிச் சட்டம் என்பது ஒரு பக்கம் சட்டமாக இருந்தாலும், அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, குறைந்தபட்சக் கூலி என்று சொன்னாலும், அது அவர்களுடைய வாழ்க்கை சௌகரியங்களுக்கு எல்லாம் குறைந்ததுதான்; அந்த அளவுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டாலும்கூட, அதனை நிறைவேற்றாமல் இருக்கிற எத்தனையோ நிர்வாகங்கள் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்றன; அதையும் களைவதற்கான உரிய நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், ஸ்தாபனங்களிலே, இன்று சங்கம் அமைத்த காரணத்தினால், தொழிலாளி வர்க்கத்தினுடைய, அடிப்படையான சங்கம் சேரும் உரிமைகள் பறிக்கப்படுகின்ற ஒரு நிலைமையும் இருக்கிறது. குறிப்பாக, பன்னாட்டு நிறுவனமாக இருக்கிற 'பெப்சி கோலா' நிறுவனத்திலே சங்கம் அமைத்ததன் காரணமாக, இன்று அங்கே ஒரு வேலைநிறுத்தத்தையே சந்திக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை, அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, சங்கம் அமைக்கிற அந்த உரிமை என்பது மறுக்கப்படக் கூடாது. அது எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அதற்கு உரிய பாதுகாப்பும் நடவடிக்கையும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

அதேபோன்று இந்தக் கால கட்டத்திலே, மூடப்பட்ட ஆலைகளின் பட்டியல், சாதாரணமாக இந்த அரசாங்கத்தினுடைய அணுகுமுறையின் காரணமாக குறைந்திருக்க வேண்டும். ஆனால் அது பெருகிவருகிற நிலையை நாம் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே இந்த ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே இந்த ஒரு சூழ்நிலையை தடை செய்வதற்கு, அதற்கு ஆதாரமான ஆலைகள் மூடப்படுவதைத் தடை செய்வதற்கு, அதற்கு ஆதாரமான பிரச்சினைகள் என்னென்ன என்பதைக் கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை காலாகாலத்தில் எடுப்பதன் மூலமாகத்தான் இதிலே பணியாற்றுகின்ற ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

குறிப்பாக நான் சொல்ல விரும்புவது நம்முடைய குவாரிகளிலே வேலை செய்கிற ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஜல்லி உடைக்கின்ற

தொழிலாளர்களுக்கு இன்று முழுவதுமாக வேலை மறுக்கப்பட்டிருக்கிற ஒரு காட்சியை நாம் பார்க்கிறோம். அதற்குச் சுற்றுப்புறச் சூழல் என்ற இன்னொரு காரணத்தைச் சொன்னாலும், அதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டுபிடித்து அந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு உண்டு என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதேபோல அதிகாரிகள் பற்றாக்குறை என்பது மாநிலத்திலே இருக்கக்கூடிய பெரும் பிரச்சினையாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் Additional Chief Inspector of Factories ஓராண்டுக்கு மேலே ஆகியும் இன்னும் நியமிக்கப்படவில்லை. அதன் காரணமாக பல்வேறு பணிகள் முடமாகி இருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம்.

அடுத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல இடங்களில், பல மாவட்டங்களில் வாரியத்தினுடைய அமைப்புகள் பல ரூபத்தில் வந்தாலும்கூட, ஒரு மாநில அளவிலே கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஒரு வாரியம் அமைத்து, அவர்களுக்கு வர வேண்டிய பாதுகாப்பு உதவிகள் முழுவதும் செய்யப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதுபோன்று வேலை நிரந்தரச் சட்டம் சரிவர அமல் நடத்தப்படவில்லை. அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கைத்தறித் தொழிலாளர்களுக்கு 15 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பல பாதுகாப்பான சட்டங்கள் வந்தும், அந்தச் சட்டங்கள் சரிவர அமல்படுத்தப்படாத ஒரு நிலை உள்ளது. குறைந்தபட்ச ஊதியம் அறிவிப்பதற்கு எதிராக பல முதலாளிகள் நீதிமன்றங்களுக்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்றதற்குப் பின்னால் நம்முடைய அரசு மேல்முறையீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் இந்தத் தொழிலாளர் நலத் துறையிலே தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு, இந்த வழக்குகளை எல்லாம் வாதிடுவதற்கு தனியாக ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுபோல நான் ஏற்கெனவே சொன்னதுபோல தனியார் துறை, பொதுத் துறை நிறுவனங்களில் எல்லாம் சங்கம் அமைத்துக் கொள்ளும் உரிமையை அரசு பறிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து.



அதற்கடுத்து நம்முடைய முந்திரி ஆலை. தமிழ்நாட்டிலே ஒட்டுமொத்தமாகப் பார்த்தோமேயானால் முந்திரி ஆலைகளில் 45,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். அதில் ஒருசில தொழிற்சாலைகள் மட்டுமே பிற மாவட்டங்களில் உள்ளன. பெரும்பாலான தொழிற்சாலைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இருக்கின்றன. இந்த 45,000 தொழிலாளர்களில் 40,000 தொழிலாளர்கள் அங்கே பணியாற்றுகிறார்கள். குறைந்தபட்ச கூலிச் சட்டம் இன்னும் அமல்படுத்தப்படவில்லை. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தக் குறைந்தபட்ச கூலிச் சட்டம் வருகிறபோது இந்தத் தொழிலையும் பாதுகாக்கிற அளவிலே அந்த குறைந்தபட்ச கூலிச் சட்டத்தைக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்பதுதான்.

அடுத்தபடியாக வைத்திய உதவி. 2 ஆண்டுகளுக்கு முன்னாலே மத்திய அரசிடமிருந்து ஈ.எஸ்.ஐ. திட்டத்தை அமலாக்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டும், இந்த அரசு 2 மாதங்களுக்கு முன்னாலே மார்த்தாண்டம், இடைக்கோடு, நித்திரவிளை ஆகிய 3 பகுதிகளில் மட்டும்தான் அந்தத் திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மற்ற பகுதிகளிலும் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 10,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற காரணத்தினால் அதோடு இணைத்து கருங்கல் பகுதியிலும், தக்கலைப் பகுதியிலும் அதை விஸ்தரிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தை அமலாக்குவதிலே துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வருடத்தில் 2, 3 மாதங்கள் மட்டும்—இல்லையென்று சொன்னால் அதிகபட்சம் 3 வருடம் மட்டும்—வேலை செய்கிற ஆலைகள் கூட லைசன்ஸை வாங்கிவிடுகின்றன. அந்த 3 வருடம் அந்த ஆலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு அவர்கள் எந்த உரிமையும் கொடுப்பதில்லை. அவர்களுடைய பிராவிடண்ட் பண்டோ, கிராஜுவிட்டியோகூட அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவற்றையெல்லாம் கொடுக்காமலே ஆலை அதிபர்கள் ஆலைகளை மூடிவிடுகிறார்கள். எனவே, 1 வருடம், 2 வருடம், 3 வருடம் வேலை செய்யக்கூடிய அந்த முந்திரி ஆலைகளுக்கு லைசன்ஸ் வழங்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே அதை நாம் அணுக வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

அடுத்து நம்முடைய இரப்பர் கழகம். நான் ஏற்கெனவே ஒரு முறை அதுபற்றி இங்கே சொல்லியிருக்கிறேன். இந்த இரப்பர் கழகத்திலே சி.எல்.ஆர். என்று சொல்லப்படுகிற, ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்று கொஞ்சம் பேரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சட்ட ரீதியாக கிடைக்கவேண்டிய பாதுகாப்பு கிடைக்கவில்லை. எனவே அரசு இரப்பர் கழகத்தில் ஒரு முன்மாதிரியாக—தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை காட்டுகிற அரசு என்கிற முறையிலே—அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் முழுவதும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

*முற்பகல் 11-30*

அடுத்ததாக, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்கள், 4 பக்கங்களிலிருந்தும் அதிகமாக வேலை செய்து கொண் டிருக்கிறார்கள். சிற்றார், கல்லார், மைலார் போன்ற பகுதிகளில் இலங்கைத் தமிழர்கள் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். அங்கே ஒரு குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப் படுகிறது. எங்களுடைய வேண்டுகோள் எல்லாம் குறைந்தபட்சம் 3 பேர்களுக்காவது வேலை கொடுக்க வேண்டும் என்பதுதான். எனவே, குறைந்தபட்சம் ஒரு குடும்பத்தில் 3 பேர்களுக்காவது வேலை கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தில் நீண்டகாலமாக கான்ட்ராக்ட் ஓர்க்கர்ஸ் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதியினர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை சி.எல்.ஆர். தொழிலாளர்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோட்டிலிருந்து ஆரல்வாய்மொழி வரையுள்ள கடலோரப் பகுதியில் தேங்காய் மட்டை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழிலில், மிகக் குறைந்த சம்பளத்தில், மிகக் குறைந்த வருமானத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்குப் போதுமான வருமானமும் இல்லை. அந்தத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் இரண்டு மூன்று இடங்களில் சிறிய தொழிற்சாலைகளைக் கொண்டு வரவேண்டும்.



ஏற்றுமதித் தரம் வாய்ந்ததாக அந்தத் தொழிலை மாற்றுவதன் மூலமாக அவர்கள் வாழ்வு செழிப்பதற்கான வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக வள்ளவிளை, வயக்கல்லூர், பைங்குளம், ஈத்தாமொழி ஆகிய இடங்களில் கயிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிவகாசியில் குழந்தைத் தொழிலாளர்களைச் சர்வ சாதாரணமாக அமர்த்தி வேலை வாங்குகிறார்கள். நம்முடைய அரசானது பல்வேறு துறைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கக்கூடாது என்ற உணர்வை வைத்துக் கொண்டிருந்தாலும்கூட, சிவகாசியை எடுத்துக்கொண்டால் குழந்தைத் தொழிலாளர்கள் பரவலாக இருக்கிறார்கள். மாற்றுப் பாதை என்ற முறையில் எந்த அளவுக்கு அவர்களுக்கு பாதுகாப்பு தரமுடியுமோ அந்த வகையில் பாதுகாப்புத் தருவதற்கு நாம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனி ஏறத்தாழ 36 மாதங்களாக மூடப்பட்டு இருக்கிறது. அரசாங்கத்திடமிருந்து ஏறத்தாழ 18 கோடி ரூபாயை அவர்கள் கடனாகவும், மானியமாகவும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள். அதனைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை 'விஸ்கோஸ்' தொழிற்சாலை செயல்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

அடுத்து, நீலகிரியில் அரசு தொழில் துறையின்கீழ் செயல்படும் "இன்கோசர்வ்" தொழிற்சாலையில் அரசால் அறிவிக்கப்பட்ட சம்பளம் அமல்படுத்தப்பட வேண்டும்.

அடுத்து, கடலூர் தாலுகாவில் உள்ள 'மகாவீர் பவுண்டேசன்' தேயிலைத் தோட்டத்தில் 2000 தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய்த பி.எப். பணத்தைக் கட்டவில்லை. அதை அவர்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இராசபாளையம் 'ஸ்பின்டெக்ஸ்ட்' தொழிலாளர்களைச் சட்டவிரோதமாக இடமாற்றுகின்ற உத்தரவை வாபஸ் வாங்கச் செய்ய வேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டில் கருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம்—மினிமம் வேஜஸ்—வழங்கப்படவில்லை. இதிலே பெரிய கருட்டு, சிறிய கருட்டு என்று இரண்டு வகைகள் இருக்கின்றன. இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதுகாப்பற்ற நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களைக் காப்பாற்றுவதற்கு உரிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி அபிசேகப்பட்டி கால்நடைப் பண்ணை நிர்வாகம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பின்னீட்டு சம்பளத்தை வழங்கவில்லை. அவர்கள் கோர்ட் தீர்ப்பையும் அமல் படுத்தவில்லை. இது குறித்து அரசு ஆவன செய்யவேண்டும்.

அடுத்து, மாதம் சுமார் 1 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டும் தளவாய்புரம் 'தாலுகா பவர்லூம் ஒர்க்ஸ்' ஆலையை தனியார் மயமாக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் கீழ் இயங்கும் 'அருப்புக்கோட்டை விசைத்தறிக் கூடத்தை'—(டி.என்.டி.சி.)-யை—பிரைமரி சொசைட்டியாக மாற்றக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகரில் 300-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் தேவேந்திரா சாரீஸ் ரகம் தொழில் செய்கின்றனர். அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று' நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அருப்புக்கோட்டையில் பஞ்சாலை, மாவு ஆலை, விசைத்தறி, தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலை போன்றவற்றில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

சென்னை மற்றும் சிவகாசியில் உள்ள மகளிர் மேம்பாட்டுக் கழக ஊனமுற்ற பெண் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 10 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. அதை அவர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் ஏற்றுமதி வளாகம் என்று ஒரு பகுதி இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 30 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.



அங்கே இருந்து துணி போன்ற பல்வேறு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கே பல பிரிவுகள் மூடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். குறிப்பாக 6 கம்பெனிகள் அங்கே மூடப்பட்டிருக்கின்றன. முதலாளியைப் பார்க்கலாம் என்றால் முதலாளி ஊரில் இருப்பதில்லை. முதலாளியை லேபர் டிப்பார்ட்மெண்டுக்கு வரவழைத்துப் பேசி தீர்வு ஏற்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஏறத்தாழ நான் சொன்ன வளாக்கிலே, 40000 தொழிலாளர்கள்; அதிலே பெருவாரியாக 30000 தொழிலாளர்கள் பெண்கள்; கிராமங்களிலிருந்து அவர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கு ஒரு நியாயமான சம்பளம் வழங்காமல் இன்று கொள்ளையடிக்கிற ஒரு கூட்டமாக இருக்கிறது. அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற ஒரு காரணத்தினாலே, அன்னியச் செலவாணி என்று சொல்லப்படுகின்ற அந்தப் பணம் நம்முடைய கையில் வருவதன் காரணத்தினாலே, தொழிலாளிகளுக்கு வரவேண்டிய நியாயமான பலன், அந்தச் சட்டப் பாதுகாப்பு ஒன்றும் இல்லாத நிலையிருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் நிரம்பட செயல்படுத்தப்பட வேண்டும். அறந்தாங்கி நூற்பாலை, அம்பேத்கர் மாவட்ட நூற்பாலை, காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலை, இராமசாமி-படையாச்சியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, தீரன்-சின்னமலை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஆகிய இவைகளில் எல்லாம் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தொழிலாளர் நலத் துறை உரிய கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்கின்றபோது, இதிலே வருகின்ற அதிகாரிகள் எந்த அளவிற்குச் செயல்படுகின்றார்கள் என்பதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். எனவே, இவைகளைத் திறம்பட நடத்திடவும், அதுபோன்று வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் மற்றும் இதுபோன்ற குறைபாடுகளை எல்லாம் அகற்றி உரிய முறையிலே செயல்படவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அதாவது நம்முடைய தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இருக்கிறது. என்னுடைய குறைபாடெல்லாம், நாம் 'எங்கும் தமிழ்,

எதிலும் தமிழ்' என்று சொல்லுகிறோம், அது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் நமக்கு உள்ளாட்சி மன்றங்களிலே தரக்கூடிய கோப்புகள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தரக்கூடிய கோப்புகள், ஆகியவைகளில் பாதி ஆங்கிலம், பாதி தமிழ் என்று இருக்கிறது. இந்தக் குறை களையப்பட வேண்டும். ஏனென்றால், கிராமப் பஞ்சாயத்திலிருந்து வரக்கூடிய தலைவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. எனவே, தமிழிலேயே தருவதற்கான வாய்ப்பினை உருவாக்க வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக, இந்த ஆராய்ச்சித் துறையிலே இருக்கக் கூடிய ஊழியர்களுக்கு உரிய சம்பளம் தரப்பட்டாமல், பாதுகாப்பற்ற நிலை இன்னும் தொடருகிறது. அரசாங்கத்தினுடைய இதர ஊழியர் களுக்கெல்லாம் தருகின்ற ரீதியிலே சம்பளமோ அல்லது பதவி உயர்வோ அவர்களுக்கு இல்லையென்கிற ஒரு குறையிருக்கின்றது. அதேபோல சரியான முறையில் அதனுடைய அதிகாரிகள் நியமனம் செய்யப்படாத காரணத்தினால், இரண்டு வழக்குகள் நீதிமன்றத்திலே இருக்கின்றன. அதையும் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கையை மேற் கொண்டு, தமிழ் எல்லாத் துறைகளிலும் வளர்வதற்காக, ஆட்சி மொழியாக வருவதற்கான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டு மென்று கேட்டு முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களைக் கூற வாய்ப்பு தந்த தங்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்க இருக்கிறேன். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்,—தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி கூறினார். அதன் பிறகு, பாரதியையொட்டி வந்த பாரதிதாசன் அவர்கள் "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று கூறியிருக்கிறார். இப்படி தமிழ் வளர்ந்த வளர்ச்சியை நாம், சிங்கம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதைப் போல பார்த்தால் பல உண்மைகளைத் தெரிந்துகொள்ளக் கூடும். தானைத் தலைவர், கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான், தமிழ்த் துறையைத் தனியாகப் பிரித்து, அதற்கென ஒரு அமைச்சரை, மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்களை நியமித்து, இந்த வளர்ச்சி இன்னும் பல முறைகளில் வளரவேண்டுமென்பதற்காக, இன்று கலைஞர் அவர்கள்



அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழிலே கணினிப் பொறி யைக் கூட இங்கு நம்முடைய துறை மூலமாகக்கொண்டு வந்திருக் கின்றார்கள், இது மிகவும் பாராட்டத்தகுந்ததாகும். உலகத்திலேயே தொன்மையான மொழி தமிழ் மொழி. கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வானோடு முன்தோன்றிய மூத்தக்குடி, தமிழ்க்குடி. அப்படிப்பட்ட தமிழ் மொழியில் அதனுடைய வளர்ச்சி, இன்று இருக்கிற வளர்ச்சி அதை இன்னும் வளர்க்கவேண்டிய பணிகள் எல்லாம் நம்முடைய அரசுக்கு நிறையவே இருக்கிறது. நம்முடைய தமிழ் மொழி பண்டைய காலத்தில் எப்படி இருந்தது, எப்படி, எவரால் வளர்க்கப்பட்டது என்பதை நாம் கல்வெட்டுகள், அரிய சிற்பங்கள், ஓலைச்சுவடிகள், குடவறைச் சிற்பங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

*முற்பகல் 11-40*

முத்தமிழ் வளர்த்த முச்சங்கம், அவை சங்க காலத்திலே இருந்தாலும், இன்று முத்தமிழ் அறிஞர் காலத்திலேதான் தமிழுக்காக தனியாக ஒரு அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு, நல்லமுறையில் அது சீராக நடைபெற்று வருகிறது.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில், தமிழ் நன்றாக இருந்த காலத்திலேயே அதற்கு இலக்கண நூல், தொல்காப்பியம் போன்றவைகள் எல்லாம் தோன்றின. தொல்காப்பியத்திற்கு முன்னர்கூட சில இலக்கண நூல்கள் இருந்தன என்று வரலாற்றுச் சிறப்புகள் கூறுகின்றன. சங்கம் வருகின்ற காலத்தில் தமிழ் இலக்கிய வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்ததுதான் சிலப்பதிகாரம். கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கற்கோயில் அமைத்ததுபோல, சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அவனுக்கு சொற்கோயில் அமைத்தார். அப்படிப்பட்ட சிலப்பதிகாரத் திலே இருக்கின்ற கருத்துக்களை நாம் படித்தால், நிச்சயமாக தமிழ் எவ்வளவு தூரம் அந்தக் காலத்தில் வளர்ச்சியடைந்திருந்தது என்பதை அறிய ஏதுவாக இருக்கும்.

அடுத்து, பல்லவர் காலத்தைப் பார்த்தோம் என்றால், சங்க காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் களப்பிரர்கள் ஆட்சி செய்தனர். கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் புத்த சமயம் செல்வாக்கை இழந்து, தேவாரம் பாடிய மூவர் காலத்தில் புத்த மதத்தினரின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. அந்தச் சமயத்தில், சமண சமயம் தோன்றி, களப்பிரர் காலத்தில் காலூன்றி, பல்லவர் காலத்தில் ஆட்சியைப் பிடித்தது. திருப்பாதிரிப்புலியூரில் சமண சமயம் நிலவி, நிலைபெற்று,

தன் கோட்பாடுகளைத் தமிழகம் எங்கும் பரப்பி வந்தது. அதன் பிறகு கி.பி. 850 லிருந்து 1350 ஆம் ஆண்டுவரை சோழர் காலம் ஆட்சி நடைபெற்றது. சோழர் கால ஆட்சி தொடங்கியபோது, ஐம்பெருங்காப்பியம், ஐங்குறுங்காப்பியம், சூடாமணி, யசோதகாவியம், நீலகேசி போன்ற காப்பியங்கள் எல்லாம் தோன்றின. அதன்பிறகு, நாயக்கர் காலம் வந்தது. நாயக்கர் காலத்திற்குப் பிறகு சமயங்கள் தமிழை வளர்த்தன. யாரும் அதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஐம்பெருங்காப்பியம், ஐங்குறுங்காப்பியம், புராணம், இலக்கிய நூல்கள், நிகண்டுகள், சிற்றிலக்கியங்கள் போன்றவைகளைச் சமண சமயத்தைச் சார்ந்த பெரியோர்கள் இயற்றினார்கள். புத்த மதத்தைச் சேர்ந்த பெரியோர்கள் மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழன் போன்ற காவியங்களை இயற்றினர். இஸ்லாமிய மதம்கூட தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறது. கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தமிழகத்தில் படையெடுத்து வந்தார். இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள்கூட தாம் மதத்திலே இஸ்லாமியனாக இருந்தாலும், தமிழன் என்று குறிப்பிட்டார்கள். சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்கும்போது அவருடைய எண்ணத்தை, மாலிக்காபூர் காலத்திலே இருந்த குதிரைப்படைத் தலைவன் ஒருவன் பிரதிபலித்திருக்கிறான். வீரபாண்டியன் காலத்தில் குதிரைப் படைத் தலைவனாக இருந்தவன் ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவன். மாலிக்காபூர் இங்கு படையெடுத்து வந்தபோது, இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவன் என்பதால் தனக்கு உதவிட வேண்டுமென்று அந்தக் குதிரைப்படைத் தலைவனைப் பார்த்துக் கேட்கும்போது, எங்களுடைய பாண்டிய நாடு தோற்றால் நாங்கள் தோற்றது போல; எங்களுக்கு துரோகம் செய்வதற்கு இஸ்லாமிய மதம் என்றுமே கற்றுத்தரவில்லை என்று சொல்லி, மாலிக்காபூரின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டான் அந்த குதிரைப்படைத் தலைவன். அப்படி, அந்தக் காலத்திலேயே மத நல்லிணக்கத்தோடு இஸ்லாமிய மதத்தைச் சார்ந்தவர்களும், தமிழினத்தைச் சார்ந்தவர்களும் இருந்திருக்கிறார்கள்.

இஸ்லாமிய மதத்தில் பல புலவர்கள் இருந்தார்கள். உமறுப்புலவர், காசிம் புலவர், ஜவ்வாதுப் புலவர் என்று இப்படிப் பல புலவர்கள் இருந்தார்கள். அடுத்து ஐரோப்பியர் காலம் வந்தது. ஐரோப்பியர் காலத்தில்தான் வீரமாமுனிவர், ஜி.யு. போப் போன்றவர்கள் எல்லாம் இங்கே வந்தார்கள். ஜி.யு. போப் அவர்கள் தன்னை ஒரு தமிழ் மாணவன் என்று சொல்லிக் கொள்கின்ற அளவுக்கு தமிழுக்காகத் தொண்டு செய்தவர்.



முற்பகல் 11-45

தமிழாய்ந்த தலைமகன்தான் தமிழ்நாட்டின் முதல்வராக வருதல் வேண்டுமென்ற கோரிக்கையின்படி, மக்கள் வாக்களித்து தமிழாய்ந்த தலைமகன் முதல்வராக இருக்கின்ற காலகட்டத்தில், அதற்கு உதவியாக இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களுடைய காலத்தில், தமிழ் வளர்வதற்கு இன்னும் பல, வேண்டிய வேலைகளைச் செய்துதர வேண்டுமென்று கோரிக்கை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறைக்கு இன்னும் நிதி அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். தமிழ்படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்போதுதான்—கலைக் கல்லூரியாக இருந்தாலும் சரி, வேறு கல்லூரியாக இருந்தாலும் சரி, தமிழ் படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை தந்தால்தான் — மாணவர்கள் தமிழில் விரும்பிப் படிக்க வாய்ப்பு ஏற்படும். இதையெல்லாம் நம்முடைய அரசு கவனத்தில் கொண்டு, தமிழில் படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வாழ்ந்தால்தான் நாம் வாழ்வோம். ஆகவே தமிழை வாழ வைத்து, நாமும் வாழ்வோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன், நீங்கள் ஒப்புக்கொண்டவாறு, மூன்று நிமிடத்தில் தங்கள் உரையை முடியுங்கள். திரு. முகம்மது கோதர் மைதீன்.

***திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களாலும், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களாலும், இங்கே வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். என்னுடைய தலைவர் அவர்கள், தமிழ்ப் பண்பாட்டுத் துறை பற்றி மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கின்ற காரணத்தால், இந்த தொழிலாளர் நலத்துறை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்பு, தொழிலாளர்களுடைய நலனிலே மிக்க அக்கறை கொண்டு, மூடிக்கிடந்த நிறுவனங்களையெல்லாம் திறக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி, தமிழகத்திலே

தொழிலாளர்களுடைய துயரை இன்றைக்குத் துடைத்திருக்கிறது. அதற்காக கழக அரசை நாமெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோல, ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையையும் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பாளையங்கோட்டை தொகுதியிலே இருக்கக்கூடிய மேலப்பாளையம், அதிகமான அளவில் பீடித் தொழிலாளர்கள் வாழக்கூடிய ஒரு பகுதியாகும். அங்கு வாழக்கூடியவர்கள் பீடித் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் மிகக் குறைவு. அவர்களுடைய குடும்பத்தை நடத்துவதற்குக்கூட முடியாத நிலையிலே, மிகக் குறைவாக ஊதியம் வாங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், அங்கே வாழக்கூடிய மக்கள் மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த பீடித் தொழிலாளர்களுடைய துயரைத் துடைக்கின்ற வகையில், புதிதாக ஒரு தொழில் நிறுவனத்தை மேலப்பாளையத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய சார்பாக, இன்றைக்கு 52 தொழிற் பயிற்சி நிலையங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் மகளிருக்காக 10 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு நாட்டில், தொழில்கள் பெருகி வருகின்ற நிலையில், மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் பயன் பெறக்கூடிய வகையில் நல்ல வாய்ப்புகளை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதிலும் குறிப்பாக இன்றைக்கு நாட்டிலே, பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகம் நம்முடைய வாழ்க்கையோடு கலந்துவிட்ட ஒன்றாக இருக்கிறது. பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தியும் அதிகமாகியிருக்கின்றது. ஆகவே அதனை அறிமுகப்படுத்தக்கூடிய வகையில், கோயம்புத்தூர், கிண்டி, மதுரை, கடலூர் போன்ற இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பிளாஸ்டிக் பிராசசிங் டிரேட் என்ற ஒரு பயிற்சி அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நல்ல செய்தியை அறிகிறபோது, நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக வாழக்கூடிய மேலப்பாளையத்தில் இந்த பிளாஸ்டிக் பிராசசிங் டிரேடும் மற்றும் தையற்கலையை அடிப்படையாகக் கொண்ட ஒரு டிரேடும் கொண்டு, நம்முடைய அரசு சார்பாக, ஒரு தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மேலப்பாளையத்தைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 439 வீடுகள் கட்டுவதற்காக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூன்று நிமிடத்திற்கு மேலேயே ஆகிவிட்டது.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** அவைகளிலே 100 வீடுகள் இப்போது கட்டப்பட்டு இருக்கின்றன. அதிகமான பீடித் தொழிலாளர்கள் இருக்கின்ற மேலப்பாளையத்தில் குறைந்தது ஆயிரம் வீடுகளையாவது கட்டித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்த அளவிற்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பண்பாடு, தொழிலாளர் நலன் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகம் முழுக்க வாழக்கூடிய தமிழர்கள், நம்முடைய பண்பாட்டை நினைத்துப் பெருமையோடு சுபிட்சமாக வாழக் கூடிய இந்தச் சூழ்நிலையில், பாரதத்திற்கே வழிகாட்டியாக இருக்கக்கூடிய நம்முடைய தமிழ்ப் பண்பாட்டில் சற்று ஆங்காங்கு சில பழக்கவழக்கங்களால் சில தொய்வுகள் ஏற்பட்டு இருக்கின்றன. அவைகளைப் போக்குவதற்கு இந்த தமிழ்த் துறை மிகச் சிறந்த வழி காண வேண்டுமென்று வேண்டுகிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் தலைமை)**

சாதாரணமாக ஆங்கில மோகத்தின் காரணமாக நம்முடைய கலாச்சாரம் கொஞ்சம் கொஞ்சம் மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அம்மா, அப்பா என்று அழைக்கக்கூடிய பழக்கங்கள்கூட போய் மம்மி, டாடி என்று அழைக்கின்றார்கள். அதேபோன்று பல விழாக்களைக் கொண்டாடும்போதுகூட—பிறந்தநாள் விழாவில்—கேக் வெட்டி கொண்டாடக்கூடிய பழக்கம் இருக்கிறது; நம்முடைய தமிழ்ப்

[திரு. சி. வேலாயுதன்] [1997 ஏப்ரல் 16

பண்பாட்டை எந்த அளவுக்கு உலக மக்கள் பாராட்டுகின்றார்களோ அந்த அளவுக்கு நாம் வாழக்கூடிய வகையில் நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதத்தின் பல மாநிலங்களில் தமிழர்கள் வாழ்ந்தாலும், கேரளாவைப் பொறுத்தவரையில் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். கேரள அரசும்கூட தமிழ்ப் பண்பாட்டுக்கு என்று விசேஷ கவனம் செலுத்தி வருகின்றது. சமீபத்தில் கேரளாவில் உள்ள பல நண்பர்கள்—கேரளத்தினுடைய தலைமைச் செயலகத்தில் மனுக்கள் கொடுக்கப் பட்டால், அதை எங்களிடமே மொழிபெயர்க்கச் சொல்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு நிலை அங்கு ஏற்பட்டு இருக்கிறது; எனவே, கேரள அரசில் ஒரு அண்டர் செக்ரடரி - சார்புச் செயலாளர்—என்று சொல்லக்கூடிய அந்தஸ்தில் ஒரு மொழி பெயர்ப்பாளரை நியமிக்க தமிழக அரசு பரிந்துரை செய்தால் கேரள அரசு அதைச் செய்யத் தயாராக இருக்கின்றது என்று விண்ணப்பம் வைக்கின்றார்கள்.

எனவே, அதை கவனத்தில் கொண்டு நம்முடைய தமிழக அரசு கேரள அரசோடு தொடர்பு கொண்டு ஒரு நல்ல தமிழ் தெரிந்த அதிகாரியை அந்த தலைமைச் செயலகத்தில் நியமிக்க பரிந்துரைத்து, கேரள தமிழர்களுக்கு உதவ ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

கல்விக்கூடங்களில் ஜாதி சமயத்திற்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒன்று என்ற உணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில், ஆரம்பக் கல்விக் கூடங்களிலிருந்து முதுநிலைக் கல்வி வரை வாரத்திற்கு ஒரு நாளாவது, அதற்கென்று ஒரு பீரியடை ஒதுக்கி நம்முடைய பண்பாட்டை போதிக்கக்கூடிய வகையில் இந்த தமிழ்ப் பண்பாட்டுத் துறை முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் தமிழர்களுடைய ஆடை அலங்காரங்கள் பற்றி கேரளத்தில் மலையாளத்தில்கூட ஒரு பாடகர் பாடும்போது, காஞ்சிபுரம் பட்டு உடுத்தி என்ற பாடலைச் சொல்லி ஒரு பாடலை ஆரம்பிக்கின்றார். அதில் நம்முடைய தமிழ்ப் பெண்கள் எப்படி, எந்த அளவுக்கு அழகாக ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றை அணிகின்றார்கள் என்று வருகிறது; பாவாடை தாவணி என்றெல்லாம்கூட அதில் வாசகங்கள் வருகின்றன. எனவே, நம்முடைய தமிழர்களுடைய



1997 ஏப்ரல் 16] [திரு. சி. வேலாயுதன்]

தொன்றுதொட்டே இருக்கக்கூடிய அந்தப் பண்பாடு ரீதியான ஆடை அலங்காரங்கள் ஆகியவற்றிற்கு—உலக அளவில் எதெதற்கோ போட்டி நடக்கும்போது, இந்த தமிழ்ப் பண்பாட்டு ரீதியான அலங்காரங்கள் என்று சொல்லி ஒரு போட்டிகூட வைக்கலாமா என்று தோன்றுகின்றது. அதேபோன்று ஆபரணங்களைப் பார்த்தோமென்று சொன்னால், உலகிற்கே எப்படி ஆபரணங்களை அணிய வேண்டும் என்பதை நம்முடைய தமிழ்ப் பெண்களின் பழைய படங்களை எல்லாம் பார்க்கும்போது, ஆச்சரியமாக இருக்கின்றது. நம்முடைய பாரத நாட்டிலேகூட இத்தகைய பெரிய பழக்கம் வேறு எங்கும் உள்ளதாகத் தெரியவில்லை; கால் விரலில் இருந்து தலை முடி வரை எந்த அளவுக்கு சிறந்த முறையில் ஆபரணங்களை அணிந்தார்கள் என்பது. நம்முடைய தமிழ்ப் பண்பாடு எந்த அளவுக்கு உலகிற்கு வழிகாட்டியாக இருந்தது என்பதெல்லாம், அவைகளை நாம் பார்க்கும்போது புரிகின்றது.

அதேபோன்று நம்முடைய தமிழ்ப் பண்பாளர்கள் எந்த அளவுக்கு சீரோடும் சிறப்போடும் அனைத்துத் துறைகளிலும் வழிகாட்டியாக வாழ்ந்தார்கள் என்பதையும் அப்படி வாழ்ந்து காட்டிய பல பெரிய தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றில் இருக்கக்கூடிய சிறுசிறு சம்பவங்களை நூல்களில் சேர்த்து அல்லது நாடகங்களில் சேர்த்து அல்லது கதைகளில் சேர்த்து பண்பாட்டை ஊட்டக்கூடிய வகையில் அமைக்கவேண்டும். அதாவது மனுநீதிச் சோழன், கண்ணகி வரலாறு, அதேபோன்று இராமாயண காவியத்தில் ஒரு சிறந்த சம்பவத்தை பல பெரியவர்கள் பேச நான் கேட்டு இருக்கின்றேன்; ஒரு இயக்கத்தை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகி அல்லது அரசியல் தலைவர், ஒரு அமைப்பினுடைய தலைவர் எப்படிப்பட்ட மனநிலையோடு இருக்கவேண்டும்—இப்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளை எல்லாம் பார்த்தோம் என்று சொன்னால், நாளுக்குநாள் தலைவர்கள் சண்டை என்றெல்லாம் வந்து கொண்டு இருக்கின்றது. அதாவது ஒரு நிர்வாகி எந்த அளவுக்கு ஒரு சாதாரண மன நிலையில் இருக்க வேண்டும்—என்பதை இராமாயண காவியத்தில் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்டி பல பெரியவர்கள் பேசக் கேட்டு இருக்கின்றேன்.

முற்பகல் 11-55

தசரதச் சக்கரவர்த்தி இராம பிரானிடம், நாளைக்கு நீ பட்டாபிஷேகம் செய்துகொள்ளவேண்டும் என்று சொல்கிறார். அதை இராமபிரானும் ஏற்றுக் கொள்கின்றார். சில மணி நேரம் கழித்து சிற்றன்னை கைகேயி வந்து,

"ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்,
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந் தவம் மேற்கொண்டு,
பூமி வெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்-இரண்டு ஆண்டின் வா" என்று இயம்பினன் அரசன் என்றாள்.

இன்று நீ காட்டுக்குச் செல்லவேண்டும். உன்னுடைய தம்பி பரதன் நாடாளவேண்டும் என்று சிற்றன்னைச் சொல்கின்றாள். அப்போது கம்பர் வர்ணிக்கின்றார். நீ நாட்டை ஆள வேண்டுமென்று தந்தை சொன்னபோதும், நீ காட்டுக்குச் செல்லவேண்டுமென்று சிற்றன்னை சொன்னபோதும், இராமபிரானுடைய மன நிலை சீராக இருந்தது, முகத்தில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை என்கிறார். அதாவது, பதவி, பட்டம் தனக்கு வரும்போது எந்த அளவுக்கு முக மறுமலர்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டாரோ அதைப்போலவே பதவி தன்னைவிட்டுப் போகும்போதும் அந்தத் துன்பத்தையும் அதே மனநிலையோடு ஏற்றுக்கொள்கிறார் என்று கம்பர் வர்ணிக்கும்போது, 'அன்றலர்ந்த தாமரை மலர் போல இராமபிரானின் முகம் மலர்ந்திருந்தது' என்று சொல்கின்றார். ஆகவே என்ன சொல்கிறேன் என்றால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இராமாயணத்தை இதோடு நிறுத்திவிட்டுப் பிரச்சினைக்கு வாருங்கள். இல்லையென்றால் 'இன்றுபோய் நாளை வாராய்' என்று நான் சொல்லவேண்டியிருக்கும்.

**திரு. சி. வேலாயுதன்:** சுருக்கமாக முடித்துவிடுகிறேன். என்ன சொல்கிறேன் என்றால், ஒரு நல்ல மன நிலையோடு, லாபம் வரும்போதும், நஷ்டம் வரும்போதும், மன நிலையை ஒரே அளவில் வைத்துக் கொண்டால், நாட்டில் சண்டை சச்சரவு இல்லாமல் மனிதர்கள் அமைதியாக அனைத்து இயக்கங்களையும் நிர்வகிக்கின்ற சூழ்நிலை வரும் என்பதற்காக இதைச் சொன்னேன். இதுபோன்று ஆங்காங்குள்ள சம்பவங்களை எல்லாம் எடுத்துச் சொல்கிற வகையில், நாடகங்கள், கவிதைகள், போட்டிகள் எல்லாம் வைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அதைப்போல, இராமபிரான் காட்டுக்குச் சென்றபோது, பரதன் தன் தாயைக் கடிந்து கொண்டுவிட்டு, காட்டுக்குச் சென்று, அண்ணா நீதான் நாட்டை ஆளவேண்டும் என்று சொல்கிறபோது, அதற்கு இராமபிரான், வேண்டாம், நீதான் நாட்டை ஆளவேண்டுமென்று சொல்கிறார். ஆக, பதவியை இரண்டு பேரும் வேண்டாம், நீயே வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கின்ற நிலை இருந்தது. இதைப்போன்ற மன நிலையெல்லாம் பெரிய இடங்களில் இருக்கக்கூடிய தலைவர்கள் வளர்த்துக்கொண்டால், இந்தப் பதவிச் சண்டைகள் எல்லாம் வராமல் இருக்கும். ஆகவே இவைகளையெல்லாம் நாம் நமது ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் இருந்தே புகட்டிக்கொண்டு வந்தோம் என்று சொன்னால், நல்லதொரு தெளிந்த வருங்கால சமுதாயத்தை உண்டுபண்ண முடியும்



என்று நான் கருதுகின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாத்துறை மூலம் ஆண்டுவிழா ஒன்று நடந்தது. அதில் ஒரு கோலாட்ட நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள். உவரியைச் சேர்ந்த அந்தோணிசாமி என்ற ஒருவர் அதை நடத்தினார். அதில் எனக்கு மட்டும் ஆச்சரியமாக இல்லை. அங்கே வந்திருந்த எல்லோருக்குமே அதில் ஆச்சரியமாக இருந்தது. வழிபாடு முறைகளை மாற்றிக் கொண்டவர்களுக்குப் தேசபக்தி குறைந்திருக்கின்றது என்றெல்லாம் கருதக்கூடிய ஒரு காலகட்டம் இது. அதிலே, இந்த அந்தோணிசாமி என்ற அந்த அன்பரின் அந்தக் கோலாட்ட நிகழ்ச்சி என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. ஆகவே அந்த நிகழ்ச்சி முடியும் வரை நான் அங்கே இருந்து, அவரைப் பார்த்து வாழ்த்திவிட்டு, நன்றி சொல்லிவந்தேன். ஆகவே, பாரத நாட்டினுடைய பண்பாடு, இந்த நாடு எப்படிப்பட்டது, எந்த அளவுக்குச் சிறந்த நாடு என்பதை அனைத்தையும் அவர் அந்தக் கோலாட்டக் கலை மூலம் நடத்திக் காட்டினார். வழிபாடு முறை மாறினாலும், எங்களுக்கு தேசபக்தி மாறாது என்று சொல்லக்கூடிய வகையில், அந்தக் கருத்து அன்றைக்கு அமைந்திருந்தது. ஆக இதுபோன்ற நிகழ்ச்சிகளை அனைவரும் நாம் ஒன்று என்று சொல்லக்கூடிய சந்தர்ப்பங்களில் சொல்லக்கூடிய வகையில், இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஆங்காங்கு நடத்தி அவர்களை ஊக்குவிப்பதன்மூலம் நமக்குள் ஒரு பண்பாடு ஏற்பட்டு ஒற்றுமை ஓங்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதேபோன்று நம்முடைய குடும்ப வாழ்க்கையைப் பற்றிப் பார்க்கும் போதும், சமீபத்தில் ஒரு பத்திரிகைச் செய்தியைப் பார்த்தேன். பாரத நாட்டினுடைய குடும்ப வாழ்க்கை முறை, உலகம் முழுவதும் பின்பற்றி வாழப்படும் என்று சொன்னால், உலகில் நோய் நொடி குறைந்து, நோய் நொடியற்று, வாழ்க்கை நல்ல நிலையை அடையும் என்ற கருத்து அந்தக் கட்டுரையில் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அதில் அவர் ஒரு வேடிக்கையான சம்பவத்தைச் சித்தரித்திருந்தார். வீட்டின் மாடியில் ஒரு தம்பதி, கணவன் மனைவி, உட்கார்ந்து பேசுகின்றார்களாம். கணவன் சொல்கிறார். உன்னுடைய குழந்தையும் என்னுடைய குழந்தையும், நம்முடைய குழந்தையுடன் எந்த அளவுக்குச் சந்தோஷமாக விளையாடுகிறார்கள் பார்த்தாயா என்று அவர் சொன்னாராம். இதற்கு என்ன பொருள்? அவர் ஏற்கெனவே ஒரு மனைவியைத் திருமணம் செய்து விவாகரத்து செய்துவிட்டு, அந்தக் குழந்தையோடு இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இந்த அம்மையாரும் ஏற்கெனவே திருமணம் ஆகி, குழந்தையுடன் வந்து இவரைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இந்த இருவருக்கும் குழந்தை பிறந்திருக்கிறது. ஆக மூன்று குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லக்கூடிய அளவுக்கு அந்தக் கலாச்சாரமானது சென்றுவிட்டது என்று சொல்லியிருக்கிறார்.

[ திரு. சி. வேலாயுதன் ] [1997 ஏப்ரல் 16

ஆனால் நமது கலாச்சாரம் அப்படிப்பட்டதல்ல. கணவன் இறந்துவிட்டாலும்கூட, கணவனுடைய அந்த இறந்த திதி வருகிற நாளில் உற்றார் உறவினரை அழைத்து வைத்து, அவரை நினைவுகூர்ந்து, அந்தக் குடும்பத்தின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லி, அந்தக் குடும்பத்தின் ஒற்றுமையையும் சொல்லி, அந்த இல்லற வாழ்வு எந்த அளவுக்குச் சிறப்பாக இருந்தது என்று சொல்வதின்மூலம், இந்தத் தமிழ்ப் பண்பாட்டை உலகம் பின்பற்றக் கூடிய அளவுக்கு வந்துவிட்டது என்று கட்டுரையில் சொல்கிறார். ஆகவே இதை நாம் சரியாகப் பின்பற்றுகிறோமா என்ற அளவில் பார்த்து, அதைப் புரிய வைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு நிமிடம். தொழிலாளர் நலன் பற்றி ஒரு வார்த்தை. கன்னியாகுமரி மாவட்டத்தில் 56 தீப்பெட்டித் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. உள் மற்றும் வெளித் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 3000 பேர் வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு என்.ஓ.சி. கிடைப்பதில் அடிக்கடி காலதாமதம் ஏற்படுவதால் வாரக்கணக்கில், மாதக்கணக்கில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. எனவே வேகமாக அது கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். பின்னர் 15 வயதிற்குட்பட்ட சிறார் தொழிலாளர்கள் பிரச்சினையில் எனக்கு ஒரு சிறிய கருத்து மாற்றம். அதை மட்டும் சொல்லி அமைகிறேன். ஒரு பாட்டியை நான் செங்கல் சூளையில் பார்த்தேன். செங்கல் சூளையில் அவர் மகன் வேலை செய்து கொண்டிருந்தான். அதிகாரிகள் யாரோ வந்து பிடித்துப் போய், 15 வயதுக்குட்பட்டவன் என்று சொல்லி, அந்த முதலாளிக்கு அபராதம் போட்டுவிட்டார்களாம். ஆகவே என்னுடைய பிள்ளையை வேலைக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டார்கள் என்று அந்த அம்மையார் சொன்னார். நான் என்னுடைய வயிற்றுப்பாட்டிற்கு என்ன செய்வேன்? ஒரு பையன் தான் இருக்கிறான்; எனக்கோ வயதாகி விட்டது, என்ன வழி என்று கேட்கிறார்கள். ஆகவே, நாம் இதனைக் கருத்திற்கொண்டு, இதுபோன்று சில குடும்பங்கள் இருக்கின்றன என்பதால்—15 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள் வேலைக்கு வந்தால் அவர்களுடைய எதிர்காலம் கெட்டுவிடும் என்று கருதி அவர்கள் படிக்க வேண்டுமென்று கருதுகிறோம். ஆனால் இப்படிப்பட்ட குடும்பங்களில், ஒரு பையன் மட்டும் வேலை செய்து தன்னுடைய பாட்டியை, தாயைக் காப்பாற்ற வேண்டுமென்று நிலை வரும்போது, வேலைக்குச் செல்லாமல் இருக்க வழியில்லை—இப்படிப்பட்ட ஒருசில குடும்பங்கள் ஆங்காங்கே இருக்குமானால் அவற்றை எப்படிக் கண்டறிவது? கண்டறிந்து அவர்களுக்கு என்ன வழி செய்வது என்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி..



1997 ஏப்ரல் 16]

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், உரையை முடித்து விடுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** துணைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு. வந்தே மாதரம். வந்தே மாதரம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆருண் ரஷீத் பேச ஆரம்பிக்கலாம். ஏற்கெனவே ஒப்புக்கொண்ட மாதிரி மூன்று நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள், விவசாயத் தொழி லாளர்கள் போன்ற பல்வேறு தொழிலாளர்களுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரச்சினைகளைத் தீர்வு காணத் தனித்தனி பரிந்துரைக் குழுக்களை அமைத்ததை முழு மனதோடு வரவேற்கிறோம்.

என்னுடைய வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதி என்பது தொழி லாளர்கள் நிறைந்த தொகுதியாகும். அங்கே பல தொழிற்சாலைகள் மூடுகின்ற நிலையில் இருக்கின்றன. குறிப்பாக டன்லப் தொழிற்சாலை ஒரு வாரத்திற்கு இரண்டு நாட்கள்தான் நடக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஏறத்தாழ டன்லப் தொழிற்சாலைக்கு தமிழகத்தில் சென்னையில் மட்டும் 500 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்கள் இருக்கின்றன. அசையும் சொத்துக்களும், அசையாச் செத்துக்களும் நிறைய இருக்கிற அந்த டன்லப் தொழிற்சாலையின் நிர்வாகம் அங்கேயிருக்கிற இம்மூவபிள் பிராப்பர்ட்டீசை எல்லாம் விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலையில் வாரத்தில் 2 நாட்கள் தான் வேலை நடைபெறுகிறது. அது ஒரு நல்ல தொழிற்சாலை. அதை மூடிவிடக் கூடாது. அதை மூடிவிடுகிற அபாயம் இருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், இதில் தலையிட்டு அந்தத் தொழிற்சாலையில் இருககிற அசையும் சொத்துக்களையும அசையாச் சொத்துக்களையும் விற்கக் கூடாது என்ற நிலையை மேற்கொள்ள வேண்டும். மேற்கு வங்க மாநிலத்தில் எங்கே எல்லாம் தொழிற்சாலை மூடப்படுகிறதோ அங்கெல்லாம் உடனடியாக தொழிலாளர் நலத் துறை அதிலே தலையிட்டு மூடிய தொழிற்சாலையைத் திறக்கிற வரையில் அந்தத் தொழிலாளர்களுக்கு அரை மாதச் சம்பளம் தருகிறார்கள். அந்த மாதிரி சூழ்நிலையை இந்த அரசும் உருவாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்] [1997 ஏப்ரல் 16

வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் எல்லாம் கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொழிலாளர்களுக்காக ஒரு வீட்டு வசதி வாரியத்தைக் காண வேண்டும். கேள்விக்குறிபோல் முதுகு வளைந்து உழைத்து ரிட்டையராகிப் போகிற நாட்களில் எந்தவிதமான பணமும் இல்லாமல் செல்கின்றார்கள். காரணம் பிராவிடென்ட் பண்ட், கிராஜுவிட்டி போன்றவற்றை கல்யாணம் மற்றும் இதர நல்ல காரியங்களுக்கு லோனாக வாங்கி விடுகிறார்கள். வேலையிலிருந்து போகிறபோது வெறு கையோடு போகிற நிலை ஏற்படுகிறது. அரசு குவார்ட்டர்ஸ் கொடுத்தாலும் வெக்கேட் பண்ணி விடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்காக வீட்டு வசதி வாரியம் ஒன்றை இந்த அரசு அறிவித்து, தொழிலாளர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது குறைந்தபட்சம் 250 சதுர அடியிலாவது ஒரு வீடு கிடைக்கிற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்க வேண்டும்.

சிறார் தொழிலாளர் ஒழிப்பிற்காக அரசு நல்ல திட்டங்களை அறிவித்து இருக்கிறது. அந்தச் சிறார்களை வேலையிலிருந்து நிறுத்தி விட்ட பிறகு அந்தக் குடும்பங்களுக்கு பாதுகாப்பு வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு பையன் வேலைக்குப் போகிறான் என்றால், தந்தை இல்லாமல் இருந்திருக்கலாம்; அம்மா இல்லாமல் இருந்திருக்கலாம்; ஒரு அநாதைக் குழந்தையாக இருக்கலாம். சிறார் தொழிலாளர் ஒழிப்பு என்பது வரவேற்கத்தக்க ஒன்று. அந்தக் குழந்தையின் பராமரிப்பிற்காக உதவி செய்வதுடன், அவர்களுக்கு கல்வி அல்லது வேலைவாய்ப்பு கற்றுக் கொடுக்கிற நிலையை இந்த அரசு உருவாக்கி அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பின்னி மில்லைத் திறந்தீர்கள் என்பது வரவேற்கத்தக்கது. தமிழ்ப் புத்தாண்டு அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாத கால சம்பளம் கொடுக்கச் சொல்லி இருக்கிறார்கள். உண்மையில் அதை முழு மனதோடு பாராட்டுகிறோம்.

மூடிய தொழிற்சாலையான ஸ்டாண்டர்டு தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும். ஸ்டாண்டர்டு வேனுக்கு இன்றும் நல்ல மார்க்கெட் இருக்கிறது. நிறைய பேர் டூரிஸ்ட்டாகப் போகிறவர்கள் ஸ்டாண்டர்டு வேனில்தான் போகிறார்கள். அநதத் தொழிற்சாலையில் வேலையிலிருநத பல குடும்பங்களில் உள்ளவர்கள் தங்களுடைய உயிரைக்கூட மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி எல்லாம் பத்திரிகைகளில் வந்துள்ளன. ஆகவே இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்வது, அந்த ஸ்டாண்டர்டு தொழிற்சாலையை திறக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

நிறைய கம்பெனிகளில் அப்ரெண்டிசாக வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள். 8 வருடம், 10 வருடம் அப்ரெண்டிசாக வேலை செய்து விட்டு வேறு வேலை கிடைக்காமல் வயதாகி விடுகிறது, ரொம்பவும் சிரமத்திற்கு ஆளாகி விடுகிறார்கள்.



1997 ஏப்ரல் 16] [திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்]

180 நாட்கள் வேலை செய்பவர்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் அதை யாரும் பயன்படுத்துவது இல்லை. 'கன்டினியுவஸ் சர்வீஸ்' வேண்டும் என்று சொல்கிறார்கள். 3 மாதத்திற்குப் பிறகு 2 அல்லது 3 நாட்கள் பிரேக் கொடுத்து விடுகிறார்கள். ஏறத்தாழ சென்னையில், குறிப்பாக என்னுடைய வில்லிவாக்கம் பகுதியில் இருக்கிற டி.வி.எஸ். தொழிற்சாலையில் 5-6 ஆண்டுகளாக லேபர்-ஆக இருக்கிறார்கள். அப்ரன்டிஸ்-ஆக இருக்கிறார்கள். அவர்களைப் பணி நிரந்தரம் செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம். சரியாக 5 மணித்துளிகள் பேச வேண்டும்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தில் பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

'உழவர்களுடைய உள்ளத்தில் புயல் இருக்குமானால் வயிலிலே வளம் காண முடியாது' என்று போறிஞர் அண்ணா அவர்கள் கூறினாகள். உழவன் என்று சொன்னால் ஏதோ விவசாயி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. எல்லாத் தரப்பினருக்கும் பொருந்தும் என்ற வகையில் உழைப்பவனுடைய உள்ளத்தில் குறை இருக்குமானால் நாட்டிலே வளம் காண முடியாது. தொழிலில் உற்பத்தித் திறனைக் காண முடியாது என்ற அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தமிழக அரசும் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டு வருகிறது என்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. 1967 ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் இந்து தொழிற்சங்கப் பணிமனையை போறிஞர் அண்ணா அவர்கள் தலைமையேற்று திறந்து வைத்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தார்கள். பொதுப்பணித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோதும் அந்தத் துறையின் சார்பாக கிட்டத்தட்ட 17 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. முன் வைக்கப்பட்ட அந்த 17 கோரிக்கைகளில் 15 கோரிக்கைகள் அதே இடத்தில் நிறைவேற்றப்படுவதாக அறிவித்தார்கள். இதைக் கூறுவதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை புகழ்வதன் மூலம் அவர் தொழிலாளர்மீது கொண்டிருக்கிற பற்றினை எடுத்துக் கூறுவதற்காக அல்ல. அவைத் தலைவர் அவர்கள் ஏதோ

அவரைப் புகழ்வதாக நினைத்துக்கொண்டு இதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டாம். இதை நான் கூறவில்லை. நடந்த உண்மையை, வரலாற்றைக் கூறுகிறேன். அந்த 15 கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்று அறிவித்தபோது தொழிற்சங்கத் தலைவராக இருந்த மறைந்த டி.எஸ். இராமானுஜம் அவர்கள் 76 வயதைக் கடந்திருந்தார். நான் இருப்பது எந்த உலகில் என்று எனக்குத் தெரியவில்லை. 15 கோரிக்கைகளை, ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் அறிவித்த அரசை, அதிலும் குறிப்பாக பொதுப்பணித் துறை அமைச்சரை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். என்னுடைய இறுதி மூச்சு அடங்குவதற்குள் இப்படிப்பட்ட ஒரு நல்ல அமைச்சரை பார்த்ததற்காக நான் பெருமைப்படுகிறேன் என்று அவர்கள் கூறினார்கள். ஆரம்பம் முதல் இவ்வரசு தொழிலாளர்களுடைய அரசாக, பாட்டாளிகளின் கூட்டாளியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் இதை நான் கூறினேன்.

அண்ணாவிற்குப் பிறகு முதல்வராக பொறுப்பேற்ற பிறகு சிலர் கிண்டலாக, 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார்' என்று கூறினார்கள். அதே பாணியில், கலைஞருடைய அரசு பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று சொன்னார்கள். இதனை ஒரு வாதமாக எடுத்துக் கொண்டு நாசப்பிரகாஷில் நடந்த இந்து பத்திரிகை தொழிற்சங்க விழாவில் ஒரு புதிய தத்துவத்தைப் படைத்தார்கள். ஆம், என்னைப் பொறுத்தவரையில் நான் பாலுக்கும் காவல், காரணம் பால் பாழாகக்கூடாது. மற்றவர்களுக்குப் பயன்படவேண்டும் என்பதற்காக. பூனைக்கும் தோழன், ஆம், தொழிலாளர்களுக்குத் தோழன், அந்தத் தொழிலாளி இருந்தால்தான் அந்தப் பாலை பருக முடியும் என்று சொன்னார்கள்.

எனவே, அப்படிக் கிண்டலாக சொன்ன வாதத்தை, பழமொழியை ஒரு தத்துவமாக்கி—அதன் அடிப்படையில் இப்போது அறிவித்து இருக்கிற மானியத்தைப் பார்த்தால், கிட்டத்தட்ட கழக அரசு பொறுப்பேற்ற நாள் முதல் பல தொழிற்சாலைகளை, மில்களை, மூடி இருக்கின்ற நிறுவனங்களைத் திறப்பதற்காக—அந்த பாலுக்கு காவல் இருப்பதைப் போல அந்தத் தொழிற்சாலைகளுக்குப் பாதுகாவலனாக இருக்கிறார். மாதவரம் பால் பண்ணை போன்று, பி. அண்டு. சி. மில்லைப் போன்று, மற்ற நிறுவனங்களைப் போன்று மூடிக் கிடக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதன் மூலம், தொழிலாளர்களுக்குத் தோழனாக இருக்கிறார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.



பிற்பகல் 12-10

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த மானியத்தின்மீது விரிவாகப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாகவும் சிறப்பாகவும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருக்கிற அந்தத் தீர்ப்புக்கு எதிராக அரசு அப்பீல் செய்யகூடாது; அந்த மக்கள் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நிச்சயமாக தொழிலாளர்களுக்கு விரோதமாக அரசு அப்பீலுக்குச் செல்லாது. மேல் முறையீட்டுக்குச் செல்லாது என்று பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே 18 (1) செட்டில்மென்ட் இருந்தாலும் அரசு மேல்முறையீடு செய்யாமல் அவர்களுக்கு முழு வாழ்வு கொடுக்கின்ற வகையிலே ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது. அதற்குள் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** அடுத்து விளக்கமாகவும், விவரமாகவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கோடிட்டுக் காட்டினாலே போதும். கழக அரசு, கலைஞர் அரசு அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றும். குறை இருந்து, அது தெரிந்தாலே போதும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யும். எனவே பல உறுப்பினர்கள் பேசினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூளை பலம் கொண்டவர்கள். எனவே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், எளிதிலே விரைவாக முடிப்பவர்கள் என்று சொன்னார்கள். அந்த மூளை பலத்தை அவர் மூல பலமாகக் கொண்டிருக்கிற காரணத்தால்தான், நான்காவது முறையாக தமிழகத்திலே முதல்வராகப் பொறுப்பேற்று ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நேரத்தில் ஒருசில வேண்டுகோள்களை மட்டும் வைத்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையின் கடைசிப் பகுதிக்கு சீக்கிரம் வாருங்கள்.

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே, இந்த மானியத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர்கள், ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள், குழந்தைத்

தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், போன்று பலதரப்பட்ட தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட நல்ல பல திட்டங்களை அறிவித்துள்ளதற்கு நான் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1-3-1997 முதல் மூடிக் கிடந்த பி.அண்டு.சி மில்லை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அதைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்து திறந்து வைத்திருக்கிறார்கள். அதற்காகவும் தொழிலாளர் வர்க்கத்தின் சார்பிலே பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மில் முழுமையாக சகஜநிலையில் பணியாற்றி, அந்தத் தொழிலாளர்கள் வாழ்வு பெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து என்பது 1975-ல் கழகங்களாக மாற்றப்பட்டன. அப்போது 10 ஆண்டுகள் சர்வீஸ் செய்யாமல் இருப்பவர்களுக்கு பென்சன் கிடையாது என்ற வகையிலே அப்போது ஒரு கட்-ஆப் டேட் வைத்தார்கள். அதனால் கிட்டத்தட்ட 7 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு 1 மாதம் 2 மாதங்கள் குறைவாக இருப்பதால், அந்த 10 ஆண்டைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்பதால், அத்தகைய தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலவிதமான போராட்டங்களை மட்டுமல்ல, கருணை மனுக்களையும்கூட கொடுத்திருக்கிறார்கள். நீதிமன்றமும் சென்றிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே சாதகமான தீர்ப்பும் வந்திருப்பதாகக் கூறுகிறார்கள். எனவே, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினைப் பைசலாகாமல் இருக்கிறது. எனவே, தயவுசெய்து, அருள்கூர்ந்து கருணை உள்ளத்தோடு, இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தனியார் போக்குவரத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கிறார்களா அல்லது பேட்டா கொடுக்கிறார்களா என்று கூட தெரியவில்லை. எனவே, அவர்கள் விஷயத்தில் ஈடுபட்டு, அவர்களுக்கு நிரந்தரமான சம்பளம் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான ஒன்று. பல நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த பிரச்சினையாக இருந்தாலும்கூட, சென்னை மாநகராட்சிக்குப் போட்டியிட்டு



முதன் முதலிலே வெற்றிபெற்றபோது, தொழில் வரியை ரத்து செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே கூட அறிவித்தோம். அது மாநகராட்சியினுடைய வரம்புக்கு உட்பட்டதாக இருந்தாலும், தொழில் வரியை முழுமையாக ரத்து செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வேண்டும் என்று கேட்டார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆருண் ரஷீத் அவர்கள் கூறியதைப் போல வருங்கால வைப்பு நிதி என்று இருந்தாலும் கூட, அந்த வைப்பு நிதியிலே எந்த நிதியையும் வைப்பதில்லை தொழிலாளிகள். அப்படிப்பட்ட தொழிலாளிகள் வீட்டுக்குச் செல்லும்போது, நிரந்தரமாக அவனுக்கு ஒரு வீட்டு மனையாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலே மலிவு விலையில் அல்லது குறைந்த விலையில் ஒரு வீட்டு மனையையாவது அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

பத்திரிகையிலே தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள் இயற்கை எய்தினால், அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்குவதைப் பாராட்டி, அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்குவதைப் பாராட்டி, வரவேற்கின்ற அதே நேரத்தில், இதில் பாகுபாடு இன்றி, பத்திரிகைத் துறையிலே பணியாற்றுகின்ற அத்துணை தொழிலாளர்களுக்கும் இதை நீட்டித்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் மது, போதைப் பொருட்களில் ஈடுபடாமல் இருப்பதற்கும், உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவற்றின் அவசியம் குறித்து அவர்களுக்கு போதிப்பதற்கும் சிலபல நிறுவனங்கள், தனியார்கள் வகுப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பினை எல்லா நிறுவனங்களுக்கும், குறிப்பாக தனியார் நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

[1997 ஏப்ரல் 16

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை, தொழிலாளர் நலம், வேலைவாய்ப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலே கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையானது பார்ப்பதற்கு சிறிய துறை போல தோன்றினாலும்—மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பார்கள். அதைபோல இந்த தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையானது ஒரு சிறிய துறையைப் போல இருந்தாலும்கூட—இது இன்றியமையாதது, எல்லாத் துறைகளுக்கும் இன்றைக்கு தேவையாய் இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய சிறப்பு வாய்ந்த துறை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சங்க காலத்திலே தமிழுக்காக தன் தலையையே தருவதற்குத் தயாராக இருந்தவன் குமண வள்ளல். இடைக்காலத்திலே தமிழுக்காக தன்னையே, தன் உயிரையே தருவதற்குத் தயாராக இருந்தவன் நந்திவர்ம பல்லவன். அதேபோல சங்க காலத்திலேயும், இடைக்காலத்திலேயும் இருந்த தமிழுக்காக தலையையும், உயிரையும் தருவதற்குத் தயாராக இருந்த, அந்த வள்ளல்களைப் போல, மன்னர்களைப் போல இன்றைக்குத் தமிழுக்காக, தன் ஊன், உடல் அத்தனையையும் தருவதற்குத் தயாராக இருப்பவர்தான் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை தமிழகம் மட்டுமல்ல, இன்றைக்கு உலகமே அதை நன்கு உணர்ந்து வந்திருக்கிறது. அப்படிப்பட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு, பல துறைகளிலே நாட்டம் இருந்தாலும் இந்த ஒரு துறைதான் அவருடைய ஊனோடு உணர்வோடு, உயிரோடு இரண்டறக் கலந்து நிற்கின்ற ஒரு அருமையான துறை என்ற காரணத்தினாலேதான் இந்தப் பணிகள் தமிழகத்திலே சரிவர, செம்மையாக நடைபெறவேண்டுமென்றால், தக்கார் ஒருவரை, அதற்கு தாளாளராக நியமித்திடல் வேண்டுமென்ற நோக்கத்தோடு, நம்முடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நம்முடைய தமிழ்க்குடிமகனார் அவர்களை இந்தத் துறைக்கு சாலப் பொருத்தமாக அமைச்சராக அவர்கள் நியமித்து, இந்தப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கான வாய்ப்புகளை இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருப்பதற்கு உண்மையிலேயே தமிழ் மக்கள் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்திலே புலப்



1997 ஏப்ரல் 16] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் சொல்வான். 'தனக்கென வாழ்வது சாவுக்கு ஒப்பாகும்; தமிழுக்கு வாழ்வதே வாழ்வதாகும்'. அது பாவேந்தருடைய வரிகள். இந்த வரிகளை தன்னுடைய வாழ்க்கை நெறிமுறைகளாக ஆக்கிக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், இன்னும் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களும், அப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த இந்தத் துறையினை மிகச் செம்மையாக நடத்திடல் வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்தத் துறையானது—இன்றைக்கு ஏறத்தாழ தன்னுடைய துறையின்கீழே 77 வகையான பிரிவுகளின்கீழ் திறம்படத் திட்டமிட்டு—ஒவ்வொரு துறையின்மீதும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே இந்தத் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையிலே இப்போது தமிழகத்தினுடைய 29 மாவட்டங்களிலே, 14 மாவட்டங்களிலே தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட இருக்கிறார்கள். இதனை அனைத்து மாவட்டங்களிலும் நியமனம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கின்ற அதேநேரத்திலே இங்கே அரங்கின்றி வட்டாடியது போல என்று சொல்வார்களே, அதேபோல் அதிகாரிகள் அதாவது உதவி இயக்குநர் இருந்தாலும்கூட, அவர்கள் அந்த அலுவலகத்திலே இருந்துகொண்டு, அந்த அலுவலகப் பணிகளை மேற்பார்வையிடுகிறவர்களாக, கண்காணிப்பாளர்களாக இருக்கிறார்களே தவிர, அவர்கள் தமிழ் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வேண்டுமென்று நினைக்கின்றபோது அவர்களுக்குச் சரியான களப்பணியாளர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால், அரங்கின்றி வட்டாடியது போல என்று சொல்வதைப் போல, களப் பணியாளர்கள் இல்லாமலேயே இந்தத் துறை இருப்பது நிச்சயமாக தமிழ் வளர்ச்சித் துறையின் வளர்ச்சிக்கு வழிகோலாது என்கிற காரணத்தினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான அளவிற்கு களப்பணியாளர்களை நியமனம் செய்து, தமிழ் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாக, செம்மையாக நடத்துவதற்கு வழிவகை செய்திடல் வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[ திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ] [1997 ஏப்ரல் 16 பிற்பகல் 12-20

அதேபோல, இன்றைக்கு 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை கட்டாயமாக தமிழிலேதான் சொல்லித் தரப்படல் வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. பக்கத்திலே உள்ள கர்நாடக மாநிலத்திலே இதை மிகச் சுலபமாக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் அந்த இலக்கை நோக்கிச் செல்ல வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு வழிவகைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை நாங்கள் நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால், 1-ஆம் வகுப்பிலேயிருந்து 5-ஆம் வகுப்பு வரை தமிழ் வழியிலே சொல்லித் தருகின்ற முறைகளை—ஏற்கெனவே கல்வித் துறையிலே தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை இருந்து இப்போது தனித் துறையாக ஆக்கப்பட்டிருக்கிறது என்றாலும்—1-ஆம் வகுப்பிலேயிருந்து 5-ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ் வளர்ச்சிப் பணிகளை கவனிப்பதற்கு இந்த துறையிடம் கூட—அதாவது தமிழ் வளர்ச்சித் துறையிடம் கூட —அந்தப் படிப்புகளை, அதைக் கண்காணிக்கின்ற நெறிமுறைகளை ஒப்படைத்தால்கூட நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோல, பண்பாட்டுத் துறையைப் பார்க்கும்போது, பெரும்பாலும் நம்முடைய பண்பாட்டு நெறிமுறைகள் எல்லாம் கோயில்களோடு தொடர்புடையது. ஆனால், இன்றைக்கு கோயில்களிலே பார்க்கின்றபோது, பல வருமானம் மிக்க பெரிய பெரிய கோயில்களில் எல்லாம் தமிழிலே வழிபாடு நடத்துவது இல்லாமல் இருக்கிறது. ஒரு கோயிலிலே தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று சொல்வது உண்மையிலேயே தமிழருடைய நெஞ்சங்களையெல்லாம் புண்படுத்துவது போல் இருக்கின்றது. மனைவியோடு கணவனும் பேசலாம் என்று சொன்னால் அது எவ்வளவு கேவலமாகக் கருதப்படுமோ, அதுபோல தமிழ்நாட்டினுடைய கோயில்களிலே தமிழிலும் அர்ச்சனை செய்யப் படும் என்று சொல்வதும் உண்மையிலேயே மனதை நோகடிக்கின்ற ஒரு கொடிய செயல் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே, இந்த பண்பாட்டு நெறிமுறைகளைக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னால், பண்பாட்டுத் துறையானது அந்தக் கோயில்களிலே சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தினாலே இந்து அறநிலையத் துறையும் நம்முடைய தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையும் இணைந்து செயல்படுகின்றபோதுதான் இந்தக் கடமைகளைச் சரிவர செவ்வனே நிறைவேற்ற முடியும். ஆனால், இன்றைக்கு இந்து அறநிலையத் துறையானது வணிக வரித் துறையின் கீழே, அதனுடைய



1997 ஏப்ரல் 16] [ திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ]

கட்டுப்பாட்டுக்குள்ளே இயங்குவதாகக் கேள்விப்படுகிறோம். எனவே, அதை மாற்றி தமிழ் வளர்ச்சித் துறையோடு, இந்து அறநிலையத் துறையை இணைத்து இயங்கச் செய்தால் நலமாக இருக்கும் என்பதை நான் ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

"மனங்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?
மாந்தோப்பில் நிழலா இல்லை?
காண்பதரிதாம் துன்பமிது தமிழகத்தில்
தமிழ் தெருவில், தமிழ்தான் இல்லை."

என்று புரட்சிக் கவிஞர் மனம் வெதும்பிப் பாடினார். 31-3-1997-க்குள்ளாக தமிழிலேதான் விளம்பரப் பெயர்ப் பலகைகள் இருந்திடல் வேண்டும் என்று சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக முதல்வருடைய அந்த எண்ணங்களை ஆணையாகப் பிறப்பித்து வெளியிட்டார்கள். ஆனால், இன்றுவரையிலே கூட பல பெயர்ப் பலகைகள் அப்படியே இருந்துகொண்டிருக்கின்றன. தமிழிலே சில இடங்களிலே இருப்பதைப்போல் தோன்றுகிறது. ஆனால், அந்த விளம்பரப் பெயர்ப் பலகைகள் எல்லாம் தமிழில் இருக்கிறதே தவிர, தமிழாக இல்லை. அதாவது சென்ட்ரல் என்பது தமிழாக இருக்காது. அதை மொழி பெயர்த்து வெளியிடல் வேண்டும் என்பதுதான் நம்முடைய கோரிக்கை. இன்றைக்கு தலைநகர் தமிழ்ச் சங்கம் என்ற ஒரு அமைப்பு இன்னும் பல அதனோடு சேர்ந்திருக்கக் கூடிய சுமார் 50-க்கும் மேற்பட்ட அமைப்புகள் சென்னை, அண்ணா சாலையிலே உள்ள விளம்பரப் பெயர்ப் பலகைகளை மாற்றம் செய்திடல் வேண்டும் என்று சொல்லி அவர்கள் ஒரு போராட்டத்தையே அண்மையிலே நடத்தினார்கள். ஆனால் நடத்திய அந்தப் போராட்டத்திற்கு அந்த விளம்பரக் கடைகளை வைத்திருக்கிறவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால் எங்களுக்கு தமிழ் வளர்ச்சித் துறையிலே இருந்துதான் அறிக்கை வந்திருக்கிறதே தவிர தொழிலாளர் நலத் துறையிலே இருந்து வந்தால்தான் நாங்கள் அதைச் செய்ய முடியும் என்று ஒரு சாக்குபோக்கு சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பேசும்போது நான் இதைச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையும் இணைந்துதான் இந்த அரசாணையைப் பிறப்பித்தோம். ஆனால், அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். இருந்தாலும் கூட ஒரு வேண்டுகோளாக நான் வைக்க விரும்புவது

நான் தெரிவித்து இத்தகைய போராட்டம் இப்போது தேவையில்லை என்ற என்னுடைய வேண்டுகோளை அந்தக் கட்சிக்கு இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கும் அவருடைய ஆலோசனைக்கும் நிச்சயமாக நாங்கள் மதிப்பு அளிப்போம். பாட்டாளி மக்கள் கட்சியானது அவருடைய உணர்வோடு ஒன்றிப்போன ஒரு இயக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனாலும்கூட 'கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டு கிளர்ச்சி செய்க' என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் சொன்ன வரிகளுக்கிணங்கத்தான் இதுவரையிலே கேளாக் காதினராக இருக்கக்கூடிய அவர்களைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் ஒரு கிரியா ஊக்கிபோல் இப்படிச் செய்யலாம் என்று நாங்கள் முடிவு செய்தோமே தவிர நிச்சயமாக இந்த ஆட்சியினுடைய சட்டம் ஒழுங்கிற்கு பாட்டாளி மக்கள் கட்சியானது எந்த சூழ்நிலையிலேயும் காரணமாக அமையாது என்பதை மட்டும் நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன அத்தகைய ஆலோசனைகளை நாங்கள் கருத்திலே கொண்டு பொது இடங்களிலே கூட அத்தகைய போராட்டங்களை நடத்துவதற்கும் நாங்கள் முன் வருவோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு தொடர்கிறேன். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையானது தங்களுடைய வேலைகளை கொஞ்சம் இன்னும் திறம்படச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். 1956-லே ஆட்சி மொழிச் சட்டம் உருவாகியும்கூட இன்றையவரையிலே பல துறைகளிலே தமிழிலே ஆணைகள் பிறப்பிக்கப்படுவதில்லை. அண்மையிலே கல்லூரிக் கல்வி [illegible] ...ங்கிற [illegible] 12-1996 [illegible] ஆ[illegible] அது ஆங்கிலத்தி[illegible] ...க்கிறது [illegible] ஆணை ஒன்றும் பெரிய ஆணை அல்ல. தேர்வுக்கூடங்களிலே காப்பியடிக்கிற மாணவர்களைத் தடுப்பதற்கு கல்லூரி முதல்வர்களுக்கு ஒரு ஆலோசனை வழங்கப்படுகிற ஒரு ஆணை. தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிற ஆணை. அந்த ஆணையைக் கூட தமிழில் தரலாம். ஆனால் இன்னும்கூட பல அதிகாரிகள் தமிழில் ஆணைகளைப் பிறப்பிப்பதற்குத் தயங்குகிறார்கள். (மணியடிக்கப்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 ஏப்ரல் 16

அதேபோல் கடாரம் வென்றான் இராஜேந்திர சோழன் என்று நாம் சொல்கிறோமே, - இன்றைக்கு அந்த கடாரம் என்ற அந்தப் பகுதி மலேசியாவில் இருக்கிறது. அவன் கட்டிய கோவிலானது இன்றைக்கு முற்றிலும் சிதைந்து போய் விட்டது. அங்கே அழகான கலைச் சிற்பங்கள் எல்லாம் இன்றைக்குக் களவாடப் பட்டு பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது எல்லாம் என்னவென்று சொன்னால் இன்றைக்குத் தமிழுக்காக, தமிழனுக்காக, தன்னுடைய உயிர் மூச்சை வைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒருவரால் தான் இத்தகைய பண்பாட்டு பாரம்பரிய நெறி முறைகளை கட்டிக் காப்பாற்ற முடியும். கண்ணகிக்கு பூம்புகார் என்று சொல்லி ஒரு அழகான கோட்டத்தை உருவாக்கினார்; வள்ளுவருக்குக் கோட்டத்தை உருவாக்கினார்; அதேபோல் கடல் கடந்து இருக்கக்கூடிய மலேசியாவிலே இராஜேந்திர சோழன் நிறுவிய அந்தக் கோவிலை மீண்டும் நம்முடைய பண்பாட்டுத் துறையின் மூலமாக புதுப்பித்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please finish quickly.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் படிப்புப் படிக்கிறவர்கள் இன்றைக்கு 20 வகையான பாடங்களைப் படிக்கிறார்கள். அவற்றை மொழி மாற்றம் செய்து தரவேண்டுமென்றும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்களை வெளியிடும் 'All India Reporter', 'Criminal Law Journal' போன்ற மாதப் பத்திரிகைகளைத் தமிழ்ப்படுத்தி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நம்முடைய தமிழ் மொழிக் காவலர்களுக்கு வழங்கப்படுவது போல் உதவித் தொகை மாதந்தோறும் 1,500 ரூபாய், இலவச பேருந்துப் பயணம், மருத்துவச் சலுகை, அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சுமார் 448 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989-லிருந்து தமிழ்ச் சுருக்கெழுத்து உயர்வேகத் தேர்வான ஒரு நிமிடத்திற்கு 180 வார்த்தைகள் வீதம் எழுதி தேர்ச்சி பெற்று



1997 ஏப்ரல் 16] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

பணியாற்றக்கூடியவர்கள் 6 பேர்தான் இருக்கிறார்கள். இது மிகவும் கடினமான தொழில். எனவே, இந்தத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் ஒரு ஊதிய முன் உயர்வு—பணப்பயன்—வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்ச் சுருக்கெழுத்துப் புத்தகங்கள் இப்போது கிடைக்காமல் இருக்கிறது. அதனை வெளியிட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத்துறையின் வாயிலாக ஒரே ஒரு கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன். தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே—இன்றைக்கு லட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள்—முத்தரப்புப் பேச்சு வார்த்தையின் மூலமாக அவர்களுக்கு லெவி தொகையானது ஒரு சதவீதம் பிடிக்கப்படும் என்று சொல்லி உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு .1 சதவீதம்கூட அதாவது ஒரு ரூபாய் பிடித்தம் செய்வதாகச் சொல்லிவிட்டு—10 காசு கூட பிடித்தம் செய்யப்படவில்லை. இப்படி இருப்பதால் அந்தக் கட்டுமானத் தொழிலாளர்கள் தங்களுடைய விபத்துக் காப்பீடு தொகை பெறுவதோ அல்லது மற்ற மற்ற வசதிகளைப் பெறுவதோ இயலாமல் இருந்து கொண்டிருக்கிறது. மொத்தக் கட்டுமானத் தொகையிலிருந்து 2 சதவீதம் அந்த லெவி தொகையானது பிடித்தம் செய்யலாம் என்று சொல்லி நாடாளுமன்றத்திலே மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும்கூட இந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு மிக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்று சொன்னால், மொத்தக் கட்டுமான முதலீட்டிலே 20 சதவீதம்கூட இன்றைக்கு அவர்களுக்குக் கூலியாக தருவது இல்லை. ஆனால் சட்டப்படி 40 சதவீதம் கூலியாக தரப்படல் வேண்டும் என்று இருக்கிறது. இருந்தாலும் அவர்களுக்குத் தரப்படுவது இல்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் வேண்டுகோளாக வைக்க விரும்புவது, - கட்டிடத் தொழிலாளர்கள் இறந்தால் அவர்களுக்குத் தரப்படுகின்ற இறப்பு ஊதியமான 50 ஆயிரம் ரூபாய் என்பது இன்றைக்கு சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் மட்டும்தான் அமலாக்கப்படுகிறது.

அவை அனைத்துப் பகுதிகளுக்கும் அமலாக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

60 வயதான கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமும், ஈ.எஸ்.ஐ. வசதி போன்றவற்றையும், குழந்தைகள் காப்பகம், விபத்துக் காப்புறுதி போன்றவற்றையும வழங்க ஆவன செய்ய வேண்டும். அதற்கு அந்தக் கட்டுமானத் தொகையிலே 2 சதவீதம் பிடித்தம் செய்து, அந்த வசதி வாய்ப்புக்களை கட்டிடத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று தடவை சொல்லியாகி விட்டது. பிறகும் ஒரே ஒரு நிமிடம் என்ன? நீங்கள் சிறந்த பேச்சாளர். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், ஒரு சிறந்த பேச்சாளருக்கு அடையாளம், குறிப்பிட்ட நேரத்திலே முடிக்க வேண்டும். சரி, பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இன்றைக்கு ஜப்பான் நாடு முன்னுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அதாவது அவர்கள், ஜப்பான் மேனேஜ்மெண்ட் என்று சொல்லக்கூடிய ஜப்பான் முறை மேலாண்மை முறையை எல்லாத் தொழிற்சாலைகளிலும் கையாள்கிறார்கள். அந்த முறை என்னவென்று சொன்னால், அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றக்கூடிய எம்.டி.யிலேயிருந்து, சாதாரணத் தொழிலாளி வரையிலே - அதாவது ரவுண்ட் டேபிள் என்று சொல்லி அவர்கள்—குவாலிட்டி சர்க்கிள் என்று ஒரு கூட்டத்தை நடத்துகிறார்கள். ஒரு நிறுவனத்தினுடைய பொருள் விற்பனையாக வேண்டுமென்று சொன்னால், ஒரு நிறுவனம் மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால் சாதாரணத் தொழிலாளியிலேயிருந்து மேலேயிருக்கக்கூடிய மேலாண்மை இயக்குநர் வரையிலே, ஆலோசனைகளைப் பெற்று, அதன்மூலம் அவர்கள் சிறப்பாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய தமிழகத்திலேயும் நீங்கள் அமலாக்கினால் நல்லது. அமெரிக்காவை இன்றைக்கு ஜப்பான் மிஞ்சியிருப்பதற்குக் காரணமே இந்த ஜப்பான் மேனேஜ்மெண்ட் என்று சொல்லக்கூடிய இந்த முறைதான். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் இதையும் கவனித்துச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மூடிக்கிடக்கின்ற ஆலைகள் பல இருக்கின்றன இருந்தாலும், 2,800 தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்ற மேட்டூர் டெக்ஸ்டைல் மில்லை திறந்திட ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, தாம்பரம் ஏற்றுமதி வளாகத்திலே உள்ள நோவா எலக்ட்ரோ மேக்னெட்டிக்ஸ் என்று சொல்லக்கூடிய நிறுவனத்தின் தொழிலாளர் பிரச்சினை களைப்பற்றி - 847 தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி—மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் 5 மாதமாகப் பெறாமல் இருக்கின்ற அந்த ஊதியத்தைப் பெற்றுத் தர அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளலார் மாவட்டத்திலே உள்ள நம்முடைய கலைஞர் ஆட்சிக் காலத்திலே மூடப்பட்டு—விருத்தாசலத்திலே இருக்கக்கூடிய பீங்கான் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கு ஆவன செய்திடல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுத் துறை அச்சகப் பொதுத் தொழிலாளர்கள். அவர்கள் (குறுக்கீடு) இல்லை, 1989-லே நீங்கள் திறந்தீர்கள். அண்ணா தி.மு.க. ஆட்சி வந்தவுடனே மறுபடியும் மூடிவிட்டார்கள். ஆகவே மீண்டும் நீங்கள் உங்களுடைய ஆட்சியிலே, நீங்கள்தான் அதைத் திறக்க முடியும்; உங்களால்தான் அது இயலும் என்ற காரணத்தினாலே, பல தொழிலாளர்கள் உங்களுடைய ஆட்சியிலே அந்த நல்ல நிலைமை ஏற்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, கடைசியாக, டான்சி தொழிலாளர்கள் பணி ஓய்வு பெற்றும் அவர்களுக்கு இன்னும் எந்தவிதமான சலுகைகளும் கிடைக்கவில்லை. அவற்றையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு தகவல். முன் வரிசையிலே உட்கார்ந்திருக்கிற உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் மீது வருத்தமாககூட இருக்கலாம், நேரம் அதிகமாகக் கொடுப்பது இல்லை என்று. ஒருவேளை நான்தான் தவறு செய்து விட்டேனோ என்று பழைய குறிப்புகளையெல்லாம் எடுத்துப் பார்த்தேன். குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டார்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் எவ்வளவு

நேரம் எடுத்துக் கொண்டார்கள் என்று பார்த்தேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது 1957-ல் ஒருமுறைகூட 15 நிமிடங்களுக்கு மேல் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசியதாக என்னிடம் குறிப்பு இல்லை. அதைப்போல, அவை முன்னவர் அவர்கள் ஒருமுறைதான் 20 நிமிடம் பேசியிருக்கின்றார்கள். மற்ற சமயங்களிலெல்லாம் 12 நிமிடம், 15 நிமிடம் என்ற அளவில்தான் பேசியிருக்கின்றார்கள். ஆகவே, சிறந்த பேச்சாளராக இருக்கக்கூடிய முன் வரிசையிலே இருக்கின்ற தலைவர்கள் இதைக் கருத்திற்கொண்டு, அவர்கள் தங்கள் கருத்தை மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, அடுத்தபடியாக திரு. வெங்கடசாமி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, in support of my cut motions given already regarding the Demands for Grants relating to Labour, Factories, Employment and Training and Tamil Development-Culture Departments, I want to make a few points.

Appreciating all the efforts taken by the Hon. Labour Minister to alleviate the difficulties of the Labourers as stated in his report, I want to add some more things in the interest and welfare of the labour community. Because there is no sufficient time, I want to cut short my speech.

Last week, I put a question in the Assembly regarding abolition of Contract Labour system. In almost all the factories, contract labourers are engaged. They are given job opportunity for three months and after that they are sent out. Once again, they are engaged and even after one or two years, they are engaged as casual labourers only. They are not going to make them permanent. The Hon. Minister also told me that this clause will be removed. I request him to see that [illegible]

பிற்பகல் 12-40

Coming to the other points, the opening of closed mills due to industrial [illegible]utes should be encouraged. They have done a lot of good work at Hosur [illegible]und Auto Products and Hindustan Motors have accommodated the work[illegible]rs. They have called all the people back and the disputes have been settled.





Eradication of child labour is also very important and the Government must give more attention to this.

Regarding Provident Fund, people are finding it difficult to get amount from their P.F. account. At Baagalur Premier Mills, they have applied for loan to construct houses; but the Provident Fund Department is not considering them. I request the Hon. Minister to see that it is sorted out and the Baagalur Premier Mills, workers are given the amount from their Provident Fund.

With regard to E.S.I. hospitals, there is a big E.S.I. hospital at Hosur. But [illegible] is not functioning because of want of staff. I request the Hon. Labour Minister to look into it. At Baagalur, lot of industries have come up and therefore an E.S.I. hospital may be opened there.

Regarding misappropriation at ELCOT, Hosur, news appeared in the papers that 1-1/2 crore rupees has been misappropriated. The workers are apprehending that there would be closure because of the misappropriation. I request the Hon. Minister and Hon. Chief Minister to see that the ELCOT misappropriation case is sorted out and settled.

Regarding ITIs, more ITI seats should be given to the people. Otherwise they are not going to gain employment opportunities. For example, in Hosur there are a number of industries; but without proper training in ITIs the people are not in a position to get employment. Therefore, instead of simply giving education, why do not you start more ITIs and polytechnics? I request you to consider this aspect.

Then, the Standard Motors problem should also be sorted out. The Hon. Minister for Housing had come to Hosur and you know that a number of people are working there in the factories with low salary. You must see that low cost housing scheme is implemented th[illegible] this Government.

Regarding minimum wages to the workers, I come to know that at the Mathigiri Cattle Farm they are getting only Rs. 25 to Rs. 30 per day whereas in other farms they are getting Rs. 40. There should be equality in all the farms. This should be rectified. The minimum wages to the Khadi and Village Industries workers in Vellisanthai should be given. They are paid only Rs. 14 per day though the Government has ordered Rs. 550 per month. I request the Hon. Minister to see that it is rectified.

[Thiru B. Venkatasamy ] [1997 ஏப்ரல் 16

Regarding TANSILK in K.R.P. the twisting unit has been closed two years back. A number of workers are suffering. I therefore request that the TANSILK unit be started.

Regarding labour disputes. Hosur is having nearly 500 to 600 very big factories and they are finding it difficult to come to Salem or Krishnagiri to attend the cases. So, I request the Hon. Minister to see that a Labour Court is set up at Hosur. A number of cases are pending and the workers have to go outside Hosur now. This should be expedited, and at least within two or three months, the matter should be settled.

Regarding Tamil Development and Culture, the Hon. Minister and Hon. Chief Minister are very much interested in developing Tamil Culture and Tamil language. At the same time, we are linguistic minorities in Tamil Nadu, speaking Telugu, Kannada, Malayalam, Urdu and other languages. I am happy that the Hon. Chief Minister has announced in his Budget speech that the Government would arrange to appoint language teachers if linguistic minorities want to learn their mother tongue and if there are more than 15 students. But, Hosur is quite different. At Hosur we are learning Telugu, Kannada or Urdu from the 1st Standard. In Urdu schools they have introduced Tamil from the 3rd standard. All these days we have been deprived of learning Tamil. I am speaking in English because I can read only a little bit Tamil and now I am picking up. I have not learnt Tamil earlier. These kind of things should not further exist in Hosur. That is why I request the Hon. Minister to see that Tamil is also introduced from the 3rd standard to the 5th standard. Or otherwise, you can invite the minority community people and experts to see that a good scheme is implemented for learning Tamil. A number of letters have also come from my Constituency stating that from the 1st standard we must be allowed to study our mother tongue and then in addition to that, we want to learn Tamil. So, I request the Hon. Chief Minister and the Minister concerned to invite them and hear their feelings and decide on it. Then only the minorities also would be very happy.

பிற்பகல் 12-45

Sir, a Committee may be constituted to study the implementation of Tamil in minority schools and experts and leaders of the minority communities may sit together and express their views.



1997 ஏப்ரல் 16] [Thiru B. Venkatasamy ]

I know that there is a Zonal Council of the Chief Ministers of the Southern States. Our Hon. Member Thiru M. Abdul Latheef was telling just now that our Tamil people, who are studying in Karnataka and Andhra Pradesh also should be equally treated and that is more important. Our people there must also be benefited and they also must learn their languages in other States. I request the Hon. Chief Minister to discuss this matter in the Southern Zonal Council meeting. We must sort out such things with the co-ordination existing now, in the Centre.

With these words, I conclude my speech. Thank you very much, Sir.

## 3. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்—
*தொடர்ச்சி.*

### (ஆ) மாநில மனித உரிமைகள் ஆணையம், தலைவர், உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993, பிரிவு 21-ன்படி தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பது குறித்து ஓர் அறிக்கையை வைக்க அனுமதி கோரியிருக்கின்றார்கள். அனுமதி தருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பின்வரும் அறிக்கையினை வெளியிட முன்வருகின்றேன்:

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1993-ன் பிரிவு 21-ன்படி தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைக்கும் கருத்துரு 1993 அக்டோபரிலிருந்தே அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது. மத்திய அரசும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தினை உடனடியாக அமைக்கும் பொருட்டு அவ்வப்போது அன்றிருந்த அரசுக்கு வலியுறுத்தி வந்துள்ளது. எனினும், இந்த அரசு பதவியேற்கும்வரை இது சம்பந்தப்பட்ட ஆணைகள் எதுவும் முன்பு இருந்த அரசால் வெளியிடப்படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற உடனேயே துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தினை அமைத்திட, அரசு ஆணை நிலை

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 16

எண் 1466, பொதுத் துறை, நாள் 20-12-1996-ல் ஆணைகள் பிறப்பித்தது. இந்த மாநில மனித உரிமைகள் ஆணையம் சம்பந்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் அதன் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் ஆகியவையும் அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

தற்போது மேதகு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்குத் தலைவரையும், உறுப்பினர்களையும் கீழ்க்கண்டவாறு நியமனம் செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளார்கள். தலைவர், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, நீதிபதி திரு. நயினார்சுந்தரம். உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. சுவாமிதுரை, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. அப்துல்கனி, மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவற்றில் தனித்துவம் வாய்ந்த இரண்டு பேர்; ஒருவர் திரு. ஆர். இரத்தினசாமி, இன்னொருவர் டாக்டர் எம். சுசிலா ராஜ்.

மேதகு ஆளுநர் அவர்களின் மேற்சொன்ன நியமன ஆணைகள் குறித்த அறிவிக்கை ஒன்று அரசால் வெளியிடப்படவுள்ளது என்ற அளவில் இந்த அறிக்கையை இந்த அவையின்முன் வைக்கின்றேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 1997- 98, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 51 — தமிழ் வளர்ச்சி-பண்பாடு—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 28 — தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் — தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1997-98ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்—தொடர்ச்சி திரு. வி.ஜி. தனபால். உங்களுக்கு உரையாற்ற வழங்கப்படும் நேரம் மூன்று நிமிடங்கள்தான்.

***திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத் துறை, தொழிலாளர்கள், தொழிற்சாலை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழைத் தன் உயிர்மூச்சாகக் கருதிக்கொண்டு, தமிழுக்காகத் தன் வாழ்நாளை ஒப்படைத்துக்கொண்ட தானைத் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழுக்காக ஒரு துறையை ஏற்படுத்தி, அந்தத்



1997 ஏப்ரல் 16] [திரு. வி.ஜி. தனபால்]

தமிழ்த் துறைக்கு மாண்புமிகு தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை அமைச்சராக நியமித்ததற்குத் தமிழக மக்களும், பத்திரிகைகளும் பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

1986-லே சிறை சென்ற தமிழ்மொழிக் காவலர்களுக்கு உதவித்தொகை மற்றும் இலவசப் பேருந்து வசதி ஆகியவற்றைச் செய்து கொடுக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், 1953-ல் மும்முனைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற தியாகிகளுக்கு இன்னும் உதவித்தொகை கிடைக்காமல் அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். குடியாத்தம் தொகுதியில் சுமார் பத்து பேர்கள், வயதான இந்த நேரத்திலும் உதவித்தொகை கிடைக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, 1953 ஆம் ஆண்டு சிறை சென்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உதவித் தொகை வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, மூடப்பட்டிருந்த ஆலைகளைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். மேலும், தமிழகத்தில் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான் பல கோடி ரூபாய் மூலதனத்தில் பல்வேறு புதிய புதிய தொழிற்சாலைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என்பது என் கருத்து.

எனது தொகுதி நெசவுத் தொழிலுக்கு அடுத்து தீப்பெட்டி மற்றும் பீடித் தொழிலில் சிறந்து விளங்கும் பகுதியாகும். பீடித் தொழிலாளர்கள் மட்டும் சுமார் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சொந்தமாக வீடில்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 575 வீடுகள் இந்தத் தொழிலாளர்களுக்காகக கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் குடியாத்தம் பகுதிக்கு மட்டும் சுமார் 100 வீடுகளையாவது கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலாளர்களுக்கும் வீடு கட்டும் திட்டத்தைக்

[ திரு. வி.ஜி. தனபால் ] [1997 ஏப்ரல் 16

கொண்டுவர வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும், பட்டாசுத் தொழிலுக்கும், தீப்பெட்டித் தொழிலுக்கும் ஒரே சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதை மாற்றி, பட்டாசுத் தொழிலுக்கு ஒரு சட்டம், தீப்பெட்டித் தொழிலுக்கு ஒரு சட்டம் என்று தனியாக இயற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, குழந்தைத் தொழிலாளர்களை அறவே நீக்கும் முயற்சியில் நம்முடைய அரசு ஈடுபட்டிருப்பதைப் பாராட்டுகின்றேன். அதில் 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் அரசு மருத்துவர் சான்றிதழ் பெற்று இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் அந்தச் சான்றிதழ்களை ஏற்க அதிகாரிகள் மறுக்கிறார்கள்.

எனது தொகுதியில் குடியாத்தம் நகரம் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. அங்கு ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை தனியாருக்குச் சொந்தமான சிறிய கட்டிடத்தில் வாடகைக்கு இயங்கி வருகின்றது. அங்கே ஒரு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, அதிகாரிகள் சென்று பார்வையிட்டும் அனைத்துத் துறைகளும் ஒப்புதல் அளித்தும், இன்னும் அந்த மருத்துவ மனை கட்டப் பெறவில்லை. எனவே, உடனடியாக குடியாத்தம் நகரில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையைக் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கடந்த காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், முந்தைய ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது. மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுக்கு உதவித் தொகை கிடைத்திட ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் பட்டதாரிகள் ஓரளவுக்கு பயனடைவதுடன், வேலையில்லாமல் இருக்கும் 200-க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று, மிசா கைதிகளுக்கு நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் உதவித் தொகை வழங்கிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நலத் துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கான மானியக்



1997 ஏப்ரல் 16] [ திரு. சோ. பாலகிருஷ்ணன் ]

கோரிக்கைகளின் மீது விவாதம் நடந்து இப்பொழுது கடைசியாக நான் பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, நான் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு விரும்பியதன் காரணம் என்னவென்றால், இந்தத் துறைகளின் அமைச்சர்கள் இருவருமே என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகத்தான். முகவை மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்; தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனவே, இந்த இரண்டு அமைச்சர்களும் என்ன கருத்தைச் சொல்கிறார்களோ அவர்களுடைய கருத்துக்களோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் நான் இன்று பேசுவதற்கு விருப்பம் தெரிவித்தேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இன்று நம்முடைய அரசு தொழிலாளர் பிரச்சினையில் ஒழுங்கான, சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தியதன் மூலம், கடந்த ஓராண்டு காலமாக எந்தவிதமான பிரச்சினையும் தொழிலாளர்கள் மத்தியில் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு அமைதியான சூழ்நிலை கடந்த ஓராண்டு காலமாக நிலவி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் போன்றவர்கள் தொழிலாளர்களுடைய நலனில் மிக மிக கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், தொழிலாளர்களுக்கு எந்தவிதமான தொல்லையும், துன்பமும் இனி வராது என்பதுதான்.

கட்டிடத் தொழிலாளர்களைப் பற்றி நம்முடைய உறுப்பினர் தீரன் அவர்கள்கூட விளக்கமாகப் பேசினார்கள். இந்தத் தொழிலில் சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு முறையான அமைப்பில் இல்லாத காரணத்தால் பல இடங்களில் பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகின்றனர். அவர்களுடைய பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டியது அரசினுடைய கடமையாகும்.

*பிற்பகல் 12-55*

அதேபோன்று குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்சினை இன்றைக்கு தமிழ்நாட்டில் மிகப் பெரிய பிரச்சினையாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

[ திரு. சோ. பாலகிருஷ்ணன் ] [1997 ஏப்ரல் 16

ஏழையெளிய மக்கள் வீட்டில், படிப்பறிவு இல்லாத வீடுகளில் உள்ள குழந்தைகள் வருவாய் ஈட்டித்தான் குடும்பத்தை நடத்துகின்ற ஒரு கொடிய சூழ்நிலை இன்று தமிழகத்தில் நிலவி வருவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு முறையான வழிவகை செய்ய வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமையாகும். குறிப்பாக தென் மாவட்டங்களில் இரவு *3* மணிக்கெல்லாம் ஒவ்வொரு கிராமத்திற்கும் வேன்கள் செல்கின்றன. அங்குள்ள அருமைக் குழந்தைகளை தட்டி எழுப்பி, வேன்களிலே ஏற்றி, தொழிற்சாலைகளில் கொண்டுவந்து விடுகிறார்கள். பிறகு இரவு *12.00* மணிக்கு வீட்டிற்குக் கொண்டுபோய் இறக்கிவிடுகிறார்கள். திரும்பவும் அடுத்த நாள் விடியற்காலை *4.00* மணிக்கு அவர்களை அழைத்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். இத்தகைய குடும்பங்கள் எல்லா இடங்களிலும், குறிப்பாக காமராஜர் மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன. அவர்களுடைய வயிற்றுப் பிரச்சினை தீருகிறதே தவிர, அறிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதை நம்முடைய அரசு மிக உன்னிப்பாகக் கவனித்து, இந்த ஏழை மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும்; அதேநேரத்தில், அந்தக் குழந்தைகளுடைய வருங்காலத்தையும் கவனித்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, விவசாயத் தொழிலாளர்களும் இன்றைக்கு பல பிரச்சினைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். விவசாயத்தை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசு அடிக்கடி சொல்கிறதே தவிர, உருப்படியாக இதுவரை விவசாயத் தொழிலாளர்களுக்கென சட்டம் இயற்றியதாகத் தெரியவில்லை. நம்முடைய தமிழக அரசானது, முன்மாதிரியாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு என தனிச் சட்டம் இயற்றி, தொழில் துறையில் என்னென்ன நன்மைகள் வழங்கப்படுகிறதோ, அந்த நன்மைகளை இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தையல் தொழில் வளர்ந்து வருகின்ற தொழிலாகும். ஏராளமான துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வளர்ந்த தொழிலாக அது உருவாகியிருக்கிறது. இந்தத் தொழிலில் நம்முடைய தாய்மார்கள் *300* ரூபாய்க்கு வேலை செய்கிறார்கள். காலை *7.00* மணிக்கு செல்கின்ற அந்தத் தாய்மார்கள் இரவு *8.00* மணிக்குத்தான் வீட்டிற்குத் திரும்புகிற நிலையில், *12* மணி



1997 ஏப்ரல் 16] [ திரு. சோ. பாலகிருஷ்ணன் ]

நேரம் வேலை செய்கிற அந்தப் பெண்களுக்கு *300* ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதையெல்லாம் நம்முடைய அதிகாரிகள் கவனித்து, அந்த ஏழைப் பெண்களுடைய வாழ்வு மலர்வதற்கு, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு விவசாயிகளும் இதே சூழ்நிலையில்தான் இருக்கிறார்கள். கரும்பைப் பயிரிடுகின்ற விவசாயிகள் இன்றைக்கு கரும்பைத் தீயை வைத்துக் கொளுத்துகின்ற நிலைதான் இருக்கிறது. காரணம் முதலாளிகள் கரும்பை வெட்டுவதற்கு அனுமதிக்கவில்லை; வெட்டினாலும் அதற்குரிய பணத்தைக் கொடுப்பதில்லை என்ற குறைபாடு பொதுவாக நாட்டிலே இருந்து வருகிறது.

தொழிலாளர்கள் மத்தியில் இன்றைக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. பல இடங்களில், குறிப்பாக கோவை நகரத்தில், தனியார் தொழிற் கூடங்களில் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு இடம்கூட வேலைவாய்ப்பு இல்லை என்ற குற்றச்சாட்டு பரவலாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளும், அமைச்சரும் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் சிறுபான்மையினருக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பெண்களுக்கு உரிய இடம் கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமையாகும்.

வேலைவாய்ப்புத் துறையும் நம்முடைய அமைச்சர் பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், உடல் ஊனமுற்றவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கின்ற வழியைத் தேட வேண்டும். குறிப்பாக ஊமை, கை, கால் இழந்த படித்த குழந்தைகள், *10* வருடங்கள், *15* வருடங்கள் வேலைவாய்ப்பகத்தில் பதிந்துவிட்டு, வேலை, வேலை என அலைந்து கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட இந்த உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு, படித்த இளைஞர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்க வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அரசுதான் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. காரணம் அரசால் எவ்வளவு பேருக்குத்தான் வேலை கொடுக்க முடியும் என்பதை நான் அறிவேன். ஆனாலும், தனியார் துறைகளுக்குக் கடுமையான உத்தரவு போட்டு, இந்த உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம், அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[ திரு. சோ. பாலகிருஷ்ணன் ] [1997 ஏப்ரல் 16

*பிற்பகல் 1-00*

நம்முடைய தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விறுவிறுப்போடு செயல்பட்டு, தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய திரு. கே. சுப்பராயன் அவர்கள் பஸ் தொழிலாளர்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல, ஒரு சில இடங்களில் உண்மை இருக்கின்றது. ஆனால், சில இடங்களில் தொழிலாளர்களைத் தங்களுடைய குழந்தைகளைப் போலக் கவனிக்கின்ற முதலாளிகளும் இருக்கிறார்கள். தொழிலாளர்களை அடிமைகளைப் போன்று நடத்துகின்ற முதலாளிகளும் இருக்கிறார்கள். இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். உதாரணமாக—உதாரணமாக என்று சொல்ல வேண்டாம் என்று நான் கருதுகின்றேன். அது பல பிரச்சினைகளுக்கு ஆளாக்கிவிடும்—மொத்தத்தில், தொழிலாளர்களுக்குரிய குறைந்தபட்ச சம்பளத்தை வாங்கிக் கொடுக்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை. தொழிலாளர்களுக்குரிய முன்னுரிமை, அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்த் துறைக்கு நான் வருகின்றேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கென்றே புதிதாக ஒரு தனித் துறையை ஏற்படுத்தி, அதற்கென்று ஒரு அமைச்சரை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதற்காக, என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டில் ஆங்கில மோகம் என்பது, ஒரு வெறி பிடித்த மோகமாக இன்று விளங்குகிறது. குக்கிராமங்களிலேகூட, இன்று ஆங்கிலப் பள்ளிகள், மழலையர் பள்ளிகள் என்று சொல்லக்கூடிய பள்ளிகள், கிட்டத்தட்ட 25,000, 30,000 பள்ளிகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதிலே அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் சுமார் 2,000 பள்ளிகள் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆங்கிலம் என்பது நமக்கு அத்தியாவசியத் தேவை இன்று உலக மொழியாக ஆங்கிலம் இருக்கின்றது. ஆங்கிலத்திலே படித்து நாம் முன்னுக்கு வர வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால், அதேநேரத்தில், நம்முடைய நாட்டில் இருக்கின்ற ஏழையெளிய குழந்தைகள், கல்வி அறிவு பெறாமல், வெறும் ஆங்கில மோகத்திலேயே வளருவார்களேயானால், அவர்களுடைய சிந்தனையே வற்றிப்போய் விடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆகவே, நம்முடைய



1997 ஏப்ரல் 16] [ திரு. சோ. பாலகிருஷ்ணன் ]

அரசினர் இந்த ஆண்டு ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை கட்டாயமாகத் தமிழ் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது பாராட்டுதற்குரியதொரு நல்ல உத்தரவு. ஆனால், அதேநேரத்தில் இந்த உத்தரவால் மட்டும் இந்த மழலையர் பள்ளிகளைக் குறைக்க முடியும் என்று நான் கருதவில்லை. 8 ஆம் வகுப்பிற்கு வருகின்ற வரை எந்தப் பள்ளிக்கூடத்திலேயும் தமிழ் படிக்க வேண்டியதில்லை; யாரிடமாவது ஒருவரிடம் படித்ததற்கான, கல்வி கற்றதற்கான ஒரு சான்றிதழ் பெற்றால் போதும் என்று ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை நம்முடைய அரசு அறவே நீக்கிவிட வேண்டும். குறைந்த பட்சம் 6 ஆம் வகுப்பில் சேர்கின்ற போதாவது, அவர்கள் கட்டாயமாக, அரசுச் சான்றிதழோடு சேர வேண்டும் என்று உத்தரவு போடுவதன் மூலம் இன்றைக்கு இருக்கின்ற 30,000 மழலையர் பள்ளிகளில், 27,000 பள்ளிகளாவது மூடப்பட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது இந்த நாட்டிற்கு நல்லது என்று நான் கருதுகின்றேன்.

அடுத்ததாக, நம்முடைய மாணவர்களுக்கு, படிப்பதற்காகப் புத்தகங்களெல்லாம் வழங்குகின்றோம். நேற்று காலையிலே என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே ஒரு ஏழைக் குழந்தை புத்தகப் பையோடு போய்க் கொண்டிருந்தது. அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தேன். அதிலே ஒரு புத்தகத்தில் — அது ஐந்தாம் வகுப்பு புத்தகம். எண் 4, காமராஜர் சாலை, சென்னை-28-ல் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியிலே அந்தக் குழந்தை படிக்கின்றது; அதைப் படித்துக் கொண்டே பார்த்தேன்; நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் காண்பிப்பதற்காக இங்கே கொண்டு வந்தேன். — ஒலிம்பிக் பற்றிய பாடம் அது.

(அந்தப் புத்தகத்தினை உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் காட்டினார்.)

அதாவது, இதிலே என்ன பண்ணியிருக்கிறார்கள் என்றால், அந்தப் பாடத்தையே மாற்றி மாற்றிப் பைண்டு பண்ணியிருக்கிறார்கள். அதை அந்த ஆசிரியராவது பார்த்து, 'தப்பு நடந்து போய்விட்டது' என்று வேறு புத்தகம் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும் அல்லது அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்திருக்க வேண்டும். இப்போது வகுப்புகள் முடியப் போகின்றன. இந்த 5 ஆம் வகுப்புக் குழந்தை இந்தப் புத்தகத்தை வைத்துப் படித்திருக்கின்றது என்று சொன்னால், எப்படிப் படித்திருக்கும் என்பது எனக்கே வருத்தமாக இருக்கின்றது.

அந்தக் குழந்தையிடம் நான் மிகவும் கெஞ்சிக் கேட்டு, அந்தப் புத்தகத்தைக் கேட்டு வாங்கி, 'நாளைக்குக் கொண்டு வருகிறேன்' என்று சொல்லி வாங்கி வந்திருக்கிறேன். (சிரிப்பு) அதிலே குறிப்புகள் எல்லாம் எழுதியிருக்கிறது. இதுபோன்ற குறைபாடுகளை—இதை ஒரு பெரிய குறை என்று நான் சொல்லவில்லை—இருந்தாலும், இதுபோன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியது, அந்தத் துறையினுடைய கடமை என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன்.

பிற்பகல் 1-05

பிறகு, நம்முடைய ஆரம்பப் பள்ளிகளில் இருக்கிற கல்வித் தகுதி மிகமிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் நம்முடைய மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு மாதம் — நிச்சயமாக இப்போது 'லீவ்' வந்துவிடும்; ஏப்ரல் முடிந்தவுடன் ஒரு மாதம் 'லீவ்'-இல் போய்விடுவார்கள்; — 'லீவ்' காலங்களில், அவர்களுக்கெல்லாம் மறுபயிற்சி கொடுக்கிற வகையில், வேறெந்த ஒரு பயிற்சியும் கொடுக்க வேண்டாம்; நம்முடைய ஆசிரியர்களுக்குத் தமிழில் தவறு இல்லாமல் எழுதப் பழக வேண்டும்; பிழையில்லாமல் எழுதுகின்ற ஒரு பயிற்சியைக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிற முறையில் தவறுகள் ஏற்படுமானால், அது தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். எம்.ஏ. படித்தவர்கள்கூட, நிறைய தவறாக எழுதுகிறார்கள் என்று சொன்னால், அது ஆரம்பத்தில் அவர்களுக்கு ஒழுங்காக பயிற்சி கொடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு, அதுபோன்று கல்லூரி ஆசிரியர்களுக்கும்கூட, மறுபயிற்சியினை, வருகின்ற கோடை காலங்களிலே கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, இந்த நாட்டில் ஏராளமான கலைப் பொக்கிஷங்கள் நமக்குப் பாரம்பரியமாக வந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம், நம்முடைய அரசு சிந்தனை செய்து, நல்லமுறையில், அவர்களை எல்லாம் ஊக்குவிக்கிற வகையில், ஏராளமான திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. இசைப் பயிற்சிக் கல்லூரிகளைக்கூட உருவாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல இசை என்பது — நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்; 'இழவில் அழுகிற பெண்கூட, இசையோடு அழுவது கண்கூடு' என்று நம்முடைய நாமக்கல்





இராமலிங்கம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; ஆகவே, அந்த இசை என்பது — மிக முக்கியம். நம்முடைய கோயில்களில் எல்லாம், இசைத் தமிழில் பாடுகின்ற ஒரு நல்ல சூழ்நிலை உருவாக வேண்டும்.

நான்கூட, சம்பத்தில் இராமேஸ்வரம் போய் இருந்தேன். அங்கே சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்கள். அர்ச்சனை முடிந்த நேரத்திலே, பின்னாலே ஒரு ஓதுவார், அருமையான, நம்முடைய மாணிக்கவாசகர் அவர்களுடைய பாடலை எடுத்துப் பாடினார், பாருங்கள். 'கல்மன மானிடரும், கண் இரங்கி நீர் வடிப்பர்' என்கிற முறையில், அருமையாகப் பாடினார். உடனே, நான் அந்த உண்டியலிலே கூட போடவில்லை; அவருக்கு மட்டும் ஒரு நூறு ரூபாயைக் கையில் கொடுத்து, 'இங்கே பாடிக் கொண்டே இருங்கள்' என்று சொன்னேன். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நன்கு பாடக்கூடிய அருமையான பாடல் ஆசிரியர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து, எல்லாக் கோயில்களிலேயும் இசையோடு பாடுகின்ற நல்ல சூழ்நிலையை நம்முடைய அரசு உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், கோயில்களுக்கு இலட்சக்கணக்கான மக்கள் நாள்தோறும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இந்தத் தமிழிசையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேகூட ஒரு கோரிக்கை வைக்கிறேன். நம்முடைய எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் காலமான நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய வீட்டிற்கே சென்று, அனுதாபங்களை எல்லாம் தெரிவித்ததாகச் சொன்னார். அவருடைய பேத்தி இராஜேஸ்வரி என்கிற பெண், எம்.ஏ. வரை படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எதற்காக நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், இப்படிப்பட்ட இசை மேதைகளினுடைய வாரிசுகளுக்குக் கொஞ்சம் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, நம்முடைய பழைய இராமநாதபுரம் மாவட்டம் என்பது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாவட்டமாகும். அதிலேயும், அங்கிருந்த சேதுபதி மன்னர்கள் தமிழுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ்ப் பண்பாட்டுக்காகவும், தன்னையே அர்ப்பணித்த பாரம்பரியம் மிக்க மன்னர்கள், சேதுபதி மன்னர்கள். அந்த சேதுபதி மன்னருக்கு 47 ஆலயங்கள் சொந்தமாக இருக்கின்றன. அதிலே ஒன்று திருச்சுழி என்கிற ஊரில்—நம்முடைய ரமண மகரிஷி அவர்கள் பிறந்த ஊர்—ஒரு கோயில் இருக்கிறது. பூமிநாத சுவாமி

கோயில் என்று பெயர். அதேபோல், அதற்கு நேர் கிழக்கில், நம்முடைய கடலாடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தங்கவேல் அவர்களுடைய தொகுதியில், கோயில் மாரியூர் என்ற ஊர் இருக்கிறது. அந்தக் கோயில் மாரியூர் என்பது, சமீபகாலத்திலேதான் தோண்டி எடுக்கப்பட்ட ஒரு கோயில் நகரம்.

*பிற்பகல் 1-10*

நம்முடைய ரமண மகரிஷி என்ன சொல்கிறார் என்றால் 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய நகரம் திருச்சுழி' என்று சொல்கிறார். அதற்கு ஒரு வரலாறு சொல்கிறார்கள். கடல் பிரளயம் ஏற்பட்டு திருச்சுழி நகரமே அழிகின்ற ஒரு சூழ்நிலை வந்தது. அப்போது சந்திரசேனன் என்கிற பாண்டிய மன்னன் என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் அலறி ஓடுவதைப் பார்த்து சிவ பெருமானிடத்தில் மன்றாடி என்னுடைய மக்களைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டினான். உடனே சிவபெருமான் தன் கையிலிருந்த பிரம்பை பூமியிலே அழுத்தி ஒரு பள்ளத்தை ஏற்படுத்தி கடல் தண்ணீர் முழுவதையும் அதிலே போகவைத்ததன் காரணமாக அந்த இடத்திற்கு திருச்சுழி என்கிற பெயர் வந்தது என்று ரமண மகரிஷி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். காரணம் திருச்சுழி என்பது ஒரு காரணப் பெயர் மட்டுமல்ல; கடல் அந்தப் பகுதியிலே வந்திருக்கிறது என்பதற்கு ஏராளமான அடையாளங்கள் இருக்கின்றன. அங்கே தோண்டிப் பார்த்தால் நிறைய சங்குகள் கிடைக்கின்றன. அதற்கு நேர் கிழக்கே கடலாடி இருக்கிறது. அதற்கு நேர் கிழக்கே கோவில்மாரியூர் என்ற மாரியூர் பூமியிலே புதைந்துபோய் இப்போது தோண்டப்பட்டிருக்கிறது. ஆகவே எவ்வளவு தூரம் கடல் அங்கே வந்திருக்கிறது என்பதை எல்லாம், இதை ஒரு புராணக் கதை என்று கருதாமல், நமது மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்க்க வேண்டும். நான் கல்வெட்டுகளை எல்லாம் அங்கே பார்த்தேன். அவையெல்லாம் வட்ட எழுத்துதானா? என்ன எழுத்து என்றே எனக்குத் தெரியவில்லை. அதனால் அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தக் கோவிலுக்குச் சென்று வட்ட எழுத்துக்களை எல்லாம் பார்த்து, அந்த வரலாறுகளை எல்லாம் கேட்டு, அதில் உண்மை என்ன இருக்கிறது என்பதை அறிய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



ஓவியக் கலை என்பது மிக உயர்ந்த கலை. நமது இராமேஸ்வரம் என்பது உலகப் புகழ்பெற்ற ஒரு கோவில். அப்போது பாரதி பாடினான்.

'சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்'

என்று. இப்போது சேதுவை மேடுறுத்தி வீதி சமைத்துவிட்டோம். அந்த வீதியில் 5 கி.மீட்டர் தூரத்திலிருந்து இராமேஸ்வரம் கோவில் வரை அழகான ஓவியங்களைத் தீட்டி, அதாவது இராமாயணம் தொடங்கிய நாளிலிருந்து பட்டாபிஷேகம் முடியும் வரை உள்ள நிகழ்ச்சிகளை ஓவியங்களாகத் தீட்டி வைப்போமேயானால் அங்கு வருகிற பக்தர்கள் மட்டும் அல்ல, சுற்றுலாப் பயணிகள்கூட அதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். மலேஷியாவிலே ஒரு மலையையே குடைந்து இராமாயணம் முழுவதையும் ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலையை நம்முடைய இராமேஸ்வரத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர் தமிழ்க்குடிமகனார் அவர்கள் தமிழ்த் துறையில் சிறந்த புலமைபெற்றவர்கள். அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். பாரதி சொன்னான், என்னுடைய அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக நான் உப்புத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்க மாட்டேன் என்று. ஆகவே நம்முடைய நாட்டில் அறிவு வளர்ச்சி அதிகமாக வளர வேண்டும். அதற்குப் புதிய புதிய சிந்தனைகளோடு ஏராளமான மொழிபெயர்ப்புகளைச் செய்ய வேண்டும். விஞ்ஞானத் துறையிலும், மற்றத் துறைகளிலும் என்ன என்ன புதுப்புது சிந்தனைகள் வருகின்றனவோ அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து அரிய நூல்களை வெளியிட்டு இந்த நாட்டில் விஞ்ஞான ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் இளைஞர்களை வளர்த்து எதிர்காலத்தில் அவர்களுக்கு நல்ல ஒளியை ஏற்படுத்துகிற ஒரு சிறந்த துறையாக இதை ஆக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் இருவருமே சிறந்த பேச்சாளர்கள். ஆகவே, ஒவ்வொரு அமைச்சரும் ½ மணி நேரத்திற்குள்ளே தங்களுடைய பதிலைச் சொல்வார்கள் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை பதிலுரை அளிக்க அழைக்கிறேன்.

[1997 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது இரண்டாவது முறையாகப் பேசும் பெரும் பேற்றைப் பெற்றிருக்கிறேன். இந்த எளிய தொண்டனுக்கு இந்த வாய்ப்பைத் தந்த தலைவருக்கு வணக்கத்தைத் தெரிவித்து என் உரையைத் துவங்குகின்றேன். இங்கே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்திலே ஏறத்தாழ 13-க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 42-க்கும் மேற்பட்ட வெட்டுப் பிரேரணைகள் இங்கே கொடுக்கப்பட்டு அவற்றின் மூலம் உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

நான் ஒன்றை இங்கே முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கக்கூடிய அரசு ஜனநாயகத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் போற்றுகின்ற அரசு. இன்னும் சொல்லப்போனால் மாட்டுக்கு மூக்கணாங்கயிறு எப்படி அவசியமோ, காருக்கு பிரேக் எப்படி அவசியமோ, ஆற்றுக்கு அணை எப்படி அவசியமோ அதைப்போல அரசைச் சரியான திசை நோக்கி வழி நடத்திச் செல்வதற்கு எதிர்க்கட்சிகள் அவசியம் என்று வங்கக் கடலோரம் உறங்கிக்கொண்டிருக்கின்ற வரலாற்றுத் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அண்ணா காட்டிய வழியில் அயராது இலட்சியப் பயணம் நடத்துகின்ற ஒப்பற்ற தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சிகளையும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களுடைய எண்ணங்களையும் மதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சுதந்திர இந்தியாவிலே, சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக மணிமகுடம் மண்ணில் உருண்டாலும் கவலை இல்லை என்று சொல்லி, இந்த மண்ணிலே இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நடத்திய பெருமைக்குரியவர் இன்றைக்கு முதல்வராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்கள். ஆகையினால்தான் ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று வேறுபாடு பார்க்காமல் மாண்புமிகு உறுப்பினர்கள்—'சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள்' என்று சொல்லுவதைப் போல—நல்ல நோக்கத்தோடு சொல்லி இருக்கக்கூடிய கருத்துக்களை இந்த அரசு கவனத்தில் கொண்டு



1997 ஏப்ரல் 16] [திரு. அ. இரகுமான்கான்]

செயல்படும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கடைகளிலே பெயர்ப் பலகைகள் தமிழிலே இருக்க வேண்டும் என்பது குறித்து மிகச் சிறப்பான முறையில் தங்களுடைய தமிழ் நெஞ்சத்தை வெளிப்படுத்திக் காட்டினார்கள். நான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்தத் துறையாக இருந்தாலும் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றிச் சொல்லாமல் பேச முடியாது. காரணம் இராமன் இல்லாமல் இராமாயணம் இல்லை. கலைஞர் தலைமை இல்லாமல் தமிழ்நாட்டு அரசியல் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பேசுகின்ற துறைகளும் இல்லை. தமிழ் ஆய்ந்த தமிழ் மகனாக, தமிழ்த் தாயின் தலைமகனாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை சொல்லிய வாசகம் நெஞ்சத்தில் இருக்கிறது. 'வீழ்வது நாமாக இருந்தாலும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று சொன்னார்கள். ஆகையினால்தான் இன்றைக்குத் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கிறது. இன்னும் சொல்லப்போனால் விளம்பரப் பலகைகள் மட்டும் அல்ல; பெயர்ப் பலகைகளிலும் (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும், துறை தொடர்பாகத்தான் நான் இங்கே பேசிக் கொண்டிருக்கிறேன். அருள்கூர்ந்து கொஞ்சம் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத்தான் சந்தேகம் வந்தது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மன்னிக்க வேண்டும். தமிழகத்தின் அனைத்துக் கடைகள் மற்றும் உணவு விடுதிகளிலே உள்ள பெயர்ப் பலகைகளில் உள்ள எழுத்துக்கள் எல்லாம் கட்டாயமாக முதலில் பெரிய அளவில் தமிழில் இருக்க வேண்டும். இரண்டாவது இடத்தில் ஆங்கிலம் தமிழைவிடச் சிறிய அளவில் இருக்க வேண்டும், மூன்றாவது இடத்தில் சிறிய அளவிலே வேறு மொழிகள் இருக்க வேண்டும். இதை அமல் நடத்துகின்ற விதத்திலே இது எங்கள் துறைக்குத்தான் வருகிறது. காரணம் கடைகள் எங்களுடைய தொழிலாளர் இலாகா சம்பந்தப்பட்டது. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் — Tamil Nadu Shops and Establishments Act — இதற்காக அந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பெயர், கடைகளுடைய பெயர்களில் அவர்களது முகவரியை எழுதுகின்றபோது, விளம்பரத்தை எழுதுகின்றபோது தாய்மொழியான தமிழிலே இருக்க

வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டமும் விதிகளும் திருத்தப் பட்டிருக்கின்றன. திருத்தப்பட்டது என்பதோடு மட்டுமல்லாமல் இந்தக் கொள்கையை அமல் நடத்துகின்ற விதத்திலே வணிகப் பெருமக்களை யும் அழைத்து, எங்களுடைய துறையினுடைய அதிகாரிகளை அழைத்து. தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனார் தலைமையில் நானும் அவரும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் கட்டளையின்படி ஒரு கூட்டத்தை நடத்தி இந்தத் தேதிக்குள்ளாக, 31-3-1997-க்குள்ளே பெயர்ப் பலகைகளில் எல்லாம் தமிழ் இடம்பெற வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது மட்டுமல்ல, எங்களுடைய துறையின் செயல்பாட்டின் காரணமாக, தொழிலாளர் நலத்துறையின் செயல்பாட்டின் காரணமாக, இப்போது தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்ட கடைகள் 1,23,430 ஆகும். உணவு நிறுவனங்களில் தமிழ் பெயர்ப் பலகை வைக்கப்பட்டவை 13,982 ஆகும். பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் இருபதாயிரத் திற்கும் மேலே தமிழிலே பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சட்டத்தின் மூலமாக மட்டும் செய்துவிட முடியாது.

பிற்பகல் 1-20

இங்கே கூட, நம்முடைய புலவர், பேராசிரியர் தீரன் அவர்கள் பாவேந்தர் பாடலை எடுத்துச் சொன்னார்.

"மனங்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?
மாந்தோப்பில் நிழலா இல்லை?
காண்பதரிதாம் துன்பமிது தமிழகத்தில்
தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை"

என்று சொன்னார். பாவேந்தர் அதற்கு மேலே சொன்ன வாசகத்தை அவர் விட்டுவிட்டார். இந்தத் துறைக்காகவே, தமிழ் பண்பாட்டுத் துறைக்காகவே தொழிலாளர் துறைக்காகவே, தலைவர் கலைஞர் அவர்களின் கனவை வெளிப்படுத்துகின்ற விதத்திலே பாவேந்தர் அன்றைக்கே பாடினார்.

"வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில்
ஆங்கிலமா வேண்டும்?
வானுயர்ந்த செந்தமிழ்தான் வரைக" என

அன்னவருக்குச் சொல்ல வேண்டும் என்று பாவேந்தர் அந்த நாட்களிலேயே பாடியிருக்கிறார்கள். இன்னும் தெளிவாகச் சொல்லப்



போனால், இன்றைக்கு ஒரு கட்சியின் பத்திரிகையில்கூட ஒரு செய்தி- வெறும் நல்லெண்ணங்கள் மட்டுமிருந்தால் போதாது, இந்த அரசின் 'லேபர் பாலிசி' எதை நோக்கிப் போகிறது என்று எழுதியிருக் கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் - திரு. சுப்பராயன், திரு. பழனிசாமி, திரு. நாசர், திரு. சந்தானம், திரு. சேகர் போன்றவர்கள் எல்லாம், இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை என்ன என்று திரும்பவும் கேட்டிருக்கிறார்கள். போன முறையே இது விளக்கப் பட்டிருக்கிறது. நான் ஒன்றை இங்கே தெளிவாகச் சொல்ல விரும்பு கிறேன், அது கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் This Government is committed to the Welfare of Workers - தொழிலாளர்களின் நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட அரசு இந்த அரசு, தொழிலாளி வர்க்கம் சுரண்டப்படக்கூடாது தொழிலாளிகள் அச்சுறுத்தப்படக் கூடாது, தொழிலாளர்கள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், தொழிலாளர் களுக்குச் சேரவேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக வந்து சேரவேண்டும்; தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், அவார்டுகள், கண்டிப்பாக, முறையாக, திரு. சுப்பராயன் அவர்கள் பாணியிலே சொல்ல வேண்டுமானால், அமல்படுத்தப்பட்டே தீர வேண்டும். அது மட்டுமல்ல, இதை மீறுகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்திற்குட் பட்டு, வன்முறைக்கு வழி வகுக்காமல், நியாயமான கோரிக்கைகளுக்காக, தொழிலாளர்கள் போராடுகின்ற உரிமையை, Right to Strike-ஐ இந்த அரசு மறுக்கவில்லை. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள், தனியார் பஸ் துறையிலே, சட்டபூர்வமான தொழிற்சங்க உரிமையை மறுக்கிறார்கள், நோட்டீஸ் கொடுத்து ஸ்ட்ரைக் செய்தால்கூட தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இதற்காகத் தொழில் தகராறு சட்டம் இருக்கிறது, இதற்காக செக்ஷன் இருக்கிறது. பாதிக்கப் படுகிறவர்கள் இதுகுறித்து வழக்கு கொடுத்தால், 'கிளைம் பெட்டிஷன்' கொடுத்தால், நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது, தலைவர் கலைஞர் அரசு தயாராக இருக்கிறது என்பதை அவருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விஷயம், தமிழ்நாட்டில், இந்தியத் தொழில் தகராறுகள்

[ திரு. கே. சுப்பாராயன் ] [1997 ஏப்ரல் 16

சட்டப்படி 22 (1) இன் கீழ் நோட்டீஸ் கொடுத்து, வேலை நிறுத்தம் செய்வதை உடைக்கின்ற முயற்சி தடுக்கப்பட வேண்டுமென்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். ஐ.டி.ஆக்ட்-படி வேலை நிறுத்தம் செய்கின்ற உரிமை என்பது இன்றைக்கும் இருக்கிறது. அது நடைமுறையில் அமலாக்கப்பட வேண்டுமென்பதைத்தான் நான் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு இதற்குப் பதில் அளித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியாகப் புரிந்துகொண்டுதான் சொல்கிறேன். குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்வதாக இருந்தாலும், வேலை நிறுத்த உரிமையை மறுத்தாலும் சட்ட ரீதியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இருக்கிறது. இந்த அரசு, தொழிலாளர் நல அரசு. தொழிலாளர்களுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட, உன்னதத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கு கின்ற அரசு. எனவே, நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தவற மாட்டோம். தனிப்பட்டவர்கள், தவறான பாதையை நோக்கிப் போகிறார்கள் என்று சொன்னால், அதைச் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். அதைப் போலவே, தொழிலாளர் நலனைப் பிரதிபலிக்கக்கூடிய ஜனநாயக ரீதியிலான, தொழிற்சங்க உரிமையை இந்த அரசு மறுக்கவில்லை. Organised Sector, Un-organised Sector Labourers என்று சொல்கிறோமே, அமைப்பு ரீதியற்ற தொழிலாளராக இருந்தாலும், அதைப் போலவே அமைப்பு ரீதியிலான தொழிலாளராக இருந்தாலும் அவர்களுடைய நலன்களை இந்த அரசு பாதுகாக்கும். தொழில் அமைதி நிலவ வேண்டும். தொழில் வளம் பெருகவேண்டும். உற்பத்தித்திறன் பெருக வேண்டும். மனித உழைப்பு நாட்கள் வீணாக கூடாது. நிருவாகமும் தொழிலாளர்களும், லாக்-அவுட், ஸ்ட்ரைக் போன்றவற்றைக் கைவிட்டு இருவருக்குமிடையே நல்லுறவு இருக்கவேண்டும். Mutual trust and confidence என்பதுதான் இருவருக்குமிடையே இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், யாருடைய தலையீடும் இல்லாமல், அரசினுடைய தலையீடு இல்லாமல், நிர்வாகமும் தொழிலாளர்களும் பிரச்சினையைத் தங்களுக்குள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்த அரசின் தொழிலாளர் நலக்கொள்கை. வேறு வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் தொழில் வளர வேண்டும், தொழிலாளர் நலன் பெருக வேண்டும். இதுதான் இந்த அரசின் கொள்கை.



1997 ஏப்ரல் 16] [ திரு. அ. இரகுமான்கான் ]

பிற்பகல் 1-25

இங்கே தொழில் அமைதி நிலவுகின்ற காரணத்தினால்தான் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், தொழில் ரீதியாக அமைதிப் பூங்காவாக இருக்கிற காரணத்தால்தான் முதலீடு செய்ய வருகிறார்கள். கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு பல தொழிற்சாலைகள் இங்கே திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பாராயன் அவர்கள் பேசுகிறபோது தமிழ் ஆட்சி மொழித் துறையிலே கலைஞர் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள் என்றும், தொழிலாளர் நலத் துறையிலே அவர் கவனம் செலுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் எல்லாத் துறையிலும் கவனம் செலுத்தக்கூடியவர். எல்லாத் துறைகளைப் பற்றியும் நன்கு அறிந்தவர். வேறு வார்த்தையில் சொல்வதென்றால், அவர் ஒரு அபூர்வ ராகம். வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் அவர் ஒரு இராகமாலிகை. அவருக்கு, தொழிலாளர் பிரச்சினையாக இருந்தாலும், விவசாயிகள் பிரச்சினையாக இருந்தாலும், எல்லாப் பிரச்சினைகளும் அவருடையதுதான். குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் 8.33 சதவீதம் போனஸ் என்பது அவருடைய முயற்சியால் வந்ததுதான். மே தினத்தை விடுமுறையாக விட்டது அவருடைய முயற்சியால்தான். எமர்ஜன்சி நேரத்தில்கூட, கோவையில் உள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டத்தை அமல்படுத்த முடியாது என்று சொல்லப்பட்ட நேரத்திலே கூட, அதைப் பெற்றுத் தந்தவர் அவர்தான். இன்னும் சொல்ல வேண்டுமானால், நான் பெருமைக்காகச் சொல்வதாக, திரும்பத் திரும்பச் சொல்வதாக தயவுசெய்து கருதக்கூடாது. பிரச்சினையோடு பின்னிப் பிணைந்திருப்பதனால் நான் சொல்லுகிறேன். ஏற்கனவே இந்த அவையிலே நான் சொன்னேன். தொழிலாளர்களின் நலனிலே அக்கறையுடையவரை, தலைவராக, முதல்வராகக் கொண்டுள்ள இந்த அரசு தொழிலாளர் நல அரசாக இருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசும்போது மிகுந்த சந்தோஷத்தோடு பாராட்டிச் சொன்னார்கள். தீபாவளிக்குத்தான் யாருமே முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பணம் கொடுப்பார்கள். இதுவரைக்கும் இல்லாதவாறு வரலாற்றிலேயே பொங்கலுக்காக நிதி

உதவி கொடுத்த ஒரே ஒரு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இன்னும் சொல்லப்போனால், தீபாவளிக்கு, நபர் ஒருவருக்கு ரூ.400 வீதம் 16,919 தொழிலாளர்களுக்கு 67 இலட்சத்து 67 ஆயிரத்து அறுநூறு ரூபாய் போனஸ். அடுத்து, பொங்கல் வந்தவுடனே, அதற்கும் தீபாவளி போனஸ் மாதிரி 67 இலட்சத்து 67 ஆயிரத்து அறுநூறு ரூபாய். ஆக அரசுக் கருவூலத்தில் இருக்கும் பணத்தை ஏழைத் தொழிலாளர்களின் வாழ்வு இருண்டுவிடக் கூடாது என்பதற்காக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, கோரிக்கை எதுவும் இல்லாமலேயே கொடுத்தார்கள். குழந்தையினுடைய பசியை உணர்ந்து பாலூட்டுகின்ற கருணையே உருவான தாயாக இருந்து கொடுத்தார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லாமல் இருந்தால் அது பொருத்தமாக இருக்காது. பொங்கலுக்கு நிதி உதவி செய்யுங்கள் என்று யாரும் கோரிக்கை வைக்கவில்லை. அப்போது முதலமைச்சர் அவர்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்தார்கள். அப்படி இருந்தபோதுகூட, டாக்டர்கள் அமைதியாக இருக்கும்படி சொல்லியும்கூட, அவரே அதிகாரிகளை வரவழைத்து, தீபாவளிக்குக் கொடுப்பதுபோன்றே பொங்கலுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார். உடல் நலம் சரியில்லாமல் இருந்தபோதிலும், உழைக்கும் வர்க்கத்தின் நன்மைக்காக உத்தரவு போட்ட உன்னதத் தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாதவரம் பால் பண்ணை பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள். தேர்தல் நேரத்திலே கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், பழிவாங்கப்பட்ட 1095 தொழிலாளர்களுக்கும் வேலைதரப்படும் என்று சொன்னார்கள். அந்த 1095 தொழிலாளர்களும் மதுரையிலே நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு கொடுத்தார்கள் என்பதற்காகப் பழிவாங்கப்பட்டவர்கள். 1980-ஆம் ஆண்டிலிருந்து 16 ஆண்டுக் காலம் பழிவாங்கப்பட்டு, வேலையிலிருந்து நீக்கப்பட்டு மிகவும் அவதிப்பட்டார்கள். பலபேர் செத்துப் போனார்கள்; பல பேர் வேறு வேலைக்குப் போய்விட்டார்கள். 16 வருடங்களுக்குப் பிறகு அவர்களுக்கு வேலை வேண்டும் என்று கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே, தேர்தல் நேரத்திலே வாக்குறுதி கொடுத்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வேன் என்று சொன்னார்கள். 1989-லே கலைஞர் முதல்வர் அவர்கள் 480



தொழிலாளர்கள் மாதவரம் பால் பண்ணையில் வேலையில் சேருவதற்கு உத்தரவு போட்டார்கள். இடையிலே கழக ஆட்சி கலைக்கப்பட்டது. பழையபடியும் சொன்னார். மீதம் இருப்பவர்களுக்கும் வேலை கொடுப்பேன் என்று சொன்னார்கள். சொல்லியபடியே, இப்போது 427 தொழிலாளர்களை வேலையில் சேர்த்துக்கொள்ள உத்தரவு போட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு.அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர் படத்திற்குக் கீழே எழுதப்பட்டிருக்கிறது,

“சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.”

என்று.

பயனுடைய சொற்களைத்தான் சொல்கிறேன்.

“சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.” என்று

வள்ளுவரே சொல்லியிருக்கிறார். வள்ளுவர் சொல்கிறார், செய்வதை விடச் சொல்வது சுலபம் என்று. ஆனால் தேர்தல் கால வாக்குறுதிகளை, தலைவர் கலைஞர் அவர்கள், நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் ட்ரிபியூனல் தீர்ப்பைச் சொல்லி, அந்தத் தீர்ப்பையொட்டி அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் கன்ட்டினியுவஸ் சர்வீஸ் கொடுக்க வேண்டுமென்றும், அந்தக் கன்ட்டினியுவஸ் சர்வீசோடு மொத்தச் சம்பளத்திலே 25 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதை மிகுந்த பணிவன்போடு, அதற்குக் கீழே வார்த்தை இருக்குமானால் அதையும் சொல்லிக் கேட்கிறேன். உங்கள் வார்த்தை அசைவுகளால் அவர்களுக்கு வாழ்வை உருவாக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். கருணை உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களோடு கலந்து பேசிய பிறகுதான், அவருடைய ஆலோசனைக்குப் பிறகுதான், அவருடைய சிந்தனைக்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படும். ஆனால் உறுப்பினர் தெரிவித்த கருத்தை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். சௌத் இந்தியா விஸ்கோஸ் தொழிலாளர்கள் கோவையிலே போராடினார்கள். அந்த நேரத்தில் 54 பேர் மீது, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைக்காக வழக்கு போடப்பட்டது. அந்த வழக்குகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டார்கள். உடனடியாக வழக்கு என்ன என்றுகூடக் கேட்காமல், தொழிலாளர்களுக்கு எதிராகப் போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம் இந்த அரசு தொழிலாளர்கள் நலத்திலே அக்கறை உடைய அரசு என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்.

அதுபோல, பி. & சி. மில் பற்றி நான் இங்கே சொல்லுவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். சொல்ல வேண்டிய அவசியமும் இருக்கிறது. பின்னி ஆலையை மீண்டும் ' திறப்பதற்கு கலைஞர் அவர்கள் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். தமிழ்நாட்டு வரலாற்றிலேயே, ஒரு முதலமைச்சர் அவர்கள் ஐந்து முறைக்கு மேலாக தானே முன்வந்து, தொழிற்சங்கத் தலைவர்களோடு, நிர்வாகத்தோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு, ஒரு தொழிற்சங்கப் பிரச்சினைக்காக தன்னுடைய பொன்னான நேரத்தைச் செலவழித்துப் பேசியதாக வரலாறு இல்லை. பலமுறை முதல்வர் அவர்களே நேரடியாகப் பேசினார்கள். அதுமட்டுமல்ல; இன்னொன்றையும் நினைவு படுத்த விரும்புகிறேன். குறிப்பாக பின்னி ஆலையில் பணியாற்றுகிற 3,500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களோடு இருக்கின்ற நிலைமையைக் கருதி, இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டது. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, தீபாவளிக்கும், பொங்கலுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை தரப்பட்டது.

அதுபோல, பின்னி தொழிலாளர்களுக்கு ரேஷன் மற்றும் உணவுப் பொருட்களை டிசம்பர் 1996 மற்றும் ஜனவரி 1997 ஆகிய இரண்டு மாதங்களுக்கு வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் சொல்லிய நேரத்தில், நிர்வாகம் அதைச் செய்யாமல் காலம் கடத்தியது. ஆனால், அந்தத் தொழிலாளர்கள் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக—அது சாதாரணமாகப் பலருக்கு இருக்கலாம்; ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் தெரியும்—ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய்ச் செலவில் ரேஷன் மற்றும் உணவுப் பொருள்களுக்காக அரசே கொடுக்கும் என்று சொல்லி, இந்தத் துறையின் மூலமாக, அங்கு இருக்கக்கூடிய பி. அண்ட் சி. மில் கோ-ஆபரேட்டிவ் சொசைட்டிக்குக் கொடுக்கப்பட்டது.



ஆலை மூடப்பட்டதால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றவர்களுக்கு ஒரு மாதச் சம்பளத்தை நிர்வாகம் கொடுக்க வேண்டுமென்று இப்போது கலைஞர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த பின்னி ஆலை பிரச்சினையைப் பற்றி உறுப்பினர்கள் எல்லோரும் பேசினார்கள். சில பத்திரிகைகள்கூட, தொழிலாளர்கள் மீது மிகுந்த அக்கறை உடையவர்களாகக் காட்டிக்கொள்கிற பத்திரிகைகள்கூட, சில இலாபங்களுக்காக பிரச்சினையைத் திசை திருப்பிக் குறிப்பிட்டிருக்கின்றன. நான் சொல்ல விரும்புகிறேன். இந்த பின்னி ஆலை பிரச்சினை – பின்னி என்று இருப்பதால் பிரச்சினைகளும் பின்னி இருக்கின்றன— இந்த ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்தே பின்னி ஆலைப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தப் பிரச்சினை உருவானதற்குத் தொழில் தகராறு காரணமல்ல; மழை வெள்ளத்தினால், அதாவது 1996-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13-ஆம் தேதி, மழையைக் காரணம் காட்டி, நிர்வாகம் உற்பத்தி நிறுத்தம் செய்தது. பின்னர் ஆலை மூடப்பட்டது. உடனடியாக தலைவர் கலைஞர் அவர்கள் கட்டளையிட்டார்கள்.

பிற்பகல் 1-35

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம், நிர்வாகம் பல நாட்களாகப் பேசி ஒரு உடன்பாடு, மில்லை திறப்பதற்காக ஏற்பட்டது. 12 (3) செட்டில் மென்ட். அந்த உடன்பாட்டின் அடிப்படையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதே சட்டசபையில், நிர்வாகம் ஒப்புக்கொண்ட காரணத்தால், தொழிற்சங்கம் ஒப்புக்கொண்ட காரணத்தால், பிரச்சினை ஏதும் இல்லாத காரணத்தால், மனப்பூர்வமாக ஒரு தீர்வு கண்ட மகிழ்ச்சியிலே அறிவித்தார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக பிரச்சினை மீண்டும் வளர்ந்தது. சம்பந்தப்பட்ட நிர்வாகத்தைச் சார்ந்தவர்கள் இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போனார்கள். ஆனால், அதேநேரத்தில் ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பின்னி நிர்வாகம் ஆலையைத் திறக்காமல், உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் போன உடனே, சென்னை உயர்நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்து, முதல்வர் அறிவித்தபடி 1-1-1996 முதல் மில் திறக்கப்பட்டதாகக் கருதவேண்டும் என்று நீதிபதி சொல்லிவிட்டார். அதற்குப்பிறகும் நிர்வாகம் ஆலையை மூட முயற்சி செய்தது. நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை; மாறாக ஒப்பந்தத்தை மீறியதற்காக கிரிமினல் பிராசிகியூஷன் வழக்கு போட்டு, இன்றைக்கு நிலுவையில் இருக்கிறது; எங்களுடைய சட்டபூர்வ கடமையைச் செய்து இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில் தொழிற்சங்கம் நிர்வாகத்தை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்கு போட்டது. தொழிற்சங்கம் போட்ட வழக்கில், நீதிமன்றம் தொழிலாளர்களுக்கு 1996-97-ல் ரேஷன் உணவுப் பொருட்களை வழங்க உத்தரவிட்டது. ஆனால், நிர்வாகம் இந்த ஆணையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டில், மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், பின்னரி பிரச்சினை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துங்கள் என்று உத்தரவிட்டது. அதற்குப் பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் நிர்வாகத்தையும், தொழிற்சங்கத்தையும் அழைத்து அரசின் சார்பாகப் பேசி, இப்போதுதான் மெமொரண்டம் ஆஃப் அண்டர்ஸ்டேண்டிங் என்ற முறையில் ஆலையைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த உடன்பாட்டினை நிர்வாகமும் தொழிற்சங்கமும் ஒப்புக் கொண்டு, இந்த உடன்பாட்டின்படி தொழிலாளர்கள் ஒப்புக்கொண்டு 1-3-1997 முதல் ஆலை திறக்கப்பட்டு, சுத்திகரிப்புப் பணிகள் நடைபெற்று முடிந்து, உற்பத்தி துவங்க ஆரம்பித்து இருக்கிறது. ஆனால், இன்றைக்கு ஒரு பத்திரிகையிலே எழுதி இருக்கிறார்கள். அங்கு ஒன்றுமே நடைபெறவில்லை; தொழிலாளர்கள் நன்மைக்காக இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு இந்த உடன்பாட்டைக் கண்காணிக்க அரசின் சார்பாக ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு இருக்கிறார். அதோடு இப்போது இந்த ஆலை தொடர்ந்து நடத்தப்பட வேண்டும். அதற்கு மூலதனம் வேண்டும்; அந்த மூலதனத்தைத் திரட்டுவதற்காக இன்சூரன்ஸ் கம்பெனி, இந்தியன் வங்கி, நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்ந்து முறையான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, மூடிய ஆலைகள் ஒருபுறம் இருந்தாலும் அந்த மூடிய ஆலைகள் மூடப்படுவதற்கு தி.மு.க. ஆட்சி காரணம் அல்ல; ஆனாலும், பல ஆலைகளைத் திறப்பதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது. கோவையிலே வசந்தா மில்ஸ், இராஜபாளையம் அழகப்பா ஸ்பின்னிங் மில்ஸ், இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட், ரிணவுண்டு ஆட்டோ புராடக்ட்ஸ் மேனுபாக்சரிங் லிமிடெட், ஓசூர். அதைப்போலவே, கொரமண்டல் கார்மென்ட்ஸ், சென்னை; மெட்ராஸ் ரப்பர் பேக்டரி; ராயல் என்பீல்டு மோட்டார்ஸ், ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட்-பட்டியல்





நீண்டுகொண்டே போகிறது; ஸ்ரீராம் பைபர்ஸ்; ஜி.இ.சி. அல்ஸ்தம், சித்தார் ஆயில் புட்ஸ்; எம்.ஆர். எலக்ட்ரானிக்ஸ், இந்தியா போர்ஜ் அண்டு ட்ராப்ஸ் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட், அதேபோல், சபரி மில்ஸ், சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ், சிவானந்தா மில்ஸ்-இவைகளில் எல்லாம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே சொன்னவைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன; பேசி செட்டில் செய்யப்பட்டு இருக்கிறது. இங்கு எல்லா உறுப்பினர்களும் கேட்டார்கள். மூடிக்கிடக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கு ஏதோ நாங்கள் அதற்குக் காரணம் போலவும், கையாலாகாதவர்களாக இந்த அரசு இருப்பதைப் போலவும் பேசுகிறார்கள். அவர்களுக்கு அடக்கத்தோடு உண்மைகளைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்; மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகள் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்; நம்முடைய சகோதரி 12-க்கு மேற்பட்ட வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்து இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-40*

தமிழ்நாட்டிலே பல்வேறு பிரச்சினைகளால் 34 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல அவைகள் ஏற்கெனவே மூடப்பட்டவை. அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்ல. தொழிற் பிரச்சினைகளாலோ, சம்பளப் பிரச்சினைகளாலோ, போனஸ் பிரச்சினைகளாலோ, தொழிற் தகராறு சட்டத்தினாலோ அந்த 34 மில்களும் மூடப்படவில்லை. அதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியாகத் தெரிவிக்கிறேன். பண நெருக்கடி, விற்பனைச் சந்தையில் இடர்ப்பாடு, நிர்வாகத் தகராறு, சொத்துக்களை ஏலம் விடும் நிலைமை, நீதிமன்ற வழக்குகள், தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியம் (B.I.F.R.), அதனுடைய மேல் முறையீட்டு அமைப்பு (A.I.F.R.) ஆகியவைகளின் முன்னால் வழக்குகள் நிலுவை, Liquidation என்று சொல்லக்கூடிய கலைப்பு நடவடிக்கை ஆகிய காரணங்களால்தான் இநத 34 மில்கள் பெரும்பாலும் மூடிக் கிடக்கின்றன. இந்தக் கலைப்பு நடவடிக்கைக்கு ஆளானவை 11 தொழிற்சாலைகள்; சொத்து ஏலம் விடும் நிலையில் இருக்கும் தொழிற்சாலைகள் 7, நீதிமன்றம் மற்றும் B.I.F.R/A.I.F.R-ன் நிலுவையில் உள்ளவை 8 தொழிற்சாலைகள். ஆக, மீதி 5 தொழிற்சாலைகள்தான் இருக்கின்றன. இவைகளைத் திறப்பதற்கு இந்த அரசின் சார்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதைப்போலவே, கோவையைச் சுற்றியிருக்கக்கூடிய ஐந்து ஆலைகள் பிரச்சினை குறித்தும், அவைகளைத் திறப்பதற்காக இந்த அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. ஜெயலட்சுமி ராதாகிருஷ்ணன் மில்ஸ் போன்றவைகள் எல்லாம் நிதிப்பற்றாக்குறை காரணமாக, பங்குதாரர்களுக்கு இடையே உள்ள தகராறுகளின் காரணமாக மூடப்பட்டுக் கிடக்கின்றன. இன்னும் பல பட்டியல்கள் இருக்கின்றன. ஆனால் ஒருபுறத்தில் அவையின் நேரம் அதிகமாகிறது.

ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை பற்றிக் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, அந்தத் தொழிற்சாலை சிறப்பாக நடக்கவேண்டுமென்பதற்காக, அந்த நேரத்திலே இந்த அரசு பெரிய அளவுக்கு உதவிகளைச் செய்தது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. ஏறத்தாழ 3 கோடி ரூபாய் கடன் கொடுத்தோம். ஆனாலும் அந்தத் தொழிற்சாலை (Sick) 'சிக்' ஆனது. அந்தப் பழைய விவரங்களையெல்லாம் சொல்லி நேரத்தை எடுத்துக் கொள்ளவிரும்பவில்லை. நேரம் இல்லை. எனவே, B.I.F.R.-ல் சொல்லியிருக்கின்ற காரணங்கள் என்னவென்றால், தற்போதைய நிர்வாகம், மூலதனம் கொண்டு வரவோ, புனரமைப்புப் பிரேரணையையோ, அதுபோன்ற புரபோசல்களையோ கொண்டுவரவேயில்லை. வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் அந்த நிர்வாகம் செலுத்தவேண்டிய கடன் தொகை அதிகமாக இருக்கிறது.

ஆகையினால் அதை ஏற்று, யாரும் அதை நடத்த முன்வரவில்லை. அந்தத் தொழிற்சாலைகளை, தொழிலாளர்களும் கூட்டுறவு முறையில் நடத்தமுடியவும் இல்லை. உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருக்கிற உரிமை மனுவும் நிராகரிக்கப்பட்டது. எனவே, அந்த நிறுவனம் இதை நடத்த இயலாது என்று தெளிவாகச் சொல்லிவிட்டது. அதனை A.I.F.R.-ம் உறுதி செய்துள்ளது. அதை உயர்நீதிமன்றமும் உறுதி செய்துவிட்டது. எனவே இந்தத் தொழிற்சாலைக்கு இன்றைக்குக் கடன் அதிகமாகவும், சொத்து குறைவாகவும் இருக்கிறது. எனவே அதை அரசே ஏற்று நடத்துவது என்பது இயலாத காரியம். இதை ஏற்று நடத்த வேண்டுமானால் மூடிக்கிடக்கக்கூடிய 11 தொழிற்சாலை களையும் அரசு ஏற்று நடத்தக்கூடிய அவசியம் ஏற்படும். அதுமட்டு மல்லாமல், இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போதெல்லாம் முடிந்த வழக்குகள் எல்லாம் லிக்குடேஷன் என்று சொல்லக்கூடிய விதத்தில் ஐகோர்ட்டில் இருக்கிறது. கோர்ட்டில் பிரச்சினை செட்டில் ஆகியிருக்கிறது. ஆகையினால் இன்றுள்ள சூழ்நிலையில் புரமோட்டர் யாரும் கிடைக்கவில்லை. இதுசம்பந்தமாக தொழிற்சங்கத் தலைவர்கள் என்னுடன் 50 முறை சந்தித்ததாக அறிக்கை





வெளியிட்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் 5 முறைகூட சந்திக்கமுடியாது. ஆனால் இப்போது சந்தித்ததாகச் சொல்வதில் இருந்து இந்த அரசு எவ்வளவு தயாராக இருக்கிறது என்பதை உறுப்பினர்கள் இதிலிருந்து உணரலாம். ஆனாலும், புரமோட்டர் கொண்டுவருகிறோம் என்று சொன்னார்கள். கொண்டு வரவில்லை. கோர்ட்டில் லிக்குடேஷனில் இருக்கிறது. ஆகவே இந்தக் காரணங்களால்தான் இவைகளைத் திறப்பது என்பது இயலாத காரியமாகி இருக்கிறது.

அடுத்து, குறிப்பாக ஒன்றைச். சொல்ல விரும்புகிறேன். கான்ட்ராக்ட் லேபர் பற்றி நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தில் என்ன நிலைமை இருக்கிறது என்று கேட்டால், Contract Labour Advisory Board-ன் அடிப்படையில்தான் Abolition and Regulation-ம் நடக்கிறது. அதைப்போல குழந்தைத் தொழிலாளர் பற்றிச் சொன்னார்கள். இதை மட்டும் நான் சொல்லி, அறிவிப்புகளோடு நிறைவு செய்ய விரும்புகிறேன். காரணம் அந்தப் பிரச்சினை இன்றைக்கு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. குறிப்பாக அரசியல் சட்டத்தினுடைய 24-வது பிரிவு, 14 வயதிற்குட்பட்டவர்களை அபாயகர மான வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று சொன்னாலும், ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள், இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் அபாயகரமான தொழிலிலும், அபாயகரமற்ற தொழில்களிலும் இன்றைக்கு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

அந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏற்கெனவே சைல்ட் லேபர் ஆக்ட் இருந்தாலும், அதை அமல்படுத்தினாலும், இந்தத் தவறுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன. சுப்ரீம் கோர்ட் அண்மையில் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. எங்காவது சைல்ட் லேபர் இருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அந்த பாக்டரி உரிமையாளர் ஒவ்வொரு சைல்ட் லேபருக்கும் 20 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அரசு 5,000 ரூபாய் கொடுத்து, 25 ஆயிரம் ரூபாய் குழந்தைகளின் புனர்வாழ்வு மறுநிதிக்குத் தர வேண்டும். பிரைமரி எஜுகேஷனுக்கு, படிப்பதற்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 1-45

அதைப்போல சைல்ட் லேபரர் எவ்வளவு பேர் பாக்டரிகளில் இருக்கிறார்கள் என்று கணக்கெடுக்க வேண்டும் என்று, ஜூன் திங்கள் 10 ஆம் தேதிக்குள் சுப்ரீம் கோர்ட்டிற்கு தர வேண்டும் என்று

அறிவிக்கப்பட்டு, இப்போது தமிழ்நாடு முழுவதும் பாக்டரிகளில்
குழந்தைத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பது
கணக்கெடுக்கப்படுகிறது. சிவகாசியில்கூட இன்றைக்கு பாக்டரிகளை
இதன் காரணமாக மூடி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். டாக்டர் கொடுக்கிற
சர்டிபிகேட்டை எங்களுடைய துறை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக
இருக்கிறது. இது சம்பந்தமாக தகவல் கொடுத்திருக்கிறோம். ஆகவே
அவைகளை ஏற்றுக் கொள்வதற்கு பிரச்சினை இல்லையென்பதை
எடுத்துச்சொல்லி, இப்போது அறிவிப்புகளுக்கு வரலாம் என்று
இருக்கிறேன். மிகக் குறுகிய அறிவிப்புகள்தான். முதலில் குறைந்தபட்ச
ஊதியம் பற்றிய குறிப்பு. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலன்
காக்கவும், அவர்களுடைய சமூகம் மற்றும் பொருளாதார நிலையை
மேம்படுத்தவும் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.
ஏற்கெனவே இவ்வாறாக உள்ள 68 தொழில் நிறுவனங்கள் குறைந்தபட்ச
ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. 2 வருடங்களுக்கு
ஒரு முறை அவர்களுடைய ஊதிய உயர்வு மறு நிர்ணயம்
செய்யப்படுகிறது. அடிப்படைச் சம்பளத்துடன் விலைவாசிப்
புள்ளியுடன் இணைக்கப்பட்ட மாறுபடும் பஞ்சப்படி
நிர்ணயிக்கப்படுகிறது. இத்துடன் அரசு கீழ்க்கண்ட 4 தொழில்களையும்
குறைந்தபட்ச கூலிச் சட்ட அட்டவணையில் சேர்க்க
நடவடிக்கையெடுத்து வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் கல்லூரிகள்
மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், தமிழ்நாடு மருத்துவம் மற்றும்
விற்பனைப் பிரதிநிதிகள், இரசாயன உரத் தொழில், செக்யூரிட்டி
கார்டுகள் - இவ்வாறு 4 தொழில் இனங்களையும் குறைந்தபட்ச
ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்ப்பதன் மூலம் குறைந்தபட்ச
ஊதிய சட்ட அட்டவணையில் உள்ள தொழில்கள் 68-லிருந்து 72-ஆக
உயரும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்தியாவில் குறைந்தபட்சக்
கூலி நிர்ணயம் செய்கிற பணியில் அந்த அட்டவணைப் பட்டியலில்
68 தொழில்கள் தமிழ்நாட்டில்தான். டாக்டர் கலைஞர் அவர்களின்
ஆட்சியில்தான் உள்ளது. இப்போது அது 72 ஆக உயர்த்தப்படுகிறது
என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டிடத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தமிழ்
நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டம் இதுவரையிலும்
சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகராட்சிகளில் மட்டுமே
விரிவுபடுத்தப்பட்டிருந்தது. சமுதாயத்தில் மிகவும் அடிமட்டத்தில் உள்ள
தொழிலாளர்களுக்குக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான திட்டத்தை



மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்த பல கோரிக்கைகள் வந்துள்ளன.
அமைப்பு ரீதியற்ற நிலையில் வரும் தொழிலாளர்களுக்கு அரசு நலத்
திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்பதில் இந்த அரசு மிகவும்
முனைப்புடன் செயல்படுகிறது. இப்படி திட்டத்தில் இருக்கும்
சலுகைகள் மாநிலம் முழுமைக்கும் உள்ள கட்டிடத்
தொழிலாளர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு
தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்
கள் நலச் சட்டம் மற்றும் திட்டங்கள் மாநிலம் முழுமைக்கு விரிவு
படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள்,
பணிபுரியும்போது விபத்து ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர்களுடைய
வாரிசுகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதுடன், அவர்கள்
குடும்பத்திற்கு ஈமச் சடங்கிற்கு உதவித் தொகை 500 ரூபாய் வழங்கப்
படும். (மேசையைத் தட்டும் ஒலி)

உடலுழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, வெயிலென்றும்
மழையென்றும் வேறுபாடு காணாமல் பாடுபடுகிற கட்டுமானத்
தொழிலாளர்களின் குடும்பச் சூழ்நிலையை நன்கு அறிந்துள்ள நிலையில்
ஆடவரும், பெண்டிரும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது
அவர்களுடைய துணையும் கண்காணிப்பும் இன்றி தவிக்கும் இளம்
சிறார்கள், சிறுமியர்கள் நிலையோ மிகவும் வருந்தத்தக்கது. சிறார்,
சிறுமியருக்கு உதவும் வகையில் இந்த ஆண்டு, முதற்கட்டமாக சென்னை,
மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் குழந்தைகள் காப்பகம்
அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல பிறர் வாழ, தான் உழைக்கும் கட்டுமானத் தொழி
லாளர்களின் நலனில் இந்த அரசு மிக அக்கறையும் ஆர்வமும்
கொண்டுள்ளது. அவர்களுக்கு என்று உருவாக்கப்பட்டுள்ள வாரியத்தில்
பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவருக்கும் தற்போது
ஒரு விபத்து காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் விபத்தில் இறக்க
நேரிட்டாலோ அல்லது விபத்தில் அடிபட்டாலோ உரிய இழப்பீடு
வழங்கப்பட்டு வருகிறது. கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தை
களுக்காக குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும். இவ்வாறு தொழி
லாளர்களுக்கு மாநிலக் காப்புறுதி நிதி மற்றும் சேமநல நிதித்
திட்டங்களை அமல்படுத்துவது குறித்தும் அரசின் பரிசீலனையில்
இருந்து வருகிறது. மேலும் இத்திட்டத்தை தமிழ்நாடு முழுமைக்கும்

விரிவுபடுத்த இருப்பதால் நலத் திட்டங்களுக்கு அதிக செலவாகும். தற்போது கட்டுமானப் பணி மேற்கொள்பவர்கள், ஆகும் மொத்தச் செலவில் 0.1% உடல் உழைப்பு தொழிலாளர்கள் பொது நல நிதிக்கு வசூலிக்கப்படுகிறது. மேற்கூறியவாறு அதிகமாகச் செலவு ஏற்படும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு கட்டுமானப் பணியை மேற்கொள் பவர்கள் கொடுக்க வேண்டிய 0.1%-ஐ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மேலும் உயர்த்தப்படும்.

*பிற்பகல் 1-50*

அதைப்போலவே, இந்தியத் திருநாட்டிலே உள்ள தொழிலாளர்களில் சுமார் 90 சதவிகிதம் பேர் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்த் திருநாட்டில் அமைப்பு ரீதியற்ற தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலம் காக்க இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. வரவு-செலவு அறிக்கையின் விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு மேற்படி தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அமைப்பு ரீதியற்ற தொழில்களுக்கு ஆலோசனைக் குழுக்களை அமைத்து அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட உள்ளன.

அதைப்போலவே, 1985-ஆம் வருடத்தைய தரப்படுத்தப்பட்ட எடையளவு சட்டத்தில் வரையறை செய்துள்ளவாறு தமிழ்நாடு கடைகள் நிறுவனச் சட்டம் 1947-ல் உகந்த சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தங்கள், மேற்படி சட்டத்தினுடைய சரத்துகளுக்கு முரண்பாடாக நடப்பவர்கள் குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் இசைவு முறையில் (காம்பவுண்டிங்) அபராதம் செலுத்தி வழக்கை முடித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் அதே குற்றத்தை மீண்டும் மீண்டும் செய்வார்களேயானால் அக்குற்றம் தொடர் குற்றமாகக் கருதப்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கை சந்திக்க வேண்டிவரும் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு கண்காணிப்புப் பிரிவு. இந்த அரசு தொழிலாளர் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ளது. உச்சநீதிமன்றம், குழந்தைத் தொழிலாளர் குறித்து





அளித்த தீர்ப்பின் அடிப்படையில் மாநிலம் தழுவிய குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்புப் பணி நடந்து வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதன் அவசியத்தையும், அதேநேரத்தில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளருக்கான நலத் திட்டங்களை ஏற்படுத்தவும் தொழிலாளர் இணை ஆணையரின் கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின்கீழ் ஒரு கண்காணிப்புப் பிரிவு அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலம் குறைவாக இருக்கிற காரணத்தால் பல உறுப்பினர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் அடுத்து நம்முடைய அமைச்சர் பெருமகன் உரை நிகழ்த்த வேண்டியிருக்கிறது. உறுப்பினர்களுடைய கருத்துக்கள் எல்லாம் இங்கே பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. மகாலட்சுமி மில், மெட்டல் பாக்ஸ், மேட்டூர் மில் இவைபற்றியெல்லாம் பேசப்பட்டு இருக்கின்றன. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், கேள்வி பதிலில் என்னால் முடிந்த அளவுக்கு விளக்கம் கொடுத்து இருக்கிறேன். உங்களுடைய நல்ல கருத்துக்களை எல்லாம் ஏற்று இந்த அரசு செயல்படும் என்பதை எடுத்துச் சொல்லி அருள்கூர்ந்து நீங்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி பணிவன்போடு கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இதே அவையில் அறிவித்தபடி ரேஷன் பொருட்களையும், நிவாரணத் தொகையையும்தான் பி. அண்டு சி. நிர்வாகம் வழங்கியது. ஆனால் 1997-ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நீதிமன்ற உத்தரவுப்படி சம்பளமும், அவர்களுக்கு உணவுப் பொருட்களும் வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தியும் இதுநாள் வரை வழங்கவில்லை. அதேநேரத்தில் பின்னி மில் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 முறைக்கு மேல் தொடர்ந்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு நல்ல சுமுகமான தீர்வினை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்களும் அந்த ஆலையைத் திறப்பதற்கு பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினரும், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் 1-3-1997 அன்று ஆலைக்குச் சென்று இருந்தோம். ஆனால் நிர்வாகம் சார்பாக யாரும் வரவில்லை. முதலமைச்சர் அவர்கள் நியமித்த தனி அதிகாரி மரியாதைக்குரிய திரு. வரதராஜ் அவர்களும் அங்கே வந்து இருந்தார்கள். ஆலை அன்றைக்குத் திறந்ததில்

இருந்து தொடர்ந்து 1500 தொழிலாளர்கள் அந்த ஆலையைச் செப்பனிடும் பணியையும், மற்ற பணியையும் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதுநாள் வரையில் ஆலையை நிர்வகிக்கின்ற முதலாளிகள் அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்கான பணியிலே ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு திட்டவட்டமான முடிவினை எடுத்து, இந்த அவையில் அறிவிக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.அன்ட்.சி. ஆலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல ஒன்றல்ல, இரண்டல்ல, 3 அல்லது 4 தடவைக்கு மேல் பல மணி நேரங்கள் இந்தத் தலைமைச் செயலகத்தில் நிர்வாகத்துடனும், அரசு அதிகாரிகளுடனும், தொழிற்சங்கத்தினுடைய தலைவர் குசேலர் அவர்களுடனும் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும், நான் கலந்து பேசி இருக்கின்றேன். அப்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் உடன் இருந்து ஒவ்வொரு முறையும் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் அந்த முடிவுகள் நிறைவேற்றப்படாத, நிறைவேற்றப்பட முடியாத சில சூழ்நிலைகளும் உருவாயின. இதற்கிடையே தொழிலாளர்கள் சார்பாக அளிக்கப்பட்ட ஒரு உறுதி, திங்கள்தோறும், அதாவது மாதந் தோறும் 2 கோடி ரூபாய் அந்த ஆலையிலே இழப்பு ஏற்படுகிறது, நட்டம் ஏற்படுகிறது என்று நிர்வாகத்தின் சார்பில் எடுத்துச் சொன்ன போது, ஒரு 3 மாத காலம் நீங்கள் மீண்டும் மில்லைத் திறந்து பாடுபட்டு நட்டம் இல்லாமல் அந்த ஆலையை நடத்துவதற்கு நாங்கள் வழி காணுகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதன்படி, ஒப்புக்கொள்ளப்பட்டு ஆலையைத் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிடையிலே இந்த நட்டத்தை ஈடு செய்ய முடியுமா என்ற ஐயம் ஏற்பட்டு, நான் அண்மையிலே டெல்லிக்குச் செல்வதற்கு முன்பு, ஒருநாள் கிட்டத்தட்ட காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரையிலும் அவர்களோடு உட்கார்ந்து பேசிவிட்டுச் சென்றேன். அப்போது அவர்கள் தொடர்ந்து ஆலையை நடத்துவதற்கு மேலும் பணம் தேவைப்படுகிறது என்பதை நிர்வாகத்தின் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும், அதிகாரிகள் சார்பிலும் எடுத்துரைத்து, அதற்கான வழிமுறைகள் இன்சூரன்ஸ் கம்பெனி சார்பாக வரக்கூடிய தொகையை வைத்து



நிர்வாகத்தை நடத்தலாம், ஆலையைத் தொடர்ந்து நடத்தலாம் என்ற ஒரு நிலை உருவாயிற்று. ஆனால் இன்சூரன்ஸ் கம்பெனி சார்பாக வரவேண்டிய பணத்திற்கு வங்கியின் மூலம் ஒரு தடை ஏற்பட்டிருப்பதாக நான் நேற்று டெல்லியிலிருந்து வந்தவுடனே எனக்கு செய்தி அறிவிக்கப்பட்டது. மீண்டும் இதன் தொடர்பாக நம்முடைய அமைச்சர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; அதிகாரிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவில் இதைப்பற்றிப் பேசி ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதையும், இந்த 2 கோடி ரூபாய் நட்டத்தை வராமல் பார்த்துக் கொள்ளக்கூடிய பொறுப்பை தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும், இந்த 3 மாத கால தவணைக்குப் பிறகு, மீண்டும் உள்ள சூழ்நிலையை அடிப்படையாக வைத்து ஒரு புதிய முடிவை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17 ஆண்டுகளாக மாதவரம் பால் வளத் தொழிலாளர்கள் நீதிக்காக நீண்ட போராட்டம் நடத்தி, தற்போது தொழில் தீர்ப்பாயம் அவர்களின் வழக்கின் மீது ஒரு தெளிவான தீர்ப்பை அளித்திருக்கின்றது. அவர்களுக்கு 1980 ஆம் ஆண்டிலிருந்து, சர்வீஸ் கன்டினியுவிட்டியோடு பேக் வேஜஸ் எவ்வளவு வருகிறதோ, அதில் 25 சதவீதத்தை வழங்கவேண்டும் என்று தீர்ப்பு அளித்து இருக்கிறது. நான் நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் இந்தக் கோரிக்கையை விவாதித்தபோதும் முன்வைத்துப் பேசியபோதும், அவர்கள் பிடிகொடுக்காமலே பதிலை அளித்து முடித்து விட்டார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தலையிட்டு அந்த பால்வளத் தொழிலாளர்களுடைய நீண்ட துயரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற முறையிலே அறிவிப்பை வெளியிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் மாதவரம் பால் வளத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டு இங்கே அதற்கான பதிலை அவர் என்னிடத்திலே கேட்டவுடனே, நான் உடனடியாக அவையிலிருந்து என் அறைக்குச் சென்று, அதிகாரிகளை எல்லாம் அழைத்து அதைப் பற்றிப் பேசி இருக்கிறேன். மாதவரம் தொழிலாளர்கள் பிரச்சினை, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, 1980 ஆம் ஆண்டு தொடங்கிய

ஒரு தொல்லையாகும். மதுரையிலே உள்ள இந்தப் பால் துறையிலேயிருந்து தொழிலாளர்கள் ஒரு வேலை நிறுத்தம் செய்ய, அதற்கு ஆதரவாக, சென்னையிலே உள்ள தொழிலாளர்கள் ஒரு ஆதரவு வேலை நிறுத்தம், அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போய், அதற்குப் பரிசாக அவர்கள் ஒரு ஆயிரம் பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். வேலையிலேயிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையில், 1989-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. உடனடியாக 1000-ல் சுமார் 400 பேர் வரையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

*பிற்பகல் 2-00*

அதற்குப் பிறகு இப்போது மீண்டும் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சுமார் 400 பேர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். இதற்கிடையிலே அவர்கள் தீர்ப்பாயத்திற்குச் சென்று நீதி கோரியிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு தீர்ப்பும் வழங்கப் பட்டிருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால்—நாங்கள் சும்மா இருந்திருந்தால் தொல்லையே இல்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கப் போய், வேலை கொடுத்ததற்கு 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்பதைப் போல இப்போது சுப்பராயன் எங்களைப் பார்த்து வேலை கொடுத்தாயே, ஒழுங்காகக் கொடு என்று கேட்கிறார். நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு தொழிலாளர்களுக்கு விரோதமாகவோ அரசு ஊழியர்களுக்கு விரோதமாகவோ இருந்தால், அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யக் கூடிய அற்ப புத்தி இந்த அரசுக்குக் கிடையாது என்பதை நான் சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் சுப்பராயன் அவர்களே தொழிலாளர்களிடத்திலே பேசி ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்கு எங்களுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு முழுவதையும் அப்படியே ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் ரூ. 4, 5 கோடி இந்த அரசுக்குச் செலவாகும். அது சரியா, முறையா என்பதை, வேலையே இல்லாமல் விரட்டப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்க இந்த அரசுக்குத் தரப்படுகின்ற தண்டனையாக அது ஆகிவிடாதா என்பதையும் நண்பர் சுப்பராயன் அவர்கள் யோசித்து, அந்தத் தொழிலாளர்களிடத்திலே பேசவேண்டும். இருந்தாலும் இரண்டிற்கும் இடைப்பட்ட முறையிலே ஒரு சமரசமாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.





'கண்டினியுவிட்டி ஆப் சர்வீஸ்' வேண்டும் என்றார்கள். அது தரப்படும் என்பதையும், கிராஜுவிட்டி அதன் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, கைத்தறி..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கிற கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை. இதற்கு கைத்தறித் துறை அமைச்சரைத்தான் கேட்கவேண்டும். இப்போது நான் இதை அனுமதிக்க மாட்டேன். இதில் வராது.

## (ஆ) கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன். வெட்டு தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.82,02,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரையை வழங்குவார்கள். அவர்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

151. நீதிபதி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் விசாரணை ஆணையம் அறிக்கை. (1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

152. திருவாளர்கள் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்திடமிருந்து 'பிரைய்லர்' சாதனத்தை வாங்கிய வகையில் செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து பார்வையற்றோர் தேசிய நிறுவனம், (வட்டார மையம்), சென்னை-56-க்கு விலக்களித்தல் தொடர்பாக, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைத் துறையின் 23-10-1996-ஆம் நாளிட்ட 382-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

137. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

138. மானியக் கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

139. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

140. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்ட செயலாக்கம், 1997-98. (ஆங்கிலம்).

141. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்ட செயலாக்கம், 1997-98. (தமிழ்).

142. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்றாவது அறிக்கை, 1996-97.

143. மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1996-97.

144. மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1996-97.

## இணைப்பு I

***(4 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)***

## தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

மக்களினத்தைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டு வனவற்றுள் மொழி தலையாய இடம் பெறுகிறது. மக்களால் மக்களுக்காகவே உருவாக்கப்பட்ட கலை வடிவே மொழியாகும். மொழியால் எண்ணம் வெளிப்படுகிறது. எண்ணமும் அதனை வெளியிடும் மொழியும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கலாகா உறவுடையன. எனவே, தாய்மொழி வழியாகவே மாநில மக்களின் பன்முக வாழ்க்கையும், பண்பாடும் நிலைத்து வருகின்றன. தாய் மொழிப் பற்றின் அளவுக்கு ஏற்பவே மக்கள் வாழ்க்கை நிலைகள் உருவாகின்றன. இவ்வகையில், அரசுப் பணிகளிலும், சமுதாயக் கடமைகளிலும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது.

2. அரசு, ஆட்சி, அறிவியல், தொழில் நுணுக்கம், வணிகம், போக்குவரத்து, புதிய படைப்புகள், அன்றாட நாகரிக வளர்ச்சி முதலிய பல்வேறு பொருண்மைகளின் தொடர்ந்த வளர்ச்சியால் அவ்வத் துறைகளில் பயன்படும் அளவுக்குப் புதிய சொற்களுடனும், பொலிவார்ந்த வெளிப்பாடுகளுடனும், பல்கிய சொற்றொகுதிகளால் தம்மைப் புதுப்பித்துக் கொள்ளும் சூழல், அந்தந்த மாநில மொழிகளுக்கு இன்றியமையாத் தேவையாக அன்றாடம் அமைந்துள்ளது. எனவே, மொழி வளர்ச்சியும் கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படையாகின்றன.

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு, மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த, தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், ஆவணங்களிலும் அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்துதல், கலை இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாகச் செயற்படும் வகையில் தலைமைச்

[1997 ஏப்ரல் 16

செயலகத்தில் 1984 ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை எனத் தோற்றுவிக்கப்பட்டது. மேலும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காகத் தனியாக ஓர் அமைச்சகம் 1996 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டுச் செவ்வனே செயற்பட்டு வருகின்றது. இப்பெருமை தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும். இத்துறையின் பொறுப்பில் அமைந்த அமைப்புகளும், நிறுவனங்களும், தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

(அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்
(ஆ) மொழி பெயர்ப்புத் துறை
(இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
(ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
(உ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**தொன்மரபு காப்பன**

(ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்
(எ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்
(ஏ) அரசு அருங்காட்சியக ஆணையம்

**வளர்கலை ஊக்குவன**

(ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்

1. அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள்
2. அரசு கட்டடட-சிற்பக் கல்லூரி
3. அரசு இசைக் கல்லூரிகள்
4. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
5. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு
6. சவகர் சிறுவர் இல்லம்



1997 ஏப்ரல் 16]

**1997-98 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டு குறித்த செலவு**

| கணக்குத் தலைப்பு (1) | திட்டத்தில் சேர்ந்தது (2) | திட்டப் பணிகள் (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| **2059** பொதுப்பணிகள் | | | |
| 01 அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 051 கட்டுமானம் | 0.30 | .. | 0.30 |
| 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் | 23.00 | .. | 23.00 |
| **2202** பொதுக்கல்வி | | | |
| 03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் | | | |
| 102 பல்கலைக் கழகங்களுக்கு நிதியுதவி | 133.00 | 20.00 | 153.00 |
| 05 மொழி வளர்ச்சி | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 116.59 | 14.60 | 131.19 |
| 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 29.33 | 0.04 | 29.37 |
| 800 ஏனைய செலவு | 349.42 | 20.22 | 369.64 |
| **2205** **00** கலையும் பண்பாடும் | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 17.10 | 11.45 | 28.55 |
| 101 நுண்கலைக் கல்வி | 208.97 | 85.23 | 294.20 |
| 102 கலை-பண்பாட்டை வளர்த்தல் | 148.27 | 19.39 | 197.66 |
| 103 தொல்பொருளியல் ஆய்வு | 166.84 | 30.72 | 197.56 |
| 105 பொது நூலகங்கள் (அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்) | 19.71 | 8.60 | 28.31 |
| 107 அரும்பொருட் காட்சியகங்கள் | 187.54 | 33.85 | 221.39 |
| 800 ஏனைய செலவு | 5.00 | .. | 5.00 |
| **மானியக் கோரிக்கை 51 மொத்தம்** | **1405.07** | **274.10** | **1679.17** |

[1997 ஏப்ரல் 16

## (அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1968 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும் ஆட்சி மொழியாகிய தமிழ் மொழிப் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சிக்குரிய பிற பணிகளும் இத்துறையின் தலையாய பணிகளாகும்.

### தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

2. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற தமிழ்நாடு அரசின் கொள்கையினைச் செயற்படுத்தும் பாங்கில், தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக்கும் முனைப்பில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது. நூற்றுக்கணக்கான அரசாணைகள் தமிழ் ஆட்சி மொழித் தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட பின்னருங்கூட, தமிழ் ஆட்சி மொழியின் செயற்பாடு தலைமைச் செயலகத்தில் கவலைக்குரியதாகவே இருக்கின்றதென்பதால், புதிதாகப் பொறுப் பேற்றிருக்கும் இவ்வரசு ஆட்சி மொழியைச் செயற்படுத்துவதிலும், தமிழ் வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்டுவதோடு உடனடியாகச் செயற்படுத்தவும் முன்வந்திருக்கிறது. இத்தகைய அரிய வாய்ப்பைப் பயன்படுத்தித் தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சி மொழியை முழு அளவில் செயற்படுத்த வேண்டுமென்று ஒவ்வொரு துறை வாரியாக ஆய்வு மேற்கொண்டு, அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் தமிழ் ஆட்சி மொழிச் செயற்பாட்டிலுள்ள தடைச் சிக்கல்கள் குறித்துத் தீர்வுகளையும், வழிமுறைகளையும் மேற்கொண்டுள்ளது.

3. ஒவ்வொரு துறையும் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் விருப்பம் கொண்டுள்ளது என்றும், செயற்படுத்தாமைக்குக் கருவி நூல்கள் கிடைக்காமை ஒரு காரணமாக இருக்கிறது என்பதையும் கண்டறிந்து ஒவ்வொரு துறைக்கும் ஆட்சிச் சொல் அகராதி ஒன்றையும், சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றையும் ஒவ்வொரு பிரிவிற்கும் லிப்கோ (LIFCO) தமிழ்ச் சொல் அகராதி ஒன்றையும் அந்தந்தத் துறைகளே வாங்க வேண்டுமென்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

4. தலைமைச் செயலகத்தில் தமிழ் ஆட்சி மொழியாவதற்கு, தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் குறைவாக உள்ளமையைக் கண்டறிந்து, தலைமைச்



1997 ஏப்ரல் 16]

செயலகத்தில் 65 விழுக்காடு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக 25 விழுக்காடு அளவிலேயே தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் உள்ளன என்பதை ஆய்வின் மூலம் தெரிந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டின் பகுதி இரண்டு திட்டத்தில் 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்க ரூ. 50 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணையிட்டுள்ளார்கள். அவற்றில் 32 மின்னனுத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

5. வணிக நிறுவனங்கள், கடைகள் முதலானவற்றின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதுவதற்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அடங்கிய சொற்பட்டியல் 5,000 படிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

### ஆட்சிச் சொல்லகராதி

6. ஆட்சிச் சொல்லகராதிக்கு இதுவரை ஆறு பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசுத் துறைகளில் பயன்படுத்தப்படும் பொதுவான சொற்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு வெளியிடப்பெற்று அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளுக்கு அவ்வத் துறைகளில் வழங்கப்படும் அலுவலக ஆங்கிலச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களைத் தரும் முறையில் 1996 வரை 89 சிறப்புச்சொல் துணையகராதிகள் வெளியிடப்பெற்றுள்ளன.

### மாதிரி வரைவுகள், குறிப்புகள் கையேடு

7. அரசுத் துறை அலுவலகங்களில் நாள்தோறும் தமிழில் எழுதப்படும் முக்கியக் குறிப்புகள் - வரைவுகளின் மாதிரிகளைக் கொண்ட கையேடு ஒன்று தயாரிக்கப்பெற்று 1995 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. இக்கையேடு அலுவலக நடைமுறையில் மிகவும் பயன்பட்டு வருகிறது.

### ஆட்சி மொழிக் கருத்தரங்குகள்

8. ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்ய மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப் பெற்றுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், திருநெல்வேலி-கட்டபொம்மன், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,

தருமபுரி, கன்னியாகுமரி, காமராசர் ஆகிய மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப் பெற்றுள்ளன. சேலம், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் விரைவில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப் பெறவுள்ளன.

## தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசு வழங்குதல்

9. அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்தது. அதற்கிணங்க, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள்தோறும் 5 பரிசுகள் சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்கு வழங்கப்பெறுகின்றன. மேலும், மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவுகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி 1993 ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் அலுவலகம், வேளாண்மை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றின் பணியாளர்களுக்குப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் 1996 ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்பெற்றன. அண்மையில் காமராசர் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் சிறந்த வரைவுகளை எழுதிய மூவர் பரிசு பெற்றுள்ளனர்.

## ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் ஆர்வமும் திறமையும் காட்டும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும் பாராட்டும் வழங்கும் திட்டம்

10. ஆட்சி மொழித் திட்டச் செயற்பாட்டில் சிறந்து விளங்கும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுள் ஒன்றையும் தெரிவுசெய்து அவற்றிற்குப் பரிசுக் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1993 ஆம் ஆண்டிற்குத் தெரிவு செய்யப்பெற்ற பொது நூலக இயக்ககத்திற்கும், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் 1995-இல் வழங்கப்பெற்றன.

## மொழியாக்க நூல் வெளியீடு

11. தமிழில் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட





இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின்படி, இதுவரை 17 நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன. இம்மொழி பெயர்ப்புத் திட்டத்தின்படி, கம்ப ராமாயணத்தின் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் முதன் முதலாக மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன. இத்துடன் கம்பராமாயண ஆங்கில மொழியாக்கம் முழுமை பெற்றது.

## தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

12. தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 23 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. முதல் பரிசு ரூ. 5 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ. 3 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூபாய் ஆயிரமும் எனப் பணப் பரிசுகள் வழங்கப்பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பகத்தார்க்குப் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பெறுகிறது. 1995 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களில் 41 சிறந்த நூல்களுக்கு 14-1-97 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் விருது வழங்கும் விழாவில் ரூ. 1.27 இலட்சம் பரிசாக வழங்கப்பெற்றது.

## தமிழில் சிறந்த நூல்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

13. நிலையான மதிப்பும், தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நூல் ஆசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகின்றது. இத்திட்ட விதிகளில் குறித்த தலைப்புகளுக்கு இணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி நூல் ஆசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்கப்பெறுகின்றன. வல்லுநர் குழு தெரிவு செய்து பரிந்துரைக்கும் எழுத்துச் சுவடிகள் நிதியுதவிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி நூல் ஆசிரியர்களுக்குப் பெருமளவாக ரூ. 8,000/- அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50% என்னும் அளவில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெறும். நிதியுதவிக்குரிய தொகை இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. 1996-97 ஆம் ஆண்டில் 26 நூலாசிரியர்களுக்கு ரூ. 88,230/- நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 512 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 16

**அரிய நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்**

14. இத்திட்டம் 1994-95 ஆம் ஆண்டில் அரசால் தோற்றுவிக்கப் பெற்றது. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ. 20,000/- அல்லது நூல் அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1996 சனவரி திங்கள் வரை 22 நூல்களை வெளியிட ரூ. 2,86,360/- நிதியுதவியாக வழங்கப் பெற்றுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்**

15. இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படுகிறது. இதற்கென ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது. பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ. 25,000/- அல்லது அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்பெறும்.

**தமிழிருக்கை நிறுவுகை-ஆராய்ச்சிப் பணிகள்-பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல்-நிதியுதவித் திட்டம்**

16. அயல் மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழிருக்கை நிறுவவும், தமிழில் பட்டய வகுப்புத் தொடங்கவும், அரசு நிதியுதவி நல்குகிறது. தமிழ்ப்பணி மேற்கொண்டுள்ள தமிழ் வளர்ச்சி அமைப்புகளும் நிதியுதவி பெறுகின்றன.



1997 ஏப்ரல் 16]

**1996-97 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பாகக் கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு நல்கைத் தொகை வழங்கப் பட்டுள்ளது.**

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி | 10.00 |
| 2. | சென்னை, தென் மொழிகள் புத்தக நிறுவனம் (யுனெஸ்கோ கூரியர்) | 0.80 |
| 3. | சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 43.75 |
| 4. | சென்னை, ஆசியவியல் ஆய்வு நிறுவனம் | 19.57 |
| 5. | ஆந்திர மாநிலம், குப்பம் திராவிடப் பல்கலைக் கழகம் | 50.00 |
| 6. | புதுதில்லித் தமிழ்ச் சங்கம் - திருவள்ளுவர் கலையரங்கம் கட்டுவதற்கு | 10.00 |
| 7. | பெங்களூர் தமிழ்ச் சங்கம், காமராசர் உயர்நிலைப்பள்ளி | 0.10 |

**மாநில/மாவட்ட அளவில் தமிழில் போட்டிகள் நடத்துதல்**

17. இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள ஆர்வத்தை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்மொழித் தேர்ச்சியை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையிலும், அறிவியல் தமிழின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் வகையிலும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் வாயிலாக மாவட்ட/மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே போட்டிகளை நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை அரசுச் சார்பு நிதி நிறுவனம் ஒன்றில் வைப்புத் தொகையாகச் செலுத்தி அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி போன்றவற்றை நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கச் செலவிடப் படும்.

### தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புத் திட்டம்

18. தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதுகாறும் 24 தொகுதி நூல்கள் வெளிவந்துள்ளன. 1936 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு நூல்களின் விளக்கம், பொருள் அகர வரிசை எழுதும் பணி நடைபெற்று முதல் தொகுதி எழுதப்பட்டுள்ளது. இரண்டாம் தொகுதிக்குரிய ஆசிரியர் அகர வரிசைப்படி புத்தகங்கள் வரிசைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

19. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ. 400/-க்கு மேற்படா 58 அகவை முடிந்த தமிழறிஞர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதி பெற்றவர்களாவர். நிதியுதவிக்குத் தெரிவு செய்யப் பெறுவோர்க்குத் திங்கள்தோறும் ரூ. 400/- வீதம் நிதியுதவி வழங்கப்பெற்று வந்தது. இத்தொகை 10-9-96 முதல் ரூ. 500/- ஆக உயர்த்தி வழங்கப்பெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 148 அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பயனடைந்துள்ளனர்.

### தமிழ் மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம்

20. தமிழ் மொழி, பண்பாட்டைப் பாதுகாத்து வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ. 400/- வீதம் நிதியுதவி வழங்கப்பெற்று வந்தது. இத்தொகை 10-09-96 முதல் ரூ. 500/- ஆகவும் 10-10-96 முதல் ரூ. 1,500/- ஆகவும் உயர்த்தவும் அத்துடன் மருத்துவப்படியாக ரூ. 15/-ம் சேர்த்து ரூ. 1,515/- ஆக வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் 10-10-96 முதல் மொழிக் காவலர்களின் மரபுரிமையினருக்கு இத்தொகை ரூ. 400/-லிருந்து ரூ. 750/- ஆக உயர்த்தியும், மருத்துவப்படியாக ரூ. 15/-ம் சேர்த்து வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1608 மொழிக் காவலர்களுக்கும், 327 மொழிக் காவலர்களின் மரபுரிமையினர்க்கும் ஆக 1935 பேர்களுக்கு நிதியுதவி ஒப்பளிக்கப் பெற்றுள்ளது. 1996 செப்டம்பர்த் திங்களில் இத்திட்டத்தின்கீழ் மொழி, எல்லைக் காவலர்களிடமிருந்து விண்ணப்



பங்கள் பெறப்பட்டன. இத்தொடர்பிலான விண்ணப்பங்களை மாவட்ட வாரியாகத் தொகுத்து, ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பெறவுள்ளது.

### வரலாற்று வரைவுத் திட்டம்

21. முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல் பழங்காலம், சங்க காலம் பகுதி-1 (அரசியல்), சங்க காலம் பகுதி-2 (வாழ்வியல்), பல்லவர் பாண்டியர் காலம் (முதற் பகுதி, இரண்டாம் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. 11-1-97-இல் நடைபெற்ற திருவள்ளுவர் விருது வழங்கு விழாவில் பல்லவ-பாண்டியர் கால வரலாறு பகுதி-2 வெளியிடப்பட்டது. சோழப் பெருவேந்தர் காலம், பிற்காலப் பாண்டியர் விசயநகர வேந்தர் காலம், பெருவேந்து அமையாக் காலம், வெள்ளையர் ஆட்சிக் காலமும் விடுதலைக்குப் பின்னரும் ஆகிய நான்கு தொகுதிகளை விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்புமிக்க இவ்வரலாற்று வரைவுத் திட்ட வல்லுநர் குழுவை இவ்வரசு திருத்தியமைத்துப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளது.

### மொழிபெயர்ப்பாளர்களுக்குச் சிறப்புச் செய்தல்

22. மொழி பெயர்ப்பு அருங்கலைகளுள் ஒன்றாகும். மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு அருந்தொண்டாற்றிய, அருந்தொண்டாற் றும் பெருமக்களை அரசு சிறப்பிக்கிறது. அவ்வகையில் இதுவரை 23 மொழிபெயர்ப்பு வல்லுநர்கள் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர்.

## விழாக்களும் விருதுகளும்

### திருவள்ளுவர் விருது

23. திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப் பெறுகிறது. விருது பெறுபவர் ரூ. 20,000/- பணப் பரிசும் தகுதியுரையும் பெறுவார். 1997 ஆம் ஆண்டிற்கான விருது முனைவர் கு. மோகனராசு அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது

24. ஒவ்வோர் ஆண்டும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் சிறந்த கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து இவ்விருது

[1997 ஏப்ரல் 16

வழங்கப்பெறுகிறது. இத்திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. விருதுத்தொகை 1996 ஆம் ஆண்டு முதல் ரூ. 10,000 லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 1996 ஆம் ஆண்டிற்குரிய விருது கவிஞர் திரு. இரா. வைரமுத்து அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

**திரு.வி.க. விருது**

25. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் சிறந்த எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது வழங்கப்பெறுகிறது. விருது பெறுபவர் ரூ. 20,000 பரிசாகப் பெறுவார். 1996 ஆம் ஆண்டிற்குரிய விருது முனைவர் மா. நன்னன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

**தமிழறிஞர்கள் நூல்களை நாட்டுடைமையாக்கல்**

26. மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப்பாவணரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்தாருக்கு ரூ. 20 இலட்சம் வழங்கப்பெற்றது. தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்துப் பெருந் தொண்டாற்றிய தமிழறிஞர் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்க இந்த ஆண்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அவரது குடும்பத்தாருக்குக் காப்பு நிதியாக வழங்க ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**தமிழ் வளர்ச்சி மன்றம்**

27. தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளில் அறிவுரை கூறும் ஓர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படும் வகையில் அரசு தமிழ் வளர்ச்சி மன்றத்தைத் தோற்றுவித்துள்ளது. இம்மன்றம், இதுவரை [illegible] அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் வளர்ச்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்டு (1) தமிழ் எழுத்துச் சீரமைப்புக் குழு (2) அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் அனைத்து நிலைகளிலும் தமிழ் மொழிக் கல்வியைக் கட்டாயமாக்கும் வழிமுறைகள் ஆய்வுக் குழு (3) ஆட்சி மொழித் திட்டம் செம்மையாக நிறைவேற வழிவகை காணும் வல்லுநர் குழு என மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் ஆய்ந்து பரிந்துரைகளை அளித்துள்ளன.



1997 ஏப்ரல் 16]

இப்பரிந்துரைகள் தமிழ் வளர்ச்சி மன்றத்தால் ஆராயப்பட்டு விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெறும்.

**உலகத் தமிழ்ச் சங்கம்**

28. தமிழ் மொழி இனப் பண்பாட்டு மேம்பாட்டுக்கு உறுதுணைபுரியும் வகையில் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்க ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பயன்படுத்த உலகத் தமிழ்ச் சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும். எனவே, இச்சங்கத்தைப் பதிவு செய்யத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சங்கம் உலகெங்கும் வாழும் தமிழறிஞர்களும், தமிழர்களும் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொள்வதற்கு ஓர் இணைப்பு அமைப்பாக விளங்கும்.

## (ஆ) மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்நாடு அரசு உயரிய நோக்கமாகக் கொண்டுள்ள ஒளிவுமறைவற்ற (Transparent) செயற்பாட்டிற்கு உதவும் வகையில் மக்கள் மொழியில் அரசின் ஆட்சி நடைபெற்றிட மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது.

2. தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்பது அரசின் நோக்கமாகும். மொழிபெயர்ப்புத் துறை இந்நோக்கத்திற்கு உறுதுணையாகப் பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழிபெயர்க்கின்றது.

3. அறிக்கைகள், பொதுக்கணக்கு, பொது நிறுவனக் குழு அறிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள் விதிகள், துணை விதிகள், விதிமுறைகள், பொதுத் துறையின் மறைபொருள் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கைகள், தேர்தல் ஆணையக் கோப்புகள், நிதிக் குழு அறிக்கைகள் காபிபோசா கோப்புகள், அரசாணைகள் போன்ற அனைத்துவகைக் கோப்புகளும் மொழியாக்கம் செய்யப்பெறுகின்றன.

4. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்க்க, பணியாளர்களில் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித்துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

[1997 ஏப்ரல் 16

## (இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில், அகரமுதலி உருவாக்குதலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பணியாகும். தமிழ்மொழியில் தனித்தன்மை வாய்ந்த பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடும் நோக்கத்தின் விளைவாய் இத்துறை 1974-இல் உருவாக்கப்பெற்றது. இரு மொழிப் பேரகராதியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக் காட்டுகளுடன் உரிய விளக்கமும் செந்தமிழ்ச் சொல்லாட்சியும் வேரும் வரலாறும் அளிக்கப்படுதலால், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் அளிப்பதாயிருக்கும். திரட்டப் பெறும் சொற்களுக்குத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல் மற்றும் இலக்கண இலக்கியங்களிலிருந்து விரிவான சான்றுகளும் மேற்கோள்களும் தரப்படுவதோடு, தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம்பெற்றுப் பேரகரமுதலிக்கு அணி சேர்க்கின்றன.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலித் திட்டத்தின்கீழ், உயிரெழுத்துக்கள் வரிசையில் 'அ' கரம் முதல் 'ஈ' காரம் வரையிலான முதன் மடலத்தின் இரு பகுதிகள் வெளியிடப்பெற்றுள்ளன. 'உ' கரம் முதல் 'ஔ' காரம் வரையிலான மூன்றாவது பகுதி விரைவில் வெளியிடப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் 'க' 'ச' 'ஞ' 'த' 'ந' 'ப' 'ம' 'ய' 'வ' என்னும் எழுத்துகளில் தொடங்கும் சொற்களைக் கொண்ட பகுதிகள் வெளியிடப்பெறும்.

3. பேரகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் வெளியீட்டுப் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, அகரமுதலித் துறையில் வல்லுநர்களாக விளங்கும் அறிஞர் பெருமக்கள் பதிப்பாசிரியர்களாகவும், உதவிப் பதிப்பாசிரியர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் துணையுடன் அகரமுதலித் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குள் நிறைவுறுத்திட இலக்கு வரையறுக்கப்பட்டுப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது.

## (ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பெற்றது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியத் துறை,



1997 ஏப்ரல் 16]

கலை-பண்பாட்டுத் துறை, பன்மொழிக் கல்வித் துறை, சமூகவியல் துறை, மொழியியல் துறை என ஐந்து துறைகள் தற்போதுள்ளன. இத்துறைகளில் தமிழியல் தொடர்பான ஆய்வுகளும் சில பயிற்சி வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இங்குப் பணியாற்றும் கல்விசார் அலுவலர்கள் பல திட்டப் பணிகளை மேற்கொண்டு உயராய்வு செய்து வருகின்றனர்.

### பயிற்சி வகுப்புகள்

2. இலக்கியத் துறையிலுள்ள சுவடியியல் பிரிவு ஓராண்டு சுவடியியல் பட்டய வகுப்பினை நடத்தி வருகிறது. பன்மொழிக் கல்வித் துறை ஓராண்டு மொழிபெயர்ப்புப் பட்டய வகுப்பினை நடத்தி வருகிறது. மொழியியல் துறை, பிற மொழியினர்க்குத் (வெளி நாட்டினர், பிற மாநிலத்தவர்) தமிழ் வகுப்புகளை (தமிழ் அறிமுக நிலை, உயர்நிலை) நடத்தி வருகிறது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் கல்விசார் அலுவலர்களின் மேற்பார்வையில் 12 முழுநேர மாணவர்களும், 2 பகுதி நேர மாணவர்களும் முனைவர் பட்ட ஆய்வு செய்து வருகின்றனர்.

### கருத்தரங்குகள்

3. நிறுவனத்தில் வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கம், ஆய்வு மன்றக் கருத்தரங்கம், திங்கள் கருத்தரங்கம், ஆண்டுக் கருத்தரங்கம் என்ற பல கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நிறுவனத்தில் துறை சார்ந்த கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. கருத்தரங்குகளில் இங்குப் பணிப்புரியும் கல்விசார் அலுவலர்கள், ஆய்வு மாணவர்கள், பிற தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள் கலந்து கொண்டு கட்டுரைகளை வழங்குகின்றனர். கருத்தரங்குகள், பயிலரங்கு கள் போன்றவற்றை நிறுவனம் தனித்தும், பிற நிறுவனங்களுடன் இணைந்தும் நடத்தி வருகின்றது.

### அறக்கட்டளைச் சொற்பொழிவு

4. நிறுவனத்தில் 20 அறக்கட்டளைகள் நிறுவப் பெற்றுள்ளன. இவ்வறக்கட்டளைகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 16

**வெளியீடுகள்**

5. நிறுவனம், இதுவரையிலும் 246 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர் திட்டப் பணிகள், அறக் கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள் பிற தமிழறிஞர்களின் வெளியீடுகளாகவும் அமைகின்றன. முனைவர் வி.சி. சசிவல்லி எழுதிய 'அழகியல் சிந்தனைகள்' என்ற நூலும், முனைவர் கு. பகவதி எழுதிய 'சென்னை 1639-க்கு முன்-பின்' என்ற நூலும் 1995 ஆம் ஆண்டின் சிறந்த நூலுக்கான தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன.

மேற்கூறிய பணிகள் நிறுவனத்தின் பணிகளாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் மேலும் தொடர்ந்து நடைபெற இருக்கின்றன. இவற்றுள் 'தமிழியல் ஆவணத் தொகுப்பு' என்ற திட்டப் பணியில் தமிழியல் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், திட்டப் பணிகள், ஆய்வுகள் போன்றவையாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டுக் கணினியில் பதிவு செய்யப்பட வுள்ளன. பின்னர் இவற்றை இணையம் (இன்டர் நெட்) வாயிலாக அனைவரும் காணும் வகையில் 'தகவல் தொடர்பு மையமாக' நிறுவனம் இயக்கும் திட்டம் செயற்பட இருக்கிறது.

6. தவிர, சங்க இலக்கியத்தைப் படிப்பதற்கு உதவும் கணினி பதிவிருப்புக் கையகவட்டு (CD ROM) மூலம் பதிவு செய்து உலகளாவிய நிலையில் பரப்பும் திட்டமும் உள்ளது. மூலபாடம்-பொருள்-ஒலிபெயர்ப்பு-மொழிபெயர்ப்பு என்ற நான்கு நிலைகளில் இது அமையும். இதேபோன்ற அமைப்பில் சங்க இலக்கியத்தைத் 'தொலை வலைப்பின்னல்' வழி வெளிப்படுத்தச் சிங்கப்பூரில் இருக்கும் தேசியப் பல்கலைக் கழகத்துடன் இணைந்ததொரு திட்டம் செயற்படுத்தப்பட வுள்ளது. கணினி அகராதி தயாரிக்கும் திட்டம் உள்ளது. நாட்டுப்புறத் தெய்வங்கள், கோயில்கள், விழாக்கள் போன்ற தமிழரின் பண்பாட்டுச் செல்வங்களை, ஒலி, ஒளிக் காட்சி மூலம் வழங்கும் திட்டமும், தமிழரின் மரபான கலைச் செல்வங்களை, குறிப்பாக நாட்டுப்புறக் கலைகளை ஒலி, ஒளி நாடாவில் பதிவு செய்து உலகினர்க்கு வழங்கும் திட்டமும் செயற்பட இருக்கிறது. 'தமிழ் வழிக் கல்வி-மருத்துவம், பொறியியல்-சிக்கல்களும், தீர்வுகளும்' என்ற தலைப்பில் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி கலந்துரையாடல் ஒன்றைப் புல வல்லுநர்களைக் கொண்டு நடத்தியுள்ளது.



1997 ஏப்ரல் 16]

7. 'தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடு' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கமும், தமிழ் ஓலைச்சுவடிப் பாதுகாப்பு நிறுவனத்துடன் இணைந்து 'தமிழியல் ஆவணம்' என்னுமொரு கருத்தரங்கமும் ஓரிரு திங்களில் நடைபெற இருக்கின்றன. தமிழியல் ஆய்வை மேலும் சிறப்பிப்பதற்கு 'வருகை தரு பேராசிரியர்கள்' சிலரும் நியமிக்கப்பட உள்ளனர்.

8. தற்போது நூலகத்தில் 40,720 நூல்கள் உள்ளன. இவற்றைத் தகுந்த முறையில் பேணவும், நூலகத்திற்கு வருகை தரும் தமிழ் ஆர்வலர்கள் நூலகத்தைப் பயன்படுத்தும் வகையில் நூலகத்தை விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. நூல்கள் முழுமையும் கணினி மூலம் அட்டவணையிடப்பட இருக்கின்றன. நூலகவியலுடன் கணினிப் பயிற்சி பெற்ற புதிய பணியாளர்கள் இதற்காக அமர்த்தப்படுவர். ஏற்கெனவே முடிவு செய்துள்ளபடி நிறுவன வெள்ளி விழாத் தொடர்பான சிறப்பு நிகழ்ச்சி மற்றும் கருத்தரங்கத்தை விரைந்து நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## (உ) தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சட்டம் எண் 9-ல் வரையறை செய்யப்பட்டதற்கு இணங்க உருவாக்கப்பட்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழியல் உயர் ஆய்வு மையமாகச் செயற்பட்டு வருகிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் அன்றைய தேவைக்கேற்ப பல குறிக்கோள்களை முன்வைத்து இப்பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகம் கீழ்க்காணும் கொள்கைகள் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.

1. தமிழ் மொழி, இலக்கியம் ஆகிய பொருள்கள் பற்றிய உயர் ஆய்வினைச் செயற்படுத்தல்.
2. இந்திய நாட்டிற்குள்ளும், உலகெங்கிலும் தேவைப்படுவோர்க்குத் தமிழ் மொழியினைக் கற்பித்தல்.
3. கலை, பண்பாடு, இசை, அரங்க நாடகங்கள், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், தத்துவம், புவியியல், மண்ணியல், வானியல், கடல்வழி அறிவியல் மற்றும் கப்பலியல், சோதிடம், சித்த மருத்துவம், பொறியியல் மற்றும் கைவினைப் பொருளியல் போன்றவை பற்றிய ஆய்வுகளைத் தமிழ் மொழி மற்றும் இலக்கிய ஆதாரங்களை முன்வைத்து ஊக்குவித்தலும், நெறிப்படுத்தலும்.

4. பிற மொழி இலக்கியப் படைப்புகளைத் தமிழாக்கம் செய்தலும், தமிழ் இலக்கியம் மற்றும் உயர் ஆய்வுப் படைப்புகளைப் பிற மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்தலும்.

5. ஓலைச்சுவடி மற்றும் அரிய கையெழுத்துச் சுவடிகளைப் பாதுகாத்தலும் அவற்றைப் புத்தகங்களாக வெளியிடுதலும்.

6. கல்வெட்டு மற்றும் பட்டயங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தொகுத்து அவற்றை அச்சிடுதல், அவற்றிலுள்ள செய்திகளைக் கொண்டு தமிழ் மொழி, பண்பாடு மற்றும் வரலாறு எழுதுதல்.

7. தமிழ்நாடு மற்றும் தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளில் வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்கள், பேச்சு வழக்குகள், வட்டார வழக்குகள், தொழிலியல் மற்றும் வேளாண்மைத் தொடர்புள்ள சொற்கள் ஆகியவற்றைத் தொகுத்துப் பாதுகாத்தலும், அச்சிட்டு வெளியிடுதலும்.

8. பண்டைக்கால வரலாற்று ஆய்வுக்கு ஊக்கம் தந்து எதிர்கால அறிவியல் வளர்ச்சிக்கு வித்திடுதல்.

9. வளர்ந்துவரும் நாடுகளில் மொழியியல் உயர் ஆய்வுக்கு மேற்கொள்ளப்படும் நெறிமுறைகளை மனத்திற்கொண்டு தமிழ்மொழி ஆய்வில் புதிய அணுகுமுறைகளை உருவாக்குதல்.

10. தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய துறைகளை இந்திய நாட்டின் ஏனைய பண்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளும் வண்ணம் செயல்முறைகளைக் கண்டுபிடித்தல்.

11. உயர் கல்வியையும், ஆய்வுத் திட்டங்களையும் தமிழ் மொழி மற்றும் இலக்கிய அடிப்படையில் உருவாக்கம் செய்தல்.

2. மேற்காணப்படும் கொள்கைகள் அடிப்படையில், தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருந்தாலும், தமிழின் வளர்ச்சியை மனத்திற்கொண்டு வேறு சில கொள்கைத் திட்டங்களும், பல்கலைக் கழக விதிகளில் இடம் பெறுகின்றன. அவையாவன:

1. பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் கல்விசார் சிறப்பு நிலை விருதுகளைத் தகுதியுடையோர்க்கு வழங்க ஆவன செய்தல்.

2. பல்வேறு துறைகளிலும் சிறந்த அறிஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு உயர்நிலை விருதுகள் வழங்குதல்.



3. மாணவர்களுக்கு உயர் கல்வி, அவர்களது உடல் நலம், ஒழுக்கம் மற்றும் பல்வேறு கல்வித் துறைகளிலும் உயர்வுக்கு வழி காட்டுதல்.

4. மற்ற பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், அரசு சார் அல்லது அரசு சாராத நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த உயர் ஆய்வில் ஈடுபடுதல்.

5. நூலகங்கள், ஆய்வு மையங்கள், கலைக் கூடங்கள், புத்தக வெளியீட்டுத்துறை போன்றவற்றை உருவாக்கிப் பேணுதல்.

6. உயர் ஆய்வு வளர்ச்சிக்கு வழிகாணும் புதிய பதவிகளை உருவாக்கித் தகுதியுடையவர்களை நியமித்தல்.

7. ஆய்வுத்தகைமைகள், விருதுத்தகைமைகள், பரிசுகளைத் தகுதியுடையோர்க்கு வழங்குதல் மேலும்,

8. உயர் ஆய்வு நிலையில் பட்ட, பட்டயப் படிப்புகளை உருவாக்கம் செய்து நடத்துதல்.

**கொள்கைச் செயற்பாடு**

3. கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம், மேற்கண்ட கொள்கைகளை மனத்திற்கொண்டு செயற்பட்டு வருகிறது. பல ஐந்து புலங்களையும் 23 ஆய்வுத் துறைகளையும் உருவாக்கிப் பல ஆய்வுப் படைப்புகளைப் புத்தகங்கள், கலைக்களஞ்சியம் மற்றும் அகராதி வடிவில் வெளியிட்டுள்ளது. ஏறத்தாழ 200 ஆய்வு நூல்கள், 14 வாழ்வியற் களஞ்சியங்கள், மூன்று பேரகராதித் தொகுதிகள், ஒரு நாடகக் களஞ்சியம், நான்கு சங்க இலக்கியப் பொருட்களஞ்சியங்கள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளது. அறிவுசால் பேராளர்களால் பாராட்டப் பட்ட இவை, தேசிய மாநில அளவில் பல பரிசுகளைப் பெற்றுள்ளன. அச்சிட வேண்டிய நிலையில் 200 ஆய்வேடுகள் உள்ளன. 'தமிழ்க்கலை', 'தமிழ் சிவிலிசேசன்' (ஆங்கிலம்), 'செய்திமலர்' போன்ற காலமுறை ஏடுகள் வெளியிடப்படுகின்றன. இவற்றில் பன்னாட்டு அளவில் புகழ் பெற்ற பல்துறைசார் அறிஞர் பெருமக்கள் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றனர்.

4. பல்கலைக் கழகத் துறைகளால் நூற்றுக்கும் மேற்பட்ட கருத்தரங்கு களும், மாநாடுகளும், பணிப்பட்டறைகளும் உயர் ஆய்வுக் கூட்டங்களும் உலகளாவிய நிலையிலும், நாடளாவிய நிலையிலும், மாநிலம் தழுவிய

நிலையிலும் நடத்தப்பட்டுள்ளன. பன்னாட்டு அளவிலான ஆய்வு மாநாடுகளில் பல்கலைக் கழகப் பேராளர்கள் கலந்து கொண்டு பல்வேறு நாடுகளிலும் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். பல்வேறு நாடுகளுக்கு ஆய்வுத் தகைமையாளராகவும் சென்று வந்துள்ளனர். பன்னாட்டளவில் புகழ்பெற்று வெளிவரும் ஆய்விதழ்களில் சுமார் நூறு கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை இலண்டன். கேம்பிரிட்ஜ், ரோம், நேப்பிள்ஸ், கோபன்ஹேகன், ஆஸ்லோ, அமெரிக்கா. டோக்கியோ, ஹாங்காங், பாங்காக், வியன்னா, கோலாலம்பூர் போன்ற இடங்களில் இருந்து வெளியிடப்படுபவை. பன்னாட்டு ஆய்வாளர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள பல்வேறு துறைகளுக்கும் ஆய்வுப் பணி நிமித்தம் வருகை புரிவது தொடர்கிறது.

5. தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒரு தனிநிலை உயர் ஆய்வு மையம். இத்துடன் இணைந்துள்ள கல்லூரி ஏதும் இல்லை. இங்கு பல்வேறு துறைகளில் முழுநேர, பகுதிநேர ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகளாவிய நாடுகளில் இருந்து வரும் ஆய்வாளர்களுக்குத் தமிழ் மொழி, பண்பாடு, கலை ஆகிய வற்றைக் கற்பிக்கும் களமாகவும் இது திகழ்கிறது. ஜப்பான், போலந்து, செக்கோஸ்லோவாகியா, அமெரிக்கா, செருமணி, தென்னாப்பிரிக்கா, சீனா, இலங்கை, தாய்லாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, மொரிசியஸ், பிஜி, பிரான்சு முதலிய நாடுகளிலிருந்து வந்த அறிஞர்களுக்குத் தமிழியல் கல்வியும், ஆய்வு நெறிகாட்டலும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழக அரசுப் பணிகளில் பணியாற்றும் பிற மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இந்திய ஆட்சிப் பணியாளர்களுக்கும் இந்தியக் காவல் பணியாளர்களுக்கும், இந்திய வனப் பணியாளர்களுக்கும் மொழிச் சிறுபான்மை அலுவலர்களுக்கும் ஆண்டுதோறும் மொழிப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

6. 1997 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நில அறிவியல் துறை, பன்னாட்டு அளவிலான கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. சிறபந்துறை 1996 ஆம் ஆண்டில் இந்தியக் கலை வரலாற்றுக் கழகத் தேசிய மாநாடு நடத்தியது. கல்வெட்டியல், நாணயவியல், ஊர்ப்பெயர் தேசிய மாநாடுகள் கல்வெட்டுத் துறையால் நடத்தப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து உலக சைவ சித்தாந்த மாநாடு, இந்தியச் சமூகவியல் ஆய்வு மாநாடு, தமிழ்நாடு வரலாற்றுப் பேரவை மாநாடு போன்றவை நடைபெறவுள்ளன. இவ்வாறு தமிழியல் ஆய்வுக்கு ஊக்கம் தரும் பலதரப்பட்ட மாநாடுகளின் நிலைக்களனாகத் தமிழ்ப் பல்கலைக்





கழகம் உருப்பெற்றுள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இதுவரை 32 அறக்கட்டளைகள் புரவலர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவ்வறக்கட்டளைகள் சார்பில் ஆய்வுப் பொழிவுகள் ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன. தெலுங்கு, இசுலாமிய, வைணவ சமயங்கள், பாரதிதாசன் முதலிய பல இருக்கைகள் நிறுவப்பெற்று. இவை தொடர்பான ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன.

7. இதுவரை முனைவர் பட்டத்துக்கும், ஆய்வியல் நிறைஞர் பட்டத்துக்கும் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பதிவு செய்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். 73 மாணவர்கள் உரிய பட்டங்கள் பெறவுள்ளனர். பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், ஆய்வு உதவியாளர்கள் ஆகியோர் எழுபதுக்கும் மேற்பட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். தமிழக அரசு, பல்கலைக் கழக நல்கைக்குழு (U.G.C.). இந்திய வரலாற்று ஆய்வுக் கழகம் (I.C.W.R.). இந்தியச் சமூக அறிவியல் ஆய்வுக் கழகம் (I.C.S.S.R.). இந்தியத் தத்துவ ஆய்வுக் கழகம் (I.C.P.R.). இந்திய மொழிகள் மைய நிறுவனம் (C.I.I.L.). மனிதவள மேம்பாட்டுத்துறை (M.H.R.D.). மைய அரசின் அறிவியல் தொழில் நுட்பத்துறை (D.S.D.). கடல்வள மேம்பாட்டுத் துறை (D.O.D.), மின்னணுவியல் துறை (D.O.E.). தேசிய அருங்காட்சியம், தென்னகப் பண்பாட்டு மையம் (S.Z.C.C.). தேசிய நாடகப் பள்ளி (N.S.D.). சங்கீத நாடக அகாதமி முதலிய நிறுவனங் களும திட்டங்களுக்கு நல்கைகள் வழங்கி வருகின்றன. புதிய திட்டங் களுக்கான கருத்துருக்களும் இத்தகைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வாய்வேடுகள் நூல்களாக வெளிவரும்போது அவை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கொள்கைகளை உறுதிப்படுத்துவனவாய் அமையும்.

8. தமிழ்ப் பல்கலைக் கழகம் அதன் கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்குப் பல்வேறு புலங்களின் சிறப்புத் துறைகளின் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளப் பத்தாண்டிற்கான கருத்துரு அனுப்பியுள்ளது. இதில் கணினி வழி மொழி ஆய்வு மற்றும் மொழி கற்பித்தல், நில அறிவியல், சமுதாய அறிவியல், தமிழ் நாடகம், இசை வளர்ச்சி மற்றும் மொழி பெயர்ப்பியல் தொடர்பான ஆய்வு வரையறைகள் இடம் பெற்றுள்ளன.

[1997 ஏப்ரல் 16

## (ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்

1961 ஆம் ஆண்டு முதல் தொல்பொருள் ஆய்வு இயக்ககம் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. துறையின் நோக்கங்கள்:

1. தமிழகத்தில் கிடைக்கும் அனைத்துக் கல்வெட்டுகளையும் படியெடுத்து நூல்களாக அச்சிட்டு வெளியிடுதல்.
2. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வினை மேற்கொள்ளுதல்.
3. அகழ்வைப்பகங்கள் அமைத்தல்.
4. பழம் பொருட்களைப் பதிவு செய்தல்.
5. மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்.
6. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்கென ஓலைச் சுவடிகள் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் அவற்றைப் பதிப்பித்து நூல்களாக வெளியிடுதல்.

**மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்**

2. இதுவரை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் 82 மரபுச் சின்னங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் கீழ்க்காணும் சின்னங்கள் மதச் சார்பற்ற மரபுச் சின்னங்களாகும். திருமலைநாயக்கர் அரண்மனை-மதுரை, அரண் மனை கட்டடப் பகுதிகள்-தஞ்சாவூர், உப்பரிகை-சரபேந்திர ராஜன் பட்டினம், இராமலிங்கவிலாசம்-இராமநாதபுரம், டேனிசுகோட்டை-தரங்கம்பாடி.

3. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை இவ்வாண்டு பாது காப்புப் பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பழுதுபார்த்தல் பணிகளில் மிகவும் அவசரமானதும், அவசியமானதுமான பணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதற்கட்டமாக ரூ. 76.30 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்க்காணும் பணிகள் அடங்கும்:—

1. சுதை வேலைப்பாடுகளின் பாதுகாப்புப் பணிகள்.
2. பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல்.
3. அரண்மனையைச் சுற்றி மண் அப்புறப்படுத்தும் பணி மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல்.
4. முற்றத்தினைச் சுற்றி நடைபாதை அமைத்தல்.



1997 ஏப்ரல் 16]

4. இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்கவிலாச அரண்மனை பழுதுபார்க்கும் பணியும், அரண்மனைச் சுவரிலும், கூரைவிதானப் பகுதியிலும் தீட்டப்பட்டுள்ள ஓவியங்களைப் பாதுகாக்கும் பணியும் ரூ. 15 இலட்சம் செலவில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. 82 நினைவுச் சின்னங்களில் பாதுகாப்பு நலன் கருதி முறையே ரூ. 750/- மற்றும் ரூ. 250/- தொகுப்பூதிய வீதத்தில் 48 காவலர்கள், பணியமர்த்தப் படவுள்ளனர். தரங்கம்பாடியிலுள்ள டேனிசுகோட்டை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

**கல்வெட்டாய்வு**

5. 1996 ஆம் ஆண்டில் 83 கல்வெட்டுகளும், 4 செப்பேடுகளும் படியெடுக்கப்பட்டன. 15 சிற்றூர்கள் ஆய்வு செய்யப்பட்டன. சென்னை அயன்புரத்தில் பரசுராமலிங்கேஸ்வரர் கோயிலில் பல்லவர் கால முருகன் சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டுக் கலைச் சொல்லகராதி தயாரித்தல்**

6. கல்வெட்டுகளில் காணப்பெறும் கலைச் சொற்கள் சேகரிக்கப்பட்டு அகராதி வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. உயிரெழுத்துகளை முதலாகக் கொண்ட சொற்கள் அனைத்தையும் சேகரித்து உரிய பொருளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி ஒரு தொகுதியினை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்கு உறுதுணையாகவும் மற்றும் ஓலைச் சுவடி விவரங்கள், மரபுச் சின்னங்களின் தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் அகழ்வைப்பக (Site museum) விவரங்களையும் கணினியில் கொண்டுவரும் நோக்கத்தில் இத்துறைக்கு ஒரு கணினி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம்**

7. ஆண்டுதோறும் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும், கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சியும் நடத்தப் பெறுகின்றன. 1996-97 ஆம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டம் பெற்ற ஐந்து மாணவர்கள், கல்வெட்டியல், காசுயியல், கலை மற்றும் கட்டடம் ஆகியவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1996 ஆம் ஆண்டு மேத் திங்களில் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் திண்டுக்கல்லில் கோடைகாலக் கல்வெட்டுப் பயிற்சி நடத்தப்பெற்றது.

[1997 ஏப்ரல் 16

**நில அகழாய்வு**

8. நாகை காயிதே மில்லத் மாவட்டம் பூம்புகார், இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம் ஆகிய இடங்களில் இத்துறையாலும், பெரியார் மாவட்டத்திலுள்ள கொடுமணல் என்னுமிடத்தில் இத்துறையும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இணைந்தும் அகழாய்வினை இவ்வாண்டு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. படவேடு அகழாய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. திருக்கோயிலூர் அகழாய்வு அறிக்கை அச்சில் உள்ளது.

**ஆழ்கடலாய்வு**

9. இத்துறையும், கோவா தேசியக் கடலாய்வு நிறுவனமும் இணைந்து பூம்புகாரில் ஆழ்கடலாய்வுப் பணியினை இதுகாறும் மூன்று கட்டங்களில் மேற்கொண்டுள்ளன. நான்காவது கட்டப்பணி தொடங்கப்படவுள்ளது. இதுவரை, இப்பணிக்கு ரூ.56.74 இலட்சம் அரசு நிதி ஒப்பளித்துள்ளது. இவ்வாய்வின் மூலம் மறைந்த பூம்புகாரின் கட்டடங்கள் என்று கருதப்பெறும் செம்புராங் கல்லால் கட்டப்பெற்ற மூன்று கட்டடங்களும், செங்கற் கட்டடங்களும் கடலுக்கடியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் கடலுக்குள் மூழ்கிய கப்பல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவில் தொல்லியல் பணிகள்**

10. மாவட்டந்தோறும் உள்ள தொல்லியல் அலுவலர்கள் சிலர் அரிய ஓலைச் சுவடிகளையும், காசுகளையும், தொல்பொருட்களையும் சேகரித்து வருகின்றனர். இவை, வேதியியல் முறையில் சுத்தம் செய்யப்பட்ட பின்னர் அருகிலுள்ள இத்துறையின் அகழ்வைப் பகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**அகழ்வைப்பகங்கள்**

11. அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களையும், அவ்விடங்களின் அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களையும் கொண்டு பொதுமக்கள் எளிதில் சென்று பார்த்துப் பயன்பெறும் வகையில், அகழாய்வு நடைபெற்ற இடங்களுக்கு அருகிலேயே அகழ்வைப்பகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அகழ்வைப்பகங்களில் திங்கள்தோறும் தமிழ், தொல்லியல், பண்டைய வரலாறு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை அழைத்துத் திங்கள் பொழிவும்,



1997 ஏப்ரல் 16]

சிறப்புக் காட்சியும் நடத்தப்படுகின்றன. 1997-98-ஆம் ஆண்டில் ரூ.9.58 இலட்சம் செலவில் பூம்புகாரில் கடல் அகழ்வாராய்ச்சி குறித்த அருங்காட்சியகம் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

**அச்சுப்பணி**

12. இத்துறையின் கீழ் இயங்கும் அச்சுப் பிரிவில் கீழ்க்குறிப்பிடப் பெற்றவை அச்சிடப்பட்டு வெளிக் கொணரப்பட்டுள்ளன:—

1. 'கல்வெட்டு' - காலாண்டு இதழ்கள், எண்.44,45,46
2. தொல்லியல் செய்தி மடல் - 1,2,3
3. தமிழக ஊர்கள் வரலாறு, 1000 படிகள்
4. தமிழர் காசு இயல், 1200 படிகள்
5. படைவீடு - அகழாய்வு அறிக்கை, 500 படிகள்
6. இடங்கை வலங்கை வரலாறு, 500 படிகள்
7. திருமலை நாயக்கர் அரண்மனை நுழைவுச் சீட்டுகள் - 1,80,000
8. தஞ்சாவூர் அரண்மனை நுழைவுச் சீட்டுகள் 50,000

**உலக மரபு விழா**

13. இவ்வாண்டு உலக மரபு வார விழா, நவம்பர்த் திங்கள் 19-ஆம் நாள் முதல் 25-ஆம் நாள் முடிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மரபு சார் சின்னங்களையுடைய பல்வேறு தலங்களில், அருகிலுள்ள கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியரைக் கொண்டு சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. இவ்விழா நம் நாட்டுக் கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்தலின் இன்றியமையாமையை மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் எடுத்தியம்புவதாக அமைந்தது.

**பழம் பொருட்கள் பதிவு**

14. 1996-ஆம் ஆண்டில் பழமையான கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக 345 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. 293 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பெற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரை பழமையான பொருட்களைப் பதிவு செய்வதற்கு 44,704 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 33,091 விண்ணப்பங்கள் பதிவு செய்யப் பெற்றுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. சிலைத் திருட்டுத் தொடர்பான சான்றாதாரங்களைப் பதிவு அலுவலர்கள் வழக்கு

மன்றத்திற்கு அளித்து வருகின்றனர். மேலும் பதிவு செய்யப்பட்ட சிலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு அவ்வப்போது உரிய கோயில்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கின்றனர்.

### இந்துமாக்கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து அனைத்து நாடுகளின் முதல் மாநாட்டினைச் சென்னையில் நடத்துதல்

15. இந்துமாக்கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து அனைத்து நாடுகளின் முதல் கருத்தரங்கினை 1997-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் 22,23-ஆம் நாள்களில் சென்னையில் தொல்பொருள் ஆய்வுத் துறையும், கோவா தேசியக் கடலாய்வு நிறுவனத்தின் கடலாய்வுக் குழுவும் இணைந்து நடத்துவதற்காக அரசு ரூ.1 இலட்சம் நிதி வழங்கியது. சிறப்பாக நடைபெற்ற இம்மாநாடு பூம்புகார் ஆழ்கடலாய்வுப் பணியினை வலியுறுத்துவதாக அமைந்தது. இம் மாநாட்டினைத் தமிழகத்தில் நடத்தியதால், இம்மாநாட்டில் கலந்துகொண்ட பன்னாட்டு அறிஞர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும், தொழில் நுட்பங்களையும், பூம்புகார் கடல் அகழாய்வில் பின்பற்ற வாய்ப்பாக அமைந்தது. மேலும் பூம்புகார் கடல் அகழாய்வில் வெளிப்படுத்தியிருக்கின்ற பொருட்கள் பற்றியும், அவற்றை வெளிக்கொணர்வது குறித்தும், பாதுகாப்பு முறை குறித்தும் கலந்துரையாடவும் மற்றும் பூம்புகாரின் பண்டைய சிறப்பு பற்றி வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் வருகை புரிந்த அறிஞர் பெருமக்கள் உணர்ந்து கொள்ளவும் இது ஏதுவாக இருந்தது.

### (எ) அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் இயங்கும் கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம் கர்னல் மெக்கன்சி, லாங்டன், பிரவுன் போன்ற மேனாட்டுப் பெருமக்களின் அரிய தொகுப்புகள் கொண்ட பெரிய நூலகமாகும். இந்நூலகத்தில் 71,180 சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை தமிழ், தெலுங்கு, வடமொழி, கன்னடம், மராத்தி, உருது, பாரசீகம், அரபு முதலிய மொழிகளில் அமைந்துள்ளன. அண்மைக்காலத்தில், தமிழ், தெலுங்கு, வடமொழி, உருது ஆகிய மொழிகளில் மொத்தம் 365 நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இந்நூலக இருப்பறையைக் காற்றுப்பதன வசதி செய்தல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1997-98-ஆம் ஆண்டில் இந்நூலகத்திலுள்ள கிடைத்தற்கரிய ஓலைச் சுவடிகளை நன்முறையில் பேணிப் பாதுகாக்கும்



பொருட்டு ஒரு நகலெடுக்கும் இயந்திரம், இரும்பு அலமாரிகள், தீத்தடுப்புச் சாதனங்கள், மற்றும் மைசூர் மத்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையிடமிருந்து கல்வெட்டுத் தொகுதிகள், வாங்க ரூ.2.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. மேலும் இப்பொழுது அச்சுக்குத் தயார் நிலையிலுள்ள ஓலைச் சுவடிகளை நூலாகப் பதிப்பிக்கும் பணிக்கும் ரூ. 5.15 இலட்சம் செலவிட 1997-98-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

### (ஏ) அரசு அருங்காட்சியக ஆணையம்

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும் பெருமையும் கொண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக்கூடங்களோடு, பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும், இவ்வருங்காட்சியகம் புகழ் பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக விளங்கும் இவ்வருங்காட்சியகம் பல்வேறு மாநில மக்களும், ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் காட்சியகமாகவும் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்து வந்த பெருமை இந்த அருங்காட்சியகத்திற்குரியது.

### அருங்காட்சியக வெளியீடுகளை மறு பதிப்பீடு செய்தல்

2. சென்னை அருங்காட்சியகத்தின் மொத்த வெளியீடான 175 புத்தகங்களில் சுமார் 100 புத்தகங்கள் கையிருப்பில் இல்லாமல் விற்பனையாகி விட்டன. இருப்பில் தீர்ந்துவிட்ட புத்தகங்கள், ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரால் மிகவும் விரும்பிக் கேட்கப்படுகின்றன. முதற்கட்டமாக, சில புத்தகங்களை மறு பதிப்புச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.5 இலட்சம் செலவிட நிதி ஒதுக்கீடு செய்யக் கருதப்பட்டுள்ளது.

### மாவட்டங்களில் புதிதாக அருங்காட்சியகங்கள் அமைத்தல்

3. புதுக்கோட்டையில் அரசு அருங்காட்சியகம் முன்பே இயங்கி வருகின்றது. மாவட்டத் தலைநகரங்கள் தோறும் அருங்காட்சியகங்கள் அமைக்க வேண்டும் என்று அரசு மேற்கொண்டுள்ள கொள்கையின்படி

1979ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, வேலூர், கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்குகின்றன. திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்திலுள்ள கொடைக்கானலில் அருங்காட்சியகம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆயினும், தகுந்த இடம் அமையாதபடியால் கொடைக்கானலுக்குப் பதிலாகப் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் வளாகத்தில் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 1997-98ஆம் நிதியாண்டில் சிவகங்கை மற்றும் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம் ஆகியவற்றில் அருங்காட்சியகங்கள் ரூ.8 இலட்சத்தில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

**அருங்காட்சியக வளாகத்தில் பொதுமக்கள் அமர்ந்து ஓய்வெடுக்க வசதியாக இருக்கைகள், நிழற்குடை அமைத்தல் மற்றும் நவீன குப்பைத் தொட்டிகள் அமைத்தல்**

4. சென்னை அருங்காட்சியகத்தைப் பார்வையிட நாளொன்றுக்கு சுமார் 2,000 பேர் வருகை புரிகின்றனர். பொதுமக்கள் அமர்வதற்காக அருங்காட்சியகக் கட்டடங்களுக்கு வெளிப்புறமும் கட்டடத்தின் உட்புறமும் போதுமான இருக்கைகள் இல்லை. நிழலில் பொதுமக்கள் ஓய்வு எடுப்பதற்காக இருக்கைகள், தோட்டங்கள், குப்பைத் தொட்டிகள் ஆகியவற்றை அமைத்தல் போன்ற 17 சிறு பணிகள் செய்ய 1997-98ஆம் ஆண்டில் ரூ.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

**அருங்காட்சியகத்தின் தோட்டத்திற்கும் மற்றும் பல்வேறு பிரிவுகளுக்கும் நீர்வசதிகளை மேம்படுத்தல்**

5. அருங்காட்சியக வளாகம் 18 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இவ்வளாகத்தில் வனத்துறையினரால் நடப்பட்டுள்ள தாவரங்களை நன்முறையில் பாதுகாக்கப் போதிய நீர்வசதி தேவைப்படுகிறது. தற்போது அதிகமான எண்ணிக்கையில பார்வையாளர்கள் அருங்காட்சியகத்தைக் காணவருகிறார்கள். அவர்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவற்றைச் செய்து கொடுக்கவும் ரூ.2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அருங்காட்சியகத்தில் பல்வேறு பிரிவுகளுக்கும் குறிப்பாக இரசாயனப் பிரிவிற்கும் நீர்வசதி செய்து தருவதற்கும் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியுள்ளது. இதற்காக மொத்தமாக ரூ.8 இலட்சம் 1997-98ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. சென்னை



அருங்காட்சியகத்தில் திறந்த கூடமாக அமைந்திருக்கும் இடத்தை வடிவமைப்புப் பிரிவிற்காகக் கட்டடமாக அமைப்பதற்கும், மானிடவியல் பிரிவில் ஆயுதங்கள் பிரிவினை நவீனப்படுத்துவதற்கும், வளர்கலைப் பிரிவில் உள்ள காட்சிப் பெட்டிகளை நவீனமுறையில் மின்விளக்கு வசதிகளுடன் அமைப்பதற்கும் என 1997-98ஆம் நிதியாண்டில் ரூ.6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

**சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியகங்களுக்கு அவசர விளக்குகள் வாங்குதல்**

6. சென்னை அருங்காட்சியகம் பரந்த வளாகத்தில் 7 பிரிவுகளுடன் 6 பெரிய கட்டடங்களைக் கொண்டு இயங்கி வருகிறது. சென்னை அருங்காட்சியகத்தில் மின்தடை ஏற்பட்டால் பயன்படுத்த அவசர விளக்குகளோ, மின்னாக்கிகளோ இல்லை. மின்தடை ஏற்படும்போது பார்வையாளர்கள் பொருட்களைப் பார்க்கவும் இடர்ப்பாடின்றி வழிகண்டு பிடிக்கவும் 1997-98 ஆம் ஆண்டில் அவசரகால விளக்குகள் வாங்க ரூ 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. சேலம் மாவட்ட அருங்காட்சியகத்திற்குப் புதிய டயோரமா காட்சிப் பெட்டிகள் அமைக்க ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. ஈரோடு மாவட்ட அருங்காட்சியகத்திற்கு 10 காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்குரிய தொகையாக ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

## (ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்

தமிழ்நாட்டில் பண்பட்ட பல்கலைகளுடன், கலைநயமிக்க பண்பாட்டையும் கட்டிக்காத்து, புதியவற்றை வளர்த்து வரும் பணிகளில், பல்வேறு தன்னார்வக் குழுக்களும் சில தனியார் நிறுவனங்களும் அவற்றின் எல்லை, அளவு, ஆற்றலுக்கு ஏற்ற வகையில் தமிழக அரசின் அமைப்புகளுடனும் அரசு சார் நிறுவனங்களுடனும் இணைந்தும் தனித்துய் தங்கள் பங்களிப்பைத் தந்து வருகின்றன.

அரசினர் கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள், அரசு கட்டட சிற்பக் கல்லூரி, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் ஆகியவற்றுடன் அரசு சார் நிறுவனங்களான இயல் இசை நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு, சவகர் சிறுவர் இல்லம் ஆகியவை பல்வேறு தளங்களில் கலைப்பணிகளுக்கு உரிய ஆக்கமும் தக்க ஊக்கமும் தந்து வருகின்றன.

[1997 ஏப்ரல் 16

2. கலை-பண்பாட்டு வளர்ச்சியை மேன்மேலும் ஊக்குவிக்க, மேற்கூறிய அமைப்புகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து புதிதாகக் கலை-பண்பாட்டு இயக்ககம், 1991-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது.

கலை-பண்பாட்டு இயக்ககத்தை வலுப்படுத்தும் முகாமாக ஒரு துணை இயக்குநர், ஒரு இளநிலை உதவியாளர்/தட்டச்சர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் பணியிடங்கள் 1997-98-ஆம் ஆண்டில் தோற்றுவிக்க ரூ. 2.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

கலை-பண்பாட்டு இயக்ககத்தின் செயற்பாடுகளை மாவட்ட அளவில் பரவலாக்கிட ஏதுவாக நான்கு மாவட்டங்களில் (காஞ்சிபுரம் உட்பட) பண்பாட்டு மையங்களைத் தொடங்க 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 9.03 இலட்சம் செலவிடப்பட உள்ளது. கலைகளின் வளர்ச்சிக்காகவும், கலைகளை வளர்க்கப் பாடுபடும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காகவும், கலை-பண்பாட்டு இயக்ககம் பற்பல திட்டங்களை வகுத்து அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

**பண்பாட்டுப் பலகணி**

3. புகழ் வாய்ந்த பழம்பெரும் கலைஞர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரை வரவழைத்து அவரவர் எந்தத் துறையில் வல்லுநர்களாக விளங்குகின்றார்களோ, அத்திறமையை விளக்கிக் கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் நிகழ்ச்சியாகப் 'பண்பாட்டுப் பலகணி' என்ற பெயரில் ஒரு திட்டம் 1992 ஏப்ரல் திங்களில் முதன் முதலில் தொடங்கப்பட்டு, கலை-பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் திங்கள் தோறும் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது இயல், இசை நாடகம் ஆகிய துறைகளில் முன்னேறி வரும் இளங்கலைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், இத் திட்டம் பரவலாக்கப்பட்டு, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பில் இத்திட்டத்தை சிறப்புற நடத்திட வாய்ப்பளிக்கப்பட்டது. சென்னை அருங்காட்சியகத்திலேயே மீண்டும் இந்நிகழ்ச்சிகளை நடத்தவும், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய அரசு இசைக் கல்லூரிகள் மூலமாக இத்திட்டத்தினை நடத்திடவும் திட்டமிடப்பட்டது. இத்திட்டப் பணிகளைச் செயற்படுத்திட 1996-97-ஆம் ஆண்டில் ரூ. 1.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 25-2-1997 முதல் 27-2-1997 வரை பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சியை நடத்தி உள்ளது.



1997 ஏப்ரல் 16]

**மாவட்டக் கலை மன்றங்கள்**

4. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும், கலை-பண்பாட்டை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரிய கலை வடிவங்களைப் பாதுக்காக்கவும் கலைத்திறமை மிக்கவர்களை ஊக்குவிக்கவும் மாவட்டக் கலை மன்றங்கள் நிறுவப்பெற்றுள்ளன. இத்திட்டப் பணிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.4.60 இலட்சம் மானியமாக வழங்கப்படுகின்றது.

**ஓவியக் கலையரங்குகள்**

5. மரபு சான்ற ஓவியங்களும், சிற்பங்களும் நடைமுறைக் கால ஓவிய வரைவுகளும் இடம் பெறும் வகையில், நீலகிரி மாவட்டத் தலைநகராகிய உதகமண்டலத்திலும், மதுரையிலும் ஓவியக் கலைக்கூடம் அமைக்கப்பெற்றுள்ளது. ஓவியக் கலைக்கூடத்திற்குத் தினமும் பல்வேறு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இக்கலைக்கூட வளாகத்தில் ஓர் அகில இந்தியக் கலைக்கூட முகாம் நடத்தபெற்றது.

**தாகூர் நூற்றாண்டு விழாக் கலையரங்கம்**

6. நோபல் பரிசு பெற்ற தேசியக் கவிஞர் தாகூர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழகத்தில் ஒரு கலையரங்கம் அமைக்க அரசு முடிவெடுத்து, சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் ரூ.40.32 இலட்சம் செலவில் கலையரங்கத்தைக் கட்ட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**1. அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள்**

7. சென்னை நகரிலும், கும்பகோணத்திலும் அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 1850-ஆம் ஆண்டு, சென்னையில் இராணுவத் துறையில் மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் அலெக்சாண்டர் அண்டர் என்பவரால் சென்னை ஓவியக் கைவினைத் தொழிற் பள்ளி என்ற பெயரில் முதல் முதலில் தோற்றுவிக்கப்பட்ட பள்ளியை 1952 ஆம் ஆண்டு முதல் அரசு ஏற்றுக் கொண்டு முறையே அது தொழில், வணிகத்துறை மற்றும் கல்வித் துறைகளின் கட்டுப் பாட்டில் இயங்கி வந்துள்ளது. 1963-ஆம் ஆண்டில் பள்ளிக்கூடமாக இருந்த இந்த நிலையம் 'கல்லூரி' எனும் தகுதிக்கு உயர்த்தப்பட்டது. கடந்த ஈராண்டுகளாக இக்கல்லூரி 'தன்னாட்சி' பெற்று இயங்கி வருகிறது.

[1997 ஏப்ரல் 16

8. கும்பகோணத்திலும் அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. இக்கல்லூரிகளில் ஓவியக்கலை, சிற்பக்கலை (மரம், உலோகம்,சுதை), துகிலியல் வடிவமைப்பு, காட்சி சார் தொடர்பு வடிவமைப்பு மற்றும் சுடுமட்பாண்ட ஆலையக வடிவமைப்புப் பிரிவுகளில் பட்டப் படிப்பு மாணவர்கள் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

கலை சார்ந்த பொருட்களை உற்பத்திச் செய்வதற்கு வடிவமைத்துத் தரும் மூலவர்களாக இக்கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்கள் விளங்கி வருகின்றனர். ஆடைகளுக்கான துணிகளில் புதுப்பது ஓவியங்களை அச்சிட, வடிவமைத்துத் தருவதிலும் கலைப்பட்டம் பெற்றோர் பெரும்பங்கு வகிக்கின்றனர். கலைநயம் மிக்க சுடுமண் பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகளில், அச்சுகளை வடிவமைப்பதில் கலைப்பட்டம் பெற்றோரின் பங்கு சிறப்பானது. விளம்பர வெளியீட்டுத் துறைகளிலும் காட்சி சார் செய்தித் துறைகளிலும் பட்டம் பெற்றோர் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

அயல்நாட்டு மாணவர்களும், நம் நாட்டில் உள்ளவர்களும், நுண்கலைப் பிரிவில் கல்வி பயில விரும்புவோர்க்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில், சுயநிதி திட்டத்தின் கீழ் மாணவர்களைச் சேர்க்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. கணினி வரையுருவக் கலையையும் (Computer Graphics) செராமிக் பாடத்திட்டதையும் அயல்நாட்டின் கல்வித் தரத்திற்கு இணையாகச் செயற்படுத்தவும் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வியாண்டிலும் சென்னை அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் 100 மாணவர்களும், குடந்தை, அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் 50 மாணவர்களும் பட்டப் படிப்புக் கல்வி பயிலச் சேர்க்கப்படுகின்றனர்.

9. சுற்றுலாப் பயணிகளையும்,அயல்நாட்டுப் பெருந் தலைவர்களையும் ஒருங்கே கவரும் வகையில் தற்காலிகக் கலை வரலாற்று அருங்காட்சியகம் ஒன்றினை ரூ.2.50 இலட்சம் செலவில் 1997-98-ஆம் ஆண்டில் சென்னை, அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அரியதும், தனித்ததுமான கலைகளைக் கொண்ட அருங்காட்சியகக் கலைக்கூடம் ஒன்றினை ரூ.1.50 இலட்சத்தில் குடந்தை அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது பட்டப் படிப்பு நடத்தப்படும் இந்தக் கல்லூரிகளில் 1997-98 முதல் வண்ணக் கலையில் முதுகலைப் பட்டப் படிப்பு அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டொன்றுக்கு ஒரு கல்லூரிக்கு ஆகும் செலவினம் ரூ.2.29 இலட்சம் ஆகும். மேலும், சென்னை அரசு



1997 ஏப்ரல் 16]

கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் அச்சாக்கக் கலையை முதன்மைப் பாடமாகக் கொண்டு பட்டப்படிப்பு தொடங்கப் படவுள்ளது. மேலும் இக்கல்லூரி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக இன்றியமையாத் தேவையாக உள்ள இயந்திரங்களும் கருவிகளும் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கவும், குடந்தை அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியில் ரூ.7.50 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டு இம்மதிப்பீட்டில், 1997-98 ஆம் ஆண்டில் முதற் கட்டமாக ரூ.3 இலட்சத்திற்குக் கட்டடம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளன.

## 2. அரசு கட்டட - சிற்பக் கல்லூரி

10. சிற்பக் கலை வரலாற்றில் சீரிய இடம் பெற்றது மாமல்லபுரம், பார்வையாளர்களின் கண் முன்னே வரலாற்றைக் கொண்டுவந்து நிறுத்தும் வகையில் அரும்பெரும் சிற்பங்கள் நிறைந்த இடம் மாமல்லை எனில் மிகையன்று. அத்தகு வரலாற்றுப் புகழுடைய மாமல்லையில், கோவில் கட்டடக் கலை (மர, உலோக, சுதை), சிற்பக்கலையில் பட்டப்படிப்பு வகுப்புகளைக் கொண்டு அரசு கட்டட - சிற்பக் கல்லூரி இயங்கி வருகிறது. மரபு சார்ந்த தைல ஓவியக்கலைத் துறையிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. தென்னகத்திலேயே இக்கலைத் துறைகளுக்கான கல்லூரி இஃதொன்று மட்டுமே. அரசு கட்டட சிற்பக் கல்லூரியிலும் அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரியிலும் பயிலும் மாணவர்கள் அனைவர்க்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்பெறுகிறது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களில் தகுதிவாய்ந்த கைவினைக் கலைஞர்களைத் தெரிவுசெய்து தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவும் படிப்புதவித் தொகை வழங்கி வருகிறது. கலை விரும்பிகளையும், உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கும் வகையில், திறந்தவெளி கலைப் பூங்கா ஒன்றினை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் முதற்கட்டப் பணிகள் தொடங்க ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

## 3. அரசு இசைக் கல்லூரிகள்

11. அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஊர்களில் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகளில் குரலிசை, கருவியிசை, ஆடற்கலை, கடம், கஞ்சிரா, நுகர்சங்கம், நட்டுவாங்கம், கிராமியக் கலை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. குரலிசைத் துறையில் முதுகலைப் பட்டயப் படிப்பு (இசைக் கலைமணி) வகுப்பு நடத்தப்படுகிறது. சென்னை,

[1997 ஏப்ரல் 16

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் முழுநேர வகுப்புகளில் 280 மாணவர்களும், மாலை நேர வகுப்புகளில் 150 மாணவர்களும் இசை பயின்று வருகின்றனர். புகழ்வாய்ந்த இசைப் பேராசியர்கள் பங்கேற்கும் தனி வகுப்புகள் வாயிலாக மாணவர்களுக்குச் சிறப்பு இசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இசைக் கல்லூரிகளில் 'தமிழ்ப்பண் ஆராய்ச்சி' மேற்கொள்ளக் கருதப்படும்.

12. இசைக் கல்லூரிகளில் நாதசுரம், தவில், கடம், கஞ்சிரா, நுகர்சங்கம் ஆகிய பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையாகத் திங்கள்தோறும் ரூ.100/- வழங்கப்பட்டு வருகிறது. நட்டுவாங்கம் பயிலும் மாணவிகளுக்கு உதவித் தொகையாகத் திங்கள் தோறும் ரூ. 150/- வழங்கப்பட்டு வருகிறது. நாதசுரம், தவில், கடம், கஞ்சிரா, நுகர்சங்கம் மற்றும் நட்டுவாங்க பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் படிப்புதவித் தொகையினை ரூ.200/- ஆக உயர்த்தி வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை, அரசு இசைக் கல்லூரியில் 5 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் 1997-98 ஆம் ஆண்டில் கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது. மதுரையில் மாலை நேர இசைக் கல்லூரி 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது. கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிக்காக இசைக் கருவிகள், மின்னணுக் கருவிகள், புத்தகங்கள் ஆகியவற்றை 1997-98 ஆம் ஆண்டில் ரூ.4.73 இலட்சம் செலவில் வாங்கக் கருதப்பட்டுள்ளது. தஞ்சை, திருவையாறு அரசர் கல்லூரியில் இயங்கும் இசைத் துறையினைப் பிரித்து அரசு இசைக் கல்லூரியாக 1997-98 ஆம் ஆண்டு முதல் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### இசைப் பள்ளிகள்

13. சிறுவயதிலேயே இசை ஆர்வம் மிக்கவர்களை ஊக்குவித்து அவர்களது இசை ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும் நமது பாரம்பரியத் தொன்மை இசையினை மாணவர்கள் கற்று அவர்களைப் புகழ் மிக்க இசைக் கலைஞர்களாக உருவாக்கும் நோக்கத்துடன் தமிழகத்தில் இவ்வாண்டில 5 இசைப் பள்ளிகள் ரூ.25 இலட்சம செலவில் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை உட்பட ஐந்து மாவட்டங்களில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழிசை மூவர் விழா

14. தமிழிசைக்குத் தொண்டுபுரிந்த திரு. முத்துத்தாண்டவர், திரு. மாரிமுத்தாப் பிள்ளை, திரு. அருணாசலக் கவிராயர் ஆகியோரின்



1997 ஏப்ரல் 16]

பிறந்த இடமான சீர்காழியில், அப்பெருமக்களின் நினைவு நாளினைக் கொண்டாடும் வகையில் மூன்று நாள்கள் 'தமிழிசை மூவர் விழா' ஆண்டுதோறும் சிறப்புற நடத்தப்பெறுகிறது. இவ்விழா 28-2-97 முதல் 2-3-97 வரை சீர்காழியில் சிறப்பாக நடத்தப்பட்டது.

### ஆடல் அரங்கேற்ற விழா

15. இசைக் கல்லூரியில் நாட்டியம் பயின்று, சான்றிதழ் பெற்று, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஐந்து மாணவிகளுக்கும், எஞ்சிய கலைப் பிரிவு மாணவ, மாணவியரில் ஐவருக்கும் ஆக ஆண்டுதோறும் பத்து மாணவர்களுக்கு, அரசுச் செலவில் ஆடல் அரங்கேற்ற விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

### சிலம்புக் கூடம்

16. தற்பொழுது சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் பரதநாட்டியம் மற்றும் நட்டுவாங்கம் வகுப்புகள் நடத்தப் பெறுவதற்கு ரூ.3 இலட்சம் செலவில் சிலம்புக்கூடம் கட்டப்பட்டுள்ளது.

### இசை ஆசிரியர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி

17. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகளில் பணிபுரியும் இசை ஆசிரியர்களுக்கு இசை வல்லுநர்கள் மற்றும் இசை ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு, செயல்முறை விளக்க வகுப்புகளை நடத்தி இசை ஆசிரியர்களின் இசை கற்பிக்கும் திறனை மேம்படுத்த மறு பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. கோவை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 1997-98ஆம் கல்வியாண்டிலிருந்து ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் தொடங்கி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தமிழிசைக் களஞ்சியம்

18. 'தமிழிசைக் களஞ்சியம்' எனும் இசைத் தொகுப்பு நூல் வெளியிட ரூ.2.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழந்தமிழ் இசையின் இசைக் கலைச் சொற்கள் எவ்வாறு இன்று வேறு பெயர்களைப் பெற்றிருக்கின்றன என்பது குறித்தும், இசைத் தமிழ் இலக்கணம் இன்றைய இராகங்களுக்கு அடிப்படையாகவும், இலட்சியமாகவும் விளங்கும் பண்களைப் பற்றிய விரிவான விளக்கமும் மற்றும் ஆலத்தி போன்ற கற்பனை இசை பற்றிய விளக்கமும், சங்க

[1997 ஏப்ரல் 16

காலத்திலிருந்து இன்று வரை தமிழிசை எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பது பற்றிய விளக்கமும் இவற்றைச் சார்ந்த ஆராய்ச்சி விளக்கங் களையும் தொகுத்திடும் பணி மேற்கொள்ளப்பட்டு நூல் நிறைவுறும் நிலையில் உள்ளது.

**4. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

19. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், மைய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காகவும், தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்கவும் மாநில அரசால் தோற்றுவிக்கப்பெற்ற தன்னாட்சி பெற்ற கலை நிறுவனமாகும். இந் நிறுவனத்தால் நிறைவேற்றப்பெறும் அனைத்துத் திட்டங்களுக்கும் அரசு மானியம் அளித்து ஊக்குவித்து வருகிறது. இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை நமது மாநிலப் பண்பாட்டு மரபைக் காக்கும் வண்ணம் இம்மன்றம் போற்றி வளர்த்து வருகிறது.

**கலைமாமணி விருது**

20. கலைத் துறையில் அரிய பணியாற்றிய புகழ்மிக்க இம்மாநிலக் கலைஞர்கள் மட்டுமன்றி மற்றும் உள்ள பிற மாநிலக் கலைஞர்களையும், பாராட்டுகின்ற வகையில் இம்மன்றத்தால் 'கலைமாமணி விருது' வழங்கப்பெறுகிறது. இதுவரை 938 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி விருது'கள் வழங்கப்பெற்றுள்ளன. புகழோடு வாழ்ந்து மறைந்த 242 கலைப் பேரறிஞர்களின் திருவுருவப் படங்கள் 'கலைமாமணி' விருது வழங்கும் விழாக்களில் திறந்துவைக்கப் பெற்று மன்றத்தால் காக்கப்பெறுகின்றன. 'கலைமாமணி' விருது பெற்ற நலிவுற்ற கலைஞர் களுக்கு நிதியுதவி வழங்கும் வகையில் 147 கலைஞர்களுக்கு ரூ. 1,000-மும், 17 கலைஞர்களுக்கு ரூ. 5,000-மும் பொற்கிழியாக இதுவரை வழங்கப்பெற்றன. 1994-95 ஆம் ஆண்டு முதல் இத்தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 உயர்த்தப்பட்டு மூன்று கலைஞர்களுக்கு பொற்கிழியாக வழங்கப்பட்டது. கலைத் தொண்டாற்றிடும் தனியார் கலை நிறுவனங் களையும் செம்மையுறச் செயற்பட்டு வரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில் 18 கலை நிறுவனங்களுக்கும் 11 நாடகக் குழுக்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

**மாநிலங்களுக்கிடையே பண்பாட்டுப் பரிமாற்றம்**

21. தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை மேம்படுத்தவும், இந்தியப் பண்பாட்டு மரபினைப் பல்வேறு மாநில மக்களும் அறிந்து கொள்ள



1997 ஏப்ரல் 16]

உதவும் வகையிலும், இம்மன்றம் மைய சங்கீத நாடக அகாதமியுடன் இணைந்து மாநிலங்களுக்கிடையேயான பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. ஒவ்வோராண்டும் கலைக் குழுக்களைத் தமிழகத்திலிருந்து மூன்று மாநிலங்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக அனுப்புகிறது. மூன்று மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்குக் கலைக் குழுக்களை வரவேற்று மாவட்டாட்சியர்களின் உதவியுடன் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. இவ்வாண்டு அருணாச்சலப் பிரதேச மாநிலக் கலைக் குழு 31-1-1997 முதல் 5-2-1997 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்து நான்கு கலை நிகழ்ச்சிகளைச் சென்னையில் நடத்தியது.

**நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி**

22. வாழ்நாள் முழுவதும் வளர் கலைக்குத் தொண்டாற்றிய நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெறுகிறது. கலைஞர்கள் திங்கள் தோறும் ரூ. 500 வீதம் நிதியுதவியாகப் பெறுகின்றனர். இதுகாறும் 4,267 கலைஞர்கள் நிதியுதவி பெறுகின்றனர்.

**மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குப் பராமரிப்பு நிதி**

23. மறைந்த புகழ்மிக்க கலைஞர்களின் குடும்ப நலனுக்காக ரூ.3000/- நிதியுதவியாக வழங்கப் பெறுகிறது. இதுகாறும் 134 குடும்பங்கள் இந்நிதியுதவியால் பயன்பெற்றுள்ளன.

24. சென்னை, முனைவர் ம.சா. சுவாமிநாதன் ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து 21-2-1997 மற்றும் 22-2-1997 ஆகிய நாட்களில் (கட்டைக் கூத்து) கலை நிகழ்ச்சியைச் சென்னையில் மன்றம் நடத்தியது.

**புத்திளம் கலைஞர்களை ஊக்குவித்தல்**

25. பரத நாட்டியம், இசை ஆகிய கலைத் துறைகளில் பயிற்சி பெற்ற புத்திளம் கலைஞர்களை அறிமுகம் செய்யும் வண்ணம் அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின் படி, தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறந்த கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப் பெற்றுள்ளது.

[1997 ஏப்ரல் 16

**புதிய நாட்டிய நாடகம் தயாரிக்க நிதியுதவி வழங்கும் திட்டம்**

26. நாடகக் குழுக்களை ஊக்குவிக்கும் வகையிலும் தமிழகத்தில் சிறந்து விளங்கும் நாட்டியக் கலை நிறுவனங்களைத் தெரிவு செய்து அந்நிறுவனங்களின் வாயிலாக அறிவியல் கலைநுட்பங்களோடு புதிய நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்யும் திட்டம் ஒன்றினை மன்றம் செயற்படுத்தி வருகிறது.

**நூலகத்திற்கெனக் கட்டடம் கட்டுதல்**

27. கலை வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வண்ணம் மன்ற நூலகத்தை விரிவாக்க, மன்ற வளாகத்தில் தனியாக ஒரு கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திங்கள் தோறுமான கலை நிகழ்ச்சிகள்**

28. மன்றம் திங்கள் தோறும் ஒரு கலை நிகழ்ச்சியை மாவட்டத் தலைநகரில் நடத்தும் திட்டத்தையும் சிறப்புறச் செயலாற்றி வருகிறது. இத்திட்டத்தின்படி பொதுமக்கள் கூடுகின்ற கோயில்களிலும் கலை மன்றங்களிலும் திங்களுக்கு ஒரு முறை இசை, நாடகம், நடனம், கிராமியக் கலைகள் ஆகிய துறைகளைச் சார்ந்த இளம் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் முறையில், கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

**அரசின் சிறப்பு நிதியுதவியுடன் நடத்தப்படும் கலை விழாக்கள்**

29. மன்றத்திற்கெனப் பொதுத் தலைப்பில் அரசு வழங்கும் நிதியுதவியோடு அவ்வப்போது சிறப்பு நிதியும் அளித்துச் சில கலை நிகழ்ச்சிகள் மன்றத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. இளம் கலைஞர்களை ஊக்குவித்துத் தனிச்சிறப்பு நிதியாக அரசு வழங்கிய ரூ.10,000/-ஐக் கொண்டு மன்றம் 1996 சனவரித் திங்களில் 'கன்யா' என்ற நாட்டிய நாடகத்தை நடத்தியது.

**கலை மேதைகளின் நினைவு விழாக்கள்**

30. கலையைப் போற்றிப் புகழால் உயர்ந்த கலைப் பேரறிஞர்களான அரியக்குடி இராமானுஜர், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், டி.என். ராசரத்தினம் போன்ற கலை மேதைகளின் நினைவு நாள்களை மன்றம் ஆண்டுதோறும் நினைவுகூர்கிறது. கலைவாணர் என்.எஸ்.



1997 ஏப்ரல் 16]

கிருஷ்ணன் அவர்களின் நினைவு நாள் 3-9-1996 இல் சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், நவாப் இராசமாணிக்கம் ஆகியோரின் நினைவு நாள்களை 20-12-1996 இல் மன்றம் மதுரையில் கொண்டாடியது. அரியக்குடி இராமனுஜர், டி.என். ராசரத்தினம், ஔவை டி.கே. சண்முகம், இசையரசர் தண்டபாணி தேசியர், வழுவூர் இராமையாப் பிள்ளை மற்றும் கும்பகோணம் பிடில் இராசமாணிக்கம் ஆகியோர் நினைவு நாள்கள் கொண்டாடப்படவுள்ளன.

நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் திருவுருவச் சிலையை 8-1-1997 இல் பம்மலில் திறந்தபோது, பம்மல் சம்பந்தனார் அறக்கட்டளையுடன் இணைந்து 'சபாபதி' நாடகம் மன்றத்தால் நடத்தப்பட்டது.

**முத்தமிழ்க் கலை விழா**

31. இவ்வாண்டு பொள்ளாச்சியில் முத்தமிழ்க் கலை விழாவும், பூம்புகாரில் இந்திர விழாவும் நடத்த மன்றம் ஏற்பாடு செய்து வருகின்றது. சென்னையில் 17-2-1997 மற்றும் 18-2-1997-இல் பரதநாட்டியக் கலை விழா சிறப்பாக நடத்தப்பட்டது.

**நாடகக் குழுக்களுக்குப் பேருந்துக் கட்டணச் சலுகை**

32. நாடகக் குழுக்களுக்குத் தனி ஊக்கமளிக்கும் வகையில் நாடகம் நடத்த அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய 50% கட்டணச் சலுகை அனுமதிக்கப்பெறுகிறது.

**அருங்கலை நூல்களை வெளியிட நிதியுதவி அளித்தல்**

33. அரிதாகியுள்ள அருங்கலை நூல்களை வெளியிடவும், நூலாசிரியர்களுக்கு மன்றம் நிதியுதவி வழங்கி வருகிறது. இதுகாறும் இத்திட்டத்தின் கீழ் 92 நூல்கள் நிதியுதவி பெற்று வெளியிடப் பெற்றுள்ளன.

**கலை நிறுவனங்களில் பயிற்சி பெறும் திறமைமிக்க ஏழை மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்குதல்**

34. அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் வறிய நிலையிலுள்ள திறம்படைத்த மாணவர்கட்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மன்றம் செம்மையுறச் செயற்படுத்தி வருகின்றது.

[1997 ஏப்ரல் 16

**நவின கலைக் கூடம்**

35. கலைக் கூடத்தில் பழம்பெறும் இசைக் கருவிகள், இயல், இசை, நடனம், நாடகம், கிராமியக் கலைகள், திரைப்படம் ஆகிய துறைகளைச் சார்ந்த அரிய கலைப்பொருள்கள், நூல்கள் ஆகியவற்றைச் சேகரித்து அவை இடம்பெறும் ஆராய்ச்சிக் கூடமாக மன்ற நூல் நிலையம் திகழவும், சுமார் ஆயிரம் இருக்கைகள் கொண்ட கலையரங்கம் இடம் பெறுவதற்கும் ரூ.6.48 இலட்சம் செலவில் தரைத்தளம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், மலைவாழ் மக்களின் கலைகளைப் பதிவாக்கல், வறிய நாட்டுப்புறக் கலைஞர்களுக்குக் கருவிகள் வாங்க நிதியுதவி வழங்கல், பொம்மலாட்டக் கலைக் குழுக்களை ஊக்குவித்தல், மன்றத்தின் செயற்பாடுகளைப் பதிவாக்கல், பாரம்பரிய நாட்டுப்புறக் கலை வடிவங்கள் குறித்து நூல் வெளியிடல், தமிழ் இசைக் கலைஞர்களுக்கு ஆதரவு ஊதியம் (Fellowship) அளித்தல், குழந்தை கலை விற்பன்னர்களை அடையாளம் கண்டறிந்து படிப்புதவித் தொகை வழங்கல், பேரொலி நாடாவிலிருந்து ஒலிப் பேழைகளில் பதிவு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

## 5. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

36. தமிழ்நாட்டில் ஓவிய, சிற்பக்கலை வளர்ச்சித் தொடர்பாக மைய லலித் கலா அகாதமியுடன் இணைந்து செயற்படும் நிலையில் தமிழக அரசால் 1975 இல் தோற்றுவிக்கப்பட்ட ஓவிய நுண்கலைக் குழு, நுண்கலை வளர்ச்சிக்காகப் பணியாற்றுகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் திட்டங்கள் நிறைவேற்றப் பெறுகின்றன.

37. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கலைக் காட்சிகள், கலை வல்லுநர்களின் செயல் விளக்கச் சொற்பொழிவுகள், மாணவர் களிடையே ஓவியப் போட்டிகள், பயிலரங்குகள் ஆகியவற்றை நடத்தி அதன் மூலம் மக்களிடையே நுண்கலை பற்றிய விழிப்புணர்ச்சியையும் கலையார்வத்தையும் இக்குழு ஏற்படுத்தி வருகிறது. தகுதிவாய்ந்த திறமைமிக்க இளங் கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிப் படுத்தவும், இத்திறமைகளை அவர்கள் மேம்படுத்திக் கொள்ளவும், ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் தமிழகத்தில் பல்வேறு பகுதியிலும் இளங் கலைஞர்களின் பயிலரங்கு நடத்தப்பெறுகிறது. தமிழ்நாட்டில் உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்காகச் சிறப்புப் பயிற்சியையும் நடத்துகிறது.



1997 ஏப்ரல் 16]

38. ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை ஆண்டு தோறும் காட்சியாக அமைத்து, கண்காட்சியில் சிறந்து விளங்கும் அரிய படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகள் அளிக்கப்பெறுகின்றன. ஆண்டுதோறும் சிறந்த ஓவிய, சிற்பப் படைப்பாளிகள் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் 'கலைச் செம்மல்' விருது வழங்கப் பெறுகின்றனர். அவ்வாறே பாரம்பரியக் கலைப் படைப்புகள் கண் காட்சிகள் அமைத்து, சிறந்து விளங்கும் படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு விருதுகளும் சிறந்த பாரம்பரியக் கலைப் படைப்பாளர் இருவருக்கு அவர்கள் இத்துறையில் செய்துள்ள பணிகளைப் பாராட்டும் வகையில் விருதுகளும் வழங்கப்பட்டன. நுண்கலைகள் பயிலும் இளங்கலைஞர்கள் ஓவிய, சிற்பக் கலைகளில் ஆய்வு மேற்கொள்ளவும் இராஜஸ்தானிலுள்ள பனஸ்தாலி நகருக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலைப்படைப்புகள் தனியரங்கச் சேமிப்பிற்காக வாங்கப் பெறுகின்றன. பல்வேறு கலைப் பிரிவுகளைச் சார்ந்த கலைஞர்களிடையே கருத்துப் பரிமாற்றம் அமையும் வண்ணம் ஆண்டுதோறும், கலைஞர்கள் உலா அரங்கையும் நடத்தி வருகிறது. தகுதி வாய்ந்த ஓவிய, சிற்பக் கலைப் படைப்பாளர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் 'தனி நபர், கண்காட்சி'யை நடத்தவும் நிதியுதவி வழங்கப்பெறுகிறது. மாநிலங்களுக்கிடையே நுண்கலைக் காட்சியும் அவ்வப்போது நடத்தப் பெறுகின்றது.

39. நலிந்த கலைஞர்கள் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங் களைக் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய, சிற்பத் துறையில் சிறப்புப் பணிபுரிந்து வரும் மூத்த கலைஞர்களுக்கும், இளம் கலைஞர்களுக்கும் மைய அரசு வழங்கும் விருதுத் தொகை பெறுவதற்காகவும், விண்ணப்பங்களைக் குழு பரிந்துரை செய்கிறது. ஓவிய, சிற்பக் கலை வல்லுநர்களின் உரைகளையும், செயல் விளக்கங்களையும் இக்குழு காணொலிப் பதிவும் செய்கிறது. தென்மண்டலப் பண்பாட்டு மையம் வழங்கிய தொகைகளைப் பயன்படுத்திக் கும்பகோணத்தில் சுடுமண் சிற்பக்கலைஞர்கள் முகாம், மாமல்லையில் கற்சிற்பக்கலைஞர்கள் முகாம் மற்றும் உதகையில் ஓவியக்கலைஞர்கள் முகாம் நடத்தப்பட்டன. மைய லலித்கலா அகாதமி நடத்திடும் தேசியக் கலை விழாவில் ஓவிய நுண்கலைக் குழு பங்கு கொள்கிறது. இதுவரை ஐந்து முறை சிறந்த காட்சிக்கூட அரங்கிற்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு ஓவிய காட்சிக்கூட அரங்கிற்கான... நுண்கலைக் குழு தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு [illegible]கலைக்

குழுவில் திட்டப்பணிகளுக்கு 1997-98 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**6. ஜவகர் சிறுவர் இல்லம்**

40. ஜவகர் சிறுவரில்லம், பண்டித ஜவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு மைய அரசு வழங்கிய தொகை ரூ.15.72 இலட்சங்களைக் கொண்டு தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கலை-பண்பாட்டு இயக்கக ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கி வரும் நிறுவனமாகும்.

41. 5-லிருந்து 16 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகள் ரூ.30/- வீதம் ஆண்டுச் சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்கின்றனர். மேலும் திங்கள் ஒன்றுக்கு ரூ.10/-வீதம் ஒரு செயல்முறைப் பிரிவிற்குச் சிறப்புக் கட்டணமாகச் செலுத்துகின்றனர். இங்கு பாதநாட்டியம், கிராமிய நடனம், இசை, ஓவியம், கைவினை, நாடகம், மிருதங்கம், ஆர்மோனியம், கிட்டார், டிரம்ஸ், பேண்டு வாத்தியம், தையல், உடற்பயிற்சி, காரத்தே, கணினி போன்றவைகளில் குழந்தைகளுக்குப் பிற்பகல் 3.00 மணி முதல் 6.00 வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணி வரையிலும் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. 1995-96 ஆம் ஆண்டில் 1,067 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். 1996-97 ஆம் ஆண்டில் 710 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

42. ஜவகர் சிறுவர் இல்லத்திற்காக ரூ.1.00 இலட்சம் செலவில் 1997-98 ஆம் ஆண்டில் கணினிகள் வாங்கவும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு செயல் விளக்கப் பொருள்கள் வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டு உள்ளது. வறிய நிலையிலுள்ள குழந்தைக் கலைஞர்களுக்கு அரங்கேற்றம் செய்து வைக்க 1997-98 ஆம் ஆண்டில் ரூ.25 ஆயிரம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் ரூ.1.25 இலட்சம் செலவில் ஜவகர் சிறுவர் இல்லங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





## இணைப்பு - 2

*(7ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### முன்னுரை

அரசு செயல்பாடுகளில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மூன்று முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன.

தொழில் அமைதியைக் காத்து, தொழிலாளர் நலனுக்காக சுமூக உறவினை நம்பிக்கை அளிக்கும் வகையில் நிலைநாட்டுதல்.

1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தினை அமுல்படுத்துதல்;

மற்றும்

தொழிலகங்கள் மூலமாக புதுமையான திறமை மிக்க நபர்களை அவசரத் தேவைக்குத் தகுந்தாற்போல் தொழில் நிறுவனங்களுக்குப் பயிற்சி பெற அனுப்புதல் மற்றும் தமிழகம் முழுவதும் வேலை வாய்ப்பு வேண்டுபவர்களுக்கு வேலை அளிக்க ஆவன செய்திடவும் மற்றும் வேலை நிலவரம் குறித்த செய்திகளைத் தெரிவிக்கவும் தமிழகம் முழுவதும் பெரிய அளவில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் செயல்படுதல்.

இம்மூன்று செயல்பாடுகளும் முறையே தொழிலாளர் ஆணையர், தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வர் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அவர்கள் மூலம் நடைபெறுகின்றன.

[1997 ஏப்ரல் 16

## அத்தியாயம் - 1

## தொழில் உறவுகள்

சிறந்த மற்றும் ஆரோக்கியமான தொழிலமைதி நிலவ அத்தியாவசிய மானவைகளில் நிறைவான மற்றும் நீடித்த தொழில் உறவு, இன்றியமையாத் தேவையாகும். ஒழுக்கமான, கட்டுக்கோப்பான, உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிகோலும் சிறந்த தொழிலாளர்களே மூலதனம் மற்றும் தொழில் வளத்திற்கான முதல் வழிகாட்டிகளாவர். தொழில் வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு வழிகோலும் எந்த ஒரு அரசுக்கும், தொழிலாளர் மற்றும் நிர்வாகங்களுக்கு இடையேயான இணக்கமான உறவே முதல் தேவையாகும். இவ்வகையில் தொழிலாளர் துறையின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பல்லாண்டுகளாக நிலவிவரும் சுமூகமான தொழில் உறவுகள், தொழிலாளர் துறை அலுவலர்கள் இப்பணியினை மிகவும் வெற்றிகரமாக ஆற்றி வருவதை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கிறது. வரும்முன் காத்தல் மற்றும் சீரிய சமரச நோக்கு ஆகிய இவ்விரு அடிப்படைத் திறன்களின் மூலம் அவர்களால் இதனைச் சாதிக்க முடிகிறது. தொழில் உறவுகளில் தொழிலாளர் துறையின் பங்கு ஒரு வரவேற்கத்தக்க காரணியாக அமைந்துள்ளது. சம்பளம் மற்றும் போனஸ் பிரச்சினைகளில் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் ஆகிய இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண்பதை தொழிலாளர் துறை ஊக்குவிக்கிறது. இது போன்ற இருதரப்பினரிடையேயான ஒப்பந்தங்கள்தான் ஏனைய ஒப்பந்தங்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தவை என்பதில் அரசு அசைக்கவொண்ணா நம்பிக்கை கொண்டுள்ளது. ஏனெனில் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் தரப்பினர் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு, ஒற்றுமையுடனிருந்தால் மட்டிலுமே இத்தகு ஒப்பந்தங்கள் ஏற்பட சாத்தியமாகும். அதேபோல் மூன்று மற்றும் ஐந்து வருடங்களுக்கு அமலில் இருப்பது போன்ற நீண்டகால ஒப்பந்தங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதிலேயே தொழிலாளர் துறை உறுதி பூண்டுள்ளது. இவ்விரு அடிப்படைக் காரணங்களினாலேயே, தொழில் உறவும், உற்பத்தித் திறனும் கடந்த சில வருடங்களாக சீராக நிலைத்து நிற்கிறது.

இந்த அரசின் போற்றத்தக்க அணுகுமுறை காரணமாக, தொழிலாளர் நலன் மேம்பாடு அடைந்துள்ளதோடு, வேகமான தொழில் வளர்ச்சியும், தொழிலுறவில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையும் இம்மாநிலத்தில்



1997 ஏப்ரல் 16]

நிலவி வருகிறது. இது 1996-ம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு குறித்த எண்ணிக்கை மூலம் தெளிவாகிறது.

1996-ம் ஆண்டில் வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு காரணமாக ஏற்பட்ட மனித இழப்பு நாட்கள் முறையே 11.18 இலட்சங்கள் மற்றும் 5.34 இலட்சங்களாகும். பெருவாரியான வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்களின் சமரச மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறை ஒப்பந்தங்கள் ஏற்பட வாய்ப்பாக இருந்துள்ளன.

வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு சம்பந்தப்பட்ட தொழிற் தகராறுகளைக் கையாள்வதோடல்லாமல், இத்துறை அலுவலர்கள் 1965-ம் ஆண்டு போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1972-ம் ஆண்டு பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1948-ம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் மற்றும் 1981-ம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் பட்டுவாடாச் சட்டம் போன்ற பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் எழுப்பப்படும் கேட்பு மனுக்களையும் கையாண்டு தீர்த்து வைப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

| | 1995 (1995 ஜனவரி முதல் நாளிலிருந்து 1995 டிசம்பர் 31-ம் நாள் வரை) | 1996 (1996 ஜனவரி முதல் நாளிலிருந்து 1996 டிசம்பர் 31-ம் நாள் வரை) |
|---|---|---|
| அ. ஆண்டுத் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த புகார்கள் மற்றும் தகறாறுகளின் எண்ணிக்கை. | 2004 | 2248 |
| ஆ. இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/தொழிற் தகராறுகளின் எண்ணிக்கை. | 9026 | 9529 |
| மொத்தம் | **11030** | **11777** |
| இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் எண்ணிக்கை. | 8782 | 9729 |
| ஈ. ஆண்டு இறுதியில் நிலுவையில் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை. | 2248 | 2048 |

[1997 ஏப்ரல் 16

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி சமயத்தில் தொழிற் சங்கங்களால் போனஸ் பிரச்சினை எழுப்பப்பட்டு வருகிறது. அடிக்கடி அது பெரிதாக உருவெடுப்பதோடு அல்லாமல் மாநிலம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற வகையில் உணர்ச்சி மயமானதாகவும் ஆகிவிடுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தொழிலாளர் துறையின் • சமரச அலுவலர்கள் திறம்படச் செயல் பட்டதனால் 1996-ம் ஆண்டு தீபாவளி சமயத்தில் எழுப்பப்பட்ட போனஸ் பிரச்சினை குறித்து எத்தரப்பிலிருந்தும் மாறான குற்றச்சாட்டு பெறப்படவில்லை.

இந்த அரசு பதவியேற்றது முதல், மூடப்பட்ட நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தீவிர முயற்சிகள் காட்டியதன் விளைவாக—

1. வசந்தா மில்ஸ், கோவை.
2. அழகப்பா ஸ்பின்னிங் மில்ஸ், இராஜபாளையம் ஆகிய இரண்டு நிறுவனங்களை மீண்டும் திறக்க இயன்றது.

மேலும் பின்வரும் மூன்று மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன:

1. சித்தார் ஆயில்புட்ஸ், முசிறி.
2. எம்.ஆர். எலக்ட்ரானிக்ஸ், சென்னை.
3. இந்தியா ஃபோர்ஜ் அண்டு ட்ராப்ஸ் ஸ்டாம்பிங்ஸ் லிட., சென்னை.

மற்றும் கீழ்க்கண்ட நிறுவனங்களைத் திறப்பதன்பொருட்டு சமாசப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன:

1. சபரி மில்ஸ், திருச்சி.
2. இராமலிங்கா சூடாம்பிகை மில்ஸ், கோவை
3. சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், வடலூர்.
4. விஸ்வ தர்ஷன் டிஸ்டிரிபியூடர்ஸ், இராஜகுளம்.
5. சிவானந்தா மில்ஸ், கோவை.

தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்காக இல்லாமல், பண நெருக்கடி, விற்பனைச் சந்தையில் இடர்பாடு, நிர்வாகத் தகராறுகள் போன்ற பல்வேறு காரணங்கள்தாம் 36 தொழில் நிறுவனங்கள்



1997 ஏப்ரல் 16]

மூடப்பட்டதற்கு காரணம் என்றாலும், மூடப்பட்டுள்ள தொழிற் சாலைகளைத் திறந்து வேலையிழந்து தவிக்கும் எண்ணிலடங்கா தொழிலாளர்கள் பயன் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கோடு இத்துறை ஊக்கங் குறையாமல் செயல்பட்டு வருகிறது.

1996-ம் ஆண்டில் தொழிலாளர் துறை சமரச அலுவலர்களால் ஏற்படுத்தப்பட்ட குறிப்பிடத்தக்க சில ஒப்பந்தங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:

**1. பி. அண்ட் சி. மில்ஸ், சென்னை:**

13-6-1996 அன்று பெய்த கடும் மழை காரணமாக நிர்வாகம் உற்பத்தியை 15-6-1996 முதல் நிறுத்தி வைத்தது. பல தினங்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதன் விளைவாக, 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ் தொழிலாளர் ஆணையர் அவர்கள் முன்பு 16-7-1996 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனையின் படி, ஆலையைத் திறப்பது குறித்தான நடவடிக்கையின் பொருட்டு அரசால் ஒரு வல்லுநர் குழு ஏற்படுத்தப் பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பித்ததைய டுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் இந்த ஆலை 1-11-1996 முதல் மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். நிர்வாகம் தனது நிதி நிலைமையாலும் மற்றும் பழைய இயந்திரங்களை வைத்து இயக்க முடியாத காரணத்தாலும் ஆலையை மீண்டும் திறக்க இயலாது என்று தெரிவித்தனர். எனினும் அரசு உத்திரவுப்படி மீண்டும் ஆலையை திறக்காமல் இருந்ததற்காக நிர்வாகத்தின்மீது அரசு, சட்டப்படி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது. பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில், நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கத்திற்கிடையே உடன்பாடு ஏற்பட்டு அதன்படி 1-3-1997 முதல் ஆலை மீண்டும் திறக்கப்பட்டது. ஆலையில் இயந்திரங்கள் சுத்திகரிப்பு போன்ற பணிகள் தற்சமயம் நடைபெற்றுக் கொண்டு உள்ளது. 23-2-1997 அன்று ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆலை திறக்கப்பட்டதையடுத்து உடன்பாட்டினை அமலாக்கப்படுவதை கண்காணிக்க அரசு ஒரு தனி அலுவலரை நியமித்து உள்ளது. நிர்வாகம் மற்றும் தொழிற் சங்கங்களுடனும், இந்தியன் வங்கி, தேசிய காப்பீட்டு நிறுவனம் போன்ற நிதி நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து ஆலையினைத் தொடர்ந்து இயக்க அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[1997 ஏப்ரல் 16

**2. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட், மணலி:**

18-6-1996 மற்றும் 6-11-1996 ஆகிய நாட்களில் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் மூலம் இந்நிறுவனத்தில் பணிபுரியும் 1,000 தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

**3. மெட்ராஸ் ரப்பர் பேக்டரி, சென்னை:**

பணி நிபந்தனைகள் அடிப்படையில் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் களிடையே ஏற்பட்ட தொழிற் தகராறு 7-6-1996 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது.

**4. கோரமண்டல் கார்மெண்ட்ஸ், சென்னை:**

இந்நிறுவனத்தில் 1,000 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிகின்றனர். தொழிற் தகராறு காரணமாக இதன் இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டது. தொழிலாளர் நலத்துறை மேற்கொண்ட முயற்சியின் பலனாக நிர்வாகம் 11-11-1996 அன்று இத்தொழிற்சாலையை மீண்டும் திறந்தது. சுமுக நிலைக்கு திரும்பியது.

**5. ரினவுண்டு ஆட்டோ பிராடக்ட்ஸ் மேனுபாக்சரிங் லிமிடெட், ஓசூர்:**

இந்நிறுவனத்தில் ஏற்பட்ட தொழில் அமைதியின்மை காரணமாக ஏற்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையால் நிர்வாகம் அதன் இயக்கத்தை நிறுத்தியது. இத்தொழிற் தகராறைத் தீர்ப்பதில் காட்டப்பட்ட இடையறா முயற்சிகளின் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தத் தையடுத்து இத்தொழிற்சாலை 26-2-1997 முதல் மீண்டும் இயங்கி வருகிறது.

**6. ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், ஓசூர்:**

இந்நிறுவனத்தில் 164 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். நீண்ட கால ஒப்பந்தம் முடிவடைந்ததையடுத்து, ஊதியத் திருத்தம் மற்றும் இதர சலுகைகள் குறித்து ஏற்பட்ட தொழிற் தகராறில், துறையின் தலையீட்டின் விளைவாக 30-12-1996 அன்று ஒரு வெற்றிகரமான ஒப்பந்தம் ஏற்பட்டது.

**7. ஜி.இ.சி. அல்ஸ்தம் (இந்தியா) லிமிடெட், சென்னை:**

சம்பளப் பிரச்சினையை முன்வைத்து எழுப்பப்பட்ட தொழிற் தகராறில் எடுத்துக் கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் விளைவாக 2-1-1997 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் 1,720 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.



1997 ஏப்ரல் 16]

**8. ராயல் என்பீல்டு மோட்டார்ஸ், திருவொற்றியூர்:**

1995-96-ம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சினை குறித்து பணியாளர்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக 9-1-1997-ல் ஏற்பட்ட ஒப்பந்தம் தொழிலமைதிக்கு வழிகோலியது. இதனால் 845 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

**9. ஸ்ரீராம் பைபர்ஸ் யூனிட், சென்னை:**

1995-96-ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாத நிலையினால் தொழிலமைதிக்கு பங்கம் ஏற்பட்டது இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினைக்கு 7-1-1997 அன்று சுமுகமான தீர்வு காணப்பட்டதன் மூலம் 400 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

**முதலமைச்சரின் நிவாரண நிதி:**

தொழிலாளர் பிரச்சினைகளின் காரணமாகவோ அல்லது நிர்வாக நெருக்கடி காரணமாகவோ மூடப்படும் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 1995-ம் ஆண்டு வரை தீபாவளி பண்டிகைக்கு மட்டுமே இந்நிதியிலிருந்து மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வந்தது. தொழிலாளர் நலனுக்காகப் பாடுபடும் இந்த அரசு தீபாவளிக்கு வழங்கப்படுவது போல் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 400/- வீதம் பொங்கல் பண்டிகைக்கும் (1997) முதன் முதலாக நிதி உதவி அளிக்க முடிவெடுத்து அதன்படி நிதி உதவி அளிக்கப்பட்ட மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களின் விவரம் பின்வருமாறு:

| பண்டிகையின் பெயர் | 1-1-1990-க்குப் பின் மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை | தொழிலாளர் எண்ணிக்கை | அளிக்கப்பட்ட நிதியுதவி |
|---|---|---|---|
| தீபாவளி '96 | 26 | 16,919 | 67,67,600/- |
| பொங்கல் '97 | 26 | 16,919 | 67,67,600/- |

அரசின் மேற்படி இரக்ககுண உணர்வு மூடியுள்ள தொழிற் சாலைகளின் தொழிலாளர்களின் நலனைக் காப்பதுடன் தொழில் அமைதியை உறுதிப்படுத்துகிறது.

## தொழில் நல்லுறவு பரிசுத் திட்டம்

[1997 ஏப்ரல் 16

தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் முன்னிலையில் நிற்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற் சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கும் பொருட்டு தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை இவ்வரசு உருவாக்கியது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கொண்ட ஒரு முத்தரப்பு உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம் 1978-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1988-ம் ஆண்டு வரை பரிசு பெற்றவர்களுக்கு சுழல் கேடயமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன. 1989-ம் ஆண்டு முதல் நிரந்தரக் கேடயமும் மற்றும் சான்றிதழ்களுடன் ரொக்கப் பரிசுத் தொகையாக முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 2,000-மும் இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 1,000-மும் வழங்கப்பட்டு வருகிறது.

தொழில் நல்லுறவு பரிசுக் குழு 1991 மற்றும் 1992-ம் ஆண்டுகளுக்கான பரிசுக்குரியவர்களை தேர்வு செய்து 3-7-1996 அன்று பரிசுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. 1993 மற்றும் 1994-ம் ஆண்டுகளுக்கான விண்ணப்பங்களை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நடுவர் தலைமையின் கீழான ஒரு குழு பரிசீலித்து வருகிறது.

### தொழிலாளர் நீதிமன்றங்கள்:

இம்மாநிலத்தில் 10 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. தொழிலாளர்கள் சட்ட ரீதியான பலனை விரைந்து பெற இவைகள் உதவுகின்றன. ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது:

| தொழில் நீதிமன்றங்கள் | ஆட்சி எல்லை |
|---|---|
| 1. முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்கள். (1–3) |
| 2. முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | |
| 3. இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | |
| 4. தொழிலாளர் நீதிமன்றம், வேலூர். | வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் தருமபுரி மாவட்டங்கள். |
| 5. தொழிலாளர் நீதிமன்றம், சேலம். | சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்கள் |
| 6. தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 7. தொழிலாளர் நீதிமன்றம், கடலூர். | தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டங்கள். நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் |
| 8. தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் |
| 9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 10. தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 11. தொழிலாளர் தீர்ப்பாயம், சென்னை. | மாநிலம் முழுவதும். |



நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தொழிற் தகராறுகள் பற்றிய விவரங்கள் செயலாக்க பட்ஜெட்டில் (Performance Budget) கொடுக்கப் பட்டுள்ளன.

## அத்தியாயம்-2

## அமலாக்கம்

*25* தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தும் தாமும் ஒழுங்கும் அமலாக்கப் பிரிவினரின் திறமையைச் சுட்டிக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்களைத் தீவிரமாக அமலாக்குதலுக்கும், தொழிலாளர்களின் நலனுக்கும், நேரடி தொடர்பு இருப்பதால் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப துரிதமாக நடவடிக்கை எடுக்க தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அவற்றையடுத்து தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவற்றின் விவரங்கள் செயலாக்க பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

**1947-ம் வருட தமிழ்நாடு கடைகள் / நிறுவனங்கள் சட்டம் மற்றும் விதிகள் 1948-னை அமல்படுத்துதல்:**

*1948*-ம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்/நிறுவனங்கள் விதி 15-ன்படி, ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர்ப்பலகைகள் கட்டாயமாக தமிழில் இருக்க வேண்டும். மேலும் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் தமிழில் பெரிய அளவிலும், இரண்டாவது இடத்தில் ஆங்கிலத்தில் தமிழ் எழுத்துக்களை விட அளவில் சிறியதாகவும் வேறு மொழிகளில் ஆங்கிலத்திற்கு அடுத்து எழுதி வைக்கவேண்டும் பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தப்பட்ட முறையில் எழுதப்பட வேண்டும்.

“எங்கும் தமிழ் எதிலும் தமிழ்” என்ற அரசின் கொள்கையினை கருத்தில் கொண்டு, தொழிலாளர் துறை அலுவலர்கள் இதனை அமல்படுத்த முழு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இதன் விளைவாக *1996* டிசம்பர் மற்றும் *1997* ஜனவரி மாதங்களில் *48,562* கடைகள் மற்றும் நிறுவனங்களிலும் *3,653* உணவு நிறுவனங்களிலும் இந்த விதி கடைபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையினரின் அறிவிப்பினையடுத்து *31-3-1997*-க்கு பிறகு இந்த விதியினை அனுசரிக்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம், 1985**

சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு



அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார் இவருக்கு உதவியாக துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்-நிர்வாக அலுவலர் (எடைகள் & அளவைகள்) மற்றும் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர், தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர் இவர் தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிந்து வருகிறார். ஏழு வட்டார தொழிலாளர் துணை ஆணையர்கள் கூடுதல் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். அதே போல் மாவட்ட அளவில் *29* தொழிலாளர் ஆய்வர்கள் துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாகவும் கோட்ட அளவில் பணிபுரியும் *67* தொழிலாளர் துணை ஆய்வர்கள் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாகவும் வட்ட அளவில் *210* தொழிலாளர் உதவி ஆய்வர்கள் எடையளவு சட்டமுறை ஆய்வாளர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களுக்கு *1985*-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் *1977*-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும், முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் வியாபாரத்தில் பயன்படுத்துதல் தடைப்படுத்தப் பட்டுள்ளது.

வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளை பரிசீலனை செய்து முத்திரையிட மாநிலம் முழுமையிலும் *101* முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர்.

நுகர்வோர் நலனைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டம் திடீராய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் மூலம் அமல்படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு முரணாகச் செயல்படும் வியாபாரிகள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *1985*-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டத்துடன் சேர்த்து *1977*-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளும் அமலாக்கப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களின் நிகர எடையை பொட்டலம் செய்யப்படும் உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும் பொருட்டு

துறையில் உள்ள மின்னணு எடைக்கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபார சந்தையில் பல்வேறு வாணிகப் பொறுப்புகளைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில் நுகர்வோர்கள் நலன் காக்க இந்த எடை மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகிறது.

1996-ம் ஆண்டில் பலதரப்பட்ட நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீராய்வு மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| நிறுவனங்களின் பிரிவு | ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | கண்டுபிடிக்கப்பட்ட முரண்பாடுகள் |
|---|---|---|
| | (1-1-1996 முதல் | 31-12-1996 வரை) |
| 1. நியாயவிலைக் கடைகள் | 33,240 | 4,669 |
| 2. பள்ளிக்கூட நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்யும் கடைகள் | 997 | 77 |
| 3. பெட்ரோலியப் பொருட்களை விற்பனை செய்யும் பங்குகள் | 27,246 | 1,445 |
| 4. பால் விற்பனை செய்யும் நிறுவனங்கள் | 2,181 | 450 |
| 5. மீன்/இறைச்சிக் கடைகள் | 8,010 | 1,092 |
| 6. சந்தைகள் | 7,528 | 501 |
| 7. எரிவாயு சிலிண்டர்கள் | 491 | 45 |
| 8. கெரோசின் விற்பனையாளர்கள் | 4,827 | 762 |
| 9. பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் ஆய்வுகள் | 2116[illegible] | [illegible]737 |
| 10. சிமெண்ட் | 229 | 1 |

**தோட்டத் தொழிலாளர் நலன்:**

தோட்டத் தொழிலாளர்களின் பணி நிலைமை 1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி முறைப்படுத்தப்பட்டுள்ளது. இது பழமையான சட்டங்களில் ஒன்று. தேயிலை, காபி, ரப்பர் மற்றும் ஏலக்காய் ஆகியவை தமிழ்நாட்டில் அதிகமாகப் பயிரிடப்படும்



தோட்டப் பயிர்கள் ஆகும். இவைகளில் தேயிலை அதிக பங்கு
வகிக்கிறது. அடுத்ததுதான் காபி. தமிழ்நாட்டில் தோட்டப் பயிர்கள்
அதிகமாகப் பயிரிடப்படும் பகுதிகள் நீலகிரி, ஆனைமலை
(கோயம்புத்தூர்), மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன், சேர்வராயன்
மலைப்பகுதி (சேலம்), கன்னியாகுமரி மற்றும் மன்னர் திருமலை
மாவட்டங்கள் ஆகும். தோட்டத் தொழிலாளர் சட்டம் 1951-ஐ ஏழு
தோட்ட நிறுவன ஆய்வாளர்கள் அமல் செய்கிறார்கள். தோட்டத்
தொழிலாளர் சட்டத்தின்படி தொழிலாளர்கட்கு இலவச வீட்டு வசதி,
இலவச அடிப்படைக் கல்வி, வல்லுனர் சிகிச்சையுடன் இலவச
மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பக வசதி, குழந்தைகளுக்கு இலவச
பாலும் உணவும், பணியாளர்களின் இருப்பிடத்திற்கு சுத்தப்படுத்தப்பட்ட
தண்ணீர் வசதி, பலவித பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் குளிர்கால
பாதுகாப்பு சாதனங்களாகிய கம்பளி முதலியவை வழங்குதல் ஆகியவை
கள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. சட்ட அமலாக்கத்தை
வலுப்படுத்த இரண்டு உதவி மருத்துவ அலுவலர்கள் (தோட்டத்
தொழில்), தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவ உதவி
கிடைப்பதை உறுதிப்படுத்த பணியாற்றுகின்றனர். தோட்ட நிறுவனங்
களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு நலச்
சட்டம் 1961, சம ஊதியச் சட்டம் 1976 போன்ற சட்டங்களின்
பயன்கள் கிடைக்கின்றனவா என்பதை இரண்டு மகளிர் தொழிலாளர்
ஆய்வர்கள் கண்காணித்து வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள தோட்டத்
தொழிலில் உள்ள தொழிலாளர்களின் 98% பணியாளர்களுக்கு வீட்டு
வசதி வழங்கப்பட்டுள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு
முதலிடம் வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்
மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் செயலாளர் தலைமையில்
இயங்கி வரும் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் தரப்பு உள்ளிட்ட
தொழிலாளர் அங்கத்தினர்கள் கொண்ட தோட்டத் தொழிலாளர்
வீட்டு வசதி ஆலோசனை வாரியம் தொழிலாளர்களுக்கான வீட்டு
வசதி தொடர்பாக அனைத்து விஷயங்களிலும் விவாதம் மேற்கொண்டு
வருகிறது. தொழிலாளர் ஆணையரைத் தலைவராகக் கொண்டு
செயல்படும் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தொழிலாளர்
களின் வீட்டு வசதி தவிர இதர விஷயங்களில் விவாதம் மேற்கொண்டு
வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அவை தொடர்பான மேல் நடவடிக்கை விவரங்கள் செயலாக்க பட்ஜெட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

[1997 ஏப்ரல் 16

## அத்தியாயம்-3

### தொழிலாளர் துறையும் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர் பிரிவும்:

மொத்தத் தொழிலாளர்களின் பெரும்பான்மைப் பிரிவினர் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் வீட்டிலிருந்தபடியே வேலை செய்வதாலும் ஆங்காங்கு பரவிக் கிடப்பதாலும் வெளிப்படையாகக் காண இயலாத நிலை காணப்படுகிறது.

அமைப்பு ரீதியற்ற இத்தொழிலாளர்களின் நலன் காக்க இவ்வரசு தன்னை அர்ப்பணித்துள்ளது. 1948-ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டம், 1936-ம் ஆண்டு சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1965-ம் ஆண்டு போனஸ் வழங்கும் சட்டம், 1981-ம் ஆண்டு தமிழ்நாடு பிழைப்பூதியப் பட்டுவாடாச் சட்டம், 1976-ம் ஆண்டு சம ஊதியச் சட்டம் மற்றும் 1961-ம் ஆண்டு மகப்பேறு நலச் சட்டம் போன்ற பல்வேறு நலன் பயக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழான அனைத்து சலுகைகளும் முழு அளவில் இத்தொழிலாளர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில் இவ்வரசு மிகவும் கண்ணும் கருத்துமாயுள்ளது.

### குறைந்தபட்ச ஊதியம் - "ஒரு பாதுகாப்பு அரணாகும்"

குறைந்த பட்ச ஊதியச் சட்டம், வழிகாட்டியாக இயங்கும் ஒரு சட்டம் ஆகும். குறைந்த பட்ச ஊதியப் பட்டுவாடாவினை உறுதி செய்து கொள்வது என்பது பண்பான மனித வாழ்க்கைத் தரத்தினை உறுதி செய்து கொள்வது என்பதே ஆகும். குறைந்த பட்ச ஊதியம் என்பது ஒருவர் உயிர் வாழத் தேவையான ஒரு தொகையே என்ற நிலையில் அதனையும் தொழிலாளர்களுக்கு வழங்காதிருப்பது மனித நேயமற்ற செயலாகும் என்று கூறலாம். 1948-ம் ஆண்டின் குறைந்த பட்ச ஊதியச் சட்ட அட்டவணையில், பெரும்பாலும் அமைப்பு ரீதியற்ற 68 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொழில்களுக்கு அரசால் ஏற்படுத்தப்பட்ட குழு மூலமோ அல்லது அறிவிக்கை மூலமோ ஊதியம், நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு தொழிலுக்கு முதல் முறையாக ஊதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது தொழிலைப் பற்றி ஆழமான நுண்ணாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலையில் குழு முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

அக்குறிப்பிட்ட தொழிலில் பணிபுரியும் பல்வேறு வகையான தொழிலாளர்களின் பணி நிலைமையினைக் கருத்தில் கொண்டும், தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டும் குழுவின்



1997 ஏப்ரல் 16]

பரிந்துரையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது மறுநிர்ணயத்திற்கு அறிவிக்கை முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இது இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை செய்யப்படுகிறது.

தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவினத்தை சரிகட்டும் வகையில் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அகவிலைப்படியையும் நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது.

அரசினால் பல்வேறு தொழில்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் அறிவிக்கை செய்யப்படுவதை வேலையளிப்பவர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து தடை உத்தரவு பெற்றுவிடுகிறார்கள். இந்த தடையைக் கடக்க நீதிமன்றத் தீர்வினைக் கோரும் உரிமையைக் கோராத வகையிலும், இந்திய அரசியல் அமைப்பின் 9-வது அட்டவணையில் குறைந்தபட்ச ஊதியத்தை சேர்க்கும்படி இந்தியத் தொழிலாளர் மாநாடு மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற தேசிய அளவிலான கூட்டங்களில் இவ்வரசு எடுத்துரைத்துள்ளது.

### 1996-ம் ஆண்டில் பின்வரும் தொழில்களுக்கு அரசால் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

***(01-01-1996** முதல் **31-12-1996** வரையிலான காலத்திற்குரிய விவரங்கள்)*

**நிர்ணயம்:**

1. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிக்கும் தொழில்.

**மறுநிர்ணயம் :**

1. விசைத்தறித் தொழில்.
2. முந்திரித் தொழில்.
3. உப்பளங்கள் தொழில்.
4. எண்ணெய் ஆலைத் தொழில்.
5. பட்டு இழை முறுக்கும் தொழில்.
6. ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் தொழில்.
7. எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரி.

[1997 ஏப்ரல் 16

8. சலனப்பட தயாரிப்பு (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட).
9. தகரக் கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்.
10. காட்டன் ஜின்னிங், பிரசஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்.
11. மா ஆலைத் தொழில்.
12. சினிமாத் தொழில்.
13. செயற்கை வைரக் கற்களுக்கு பட்டை தீட்டும் தொழில்.
14. பட்டுப்புழுத் தொழில்.
15. அப்பளம் தயாரிக்கும் தொழில்.
16. தேங்காய் உரிக்கும் தொழில்.
17. கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சாலைகள் பாராமரிக்கும் தொழில்.

**குறைந்தபட்ச ஊதிய மறுநிர்ணயம் செய்யப்படுவது குறித்து ஆலோசனைக் குழுவின் பரிசீலனையில் உள்ள தொழில்களின் விவரம்.**

1. புகையிலைத் தயாரிப்புத் (பீடி தயாரிப்பு உட்பட) தொழில்.
2. காகிதம் மற்றும் அதன் செயல்முறைத் தொழில்.
3. தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்.
4. பட்டாசு தயாரிக்கும் தொழில்.
5. தையற் தொழில்.
6. மருத்துவமனைகள் மற்றும் நர்சிங்ஹோம் (ஈ.எஸ்.ஐ. மற்றும் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு நர்சிங் ஹோம்கள் நீங்கலாக).
7. தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்.
8. தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரிக்கும் தொழில்

**தொழிலாளர் நலன்:**

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழான பல்வேறு சலுகைகள் தொழிலாளர்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிப்பதோடு,



1997 ஏப்ரல் 16]

அமைப்பு ரீதியற்ற பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, இன்சூரன்ஸ் போன்ற சலுகைகளையும் வழங்க அரசு தலையிட்டு வருகிறது. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பணி நிலைமை மற்றும் வாழ்க்கைத் தரத்தை நன்கு ஆராய்ந்து அரசால் உரிய மேல் நடவடிக்கை எடுக்கும் வகையில் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு பல்வேறு குழுக்களை அரசு அமைத்துள்ளது. இதனால், அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்காக, விரிவான திட்டங்களை வெகு சீக்கிரத்தில் அறிவிக்கும் சூழ்நிலையில் அரசு உள்ளது. தொழிலாளர்களின் நலனில் அரசு நேரடியாகத் தலையிடுவதற்கு கீழ்க்கண்டவைகளே உதாரணம்:

**பீடித் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் மற்றும் பல நலத் திட்டங்கள்.**

மாநிலத்தில் பீடித் தொழிலாளர்கள் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் உள்ளதால், அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க மாநில அரசு சீரிய திட்டத்தை எடுத்துள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் முறையே 439 மற்றும் 482 வீடுகள் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலப்பாளையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டிட மையத்தின் மூலம் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முக்கூடலைப் பொறுத்த வரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலம் களிமண் பகுதியாக இருப்பதால், ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கூடுதல் தொகையைக் கடனாய்ப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வீடுகள் தலா ரூ. 22,000/- செலவினத்தில் கட்டப்படுகின்றன. இதில் மத்திய அரசு மானியத் தொகை ரூ. 9,000/- போக பாக்கித் தொகை ரூ.13,000/-ஐ ஹட்கோ நிதி நிறுவனத்திடம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலம் கடனாகப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர்களின் கூடுதல் சுமையைத் தவிர்க்கும் வகையில் நிலத்தின் விலை மற்றும் தனிநபர் மனைக்கான பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் பொருட்டு ரூ.3.69 இலட்சத்தை அரசு ஏற்கனவே செலுத்தியுள்ளது. வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலும் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் நோக்குடன் அங்கு 575 பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேபோல், பெரியார் மாவட்டம், அந்தியூர் கிராமம்,

காட்டுப்பாளையத்தில் உள்ள 100 பீடித் தொழிலாளர்களுக்கு இத்துறையின் முயற்சியால், வருவாய்த் துறை மூலம் இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 90 பீடித் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொள்ள முன் வந்துள்ளனர். இதன் தொடர்பான பிரேரணை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

சட்டப்படியான பல்வேறு சலுகைகள் பீடித் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதை அறிய துறையின் அமலாக்க அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பீடித் தொழிலில் தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்கள், வழக்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



**1996-ம் ஆண்டு பீடித் தொழிலாளர்களுக்காக பல்வேறு சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கேட்பு மனுக்கள் முடிவுற்றவை, பயனடைந்த தொழிலாளர்கள் மற்றும் உத்தரவிடப்பட்டத் தொகை பற்றிய விவரங்கள்.**

| வ. எண் | சட்டத்தின் பெயர். | 1-1-1996 அன்று நிலுவை. | 1996-ல் தாக்கல் செய்யப் பட்டவை. | மொத் தம். | முடிவு செய்யப் பட்டவை. | தள்ளுபடி செய்யப் பட்டவை. | உத்தரவு இடப் பட்டவை. | பயனுற்ற தொழி லாளர் எண் ணிக்கை. | உத்தர விடப் பட்ட தொகை. | நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. | 9. | 10. | 11 |
| 1. | குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948 | 20 | 38 | 58 | 47 | 13 | 34 | 248 | 1,16,573.90 | 11 |
| 2. | சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 | 25 | 11 | 36 | 29 | 19 | 10 | 46 | 7,777 | 7 |
| 3. | மகப்பேறு நலச் சட்டம், 1961 | Nil | 20 | 20 | 20 | - | 20 | 20 | 6,895 | - |
| 4. | பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972 | 19 | 36 | 55 | 22 | 9 | 13 | 36 | 36,229 | 33 |

[1997 ஏப்ரல் 16

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994.**

தமிழ்நாட்டில் பணிபுரியும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்தும் அவர்கள் தொழில் சம்பந்தப்பட்ட வேறு சில விபரங்கள் குறித்தும் முறைப்படுத்தும் வகையில் 1982-ம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை தமிழ்நாடு அரசு இயற்றியது.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக மேற்படி சட்டத்தின் பிரிவு 3-ன்படி 1994-ம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டம் சென்னை, மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய இடங்களில் 1-11-1994 முதல் அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான நல நிதிக்கு கட்டிடம் கட்டுபவர்கள் உள்ளூர் அதிகாரிகளிடம் கட்டிடத்திற்கோ அல்லது கட்டிடம் கட்டுவதற்கோ அனுமதி பெறும் சமயங்களில் அதற்கான செலவு மதிப்பீட்டில் 0.1% சந்தாத் தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திடம் பதிவு செய்து கொண்ட தொழிலாளர்கள் நல நிதிக்காக செலுத்த வேண்டும். ஆகவே, உள்ளூர் அதிகாரிகளுக்கு இந்த சந்தாத் தொகையினை திரட்டி பின்னர் இந்த நிதிக்கு செலுத்துவது என்பது அவர்களது முக்கிய பொறுப்பாகும்.

இதுவரை மேற்படி நலத் திட்டத்திற்காக பின்வரும் 3 மாநகராட்சிகளிடமிருந்து கீழ்க்கண்டவாறு நிதி பெறப்பட்டுள்ளது.

| | பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை | மாநகராட்சிகளால் செலுத்தப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| சென்னை | 10,348 | 76,99,345.00 |
| கோவை | 8,391 | 55,450.00 |
| மதுரை | 6,121 | 7,41,352.00 |
| மற்றவை (மின்வாரியம் போன்றவை) | | 4,42,378.95 |
| மொத்தம் | **24,860** | **89,38,525.95** |



1997 ஏப்ரல் 16]

கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் சம்பந்தமான தொழி லாளர்களின் குழந்தைகள் காப்பகங்கள் வேலை செய்யும் இடங்களில் அமைத்தல், தொழிலாளர் ஈட்டுறுதி, சேமநலநிதி விபத்துக் காப்பீடு, ஓய்வூதியம், பிரசவ விடுப்பு மற்றும் மழைக் காலங்களில் பண உதவி போன்ற பல திட்டங்கள் கட்டிடம் கட்டுபவர்கள் சங்கம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 24,860 கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தலா ரூ.25/- வீதம் ரூ.6,21,500.00 பதிவுக் கட்டணம் பெறப்பட்டு அந்தத் தொகை இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் ஒரு ஆண்டு தவணைக் கட்டணமாக வாரியத்தின் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது. பதிவினை இரண்டு வருடங்களுக்குப் பின்பு ரூ.10/- கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

பதிவு செய்துள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு விபத்தின் காரணமாக 1996-ம் ஆண்டில் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை விபரம் பின்வருமாறு.

| தொழிலாளர் பெயர் | விபத்து தன்மை மற்றும் நாள் | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. கே. அண்ணாமலை | சென்னையில் ஏற்பட்ட மரண விபத்து 4-5-1996 | 50,000/- |
| 2. திரு. பொம்மன் | சென்னையில் ஏற்பட்ட மரண விபத்து 13-5-1996 | 50,000/- |
| 3 திரு. வி. சந்திரசேகரன் | சென்னையில் ஏற்பட்ட மரண விபத்து 10-7-1996 | 50,000/- |
| 4 திரு. வி. சேசு ஆரோக்கியம் | மதுரையில் ஏற்பட்ட காய விபத்து 22-12-1995 | 7,000/- |

மத்திய அரசு கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் குறித்து 2 சட்டங்கள் கொண்டு வந்த போதிலும், இம்மாநில அரசின் சட்ட

திட்டங்களின் சிறப்பைக் கருத்தில் கொண்டு இதையே அமல்படுத்த தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

**தொழிலாளர் துயர் துடைப்பு நிதி:**

தொழிலாளர்கள் பணி நேரத்தில் ஊனமுற்றாலோ அல்லது மரணம் அடைந்தாலோ, வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையை தொழிலாளர்கள் அல்லது அவரை சார்ந்தவர்கள் பெற இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. 1996-ம் ஆண்டில் இந்த நிதியிலிருந்து 2 வழக்குகளில் ரூ.5,000/-நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஒப்பந்தத் தொழிலாளர்கள்:**

1970-ம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (வரன்முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்துகிறது. சில சந்தர்ப்பங்களில் முழுவதும் நீக்குகிறது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தால், அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். மேலும், இதேபோல், கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்களைப் பணியிலமர்த்தியிருந்த, ஒப்பந்தக்காரர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். இவர்கள் இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற வேண்டியதும் அவசியமாகிறது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் செயலரைத் தலைவராகக் கொண்டு செயல்படும் மாநில (ஒப்பந்தத் தொழிலாளர்) ஆலோசனைக் குழு, தனக்கு அனுப்பப்படும் பலவித நிர்வாக மற்றும் இதர பொருள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதோடு, சட்டப்படி வரையறுக்கப்பட்டுள்ள கடமைகளையும் ஆற்றி வருகிறது.

தொழிலாளர் துறை துணை ஆணையர்கள் அலுவலகங்களில் பணியாற்றும் உதவி ஆணையர்கள் இச்சட்டம் பொருந்துபவர்களுக்கு பதிவுச் சான்று அலுவலர்களாகச் செயல்படுகின்றனர். முதன்மை வேலை அளிப்பவர்களை பதிவு செய்வதில் பதிவுச் சான்று அலுவலர்களுக்கு எவ்வித இடர்பாடும் ஏற்படுவதில்லை. இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணிக்கு வைத்துக் கொள்வதால் ஒப்பந்தக்



காரர்களும் அவர்களாகவே முன்வந்து பதிவுசெய்து கொள்கின்றனர். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படி பதிவு செய்து கொள்வதால் ஏற்படும் நன்மை யாதெனில் ஒப்பந்தக்காரர்கள் அவர்களது கீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்குதல் மற்றும் சட்டரீதியான சலுகைகளை வழங்குதல் முதலியவற்றை வழங்கத் தவறினால், இவற்றிற்கு சட்டப்படியான தார்மீகப் பொறுப்பாளிகளாகிறார்கள். சட்டத்தின் வழிவகைகளால் ஒப்பந்தத் தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது.

இச்சட்டம், பின்குறிப்பிட்டுள்ள நலன்களை ஒப்பந்தத் தொழிலாளர்கள் பெற வழிவகை செய்கிறது :-

1. சிற்றுண்டி சாலை
2. ஓய்வு அறைகள்
3. நல்ல குடிநீர் வசதி
4. போதுமான கழிவறை வசதிகள்
5. சலவை வசதிகள்
6. முதலுதவி வசதிகள்.

பொறியியல் துறை சம்பந்தப்பட்ட பின்குறிப்பிட்டுள்ள 13 இனங்களுக்கு, மாநில ஆலோசனை (ஒப்பந்தத் தொழிலாளர்) குழுவின் ஆலோசனையுடன் அரசு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை ஆணை 187, நாள் 2-9-1993-ல் பணி வரன்முறைகள் செய்யப்பட்டுள்ளன:-

1. குடிமுறைக்குரிய கட்டுமானம்
2. புனைந்து கட்டுதல், கொதிகலன் உறுப்புகளின் கட்டமைப்பு
3. துப்புரவு பொருட்கள் இயக்கம் (தொழிற்சாலை துப்புரவு)
4. கட்டமைப்பு மற்றும் மின்சார பொருட்கள் நிறுவுதல்
5. இயந்திரங்களை கட்டுதல் மற்றும் நிலைநாட்டுதல்
6. மின்சார வேலைகள்
7. தொழிற்சாலை துப்புரவு மற்றும் பாராமரிப்பு
8. கட்டிட பராமரிப்பு (வண்ணம் அடித்தல் மற்றும் வெள்ளை அடித்தல்)
9. இயந்திரங்களை பழுதுபார்த்தல்
10. குழாய் தொடரமைப்பு நிறுவுதல் மற்றும் வேலை
11. கம்பி வடங்களை இணைத்தல்
12. அலுவலகத் தட்டச்சு வேலை
13. வாட்டர் கூலர் மற்றும் தொலைபேசி இயக்குதல்.

[1997 ஏப்ரல் 16

**அத்தியாயம்-4**

## குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பில் அரசின் பணி:

உலகிலேயே இந்தியாவில்தான் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கையில் அதிகமாக காணப்படுகிறது. 1981 கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 13.65 மில்லியனாகும். ஆனால் 43-வது தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி அது 17.02 மில்லியன் எனத் தெரிய வந்துள்ளது. 1991-ம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு பற்றிய புள்ளி விவரங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இது சுமார் 20 மில்லியனாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதில் ஊறுவிளைவிக்கும் தொழில்களில் 2 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலங்களில் 90%க்கு அதிகமான குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடும் ஒன்றாகும். 1981 கணக்கெடுப்புப் பணியின்படி தமிழ்நாட்டில் வயது வரை உள்ள குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 9,75,055 ஆகும்.

குழந்தைத் தொழிலாளர் குறித்து குருபாதசாமி குழு 1979-ல் கொடுத்த அறிக்கையினைத் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை தனிப்பட்ட முக்கியத்துவம் பெற்றது. தேசிய குழந்தைத் தொழிலாளர் குழு, ஊராக தேசிய தொழிலாளர் குழு, கிராம தொழிலாளர் குறித்த தேசிய கமிஷன், மற்றும் பலர் இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து இதனை சமாளிப்பதற்கான பல ஆலோசனைகளைத் தெரிவித்தனர். இவையெல்லாம் 1986-ம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் இயற்ற வழிகோலியது. இந்தச் சட்டம் 14-வயதுக்குக் கீழே உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் சில குறிப்பிட்ட ஊறுவிளைவிக்கும் தொழில்கள் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்தி பணிகளில் பணிபுரிவதை ஒழிப்பதற்கும் இதர இடங்களில் பணி நிலைமைகளை வரன்முறைப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தச் சட்டத்தினைத் தொடர்ந்து விரிவான கொள்கை அதாவது 1987-ம் ஆண்டு தேசிய குழந்தைத் தொழிலாளர் கொள்கை உருவாக்கப்பட்டது. இக்கொள்கை, குழந்தைத் தொழிலாளர் குறித்த பல்வேறு பிரச்சனைகளைத் தீர்க்க, பல வழிவகைகளைக் கொண்டதாகவும் உள்ளது. அவையாவன:



1997 ஏப்ரல் 16]

1. சட்டபூர்வமாக நடவடிக்கைத் திட்டம்
2. குழந்தைத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் எங்கெல்லாம் முடியுமோ அங்கு பொது அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துதல்
3. குழந்தைத் தொழிலாளர் அதிகம் உள்ள இடங்களில் செயலாக்க முறைத் திட்டம் அமைத்தல்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் குழுவினது திட்டப்படி குழந்தைத் தொழிலாளர் அதிகமாக உள்ள 100 மாவட்டங்களில் ஊறுவிளைவிக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பது என்பது முதல்படியாகும். மத்திய தொழிலாளர் துறையிடமிருந்து அனுமதி கோரி, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் அடிப்படையில் திட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த மாவட்டங்கள் 1981 கணக்கெடுப்புப் பணியினை ஆதாரமாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவை ஆகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தெரிந்தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களில் பின்வரும் மாவட்டங்கள் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ள மாவட்டங்களாக இனங்காட்டப்பட்டுள்ளன :-

1. வட ஆற்காடு-அம்பேத்கர்
2. வ.உ. சிதம்பரனார்
3. காமராஜர்
4. கோயம்புத்தூர்
5. திருச்சி (பிரிக்கப்படாதது)
6. புதுக்கோட்டை
7. தர்மபுரி
8. சேலம் (பிரிக்கப்படாதது)
9. திருநெல்வேலி-கட்டபொம்மன்
10. பெரியார் : மற்றும்
11. செங்கை-எம்.ஜி.ஆர்.

மேற்கண்ட 11 மாவட்டங்களில், முதலில் குறிப்பிட்டுள்ள 9 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது.

[1997 ஏப்ரல் 16

## 2. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டக்கூறுகள்:

இது பின்வரும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது:-

1. கணக்கெடுப்புப் பணி.
2. விழிப்புணர்வு இயக்கம்.
3. ஒருங்கிணைந்த பணி.

இந்தத் திட்டங்களை அமலாக்கம் செய்ய துணைக் கருவியாக, மாவட்ட அளவில் திட்ட குழுக்கள் ஏற்படுத்தி அதன் மூலம் அமல்படுத்தப்படுகிறது. அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்கள் குழுவின் தலைவராகவும் ஒரு முழு நேர திட்ட இயக்குநராகவும் உள்ளனர். இந்த திட்டக் குழுக்கள் சங்கங்கள் சட்டப்படி பதிவு செய்யப் படுகின்றன. மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சக குழு இந்த குழுக்களுக்கு நேரிடையாக மானியம் வழங்குகிறது. இந்த குழு ஒவ்வொரு மாதமும் மதிப்பிட்ட அறிக்கைகளை மத்திய அரசுக்கு மாநில அரசுக்கு நகலுடன் அனுப்ப வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த குழுக்கள் கணக்கெடுப்பு பணிகளையும் விழிப்புணர்வு முகாம்களையும் நடத்த வேண்டும். இத்துடன் ஏற்கனவே பணியில் இருந்த இடங்களில் இருந்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைகளுக்காக தனி சிறப்புப் பள்ளிகளையும் நடத்த வேண்டும். இப்பள்ளிகள் சாதாரண பள்ளிகள் போல் இயங்காமல், விளையாட்டு முறையில் கல்வி கற்பதற்கு ஏதுவாக தனியாக வடிவமைக்கப்பட்ட சுருக்கப்பட்ட பாட திட்டங்களுடன் முறைசாரா கல்வி பள்ளியாக இயங்குகின்றன. பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு அந்தந்த நிலைக்குத் தகுந்தாற்போல் முறையான கல்வியினை அளிப்பதே இந்த பள்ளிகள் இயங்குவதற்கான நோக்கமாகும். இந்த திட்டத்தின்படி, இப்பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகளையும் கற்பிக்க எண்ணியுள்ளது. குழந்தைத் தொழிலாளர் நேரடி குறித்து முகாம் மற்றும் குழந்தைகளின் பெற்றோர்களிடம் அபிப்பிராயங்களை எளிதில் கண்டறியும் வகையில் விழிப்புணர்வு முகாம்களும், குழந்தைத் தொழிலாளர் குறித்து அடிப்படை கணக்கெடுப்பு பணியுடன் நடத்தப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைப்பு பணித் திட்டத்தின் மூலம், பள்ளிக்கு அனுப்பும் குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகம் மூலம் பல்வேறு திட்டங்கள் அதாவது IRDP, DWCRA, TRYSEM, JRY etc. உதவியுடன் செயல்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின்



1997 ஏப்ரல் 16]

பணி நிலைமைகளை வரன்முறைப்படுத்த வேண்டிய தொழில்களில் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதின் மூலம் நிலையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஏழ்மையான சமூகப் பொருளாதார சூழ்நிலையின் காரணமாகத் தான் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. பின்தங்கிய பொருளாதார நிலையின் காரணமாக, குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதமான செயல் என்று தெரிந்தும், அந்நிலையே தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்நிலையில் குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர், வேலையளிப் போர் சங்கங்கள் மற்றும் சமுதாயம் ஆகிய அனைவரும் குழந்தைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதால், அவர்களது மனநிலை, உடல்நிலை ஆகியவை அபாயகரமான பாதிப்புக்குள்ளாகின்றன என்ற உண்மையை உணர வேண்டுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, மாவட்ட ஆட்சியாளர்கள் விழிப்புணர்வு இயக்கங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை சுதந்திர தினம், உலக கல்வியறிவு நாள், உலக உணவு நாள் போன்ற நாட்களில் நடத்துமாறும், மேலும், குழந்தைத் தொழிலாளர் முறையை மையமாகக் கொண்டு கருத்தரங்குகள், பண்பாடு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். திருப்பூரிலுள்ள தையலாடை ஏற்றுமதி செய்யும் வேலையளிப்போர் இதுபோன்ற கருத்தரங்குகளை நடத்த முன் வந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அரசு சார்பற்ற நிறுவனங்களும், தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் இது போன்ற மேற்குறிப்பிட்ட கருத்தரங்குகளை அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அதிகாரிகள் தலைமையில் ஏற்பாடு செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டி தொழிற் சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான நலநிதி உச்சநீதி மன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நலநிதி 1-1-1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. பதிவு செய்யப்பட்ட தீப்பெட்டித் தொழிற் சாலை உரிமையாளர்கள் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் ரூ.2/- வீதம் இந்த நலநிதிக்கு செலுத்த வேண்டும் என ஆணையிடப்பட்டது. அரசு தன்பங்காக தொழிலாளர் ஒருவருக்கு ரூ.2/- வீதம் செலுத்தி வந்தது. இந்த நலநிதி பின்னர் பதிவு பெற்ற பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பணியமர்த்துவோர் செலுத்தவேண்டிய பங்குத் தொகையும் ரூ.2/-லிருந்து ரூ.10/-ஆக உயர்த்தப்பட்டது. காமராசர்

மாவட்டத்தில் இந்த நலநிதியை நிர்வகிக்க ஒரு மாவட்டக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

15-2-1997 அன்று சிவகாசி நகரில் குழந்தைத் தொழிலாளர் முறைமைக்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு மாபெரும் பேரணி நடத்தப்பட்டது. பொதுக் கூட்டத்துடன் இந்த பேரணி முடிவுற்றது.

இதற்கிடையில் 10-2-1996 தேதிய உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழக அரசு "குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலநிதி" ஏற்படுத்தி அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களது நேரடி கண்காணிப்பில் செயல்பட உத்தரவிட்டுள்ளது. 1986 குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப்படி குழந்தைத் தொழிலாளர் பணியமர்த்தியது கண்டறியப்பட்டால், அதன் உரிமையாளர் இந்த முரண்பாட்டிற்காக செலுத்தப்பட வேண்டிய அபராதத் தொகையான ரூ.20,000/-யைக் கொண்டு இந்த நிதி செயல்படும். அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.5000/-தன் பங்காக செலுத்தும். மொத்த தொகை ரூ.25,000/- குழந்தைத் தொழிலாளர் நலனை முன்னிட்டு இந்த நிதியில் சேர்க்கப்பட்டு, குழந்தைத் தொழிலாளர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதும் கல்வி செலவுக்கு பயன்படுத்தப்படும். 1986 குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப்படி ஊறுவிளைவிக்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகளுக்கு இந்த நிதி பொருந்தும். ஏற்கனவே சொல்லியபடி மாவட்ட ஆட்சியாளர்களது ஒத்துழைப்புடன் மாநிலம் முழுவதும் குழந்தைத் தொழிலாளர் கணக்கெடுப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கணக்கெடுப்புப் பணி முடிவு விவரங்கள் உறுதி வாக்குமூலத்துடன் 10-6-1997-க்குள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். உச்சநீதிமன்ற ஆணைப்படி குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரியும் அபாயகரமான மற்றும் அபாயகரமற்ற தொழிற்சாலைகளைக் கணக்கெடுக்கும் பணி முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாய்வின் அடிப்படையில் அரசு, உச்சநீதிமன்றத்தின் முன்பு ஒரு மனுவினை தாக்கல் செய்ய வேண்டும். இவையனைத்தும் உச்சநீதிமன்ற ஆணை வெளியிட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குள் அதாவது 10-6-1997-க்குள் முடிக்கப்பட வேண்டும். அதன்படி திட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 25-2-1997 அன்று மாநில அளவிலான அனைத்து மாவட்ட ஆட்சியர்களின் கூட்டம் நடத்தப்பட்டது. அத்திட்ட நடவடிக்கையின்படி ஏப்ரல் 1997-ல் இம்மாநிலம் முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்படும்.





## அத்தியாயம்-5

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்:

தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு நலன் அளிப்பதே என்ற நிலையை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலை அளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நலநிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

இச் சட்டத்தின்படி மாநில தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது.

இவ்வாரியம் தமிழகம் முழுமையும் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சி பிரிவுகளையும் மற்றும் 19 இடங்களில் தையற் பயிற்சிப் பிரிவுகளையும் நடத்தி வருகிறது. மேற்படி தையற் பயிற்சிப் பிரிவுகளில் தொழிலாளர்களைச் சேர்ந்த அவர்களது மனைவி மற்றும் திருமணமாகாத சகோதரிகளுக்குத் தையற் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் ரூ.40/-வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி பெறும் மாணவி தேர்வில் கலந்துக் கொண்டால் அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/-வீதம் கூடுதல் உதவித்தொகை அளிக்கப்படும். அதைப்போலவே. ஒரு பயிற்சி பெறும் மாணவி தேர்வில் தேர்ச்சி பெற்றால், அவருக்கு மாதம் ரூ. 20/- வீதம் மற்றொரு கூடுதல் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. ஆக மொத்தம் பிரதி மாதம் ரூ.80/- வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும், இதற்கான கீழ்நிலை/மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகம் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. தவிர அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 16

தொழிலாளர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தின் 13 இடங்களில் இலவச படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிக, மிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக சென்னைக்கு வருகையில், தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லம் டி.எம்.எஸ். வளாகம், சென்னையில் கட்டப்பட்டுள்ளது.

காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம் (26 படுக்கைகள்) திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிப்பள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப்பிரிவுகளைக் கட்டியுள்ளது.

இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன்பெற்றவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளன:—

| | 1-1-1996 முதல் 31-12-1996 முடிய |
|---|---|
| 1. தொழிலாளர் நல மையங்கள் | 52 |
| 2. தையற் பயிற்சி நிலையங்கள் | 19 |
| மொத்தம் | 71 |

**2. குழந்தைகள் காப்பக பிரிவு:**

| | |
|---|---|
| மொத்த காப்பகங்களின் எண்ணிக்கை | 52 |
| பயனுற்ற குழந்தைகள் | 2051 |

**3. மொத்த படிப்பகங்கள் 13**



1997 ஏப்ரல் 16]

**4. தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்காக உதவித் தொகை வழங்கிய விபரம்:**

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | (1-1-1996 முதல் | 31-12-1996 முடிய) |
| 1. பொறியியல் பட்டப்படிப்பு | 106 | 1,27,200/- |
| 2. பொறியியல் பட்டயப்படிப்பு | 259 | 1,86,480/- |
| 3. மருத்துவப் பட்டப்படிப்பு | 21 | 22,200/- |
| 4. மருத்துவப் பட்டயப்படிப்பு | 2 | 1,440/- |
| 5. சட்டப்படிப்பு | 2 | 2,400/- |
| 6. வேளாண்மை பட்டப்படிப்பு | 3 | 3,600/- |
| 7. தொழிற் பயிற்சிக் கல்வி | 145 | 72,500/- |
| 8. மேல்நிலைக் கல்வி | 65 | 39,000/- |

**இதர நலத்திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்கள்:**

**நலத் திட்டங்களின் விவரங்கள்:**

| | பயன் பெற்றவர்கள் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | (1-1-1996 முதல் | 31-12-1996 முடிய) |
| அ. தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை திரும்ப அளித்தல் | 405 | 50,600/- |
| ஆ. தொழிலாளர் பிள்ளைகள் தட்டச்சு/சுருக்கெழுத்து படிக்க செலவிடப்பட்ட தொகையைத் திரும்ப அளித்தல் | 124 | 17,330/- |
| இ. பாடநூல் உதவித் தொகை | 3,335 | 1,58,940/- |
| ஈ. ஈமச் சடங்கிற்குரிய தொகை | 206 | 61,800/- |
| உ. காது கேட்கும் கருவிகள் வழங்குதல் | 14 | 14,320/- |

**எதிர்காலத் திட்டங்கள்:**

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10-வது, 12-வது வகுப்பு தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளர்கள் குழந்தைகளுக்கு ரூ.1000/- மற்றும் ரூ.500/- பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இதற்காக ரூ.1.68 லட்சம் 1997-98-ம் ஆண்டு திட்டமிட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## அத்தியாயம் - 6

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

**கல்வி நிலையத்தின் 1996-ம் ஆண்டிற்கான சாதனைகள்:**

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ம் ஆண்டு நிறுவப்பட்டது; 1978-ம் ஆண்டில் இது முதன்மைக் கல்வி நிலையமாக உயர்த்தப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி 8-10-1987 முதல் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆட்சி மன்றக் குழு, இந்நிலையத்தின் நிர்வாகத்தினைக் கவனித்து வருகிறது. இந்நிலையத்திற்கு இயக்குநராக தொழிலாளர் துறையிலிருந்து இணை ஆணையர் நிலையில் அரசு நியமனம் செய்துள்ளது.

**இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள் என்னவென்றால்:**

1. தொழிற் சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்.

2. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்.

3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.

1. தொழிலாளர்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

**கல்வி நிலையத்தின் செயல்பாடுகள்:**

இக்கல்வி நிலையம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள், இயல்பாக்கப் பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றை காலமுறையாக நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும் தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் இப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைத்தவிர, இக்கல்வி நிலையம், தொழிலாளர் நிர்வாக முதுநிலை

[1997 ஏப்ரல் 16

பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) (பகுதி நேர மற்றும் அஞ்சல் வழிக் கல்வி மூலம்) தொழிலாளர் நிர்வாக இளங்கலைப் பட்டப்படிப்பும் (பி.எல்.எம்), தொழிலாளர் நிர்வாக முதுகலைப்பட்டப்படிப்பும் (எம்.எல்.எம்) நடத்தி வருகிறது. சென்னை பல்கலைக் கழகம் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் தொழிலாளர் நிர்வாக இளநிலைப் பட்டப்படிப்பிற்கும், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டமேற்படிப்பிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1993-94 மற்றும் 1994-95 ஆண்டுகளில் பயின்ற 184 மாணவர்களுக்கு தொழிலாளர் நிர்வாகத்தில் பட்டம் மற்றும் பட்டயம் வழங்க பட்டமளிப்பு விழா 6-11-1996 அன்று நடத்தப்பட்டது.

1996-ம் ஆண்டில் கடைகள் மற்றும் உணவு நிறுவனங்களின் உரிமையாளர்களுக்காக, தொழிலாளர் நலச் சட்டங்கள் தொடர்பான 13 பயிற்சி திட்டங்களும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பாராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் அறிக்கை தயாரித்தல் தொடர்பான மூன்று கருத்தரங்குகளும், தமிழ்நாடு மின்சார வாரிய நிர்வாகப் பிரதிநிதிகளுக்கான "தொழில் உறவுகள்" என்னும் பயிற்சி நான்கு அணிகளுக்கும், நிர்வாகம்-தொழிலாளர் மனித உறவில் புதிய நோக்குகள் பற்றிய ஒரு கருத்தரங்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கான நலச் சட்டங்கள் பற்றிய ஒரு கருத்தரங்கும் நடத்தப்பட்டன. 1996-ம் ஆண்டில் மொத்தம் 1,981 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்றனர். தொழிலாளர் நிர்வாகம் பற்றி இரண்டு வருட முதுநிலை பட்டயப் படிப்பில் (பகுதி நேரம்) (பி.ஜி.டி.எல்.ஏ) 67 மாணவர்களும், இதே பட்டயப் படிப்பில் அஞ்சல் வழிக் கல்வி மூலம் 167 மாணவர்களும் பயில்கின்றனர். இதன் பொருட்டு பாடக் குறிப்புகள் தயார் செய்யப்பட்டு, அச்சடிக்கப்பட்டு மாணவர்களுக்கு அனுப்பப்பட்டன. மேலும் அஞ்சல் வழிக் கல்வி மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் சென்னை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் தொடர்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் நிர்வாக இளநிலைப் பட்டப்படிப்பு (பி.எல்.எம்) வகுப்பில் 50 மாணவர்களும், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டமேற்படிப்பில் (எம்.எல்.எம்) 36 மாணவர்களும் 1996-97-ம் ஆண்டில் சேர்க்கப்பட்டு தற்போது கல்வி பயின்று வருகின்றனர்.

1996-ம் ஆண்டு காலத்தில் சென்னை நகரில், குறிப்பிட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளில் குறைந்தபட்ச **ஊதியம்** வழங்குதல் என்பது குறித்து இக்கல்வி நிலைய ஆராய்ச்சி அலுவலரால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.



1997 ஏப்ரல் 16]

**நிலையத்தில் 1997-98 ம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் கருத்தரங்கு மற்றும் பயிற்சிக்கான திட்டங்கள்:**

இக்கல்வி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்களும் கருத்தரங்குகளும் 1997-98-ம் ஆண்டில் நடத்தப்படவுள்ளன.

1. நீதிமுறை சார்பு பற்றி தொழிலாளர் துறை அலுவலர்களுக்கான பயிற்சிகள்.

2. தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி தோட்ட தொழில் நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள் மற்றும் கடைகள், சிறு தொழில்கள் ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு விளக்கமுறைக் கருத்தரங்கு.

3. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் "தொழிலாளர் நல அலுவலர்கள் பங்கு" என்பது பற்றிய பயிற்சிகள்.

4. தொழிலாளர் நலத்துறை அலுவலர்களுக்கு சமரச நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கப் பயிற்சி தொடர்பான பயிற்சிகள்.

5. தொழிலாளர்களுக்கும் அவர்களது இல்லத்தரசிகளுக்கும் "தரமிகு வாழ்வு" என்பது பற்றிய பயிற்சி.

6. "நல்ல தொழிற் சங்கம் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களை உருவாக்குதல்" என்பது பற்றிய பயிற்சி.

7. ஐபெக்-ஐ.எல்.ஓ. நிதி உதவியுடன் 25 தொழிலாளர் ஆய்வாளர்கள்/தொழிற்சாலைகள் ஆய்வாளர்களுக்கு குழந்தை தொழிலாளர் சட்டம் குறித்து முதல் கட்டமாக ஏப்ரல் 1997-ல் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

## அத்தியாயம்-7

## தொழிற்சாலைகள் நிர்வாகம்

### நிர்வாக அமைப்பு:

தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து தொழிற்சாலைகளிலும், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 13 தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகள் ஆய்வுத் துறை செயல்படுத்துகிறது. இந்த முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்களை செயலாக்குவதன் மூலம் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் அவர்களின் நல வசதிகள் உறுதி செய்யப்படுகின்றன.

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் பிற தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்தி நிர்வகிக்கும் தொழிற்சாலைகள் ஆய்வுத் துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் தலைவர் ஆவார். அவருக்கு உதவியாக 1 கூடுதல் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணை தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர்கள் 49 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 13 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், 1 அறுவை மருத்துவர், 8 உதவி அறுவை மருத்துவர்கள், 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 நிர்வாக அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

தொழிற்சாலைகளில் தொழிற்சாலை சட்டத்தையும் மற்ற சட்டங்களையும் நேரடியாக செயல்படுத்துவதற்கு தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர் தலைமையில் 13 கோட்டங்கள் உள்ளன. இவை அன்றி, தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தி வகுப்புகள் நடத்துவதற்கும், அழுத்தக் கலன்களை சோதிப்பதற்கும், உதவி அறுவை மருத்துவர்கள் உதவியுடன் தொழிலாளர்களின் உடல் நலனை சோதிப்பதற்கும், பாதுகாப்பு மற்றும் நல [illegible] செயலாற்றும் தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர் தலைமையில் 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் உள்ளன.

பெரும் அபாயம் மற்றும் விபத்துக்கள் நிகழ வாய்ப்பிருக்கும் அபாயகரமான தொழிற்சாலைகளுக்காக பெரும் அபாயம் மற்றும் விபத்து தடுப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர் தலைமையின் கீழ் இயங்குகிறது



மற்றொரு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், உறுப்பினர் செயலாளராக உள்ள "மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுக்காப்புக் குழு" மற்றும் "மாநில அளவிலான செயற்குழு/வல்லுநர் குழு" அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### பாதுகாப்பு மேம்பாடு:

### பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு:

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் கூடுதல் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளரின் தலைமையில் இயங்கும் பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு 1988-ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு பேரபாய தடுப்பு முறைகளை தயாரிப்பதற்கான தகுந்த வழி முறைகளை அளித்து வருகிறது. அபாயகரமான தொழில் முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் மேற்குறிப்பிட்ட தடுப்பு முறைகளின் செயலாக்கத்திற்கு தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் இக்குழுவின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வருகிறது.

நமது மாநிலத்தில் அபாயகரமான பொருட்களை மூலப்பொருளாக கொண்டு செயல்படும் பேரபாயத் தொழிற்சாலைகள் 68 உள்ளன. இவற்றில் கீழ்க்கண்ட பேரபாயங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

1. தொழிற்சாலைகள் வளாகத்திற்குள் உள்ள தொழிலாளர்களுக்கு உண்டாக கூடிய பெரும் விபத்து அபாயங்கள்

2. தொழிற்சாலைகள் வளாகத்திற்கு வெளியில் வசிக்கும் பொது மக்களுக்கு உண்டாகக் கூடிய பெரும் விபத்துக்கள் மற்றும் பொருட் சேதங்கள்

### சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிப்பு:

பேரபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களாக மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அடையாளம் காட்டப்பட்டுள்ளன.

இந்த இடங்களில் உள்ள அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகளில் ஏற்படும் பேரபாயத்தைக் கட்டுப் படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் அவசர கால நடவடிக்கைகள் அடங்கிய "உள்ளிருப்பு அவசர காலத்திட்டங்கள்" சென்னை, தொழிற் சாலைகள் தலைமை ஆய்வாளரால் பெறப்பட்டு கூர்ந்தாய்வு செய்யப் பட்டு பதிவு செய்யப்படுகின்றன. ஒத்திகை அணி வகுப்பு மூலம் பேரபாயம் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் வழிகள் கடைபிடிக்கப்படுகின்றனவா எனவும் சரி பார்க்கப்படுகிறது.

பேரபாய தொழிற்சாலைகளை சுற்றி வசிக்கும் பொது மக்களுக்கு அவசர காலத்தில் ஏற்படக் கூடிய இடர்பாடுகளிலிருந்து காப்பாற்றும் வழிமுறைகள் அடங்கிய "வெளியிருப்பு அவசர கால திட்டங்கள்" பெறப்படுகின்றன. இவற்றை அந்தந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவரை தலைவராகவும், தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளரை உறுப்பினராகவும் கொண்ட மாவட்ட அவசர கால குழு பரிசீலிக்கிறது.

**பாதுகாப்பு பயிற்சி மற்றும் அளவீடு:**

இக்குழுவின் கட்டுபாட்டில், தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வரின் தலைமையிலான பத்து சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் இயங்குகின்றன. இக்கோட்டங்கள்,

(1) தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அழுத்தக் கலன்களை சட்ட விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட காலமுறைப்படியான சோதனை களை மேற்கொண்டு சான்றிதழ் வழங்குகின்றன.

(2) தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தி, குறிப்பாக தொழிலாளர்களுக்கு அவர்களது திறமைகள் பாதுகாப்பு விழிப்புணர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. பாதுகாப்பு தரம் மேம்படுத்தப் படவும், விபத்துக்களை தவிர்க்கவும் நிர்வாகத்தினருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

(3) பெரும் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ள தொழிற்சாலைகளில் பேரபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்புகளை கண்டறிந்து அவற்றை களை வதற்கான வழிமுறைகள், பாதுகாப்பு அளவீடுகள் மேற்கொள்ளப் படுகிறது. பாதுகாப்பு அளவீடுகளில் கண்டறியப்பட்டவை நிர்வாகங் களுக்கு மேல் நடவடிக்கைக்காக தெரிவிக்கப்படுகிறது.



**மாநில பாதுகாப்பு விருதுகள்:**

தொழிற்சாலைகளில் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில பாதுகாப்பு விருதுகள் நிர்வாகத்தினருக்கு வழங்கப்படுகின்றன. கீழ்கண்ட பரிசு திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

'அ' பிரிவு—ஆண்டுக்கு 10 லட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

'ஆ' பிரிவு—ஆண்டுக்கு 5 லட்சம் முதல் 10 லட்சம் மனித நேரம் வரை வேலை செய்த தொழிற்சாலைகள்.

'இ' பிரிவு—ஆண்டுக்கு 2 லட்சம் முதல் 5 லட்சம் மனித நேரம் வரை வேலை செய்த தொழிற்சாலைகள்.

இத்தொழிற்சாலைகள் கீழ்கண்ட திட்டங்களின் கீழ் மனு செய்யலாம்:

திட்டம்-1 முந்தைய ஆண்டை ஒப்புநோக்குகையில் "விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதத்தை" அதிக அளவில் குறைத்துக் காட்டிய தொழிற்சாலைக்கு இப்பரிசு அளிக்கப் படுகிறது.

திட்டம்-2 நடப்பு ஆண்டில் குறைவான "விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதத்தை" தெரிவித்த தொழிற்சாலைகளுக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது.

திட்டம்-3 நடப்பு ஆண்டில் மிக அதிகமாக "விபத்து நிகழாத மனித நேரம்" செயல் புரிந்த தொழிற்சாலைக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது.

ரூ.2500 மதிப்புள்ள முதல் பரிசு கேடயங்கள் -90

ரூ.1500 மதிப்புள்ள இரண்டாம் பரிசு கேடயங்கள் -90

1994-ம் ஆண்டிற்கான பாதுகாப்பு விருதுகள் 6-7-1996 அன்று கோவை மாநகரில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன.

| ஆண்டு | விருதுகள் | | |
|---|---|---|---|
| | முதல் | இரண்டாம் | மூன்றாம் |
| 1994 | 83 | 73 | 59 |

**தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்:** [1997 ஏப்ரல் 16

தொழிற்சாலைகளின் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் நல்ல கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை மேற்கூறிய துறைகளில் ஊக்குவித்து அவர்களுக்கு மாநில அளவில் அங்கீகாரம் பெற்றுத் தருவதற்காக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. கருத்துக்கள் தரக்கூடிய தலைப்புகள் பின்வருமாறு:

1. தொழில் வியாதிகளை தடுத்தல், பாதுகாப்பு உடல்நலம் நல வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல், பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் பாதுகாப்புக் கருவிகளை மேம்படுத்துதல்.

2. பணியில் ஏற்படும் உடற் சோர்வை குறைத்தல் மற்றும் களைப்பு நீக்கும் வழி முறைகள்.

3. பொருட்களை கையாளும் முறைகள் மற்றும் சிப்பம் கட்டும் முறைகளை மேம்படுத்துதல்.

4. இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டு பொருட்களை பயன்படுத்துதல்.

5. இயந்திரங்களையும், கருவிகளையும் அதிக அளவில் பயன்படுத்தும் செயலில் சிக்கனம், உற்பத்தி நேர சிக்கனம், மின் சக்தி சிக்கனம், எரிபொருள் சிக்கனம், ஆகியவற்றுக்கான வழிமுறைகள்.

6. வீணாகும் பொருள் சிக்கனம், அப்படியே வீணாகும் பொருட்களை மீளப் பயன்படுத்தும் வழிமுறைகள்.

7. வேறு ஏதேனும் வழிகளில் உற்பத்தித் திறனை கூட்டுதல்.

8. நிர்வாக அமைப்பின் செயல் திறனை அதிகப்படுத்துதல்.

**வழங்கப்படும் மூன்று வகையான விருதுகளின் விவரம்.**

**இனம்-அ** ரூ.5000/-க்கான பணப் பரிசுடன் 3 பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.

**இனம்-ஆ** ரூ.3000/-க்கான பணப் பரிசுடன் 6 பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.



1997 ஏப்ரல் 16]

இனம்-இ ரூ.1000/-க்கான பணப் பரிசுடன் 15 பரிசுகள் கொடுக்கப்படுகின்றன.

6-7-1996 அன்று கோவை மாநகரில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 1994-ம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | விருதுகள் | | |
|---|---|---|---|
| | முதல் | இரண்டாம் | மூன்றாம் |
| 1994 | 3 | 6 (14 தொழிலாளர்கள்) | 15 (18 தொழிலாளர்கள்) |

**சிவகாசி பயிற்சி மையம்:**

தீக்குச்சி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதியியல் பொருட்களை பாதுகாப்பாக கையாளும் வழிமுறைகளை அறியாமலேயே கையாளுகின்றனர்.

எனவே, சிவகாசி பயிற்சி மையத் தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர் ஒவ்வொரு மாதமும் மேற்குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு 10 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துகிறார். அபாயகரமான வேதியியல் பொருட்களை பாதுகாப்பாக கையாளுதல், செய்முறையை பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், சேமிப்பு வைத்தல் போன்ற வழி முறைகள் சொல்லித் தரப்படுகின்றன. காலப்போக்கில் விபத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக இப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1996-ல் தீக்குச்சி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் 123 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 5306 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**தொகுதி தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்:**

தமிழ்நாட்டில் உள்ள தீக்குச்சி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனி நபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்துக் காரணமாக பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டதால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி பயன் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமன்றி மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தினால் 10 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகள் பயனடைவர்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் லிமிடெட் 1-7-1996-ல் இருந்து 30-6-1997 வரை பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிலாளிக்கு ரூ.18.10 (5% சேவை வரி உட்பட) என்ற விதத்தில் ரூ.50,000/-க்கான காப்பு நிதிக்கும், 1-7-1996-ல் இருந்து 30-6-1999 வரை ஒரு தொழிலாளிக்கு ரூ.40.65 (5% சேவை வரி உட்பட) என்ற விதத்தில் அதே தொகைக்கு ஒப்புக் கொண்டுள்ளது. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் 1-7-1996 முதல் 30-6-1997 வரை தீக்குச்சி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிலாளிக்கு ரூபாய் 5 மற்றும் 5% சேவை வரி என்ற விதத்தில் ரூபாய் 50,000-க்கான காப்பு நிதிக்கு ஒப்புக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தில் தீக்குச்சி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 84,045 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 1996-ம் ஆண்டு 19 கோரிக்கை மனுக்கள் தீர்க்கப்பட்டு ரூ.9,50,000/- வழங்கப்பட்டுள்ளது.

**சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறப்புக் குழு ஆய்வுகள்:**

வெடி விபத்துக்களை தடுப்பதற்கென்றே ஒவ்வொன்றும் இரண்டு அணிகள் அடங்கிய இரு சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு அணியிலும் 3 ஆய்வாளர்கள் வீதம் இந்த நான்கு அணிகளும் 1996 செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அனைத்து 383 பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950 கடைபிடிக்கப்படுகின்றனவா என ஆய்வுகள் மேற்கொண்டுள்ளன. இவ்வாறு சிறப்புப் பணி மேற்கொண்டதால் 1996-ல் பட்டாசு தொழிற்சாலைகளில் மேற்கொண்டு வெடி விபத்துக்கள் நடக்காமல் தடுக்கப்பட்டது.



**உடல் நல மேம்பாடு:**

உடல் நல மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஒரு தலைமை மருத்துவ அலுவலரும், எட்டு மருத்துவ அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர்.

**தொழில் நலவியல்:**

தொழில் நலவியல் ஆய்வுக் கூடம் சோதனைக் கருவிகளுடன் சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில், தொழிலாளர்களின் பணியிடப் பாதுகாப்பு மற்றும் உடல் நலத்தகுதியினைக் கண்காணிக்க தொழில் நலவியல் பிரிவு ஏறபடுத்தப்பட்டுள்ளது. பணி நிலைப் பிரிவில் அறுவை மருத்துவர் தகுதியுடைய மருத்துவர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு, ஒரு உதவி அறுவை மருத்துவர் மற்றும் ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளரின் உதவியோடு இப்பிரிவு செயல்படுகிறது.

இத் தொழில் நலவியல் பிரிவுடன் இணைந்துள்ள ஆய்வகத்தில் காற்றில் பரவக் கூடிய வேதியியல் பொருட்களை அம்மோனியா குளோரின் சல்பர்-டை-ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பைடு மற்றும் பல்வேறு கனிமப் பொருள் தூசிகளின் செறிவை மதிப்பீடு செய்வதற்கான வசதிகள் உள்ளன. இரைச்சல் போன்ற பௌதீகத் காரணங்களும் பணி செய்யும் இடங்களில் அளக்கப்படுகிறது.

இந்த உடல் நல குழு தொழில் ரீதியான நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ள தொழிற்சாலைகளில் உடல் நல அளவீடுகள் மேற்கொண்டும், தொழில் ரீதியான நோய்களைக் கண்டறிந்தும், தேவைக்கேற்ப மாதிரிகள் எடுத்து வந்து ஆய்வுக் கூடத்தில் பகுத்தாய்வு செய்தும், அதற்கேற்ப நிர்வாகத்தினருக்கு தொடர் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியும் தொடர்புடைய பதிவேடுகளையும் ஆவணங்களையும் பராமரித்தும் செயல்படுகிறது.

மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலை சட்ட [illegible] சான்றளிக்கும் மருத்துவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்துவருகின்றனர்:

(i) தொழிற்சாலை சட்டத்தின் அட்டவணையில் அடங்கிய அபாயகரமான செயல்முறைகள் நடைபெறும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து சான்றிதழ்கள் வழங்குதல்.

[1997 ஏப்ரல் 16

(2) வளர் இளம் பருவ தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து உடல் நிலை தகுதிச் சான்றிதழ்கள் வழங்குதல்.

(3) உடல் நலத்திற்கு ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் உடல் நல அளவீடு நடத்துதல் மற்றும் ஆபத்துக்களைக் கண்டறிந்து. அவற்றை பகுப்பாய்வு செய்து தீர்வு முறைகளை எடுத்துரைத்தல்.

(4) குழந்தை தொழிலாளர் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆய்வு செய்யும் ஆய்வு அலுவலர்களுக்கு குழந்தைத் தொழிலாளர்களின் வயதை மதிப்பீடு செய்வதில் உதவுதல்.

**மாநில அளவிலான உற்பத்தித் திறன் பிரிவு:**

இப்பிரிவு 1985-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் தலைமையின்கீழ் இதர ஆதரவுப் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இப்பிரிவு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் மேற்பார்வை நிலைகளில் உள்ள பணியாளர்களுக்கு உற்பத்தித்திறன் குறித்த கருத்துக்களையும் நுணுக்கங்களையும் பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்டு ஈடுபட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு தற்போது உள்ள வள ஆதாரங்களைக் கொண்டு, குறைந்த வேலை நேரத்தில் பொருட்களை வீணாவதைத் தடுத்து அதிகப் பொருட்களை உற்பத்தி செய்ய கற்பிக்கப்பட்டு, ஊக்குவிக்கப் படுகிறார்கள். அதிக உற்பத்தித் திறனுக்கும் அதன் விளைவால் அதிக வருமானம் பெறவும் பல நல்ல ஊக்கத் திட்டங்களை இப்பிரிவு நடைமுறைப்படுத்துகிறது. தொழிற்சாலை அளவில், உற்பத்தித் திறன் மற்றும் நுணுக்கங்கள் குறித்து சிறப்பு அறிவைப் பெறவும், அவர்களது உற்பத்தித் திறன் தரத்தை மேம்படுத்தவும் உற்பத்தித் திறன் பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களுக்கு நடத்தப்படுகின்றன. மேலும் இப்பிரிவு பணியில் பாதுகாப்பு ஆராய்வு, வேலை முறையை சீர்படுத்துதல் குறித்த ஆய்வு. வேலை நேரங்களைக் குறித்த ஆய்வு மற்றும் வேலை இயக்க ஆய்வு ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

**சிறு தொழில் நிறுவனங்கள்:**

1-1-1997-ல் உள்ளபடி தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன்படி பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 24,169 ஆகும். இவற்றில் 13,432 தொழிற்சாலைகள் சிறு தொழில் நிறுவனங்கள் ஆகும்.



1997 ஏப்ரல் 16]

சாதாரணமாக தொ.சா.சட்டம் 1948-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும். சிறு தொழிற்சாலைகளின் வளர்ச்சியைக் கருதி மேற்படி ஆய்வுக்காலம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | தொழிற்சாலைகளின் வகைப்பாடு | ஆய்வுக்கால முறை |
|---|---|---|
| 1. | சிறுதொழில் நிறுவனங்கள் (கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபடாதவை) சிறுதொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள். | இச்சிறுதொழில் நிறுவனங்களை தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கங்களிடமிருந்து புகார் பெறப்பட்டால் மட்டும் ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு புகார் பெறப்படாத நிலையில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும். |
| 2. | (1) 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி அட்டவணை 1 முதல் 32 முடிய உள்ள அட்டவணைப் (அட்டவணை 24 தவிர) படி கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்கள். | இத்தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும். |
| | (2) சிறுதொழில் நிறுவனங்கள் வகைப்படுத்தாத இதர தொழிற்சாலைகள் மட்டும் இதில் அடங்கும். | இத்தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்யப்பட வேண்டும். |
| | (3) அட்டவணை 24-க்கு உட்பட்ட தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் (அவைகள் சிறுதொழில் நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டாலும்). | இத் தொழிற்சாலைகள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்யப்பட வேண்டும். |

[1997 ஏப்ரல் 16

**சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழு:**

தொழிலாளர் நலச் சட்டங்களை சிறுதொழில் நிறுவனங்களில் செயல்படுத்தும் முறையை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணிப்பதற்காக ஒரு தனிக் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இக் குழுமம் தொழிலாளர் துறையின் செயலாளர்கள் தலைமையின் கீழ் இயங்கிவருகிறது. இக் குழுவின் உறுப்பினர் செயலாளராக தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் உள்ளார். மேற்கண்ட குழு 13-11-1996-ல் கூடியபோது உறுப்பினர்கள் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினரது ஒத்துழைப்பு சிறுதொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான செயல் குழு/வல்லுநர் குழு:**

'போபால்' துயர நிகழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாட்டிலுள்ள அபாயகரமான இரசாயன தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பாதுகாப்பினையும், சுகாதாரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு அத்தொழிற்சாலைகளில் கடைப்பிடிக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் போதுமானதாக உள்ளதா என ஆய்ந்து ஒரு அறிக்கையினை அளிக்க டாக்டர் எம். சாந்தப்பா, முன்னாள் துணை வேந்தர், சென்னை பல்கலைக் கழகம் அவர்கள் தலைமையில் (டாஸ்க்போர்ஸ்) செயல் குழுவினை 1985-ம் ஆண்டு தமிழக அரசு நிறுவியது. அரசுக்கு அக்குழு முக்கியமான சில பரிந்துரைகளைச் செய்தது.

அக் குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தொழிலக உடல் நல ஆபத்துக்களைக் குறித்த தகவல்களை மேம்படுத்தவும், இரசாயன தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் இரசாயனத்தை உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் விஷத் தன்மையுள்ள பொருட்களை உபயோகப்படுத்தும் உற்பத்தி முறைகளிலும் பாதுகாப்பு வழிவகைகளை நடைமுறைப்படுத்தவும், தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இரு குழுக்களை ஏற்படுத்தியது:

1. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு.
2. மாநில அளவிலான செயல் குழு/வல்லுநர் குழு.



1997 ஏப்ரல் 16]

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவில் பல்வேறு அரசு துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இராசயனத் தொழிற்சாலை வல்லுநர்கள் ஆகியோர்கள் இடம் பெற்று உள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் மேற்படி குழுவின் தலைவராவார்.

மேற்படி குழுவின் பணி, தொடர் பணியாக உள்ளது. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க் கண்டவாறு உள்ளன:

1. மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு மற்றும் உடல் நலம் குறித்த நிலைகளின் மீது கொள்கை முடிவுகள் எடுத்தல்.
2. செயல்/வல்லுநர் குழுவினரால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி இராசயனம் மற்றும் ஆபத்து விளைவிக்கும், தொழிற்சாலைகளில் விரைவான மற்றும் முழுமையான பாதுகாப்பு அடைதல்.
3. இரசாயனம் மற்றும் ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளில் பேராபத்துக் கட்டுப்பாட்டு அமைப்பு அறிமுகப்படுத்துதல்.
4. அபாயகரமான தொழிற்சாலைகளின் அமைவிடம்/மனைப் பகுதியில் உற்பத்தி முறையால் ஏற்படும் அபாயங்கள் மற்றும் அதனை சரிசெய்வதற்கான பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை குறித்து திறனாய்வு செய்தல்.

அரசு ஆணை எண் 139, நாள் 26-9-1996-ன்படி இக்குழுவானது 1-7-1996 முதல் 30-6-1999 வரை மூன்று ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடவேண்டும்.

மாநில அளவிலான செயல்/வல்லுநர் குழுவில் அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும், தொழில் நுட்ப நிபுணர்களும் இடம் பெற்றுள்ளனர். தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை செயலர் இதன் தலைவர் ஆவார்.

[1997 ஏப்ரல் 16

இக் குழுவானது அரசாணை எண் 138, நாள் 26-9-1996-ன்படி 1-7-1996 முதல் 30-6-1999 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். உறுப்பினர் செயலர்/தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் மேற்கண்ட இரண்டு குழுக்களுக்கும் உறுப்பினர் செயலராக செயல்படுவார்.

அபாயகரமான மற்றும் விஷத் தன்மையுள்ள இராசயனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் தற்போதுள்ள பாதுகாப்பு அளவுகளை மதிப்பீடு செய்யவும் அவற்றை மேம்படுத்த முன்மொழிவுத் தயாரிக்கும் விதத்தில் விரைவு அளவீடுகளை மேற்கொள்வது இக் குழுவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

இக் குழு 29-6-1996 அன்று கூடியது. இக்கூட்டத்தில் தோல் தொழிற் சாலைகள் குறித்த துணைக் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகளை பரிசீலித்து முழுமையாக ஏற்றுக்கொண்டது. பாதுகாப்பு தணிக்கை, தொழிற்சாலையின் உள்ளும் வெளியிலும் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு அவசரக் காலத் திட்டம் தயாரித்தல், அபாயகரமான முறையில் ஈடுபட்டுள்ள இயந்திரங்களின் பழுது அகற்றுதலுக்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்கண்ட வேலையை அனுமதித்தல் ஆகிய இதர பணிகளையும் இக்குழு செயல்படுத்தி வருகிறது.

**எதிர்கால திட்டம்:**

1. சர்க்கரை, சாராயம் மற்றும் ஊறல் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலம், சுற்றுச் சூழல் போன்றவற்றை ஆராயும் பொருட்டு ஒரு துணைக் குழுவை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
2. இம்மாநிலத்தில் உள்ள பெரும் விபத்து அபாயகரமான தொழிற்சாலைகளில் உடல் நலம் பாதுகாப்பு மற்றும் அபாயங்களின் அளவுகளை அறிவதற்கு என ஒரு துணைக் குழுவை அமைப்பது என்று 9-1-1997 அன்று கூடிய மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்பு குழு தீர்மானித்துள்ளது.



1997 ஏப்ரல் 16]

## அத்தியாயம்-8

## மாநில தொழிலாளர் நலன் ஈட்டுறுதித் திட்டம்

இம்மாநிலத்தில் இத்திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசு தொழிலாளர் நலத்துறையின் கீழ் சமூகப் பாதுகாப்பு பிரிவு கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும். தொழிலாளர் நலக் காப்புறுதி கழகம் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. இத்திட்டத்திற்கு இக்கழகத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து வாப்பட்ட பங்கு தொகைகள் மூலம் வருவாய் கிடைக்கப்படுவதாகும்.

இத்திட்டம் மின் சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் மின்சக்தியைப் பயன்படுத்தாமல் 20-ம் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். 1-1-1997 முதல் மாத வருமானம் ரூ.6,500/-க்கு குறைவாகப் பெறும் ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள். அதைப் போல வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர் 1.75 விழுக்காடு மற்றும் 1.75 விழுக்காடு என திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகளை தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் பெறுவதற்காக வகை செய்யப்பட்டுள்ளது.

| உதவி | அளிக்கும் முறை |
|---|---|
| 1. மருத்துவ உதவி | மருத்துவப் பொருட்களும் மற்றும் சிகிச்சையுமாக அளித்தல். |
| 2. உடல் நலமின்மைக்காக உதவி | பணமாக அளித்தல் |
| 3. நீடித்த உடல் நலமின்மைக்காக உதவி | |
| 4. பேறுகால உதவி | |
| 5. தற்காலிகமாக இயலாமையுற்றோருக்கு உதவி | |
| 6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கு உதவி | |
| 7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி | |
| 8 இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை | |
| 9. உடல் நலமின்மைக்காக கூடுதல் உதவி | |

இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கடமையாகும்.

இம்மாநிலத்தில் உள்ள 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனைகளும், அந்த மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கைகளும் பின்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1. | தொ.அ.ஈ. மருத்துவமனை, அயன்புரம், சென்னை-23 | : | 616 |
| 2. | தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர் | : | 500 |
| 3. | தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை | : | 209 |
| 4. | தொ.அ.ஈ. மருத்துவமனை, வேலூர், வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் | : | 50 |
| 5. | தொ.அ.ஈ. மருத்துவமனை, சிவகாசி, காமராசர் மாவட்டம் | : | 50 |
| 6. | தொ.அ.ஈ. மருத்துவமனை, சேலம் | : | 50 |
| 7. | தொ.அ.ஈ. மருத்துவமனை, ஓசூர், தர்மபுரி மாவட்டம் | : | 50 |
| | தொ.அ.ஈ. மருத்துவமனை, இணைப்புகள் | : | 136 |
| | படுக்கைகள் அரசு மருத்துவமனையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது | : | 266 |
| | மொத்தம் | : | 1927 |

இது தவிர 153 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மருத்துவமனை, 5 நடமாடும் மருத்துவமனைகள் மற்றும் இரண்டு பயன்படுத்திக் கொள்ளும் மருத்துவமனைகள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இவைகள் அந்தந்த மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் நிர்வாக கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

158 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையான மற்றும் நடமாடும் மருந்தகங்கள் ... 61 மருந்தகங்கள் காப்புறுதிக் கழகத்தினால் கட்டப்பட்ட கட்டிடங்களில் இயங்குகின்றன.

தனியார் வாடகை கட்டிடங்களில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்த கட்டிடங்களில் இயக்குவதற்காக, கட்டிடங்கள் கட்டித்தர, 1-4-1990 முதல் 7:1 என்ற விகிதத்தில் மொத்த செலவினை பகிர்ந்து கொள்ள, காப்புறுதிக் கழகமும், தமிழக அரசும் ஒப்புக் கொண்டுள்ளது.



31-1-1997 முடிய இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக விவரங்களை கீழ்கொண்டுள்ளவாறு காணலாம்:

இதில் அடங்கிய குடும்பங்களில் காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 10,53,821

பயன் அடைவோரின் எண்ணிக்கை (மொத்தம்) 10,88,825

இம்மாநிலத்தில் உள்ள, ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்களின் உறுப்பினர்களும் இதில் முழு மருத்துவ சிகிச்சை பெற தகுதி உடையவர்கள்.

தற்போது உயர்த்தப்பட்டுள்ள உச்ச வரம்பில் மொத்த கீழ்க்கண்ட விகிதங்களால் 1-4-1991 முதல் அமைந்துள்ளது. முழுமையான மருத்துவ வசதி ரூ.245/-ஒவ்வொரு காப்புறுதி நபருக்கு/1 ஆண்டுக்கு இதைத் தவிர இத்திட்டத்தின் கீழ் மருந்துகளுக்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு காப்புறுதி நபருக்கு ரூ.40/-க்கு மேல் ஆனால் ரூ.100/-க்கும் ஆகும் செலவானது மேற்படி உச்ச வரம்புத் தொகைக்கு மேல் 2-4-1991 முதல் பகிர்ந்து கொள்வதாகும். மேலும் 1-4-1997 முதல் முழுமையான மருத்துவ வசதிக்காக தொகையை ரூ.410-ல் இருந்து ரூ.500/- ஆக புது தில்லி காப்புறுதி கழகம் உயர்த்தி உத்தரவிட்டுள்ளது.

**தொ.அ.ஈ. திட்ட வளர்ச்சித் திட்டங்கள்:**

4-1-1996 அன்று உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்பட மருந்துகள் மற்றும் அழகூட்டும் பொருட்கள் சட்டத்தின்படி (Drugs & Cosmetic Act) கீழ்க்கண்ட மருத்துவமனைகள் தொ.அ.ஈ. திட்டத்தின் கீழ் உரிமம் பெற (Licence) உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி உரிமம் ஆறு மாதத்திற்குள் பெறப்பட வேண்டும்.

1. தொ.அ.ஈ. மருத்துவமனை, அயன்புரம்-23
2. தொ.அ.ஈ. மருத்துவமனை, மதுரை
3. தொ.அ.ஈ. மருத்துவமனை, கோயம்புத்தூர்.

[1997 ஏப்ரல் 16

## அத்தியாயம்-9

## தொழிலாளர் வருங்கால வைப்புநிதி

*1952-ம்* ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வகுக்கப்பட்ட 3 திட்டங்களில், 1952-ம் ஆண்டு தொழிலாளர் வைப்பு நிதித் திட்டமும் ஒன்று. இது 1-11-1952-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டம் ஜம்மு-காஷ்மீர் மாநிலம், அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு கட்டாய பங்குத் தொகை வருங்கால வைப்புநிதியினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் தொழிலாளரும், தொழிலதிபரும் பங்குத் தொகை செலுத்த வேண்டும். தொடக்கத்தில் இச்சட்டம் ஆறு பெருந்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. படிப்படியாக இது மேலும் பல தொழில்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் விரிவு படுத்தப் பட்டுள்ளது. இன்று இத்திட்டம் 177 தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு பல்வகையான நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

வயது முதிர்வு ஓய்வு, பணி ஓய்வு நிரந்தரமான மற்றும் முற்றிலும் ஊனமுற்றோர் பணியிலிருந்து ஓய்வுபெறும் முன்னரே இறக்க நேரிடுதல் மற்றும் இதுபோன்ற பல நிலையில் உள்ளவர்களுக்கு அவர்கள் செலுத்தும் வருங்கால வைப்புநிதியிலிருந்து மாதாந்திர ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டம் குறித்து தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 16-11-1995 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டது.

**நிதியினை நிருவகித்தல்:**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஈ.டி.எல்.ஐ. திட்டம் ஆகிய இம்மூன்று திட்டங்களும் மத்திய பொறுப்பாட்சியால் நிர்வகிக்கப்படுகிறது. இதை மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர் மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர் (பதவி நிலையால்) மத்திய அரசின் 5 பிரதிநிதிகள், மாநில அரசுகளின் 15 பிரதிநிதிகள், தொழிலாளர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள், தொழிலதிபர் அமைப்புகளின் 10



1997 ஏப்ரல் 16]

பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழுவாகும். தற்போதுள்ள மத்திய பொறுப்பாட்சியர் குழு 28-6-1990-ம் ஆண்டு மத்திய அரசால் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. இக்குழுவை திருத்தியமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**பொருந்தும் தன்மை:**

இச்சட்டம், திட்டங்கள் விதித்துறைகள் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/நிறுவனங்களுக்கு அல்லது மத்திய அரசு குறிப்பிட்டுள்ள பல்வகை நிறுவனங்களுக்கு பொருந்தும். 20 தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ள புதிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில், மூன்று ஆண்டுகளுக்கு இச்சட்டம் பொருந்தாது. 50 தொழிலாளர்களுக்கு குறைவாகப் பணி அமர்த்தியுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மின் சக்தி உதவி இன்றிச் செயல்படுபவையும் கட்டுப்பாட்டிலுள்ள அதற்கு சொந்தமான அல்லது மத்திய/மாநில அரசின் சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு (ஆனால் இந்த நிறுவனங்களில் பணியாளர்கள் இத்தகைய பயன்களைப்பெற்று, அனுபவித்து வரவேண்டும்) இச்சட்டம் பொருந்தாது. இச்சட்டத்தின் விதித்துறைகள் கீழ் வராத தொழிற்சாலைகள்/நிறுவனங்கள் அவற்றின் பெரும்பான்மை தொழிலாளர்களின் ஒப்புதலுடன் தானாக முன்வந்து இச்சட்டத்தின் கீழ் கொண்டு வருமாறு கோரலாம்.

**பங்குத் தொகை விதம்:**

இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொழிலதிபர் வழங்கும் பங்குத் தொகை மற்றும் தொழிலாளியின் பங்குத் தொகை ஆகிய இரண்டும் சேர்ந்து அடிப்படைக் கூலியில் $8\frac{1}{3}\%$ அகவிலைப்படி (உணவு சலுகைக்கான ரொக்க மதிப்பு உட்பட) தொடர்படி எவையேனும் வழங்கப்படின், அதனையும் சேர்த்து பங்குத் தொகையாக வழங்கவேண்டும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியமர்த்திய குறிப்பிடப்பட்டுள்ள 99 தொழில்/தொழில் வகையில் ஈடுப்பட்டுள்ள நிறுவனங்கள்/தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் 1-6-1989-ம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட பங்குத் தொகை 10% ஆகும். $8\frac{1}{3}\%$ பங்குத் தொகை தற்போது 10% ஆக மாற்றலாம் என்று மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**நிர்வாகக் கட்டணங்கள்:** [1997 ஏப்ரல் 16

இத்திட்டத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் தொழிலதிபர்களிடமிருந்து, உறுப்பினர்களின் மொத்த சம்பளத்தில் (இதன் அடிப்படையில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகிறது) 0.65 சதவீதம் என்ற வீதத்தில் நிர்வாகக் கட்டணம் வசூலிப்பதின் மூலம், இந்நிதியை நிறுவகிப்பதற்கான செலவு செய்யப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் எந்த மொத்த கூலியில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகின்றதோ அந்த மொத்த கூலித் தொகையில் 0.[illegible]% என்ற விதத்தில் ஆய்வுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

**1952 ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் உறுப்பினராதல்:**

மாதச் சம்பளம் 6000 ரூபாய்க்கு மிகைப்படாத தொழிலாளர்கள் அனைவரும் 1-10-1994-ஆம் நாளிலிருந்து தொழிற்சாலை நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து வருங்கால வைப்புநிதி திட்டத்தில் உறுப்பினராக வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட குறைந்த பணிக்கால அளவிற்கு அனைத்து தொழிலாளர்களிடமிருந்து வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் உறுப்பினர் ஆக வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட குறைந்த பணிக்கால அளவிற்கு உட்பட்டு அனைத்து தொழிலாளர்களிடமிருந்தும் வருங்கால வைப்புநிதி பிடிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள்/சந்தாதாரர்கள் (1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி திட்டம்)

இவ்வட்டாரத்தில் 31-12-1996-ம் நாள்வரை இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்கள்/சந்தாதாரர்களின் விவரம் வருமாறு:-

| | விலக்களிக் கப்பட்டவை | விலக்களிக் கப்படாதவை | மொத்தம் |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை | 432 | 33805 | 34237 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை | 420 | 2761 | 3181 |

1-1-1996 முதல் 31-12-1996-ம் நாள் வரையிலான கால அளவில் 1792 நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.



1997 ஏப்ரல் 16]

**வட்டாரக் குழு:**

1952-ம். ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வட்டாரக் குழுவை அமைக்க வகை செய்கின்றது. இதில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறை செயலாளர் தலைவராவார். இதில் தொழிலாளர் நல ஆணையரும், நிதிதுறை துணைச் செயலாளரும் மாநில அரசின் பிரதிநிதிகளாக உறுப்பினர்களாக இருப்பர். இக்குழுக்கள் மத்திய பொறுப்பாட்சியர் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

வட்டாரக் குழு மத்திய குழுமத்திற்குப் பின்வரும் பிரச்சினைகளில் அறிவுரை வழங்குகிறது:

1. மத்தியகுழு அவ்வப்போது வட்டாரக் குழுவிற்கும் அனுப்புகின்ற விஷயங்கள் குறித்து.

2. பொதுவாக மாநிலத்தில் இத்திட்டத்தின் நிர்வாகம் தொடர்பான அனைத்து விஷயங்கள் அதிலும் குறிப்பாக

(அ) வருங்கால வைப்புநிதி பங்குத்தொகைகள், ஏனைய கட்டணங்களின் வசூல் முன்னேற்றம்.

(ஆ) வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணல்

(இ) உரிமைக் கோரிக்கைகளை விரைந்து தீர்த்து வைத்தல்

(ஈ) இந்நிதி உறுப்பினர்களுக்கு ஆண்டுக் கணக்குகளை ஒப்படைத்தல்

(உ) திரும்பப் பெறக்கோரும் தொகைகளுக்கு விரைந்து அனுமதி வழங்குதல்.

**துணை வட்டார அலுவலகங்கள்:**

சென்னையில் உள்ள வட்டார அலுவலகத்துடன் கூடுதலாக சென்னை, செங்கை-அண்ணா, செங்கை-எம்.ஜி.ஆர். வடஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பாண்டிச்சேரி மாநிலம் ஆகியவற்றிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தமிழ்நாடு வட்டாரத்தில் கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் 6 துணை வட்டார அலுவலகங்கள் அருகிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செயல்பட்டு வருகின்றன.

**துணை வட்டார அலுவலகங்கள் வருமாறு:**

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | : கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் |
| மதுரை | : மதுரை, திண்டுக்கல் மன்னர் திருமலை நாயக்கர், பசும்பொன் தேவர் திருமகன், காமராசர், இராமநாதபுரம், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்கள் |
| திருச்சிராப்பள்ளி | : திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டங்கள். |
| திருநெல்வேலி | : நெல்லை கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| சேலம் | : சேலம், தருமபுரி, பெரியார் மாவட்டங்கள் |
| வேலூர் | : வேலூர் வடஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள் மற்றும் செங்கை எம்.ஜி.ஆர்., செங்கை அண்ணா மாவட்டங்களிலுள்ள காஞ்சிபுரம், உத்திரமேரூர், திருத்தணி தாலுக்காக்கள். |

**1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் பலன்கள்:**

இந்நிதியில் உறுப்பினராக உள்ள ஒருவர், அவருடைய பங்குத் தொகையையும் தொழிலதிபரின் பங்குத் தொகையையும் வட்டியுடன் முழுவதுமாக பின்வரும் நேர்வுகளில் உடனடியாகத் திரும்பப்பெற உரிமையுடையவராவார்.

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது.

2. நிரந்தரமாக முழு தகுதியின்மை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

3. வெளிநாட்டில் நிரந்தரமாக குடியேற அல்லது வேலை வாய்ப்புத் தேடி இந்தியாவிலிருந்து குடிபெயரும்போது.



4. ஆட்குறைப்பு காரணமாகப் பணியிலிருந்து பணியிறவு செய்யப்படும்போது.

5. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் பணியிறவு செய்யப்படும்போது.

இது தவிர, ஒரு உறுப்பினர் பணத்தைப் பெற விண்ணப்பித்த நாளுக்கு அடுத்து குறைந்தது 2 மாதங்கள் தொடர்ந்து பணியாற்றி முடித்ததன் பேரில் இருதரப்பு பங்குத் தொகையையும் வட்டியுடன் சேர்த்து, முழுமையாகப் பெற தகுதி உடையவராவர்.

ஒரு உறுப்பினர் இறந்து விட்டால், அவர் நியமித்த ஒருவர் அல்லது சட்டப்படியான அவருடைய வாரிசுதாரர் இருபங்கு தொகைகளையும் வட்டியுடன் சேர்த்துப் பெறத் தகுதியுடையவராவார். திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்கள் பணியிலிருந்து ராஜினமா செய்தால் இரண்டு மாதம் காத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இந்நேர்வில் பொருந்தாது.

**சிறப்பு சேமநிதி (Special Reserve Fund):**

வெளியேறும் உறுப்பினர்களுக்கு அவர்களது கூலியில் பிடித்தம் செய்யப்பட்டு கணக்குகளைத் தீர்க்கும்போது தொழிலதிபரால் இந்நிதியில் தொகை செலுத்தப்படாத அவர்களுடைய பங்குத் தொகையை மட்டும் கொடுப்பதற்காக சிறப்பு சேமநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும் சிறப்பு சேமநிதியிலுள்ள இத்தொகை தொழிலபதிபர் பங்குத் தொகை செலுத்தாதற்காக கீழ்க்கண்ட எதிர்பாராத நேர்வுகளைத் தவிர உபயோகிக்கக் கூடாது.

1. ஐந்து வருடங்களுக்கு மேலாக நிர்வாகம் மூடியிருக்குமேயானால்.

2. நிறுவனங்களைக் கலைத்துவிடும்படியான சூழ்நிலையில்

3. தேசிய நெசவாலைகள் (N.T.C. Mills) பொறுத்த வரையில் நெசவாலை எடுத்துக்கொள்ளும்/தேசியமயமாக்கப்படுத்துவதற்கு முன்பும்.

**தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கோரிக்கையினைத் தீர்த்து வைத்தல்:**

கீழே காட்டப்பட்டுள்ள விவர அட்டவணை வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை, தீர்வு காணப்பட்டவை, நிலுவை ஆகியவற்றைக் காட்டுகிறது. (1-1-1996 முதல் 31-12-1996 வரை)

[1997 ஏப்ரல் 16

| | | |
|---|---|---|
| 1. | 1-1-1996 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | 8,795 இனங்கள் |
| 2. | 1-1-1996 முதல் 31-12-1996 வரை வந்த கோரிக்கைகள் | 2,02,467 இனங்கள் |
| 3. | தீர்வு காணப்பட வேண்டிய மொத்த கோரிக்கைகள் | 2,11,262 கோரிக்கைகள் |
| 4. | தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் | 1,61,511 கோரிக்கைகள் |
| 5. | குறைகளைத் திருத்த திருப்பி அனுப்பப்பட்ட, மறுக்கப்பட்ட கோரிக்கைகள் | 34,938 கோரிக்கைகள் |
| 6. | 31-12-1996 அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | 14,813 கோரிக்கைகள் |

**1-1-1996 முதல் 31-12-1996 வரை தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு:**

| | இனங்கள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. இறப்பு | | |
| 2. வயது முதிர்வு ஓய்வு | 3,587 | 852.50 |
| 3. நிரந்தர தகுதியின்மை நிலை | 4,333 | 2318.82 |
| 4. பதவி விலகல் | - | - |
| 5. ஆட்குறைப்பு | 1,51,166 | 17,005.42 |
| 6. பல்வகை | 992 | 194.45 |
| | 1,433 | 209.45 |
| மொத்தம் | 1,61,511 | 20,580.65 |

**31-12-1996 நாளன்றுள்ளவாறு நிலுவையாக உள்ள கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு வருமாறு:**

| | | |
|---|---|---|
| (1) | இரண்டு மாதங்களுக்கும் குறைவாக நிலுவையிலுள்ள கோரிக்கைகள் | 14,809 இனங்கள் |
| (2) | 2 மாதங்களுக்கு மேல் 6 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள கோரிக்கைகள் | 4 இனங்கள் |
| | மொத்தம் | 14,813 |



1997 ஏப்ரல் 16]

**தொகை திரும்பப் பெறுதல்:**

உறுப்பினர்கள், அவர்கள் உறுப்பினர்களாக பின்வரும் காரணங்களுக்காக இருக்கும் காலத்தில் தொகைகளைத் திரும்பப்பெற/முன்பணமாக பெற அனுமதிக்கப்படுவர்.

அ) உறுப்பினர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டு பத்திரத்திற்காக

ஆ) குடியிருக்கும் வீடு/அடுக்குவீடு அல்லது வீட்டுமனை வாங்க, குடியிருக்கும் வீடு கட்ட

இ) குறிப்பிட்ட முகவர்களிடமிருந்து பெற்ற வீட்டு கடன்களைத் திரும்பச் செலுத்த

ஈ) தொழிற்சாலை/நிறுவனம் கதவடைப்பு அல்லது மூடப்பட்டால் அல்லது வேலை நிறுத்தம் நீங்கலாக ஏனைய காரணத்தினால் உறுப்பினர் இரண்டு மாதம் கூலி பெறவில்லை எனில்

உ) உறுப்பினர் அல்லது அவருடைய சகோதரர் அல்லது சகோதரி திருமணம் அல்லது குழந்தையின் படிப்பிற்காக

ஊ) உறுப்பினர் அல்லது அவருடைய குடும்பத்தினர் உடல் நலமின்மைச் செலவிற்காக

எ) வெள்ளம், பூகம்பம் அல்லது கலவரம் போன்ற காரணங்களினால் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துவதால் ஏற்படும் எதிர்பாராச் செலவு

ஏ) உறுப்பினர் பணியாற்றும் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தில் மின் வெட்டுக் காரணமாக அவருக்கு ஏற்படும் ஊதிய இழப்பைச் சரிக்கட்ட

ஐ) உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக

ஒ) பணியிலிருந்து ஓய்வு பெறும் ஒரு வருடத்திற்குள் வைப்புத் தொகை முன்பணமாக 90% எடுத்துக் கொள்ளலாம் (பத்தி 68 எம். என்.)

[1997 ஏப்ரல் 16

1-1-1996 முதல் 31-12-1996 வரையில் அனுமதிக்கப்பட்ட வரையிலான கால அளவில் திரும்ப பெற்ற முன்பணம் உறுப்பினர்களுக்கு வழங்கியது பற்றிய விவரம்.

| | இனங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1. ஆயுள் ஈட்டுறுதி பாலிசிகளுக்கு தொகை செலுத்துவதற்கு | 8,426 | 186.25 |
| 2. வீட்டுமனை/வீடு வாங்குவதற்காக அல்லது வீடு கட்டுவதற்காக பெறப்பட்ட கடன் தொகையைத் திருப்பி செலுத்துவதற்கு. | 15,589 | 4,778.80 |
| 3. கடன் கணக்கைத் தற்காலிகமாக முடிப்பதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்கு | 2,244 | 85.49 |
| 4. உறுப்பினரை குடும்ப உறுப்பினர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஏற்பட்ட செலவைச் சமாளிப்பதற்கு | 7166 | 814.43 |
| 5. உறுப்பினரின்/உறுப்பினருடைய மக்களின் சகோதரரின்/சகோதரியின் திருமணச் செலவுகளைச் சமாளிப்பதற்கு | 15,767 | 1,231.99 |
| 6. வெள்ளம், நிலநடுக்கம் அல்லது கலவரங்கள் போன்ற அசாதாரண நிலைமைகளை சமாளிப்பதற்கு<br>7. மின்வெட்டு காரணமாக ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்கு<br>8. உடல் ஊனமுற்ற உறுப்பினர்கள் துணைக் கருவிகள் வாங்குவதற்கு<br>9. பணியிலிருந்து ஓய்வுபெறுவதற்குமுன் ஒரு வருட காலத்திற்குள் 90% வைப்புத் தொகையிலிருந்து எடுக்கப்பட்டது. | 16,840 | 1,107.65 |
| மொத்தம் | 66,032 | 8204.61 |



1997 ஏப்ரல் 16]

**ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை வழங்குதல்:**

இந்நிலையில் உறுப்பினர் கணக்கில் இருந்த தொடக்க இருப்பு அவ்வாண்டு பெறப்பட்ட பங்குத் தொகை. வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டித் தொகை, தொகை பெறப்பட்டிருந்தால். அது குறித்த விவரங்கள் ஆண்டு இறுதியில் உள்ள இறுதி இருப்பு ஆகிய விவரங்களைக் காட்டுகின்ற கணக்குக் குறித்த விவர அறிக்கை தொழிலாளர் எந்த தொழிற்சாலையில்/நிறுவனத்தில் இறுதியாகப் பணி புரிந்தாரோ அந்த தொழிற்சாலையின்/ நிறுவனத்தில் தொழிலதிபர் மூலமாக ஒவ்வோர் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

1996-ம் நாளிலிருந்து 31-12-1996-ம் நாள் வரையிலான கால அளவில் 34.33 இலட்சம் ஆண்டுக்கணக்கு விவர அறிக்கைக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 31-12-1996-ம் நாள் நிலவரப்படி இன்னும் 20,02 லட்சம் கணக்கு விவரக் குறிப்புகள் வழங்க வேண்டியுள்ளது.

**1995-ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்:**

முன்பிருந்த 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத்திற்குப் பதிலாக, புதியதாக அறிமுகப் படுத்தப்பட்ட 1995-ம் ஆண்டின் ஓய்வூதிய திட்டம் அதன் உறுப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மாதாந்திர ஓய்வூதியம் பெறும் வகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 16-11-1995-ம் நாளிலிருந்து செயல் படுத்தப்படுகிறது.

| உறுப்பினர்கள் | குடும்ப உறுப்பினர்கள் |
|---|---|
| வயது முதிர்ந்த ஓய்வூதியம் | விதவை/மனைவியை இழந்தவருக்கான ஓய்வூதியம் |
| பணி ஓய்வுக்குப்பின் ஓய்வூதியம் | குழந்தைகளுக்கான ஓய்வூதியம் |
| குறுகிய கால ஓய்வூதியம் | அநாதைகளுக்கான ஓய்வூதியம் |
| நிரந்தர மற்றும் முற்றிலும் செயலற்ற நிலையில் உள்ளவர்களுக்கான ஓய்வூதியம் | வாரிசாக நியமிக்கப்பட்டோருக்கான ஓய்வூதியம் |

## 1995ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சிறப்பியல்புகள்

1971ம் ஆண்டின் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்தினர்களாக உள்ள எல்லா உறுப்பினர்கள் மற்றும் 16-11-1995ம் தேதிக்குப் பிறகு வருங்கால வைப்புநிதியில் அங்கத்தினர்களாகும் உறுப்பினர்கள் எல்லோருக்கும் இத்திட்டம் பொருந்தும்.

வருங்கால வைப்புநிதியில் உறுப்பினர்களாக இருந்து 1971ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் சேராதவர்கள் இன்னும் பணியில் இருந்தால் அவர்கள் 1995ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர இசைவு தெரிவிக்கலாம் அதற்கான காலக்கெடு எதுவுமில்லை.

1971-ம் ஆண்டின் முந்தைய குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்து 1-4-1993க்குப் பிறகு வேலையின்றி இருந்தாலும் 1995ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் இசைவு தெரிவிக்கலாம்.

அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி சேர்ந்து இவற்றில் 8.33% ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்குத் தொகையாக செலுத்தவேண்டும்.

தொழிலதிபர்கள் செலுத்தும் வருங்கால வைப்புநிதி பங்குத் தொகையிலிருந்து ஓய்வூதிய பங்குத் தொகைக்கு மாற்றப்பட வேண்டும்.

உறுப்பினர்கள் சம்பளத்தில் 1.16 சதவீகிதம் மத்திய அரசு தன் பங்காக குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது தகுதியான 10 வருடகாலம் பணி முடித்திருக்க வேண்டும்.

1971ம் வருட [illegible] ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றிய காலமும் தகுதியான பணிக்காலத்தை தீர்மானிப்பதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

1971ம் ஆண்டின் குடும்ப ஓயவூதியத் திட்டத்தின்கீழ் 15-11-1995 வரையில் பணியாற்றிய காலத்திற்கு உண்டான ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படும்.



**16-11-1995 முதல் ஓய்வூதியம் வழங்குவதற்கான முறையை கீழ்க்கண்ட சூத்திரத்தில் உள்ளவாறு கணக்கிடலாம்.**

**ஓய்வூதியத்திற்கான ஊதியம் X ஓய்வூதியத்திற்கான பணிக்காலம்**

**70**

விதவைகள் மற்றும் குழந்தைகள் ஓய்வூதியம் வழங்குவதற்கு குறைந்தபட்சம் பத்துவருடம் தகுதியான பணிக்காலம் என்பது பொருந்தாது.

ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒரு மாதகால சந்தாவினை செலுத்தியிருந்தாலும் அவருக்கு இயலாமை ஓய்வூதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

சாதாரணமாக 58 வயதினை எய்தியவருக்கு ஓய்வூதியம் வழங்கப் படுதல் வேண்டும்.

50 வயதினை எய்திய உறுப்பினர் ஒருவர் குறைவான ஓய்வூதியம் பெறுவதற்கு தனது விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

குறைந்த ஓய்வூதியம் பெறுவதற்கு உறுப்பினர் விருப்பம் தெரி வித்தால் அவரது மனைவி/நியமிக்கப்பட்ட நபருக்கு, தாம் செலுத்திய முதலீட்டிலிருந்து ஒரு ஒட்டுமொத்த தொகையை வழங்கலாம்.

10 வருடகால தகுதியான பணிக்காலம் இல்லாத உறுப்பினர் ஓய்வூதியம் பெற தகுதியில்லாதபோது, திரும்பப் பெறத்தக்க பயன் தொகையோ அல்லது திட்டத்தின் சான்றிதழையோ பெற தனது விருப்பத்தினை தெரிவிக்கலாம்.

ஓய்வூதியத்திற்காக உறுப்பினரின் முந்தைய பணிக்காலத்தை கணக்கிட திட்டத்தின் சான்றிதழ் வழி செய்கிறது.

திட்ட சான்றிதழ் பெற்றிருக்கும் உறுப்பினர் அவர் பணியில் இல்லாத போது இறக்க நேரிடின் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஓய்வூதியப் பயன்களைப் பெறமுடியும்.

விதவைகள் ஓய்வூதியத்துடன், குழந்தைகள் ஓய்வூதியமும் அதிகபட்சம் இரண்டு குழந்தைகள் வரையில் ஒரே சமயத்தில் ஓய்வூதியம் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

திருமணமான மகள்களுக்கும், அவர்களின் 25 வயது வரையில் குழந்தைகள் ஓய்வூதியம் வழங்க வகைசெய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் விதவை / மனைவியை இழந்தவர் இறக்க நேரிடின் அல்லது மறுமணம்

செய்து கொள்ளும் பட்சத்தில், அநாதைகளுக்கான ஓய்வூதியம் கூடுதலாக்கப்பட்ட விகிதப்படி அனுமதிக்கப்படும்.

தனக்கென குடும்பம் இல்லாத ஒரு உறுப்பினர் எந்த நபரை வேண்டுமானாலும் ஓய்வூதியப் பயன்களைப் பெறுவதற்கு வாரிசுதாரர்களாக நியமிக்கலாம்.

24 வருட தகுதியான பணிக்காலத்தை முடித்த நபர் ஒருவர் தனது 58-வது வயதினை அடையும்போது குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.500/- பெறலாம்.

இச்சட்டத்தின் கீழ் தொகுத்துப் பெறல் (Commutation) ஓய்வூதியம் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியத் தொகையை தொகுக்கப் பெற்று அதற்கு ஈடாக சாதாரண ஓய்வூதியத்தைப் போல் 100 பங்கு சரி சமமான முதலீட்டுத் தொகையை மொத்தமாக பெற செய்யப்பட்டுள்ளது. 16-11-1998 முதல் இது நடைமுறைப்படுத்தப்படும்.

ஓய்வூதிய நிதிக்கு தொழிலதிபர் தனது பங்கினை செலுத்தத் தவறினாலும் தகுதியுள்ள எல்லா நபர்களுக்கும் உத்திரவாதமாக ஓய்வூதியம் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

வருடாந்திர ஆய்வு மற்றும் நிதியின் மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வு செய்வதன்மூலம், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பயன்களை மறு ஆய்வு செய்யப்படுகிறது.

பயனீட்டாளர்களுக்குத் தாமாகவே வங்கியின் மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்படி ஓய்வூதியம் பெறுவதற்கான மாத ஊதியம் அதிகபட்சமாக ரூ.5000/- ஆகும். இருப்பினும் ஓய்வூதியத்திற்கான பங்குத் தொகை ஓய்வூதியத்திட்டம் நடைமுறைக்கு வந்த நாள்முதல் அல்லது ஊதியம் ரூ.5000/-க்கு மிகைப்பட்ட நாள் (நல் இவற்றில் எது பின்னமேறோ அதுமுதல். தொழிலதிபர் மற்றும் தொழிலாளரின் விருப்பத்திற்கிணங்க மாத ஊதியம் ரூ. 5000/-க்கு மிகைப்படினும் ஓய்வூதியம் வழங்கப்படும்.

15-11-1995 நிலுவையில் உள்ளபடி உறுப்பினர்களின் கணக்கில் உள்ள மொத்த வைப்பு நிதித் தொகை (இருபங்குகளும் சேர்த்து) திரும்பப் பெறக்கூடிய நோக்கங்களுக்காக கிடைக்கச் செய்ய வேண்டும். இதன் எந்த ஒரு பகுதியும் ஓய்வூதிய நிதிக்கு மாற்றப்படக்கூடாது.



**1995-ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தீர்வுக்காணப்பட்ட ஓய்வூதியக் கோரிக்கைகளின் விவரம்**

***(1-4-1996 முதல் 31-12-1996 வரை)***

| அலுவலகம் | தீர்வு காணப்பட்ட மொத்த ஓய்வூதியக் கோரிக்கைகள் (விவரங்கள் தனித்தனியே) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணக்கை. | தீர்வு காணப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | தகுதியில்லாமல் ஓய்வு பெறும் உறுப்பினர்களின் ஓய்வூதியம். | விதவை/ நியமிக்கப்பட்ட நபரின் ஓய்வூதியம். | குழந்தைகளின் ஓய்வூதியம். | நடப்பு ஆண்டில் ஓய்வு பெற்றவர் விபரம். | திட்டசான்றிதழ். | நடப்பு ஆண்டில் மறுக்கப்பட்டவற்றின் விபரம். | நிலுவையில் உள்ளவை. |
| *மண்டல அலுவலகம்* | | | | | | | | | |
| சென்னை | 2451 | 1898 | 1450 | 448 | 518 | .. | .. | .. | 553 |
| *துணை மண்டல அலுவலகங்கள்* | | | | | | | | | |
| கோயம்புத்தூர் | 3602 | 1114 | 815 | 299 | 493 | 1183 | 269 | 280 | 756 |
| மதுரை | 4082 | 2362 | 1971 | 391 | 275 | 1035 | 588 | 39 | 58 |
| திருச்சிராப்பள்ளி | 1820 | 744 | 574 | 170 | 234 | 256 | .. | 434 | 386 |
| திருநெல்வேலி | 2952 | 1310 | 1105 | 205 | 271 | 768 | 173 | 213 | 488 |
| சேலம் | 760 | 597 | 388 | 209 | 218 | 34 | .. | 1 | 128 |
| மொத்தம் : | 15667 | 8025 | 6303 | 1722 | 2009 | 3276 | 1030 | 967 | 2369 |

[1997 ஏப்ரல் 16

## தொழிலாளர் நல வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டம்

**முன்னுரை :**

பணியிலிருக்கும்போது இறக்கக்கூடிய வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 1976-ம் ஆண்டு தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம் 1952 ஆண்டின் தொழிலாளர் வருங்கால வைப்பீட்டு நிதிகள் மற்றும் பல்வகை விதித் துறைகள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டது.

**பொருத்தமுடமை :**

தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. 1952-ம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டம் பொருந்துகிற அனைத்து தொழிற்சாலைகள்/ தொழில் நிறுவனங்களின் தொழிலாளர் களுக்கும் இது பொருந்தக் கூடியதாகும்.

**வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராதல் :**

வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் அனைத்து, உறுப்பினர்களும் 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிகள் பல்வகை விதித்துறைகள் சட்டம் 17-ம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின் கீழ் வருவர்.

**பங்குத் தொகை விகிதம் :**

தொழிலாளர், பங்குத் தொகை எதனையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் தொழிலதிபரும், மத்திய அரசும் உறுப்பினர் சம்பளத்தின் முறையே 0.5 சதவீதம் மற்றும் 0.25 சதவீதம் என்ற விகிதத்தில் காப்புறுதி நிதிக்குப் பங்குத் தொகை செலுத்த வேண்டும்.

**திட்டத்தின் நன்மைகள் :**

வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர், பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வில் அவரது வருங்கால வைப்பு நிதித் தொகையைப் பெறும் நபருக்கு அத்தொகையுடன்



1997 ஏப்ரல் 16]

முந்தைய 12 மாதங்களில் அல்லது அவர் உறுப்பினராக இருந்த கால அளவில், இதில் எது குறைவான கால அளவோ, அக்கால அளவில் இறந்துவிட்ட உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதி கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகைக்குச் சமமான உத்திரவாத தொகை ஒன்றும் வழங்கப்படுகின்றது. ஆனால் கணக்கிலுள்ள சராசரி இருப்பு தொகை ரூ.25,000/-க்கு மேற்படுகிறபோது, ரூ.25,000-மும் ரூ.25,000/-க்கு மேற்படுகிற தொகையில் 25 சதவீதம் தொகையும் அவருக்குக் கொடுக்கத்தக்க தொகையாகும். மொத்தத்தில் அவ்வாறு வழங்குகிற தொகை ரூ.35,000/-க்கு மேற்படக்கூடாது.

**வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கான தகுதிக்குரிய நிபந்தனைகள் :**

1. இத்திட்டத்தின் உறுப்பினரான பணியாளரது மரணம் 1-8-1976-ம் நாளன்று அல்லது அதற்கு பின்வரும் நாளில் அதாவது இந்த ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட நாளன்று ஏற்பட்டிருக்க வேண்டும்.
2. தொழிற்சாலை/நிறுவனம் ஒன்றில் அவர் பணியில் இருக்கும் போது இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

**இத்திட்டத்தின் கீழ் உத்திரவாதத் தொகையை எவருக்குக் கொடுக்க வேண்டுமென்பது :**

(1) 1952-ம் ஆண்டுத் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சட்டத்தின் கீழ் வரும் பணியாளர் ஒருவர் அல்லது வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி உறுப்பினர் ஒருவர் நேர்விற்கேற்ப செய்துகொண்ட நியமனம் இத்திட்டத்தின் கீழ் செய்துகொண்ட நியமனமாக கருதப்படும். அத்தகைய நியமனதாரர் அல்லது நியமனதாரர்களுக்கு உத்திரவாதத் தொகை வழங்கத்தக்கதாகும்.

(2) நியமனதாரர் எவரும் இல்லாதபோது, தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதித் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு உத்திரவாதத் தொகை வழங்கப்படும்.

**முதலீடு :**

ஈட்டுறுதி நிதியைச் சேர்ந்த அல்லது ஈட்டுறுதி நிதிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மத்திய அரசின்

[1997 ஏப்ரல் 16

பொது வைப்பீட்டு நிதிக் கணக்கில் வைப்பீடு செய்யப்படும். இந்த வைப்பீடுத் தொகை, ஆண்டொன்றுக்கு 8 ½ சதவீத வட்டி பெறத்தக்கதாகும்.

**ஈட்டுறுதி நிதிக்கான நிர்வாகச் செலவுகள்:**

ஈட்டுறுதி நிதிக்குத் தொகை செலுத்தும் உறுப்பினர்களின் ஊதியத்தில் 0.01 மற்றும் 0.005 சதவீத அளவுக்குப் பங்குத் தொகையை செலுத்துவதன் மூலம், தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதி திட்டம் குறித்த நிர்வாகச் செலவை முறையே தொழிலதிபர்களும் மத்திய அரசு ஏற்கும்.

**-12-1996 அன்றுள்ளவாறு பெறப்பட்ட, தீர்வு காணப்பட்ட திருப்பப்பட்ட நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.**

| | இனங்கள் |
|---|---|
| 1-1-1995 அன்றுள்ளவாறு நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 322 |
| 1-1-1996 முதல் 31-12-1996 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 5653 |
| தீர்வு காணப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 5985 |
| தீர்வு காணப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 2473 |
| 5. குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக திருப்பி விடப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 516 |
| 6. 31-12-1996 நாள் நிலவரப்படி, நிலுவையில் இருந்த உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை | 516 |



1997 ஏப்ரல் 16]

**31-12-1996-ல் உள்ளபடி நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு விவரம் வருமாறு:**

| | இனங்கள் |
|---|---|
| 1. 2 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 512 |
| 2. இரண்டு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஆறு மாதங்களுக்குக் குறைவான நிலுவையாயுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 4 |
| 3. ஆறுமாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஒரு வருடத்திற்கு குறைவாக நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை | |
| மொத்தம் | **516** |

[1997 ஏப்ரல் 16

## அத்தியாயம் - 10

## வேலைவாய்ப்புப் பணிகள்

வேலைவாய்ப்புப் பணி இந்தியாவில் இரண்டாம் உலகப் போருக்கு பின் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு பின், போர்ப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட போர் வீரர்கள் மற்றும் இதரப் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்காக தனிப்பட்ட அமைப்பு தேவை என்பதால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் துவக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டு வரை, வேலைவாய்ப்புப் பணி, போர்ப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் போர் வீரர்களுக்காக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1948-க்குப் பிறகு அனைத்து வகை மனுதாரர்களுக்கும் இப்பணி விரிவுபடுத்தப்பட்டது. மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. மைய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்ட பின் 1963 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் மாநில வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மாநில தொழிலாளர் நலத் துறை ஆணையரின் கீழ் செயல்பட்டு வந்தன. 1963 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களும், அதுவரை தொழில் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த தொழிற் பயிற்சி நிலையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை என்ற புதியத் துறை உருவாக்கப்பட்டு அதன் கீழ் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம் செயல்பட ஆரம்பித்தது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அடிப்படைப் பணி வேலைதேடுவோரைப் பதிவு செய்து அவர்களைப் பணியில் அமர்த்துவதாகும். வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் இதர தேர்வு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் வராத மைய, மாநில அரசு மற்றும் அரசுத் துறை நிறுவனங்களில் உள்ள பணிக்காலியிடங்களுக்கு தகுதி வாய்ந்த மனுதாரர்களைப் பரிந்துரை செய்கின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு :-

| | |
|---|---|
| (1) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ......... | 24 |
| (2) துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் ........ | 3 |



1997 ஏப்ரல் 16]

**சிறப்பு அலுவலகங்கள்:**

| | |
|---|---|
| (3) தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-4. | 1 |
| (4) உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40. | 1 |
| (5) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்), சென்னை-20. | 1 |
| (6) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பப் பணியாளர்கள்) | 4 |
| (7) பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்கள் (உதகமண்டலம், சங்கராபுரம், சேலம், திருவண்ணாமலை). | 4 |
| (8) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள், (திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர்). | 5 |
| (9) பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள். | 3 |
| மொத்தம் : | 46 |

இவை தவிர, தமிழ்நாட்டில் 13 உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்புப் பிரிவுகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

(4) அரசு ஆணை எண் 1371, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் [illegible] படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பற்றி பெறப்படும் கடுமையான புகார்களைப் பற்றி விசாரிப்பதற்காக வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரகத்தில் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தேவையான வேலைவாய்ப்பு அலுவலக ஆவணங்களை விசாரணைக்காக பறிமுதல் செய்வதற்கும், வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் பற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் புகார்களைப் பற்றி விசாரிப்பதற்கும், இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல், இக்குழு கீழ்க்கண்ட புள்ளி விவரங்களின் படி பெறப்பட்ட புகார்கள் மீது விசாரணை நடத்தியுள்ளது:-

| வருடம் | விசாரணை நடத்தப்பட்ட புகார்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1989 | 19 |
| 1990 | 14 |
| 1991 | 19 |
| 1992 | 15 |
| 1993 | 15 |
| 1994 | 20 |
| 1995 | 31 |
| 1996 | 33 |

வேலைவாய்ப்பு அலுவலகப் பணிகளைக் கணினி மயமாக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 17 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் முழுமையாகக் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள அலுவலகங்கள் படிப்படியாக கணினி மயமாக்கப்படவுள்ளன. வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினி மயமாக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலை தேடுவோருக்கும் வேலையளிப்போருக்கும் திறமை வாய்ந்த புகாருக்கு இடமளிக்காத விரைவான சேவையை அளிக்க இயலும்.

இதுவரை, வேலை தேடுவோரைப் பதிவு செய்து அவர்களைப் பணியிலமர்த்தும் பணியில் மட்டும் ஈடுபட்டு வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தற்கால மற்றும் வருங்காலப் பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில் புதிய முறையில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளன. வேலைவாய்ப்புப் பணி, அமைப்பு ரீதியிலான துறைகளை மட்டுமின்றி, அமைப்பு ரீதியில் அல்லாத தொழிலாளர்கள் மற்றும் இதர பணித் துறைகளையும் சார்ந்து செயல்பட வேண்டியுள்ளது. அதாவது, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழிற் பயிற்சி வாய்ப்புகளில் மொத்தத்தில் பெருக்கம் காண முனைய வேண்டும்.



**வேலை நிலவரத் தகவல் திட்டம்:**

வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாய காலியிட அறிவிப்பு) சட்டம், 1959-இன்படி பொதுத் துறையைச் சார்ந்த அனைத்து நிறுவனங்களும், 25-ம் அதற்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களும் (வேளாண்மையைச் சார்ந்த நிறுவனங்கள் நீங்கலாக) ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் அந்நிறுவனங்களில் பணியாற்றும் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை, ஏற்பட்ட பணிக் காலியிடங்கள், நிரப்பப்பட்ட பணி காலியிடங்கள் மற்றும் தகுதியுள்ள பணியாளர்கள் கிடைக்காததால் நிரப்பப்படாமல் உள்ள பணிக்காலியிடங்கள் ஆகிய விவரங்களை குறிப்பிட்ட படிவத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அனுப்புதல் வேண்டும். இதுதவிர, இரண்டாண்டுகளுக்கொருமுறை பணியாளர்களைப் பற்றிய தொழில் வாரியான விவரங்கள் வேலையளிப்போரிடமிருந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**தொழில்நெறி வழிகாட்டும் பணி பற்றிய செயல்பாடுகள்:**

மாணவர்களுக்கும், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கும் உதவுவதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தொழில்நெறி வழிகாட்டிப் பிரிவுகள் பல்வேறு தொழில் வழிகாட்டிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. தினந்தோறும் நடத்தப்படும் கூட்டுக் கலந்துரையாடல்கள் பதிவு செய்யும்போது அளிக்கப்படும் தொழில்நெறி வழிகாட்டி ஆலோசனைகள், தன்னம்பிக்கையை வளர்க்கும் தொழில் நெறி வழி காட்டிப் பணிகள் மற்றும் தொழில்நெறிப் பேச்சுகள் ஆகியவை மட்டுமல்லாது தொழில் தகவல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளும் இப்பணியில் அடங்கும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படும் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் தவிர, பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் மூன்றும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ஐந்தும், பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையங்கள் நான்கும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மனுதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் தொழில்நெறி வழிகாட்டிப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

1996 ஆம் ஆண்டில், 54,929 மனுதாரர்கள் தொழில்நெறி தகவல்களைப் பெற்றுள்ளனர். கூட்டுக் கலந்துரையாடல்கள் வாயிலாக 80,318

மனுதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். பள்ளிகள்/கல்லூரிகளில் நடத்தப்பட்ட தொழில்நெறிப் பேச்சுகள் வாயிலாக 47,950 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். தொழிற்தகவல் கண்காட்சிகளுக்கு 86,815 மாணவர்கள் வருகை தந்துள்ளனர். மேலும், தன்னம்பிக்கையை வளர்க்கும் தொழில்நெறி வழிகாட்டிப் பணிகள் வாயிலாக 10,630 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மனுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**கிராமப்புற பள்ளிகளைத் தத்து எடுத்து தொழில்நெறி வழிகாட்டிப் பணியை அப்பள்ளிகளில் தீவிரமாக மேற்கொள்ளும் முன்னோடித் திட்டம்:**

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முடித்த மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டிப் பணியை தீவிரமாக மேற்கொள்வதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புறத்தில் உள்ள ஒரு அரசு மேல்நிலைப் பள்ளியைத் தத்து எடுப்பதற்கு அரசாணை எண் 17, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23-1-1995 இன் வாயிலாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 200 மாணவர்கள் பயிலும் ஒரு கிராமப்புற மேல்நிலைப் பள்ளி, கல்வித்துறையுடன் கலந்தாலோசித்து தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டிப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. பாடக் குறிப்புகள் தயாரிக்கவும், தொழில் நெறி வழிகாட்டிச் சொற்பொழிவாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்கவும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு கிடைத்த நல்வரவேற்பினைக் கருத்திற் கொண்டு, கல்வித் துறையுடன் கலந்தாலோசித்து வருங்காலத்தில் மேலும் பல பள்ளிகளை இத்திட்டத்தின்கீழ்கொண்டு வருமாறு வேலைவாய்ப்பு அலுவலக தொழில் நெறி வழிகாட்டி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கு பதிவைப் புதுப்பிப்பதற்காக கால அவகாசத்தை நீடித்தல்:**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து தங்களது பதிவைப் புதுப்பிக்க தவறிய பதிவுதாரர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள 12 மாதங்களுக்குள் பதிவை புதுப்பித்துக் கொள்ளலாம் என்ற நடைமுறையை மாற்றி, அவர்கள் 18 மாதங்களுக்குள் பதிவைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையில் கால அவகாசத்தை நீடித்து





அரசாணை எண் 121, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 2-9-1996-இன்படி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் 15-3-1997 வரை 75,824 நபர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

**1992, 1993, 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சலுகை அளித்து பதிவைப் புதுப்பித்தல்:**

1992, 1993, 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவை புதுப்பிக்க தவறியவர்களுக்கு மீண்டும் புதுப்பிக்க சிறப்பு சலுகை அளித்து இவ்வரசு கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தது. அதன்படி அரசாணை எண் 157, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 28-10-1996-இன்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து தங்கள் பதிவை 1992, 1993, 1994 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சலுகை வழங்கி அவர்களது பழைய பதிவு மூப்புடன் பதிவைப் புதுப்பிக்கும் வகையில் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணைகளின்படி குறிப்பிட்ட ஆண்டுகளில் பதிவைப் புதுப்பிக்கத் தவறிய மனுதாரர்கள் அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு மனுச் செய்தால் அவர்களது காலாவதியான பதிவு சிறப்பு முறையில் புதுப்பித்துத் தரப்படும். இச்சலுகை ஒரு மனுதாரருக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும். இச்சலுகையினால் 1,08,201 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

[1997 ஏப்ரல் 16

## அத்தியாயம் - 11

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

திறமை மிக்க மனித ஆற்றல் தொழில் வளர்ச்சியின் அவசியமான முன் தேவைகளில் ஒன்றாகும். எனவே பல்வேறு தொழிற்சாலைகளுக்குத் தேவையான இந்த திறமைமிக்க கைவினைஞர்களுக்கு வாழ்வியல் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பது முதன்மையான ஒன்றாகும். சென்ற ஆண்டுகளில் தொழிற்சாலைகளில் திறமையான கைவினைஞர்களை அளிப்பதற்கு செயலாக்கப்பட்ட அநேக திட்டங்கள் மூலம் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களின் தேவையின் அவசியம் தெள்ளத் தெளிவாக புலனாகிறது. இந்த மேம்பட்ட திறமை கைவினைஞர் பயிற்சி மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சி திட்டங்கள் மூலம் பெறமுடிகிறது.

நாட்டின் பொருளாதாரத்தில் தோன்றிடும் வேலைவாய்ப்புகள், திறமை மிகுந்த மற்றும் குறைந்த அனுபவம் கொண்ட தொழிலாளர்களின் தேவையினை எடுத்துக் காட்டுகின்றன. தொழில் நுட்பம் மிகுந்த நவீன இயந்திரங்கள் தற்போது அதிகம் உபயோகத்திலுள்ளதால் பல்வேறு திறமையுடைவர்களின் தேவை மிகவும் இன்றியமையாததாகிறது. இவற்றை கருதும்போது கைவினைஞர் பயிற்சித் திட்டம் மிகவும் அவசியம் என்றால் அது மிகையாகாது. வாழ்வியல் தொழிற் பயிற்சியில் இத்திட்டம் தமிழ் நாடெங்கும் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைக்கேற்றாற்போல் கைவினைஞர்களை உருவாக்குகிறது. இதற்காக இம்மாநிலத்தில் 35 பொறியியல் மற்றும் 15 பொறியியல் அல்லாத பிரிவுகளில் கைவினைஞர் பயிற்சியளிக்க 16,196 இருக்கைகள் கொண்ட 52 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 52 தொழிற் பயிற்சி நிலையங்களில் 10, மகளிருக்காகவும், தாழ்த்தப்பட்டோருக்கென ஒன்றும், பழங்குடியினருக்கென ஒன்றும் இயங்குகின்றன. மேலும் செக்காணூரணி, முதுகுளத்தூர் மற்றும் வீரகேரளம்புதூரில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் பயனடையும் வகையில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியா முழுவதிலும் செய்முறை மற்றும் கருத்தியல் இரண்டிலும் சீரான தரத்தை பராமரித்து, தேசிய அளவில் நடைபெறும் தொழிற் திறனாய்வு போட்டிகளில் பயிற்சியாளர்கள் பங்கு பெறும் வகையிலும்,



1997 ஏப்ரல் 16]

நாட்டின் எப்பகுதியிலும் அவர்கள் வேலைவாய்ப்புகள் பெறும் வகையிலும், தொழிற்பாட திட்டங்களை வாழ்க்கைக் கல்வி பயிற்சி திட்டத்தின் தேசியக்குழு வடிவமைத்துள்ளது.

இத்துறையினால் வழங்கப்படும் தேசிய தொழிற் சான்றிதழ் பெற்ற கைவினைஞர்கள் நம்நாட்டில் மட்டுமல்லாது, அயல்நாடுகளிலும் வேலைவாய்ப்புகள் அதிகம் பெற்று மிகவும் நன்மதிப்பு பெறுவதால், ஆண்டு தோறும் மிகுதியான பயிற்சியாளர்களை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தன்பால் ஈர்க்கின்றன. இத்துறையினால் விற்பனை செய்யப்பட்ட பயிற்சி சேர்க்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கையிலிருந்து இஃது புலனாகிறது. சென்ற ஆண்டு (1996) மட்டும் 1,83,414 சேர்க்கை விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலும், தற்போது 8,860 மாணவர்களும், 1,839 மகளிரும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் உட்பட அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து ஏறத்தாழ 19,000 கைவினைஞர்கள் தேர்ச்சிப் பெற்று ஆண்டுதோறும் வெளியேறுகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் உள்ளூர் தொழிற் நிறுவனங்களிலும், சிலர் அயல்நாட்டு தொழிற் நிறுவனங்களிலும், ஒரு சிலர் சொந்தமாக சுயவேலைவாய்ப்பு மையங்களையும் அமைத்து வேலைவாய்ப்புகளை அடைந்து வருகின்றனர். அகில இந்திய தொழிற் தேர்வின் தரத்தை பராமரிக்கவும், மதிப்பீடுகளில் சமச்சீர் நிலையை உறுதிப்படுத்துவதற்காகவும், "மத்திய மதிப்பீடு முறை", 1979 ஜூலை திங்கள் முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. நடந்து முடிந்த 32 அகில இந்திய தொழிற் திறனாய்வு போட்டிகளில் 15 முறை தமிழ்நாடு மாநிலம் முதல் நிலையை அடைந்து, ஜனாதிபதியின் கேடயப் பரிசையும் பெற்று பெருமை அடைந்துள்ளது.

### தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்:

தொழிற் பயிற்சி அளிப்பதற்கு, கட்டிடம் கட்டுதல், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல் போன்றவற்றிற்கு மிக அதிக அளவில் நிதி முதலீடு செய்தல் வேண்டும். மேலும் கச்சாப் பொருட்களின் விலையும் மிக அதிகமாக உயர்ந்துள்ளது. தொழிற்சாலைகளில், தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களின் தேவை அதிகரித்து வருவதனை பூர்த்தி செய்ய, தொழிற்பயிற்சி நிலைய

[1997 ஏப்ரல் 16

பயிற்சியாளர்களின் இருக்கை எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு தேவையான கட்டிடம் மற்றும் இயந்திர வசதிகளை. அரசினால் மட்டும் செய்ய இயலாது. இதற்கு தனியார் நிறுவனங்கள்/டிரஸ்ட்டுகளின் முயற்சியும் இன்றியமையாததாகிறது. இந்த முயற்சியின் காரணமாக, 45,500 பயிற்சியாளர் இருக்கை வசதிகள் கொண்ட 452 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்த தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள். வாழ்க்கைக் கல்வி பயிற்சித் திட்டத்தின் தேசிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியினை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைப் போலவே அளிக்கின்றன. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஐம்பது விழுக்காடு பயிற்சி இருக்கைகள் தகுதி மற்றும் நடைமுறையிலுள்ள சமுதாய விகித சுழற்சியின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுகின்றன.

தற்போது தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க கோரிக்கைகள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. இக்கோரிக்கைகளை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் அளித்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லாத 218 பஞ்சாயத்து ஒன்றியங்களில் புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் படிப்படியாக மூன்றாண்டு காலத்தில் தோற்றுவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் முதல் படியாக 124 பஞ்சாயத்து ஒன்றியங்களில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இதனால், தனியார் தொழிற் பயிற்சி நிலைய மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்படும்.

**தனியார் தொழிற் பள்ளிகள்:**

இம்மாநிலத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 145 தனியார் தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இவற்றில் நிரந்தரமாக அங்கீகரிக்கப்பட்ட 68 தொழிற் பள்ளிகளில் 50 தொழிற் பள்ளிகள், தமது பணியாளர் ஊதியம் மற்றும் பயிற்சி செலவினங்களில், 75 விழுக்காடுகள் அல்லது நிகர நஷ்டத்தில் எது குறைவோ அதனை ஈடுகட்டும் வகையில் அரசின் மானியமாக பெறுகின்றன. ஒப்பளிக்கப்பட்ட 6,326 பயிற்சியாளர் இருக்கைகளில், தற்போது 4,997 பயிற்சியாளர்கள் குறுகிய கால தொழிற் பிரிவுகள் உட்பட பயிற்சி பெற்று வருகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தனியார் தொழிற்பள்ளிகளில் பயிற்சியாளரின் தரத்தை



1997 ஏப்ரல் 16]

மேம்படுத்த அனைத்து தொழிற்பிரிவுகளில் பொதுப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் 1975 முதல், தொழிற் பிரிவுகளில், பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. 1996-ல், பொதுத் தேர்வில் கலந்து கொண்ட மொத்தம் 1988 பயிற்சியாளர்களில், 1917 பேர் வெற்றி பெற்றுள்ளார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள்:**

தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களின் தொழிற் திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு அவர்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டமொன்றை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. மாநில அளவில் நடைபெறும் தொழிற் திறனாய்வு போட்டியில் மாநில அளவில் முதன்மையாக தேர்ச்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விதம் சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கிய சிறந்த பயிற்றுநர்களும் இவ்விருதுகள் மூலம் கௌரவிக்கப்படுகின்றனர். இதுவரையில் 28 பயிற்சியாளர்களும், 113 பயிற்றுநர்களும் இவ்விருதுகள் மூலம் கௌரவிக்கப்பட்டுள்ளனர். மேலும் பயிற்றுநர்கள் சிறந்த முறையில் பயிற்சி அளித்து முன்மாதிரியாக திகழ்ந்து செம்மையாகவும் செயல்படுவதை ஊக்குவிக்க அவர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளும் வழங்கப்படுகின்றன.

1996-97-ஆம் ஆண்டிற்கான விருது பெறுபவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் விருதுகள் வழங்கப்படும்.

**கைவினைஞர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி:**

இளநிலை பயிற்சி அலுவலர்கள், தமது பயிற்சியாளர்களுக்கு, தொழிற் கருத்தியல் பாடங்களை சிறந்தமுறையில் கற்றுத்தரவும், பயிற்சி கூடத்தில், சமீப கால தொழில் நுட்பத்துடன் இயந்திரங்களில் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில், போதிய செயல்திறனும், நுண்ணறிவும் அவர்கள் பெற்றிட ஆண்டுதோறும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி / முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். 25 பேர்கள் கொண்ட ஒரு அணி பயிற்சிக்கு ஆகஸ்ட் 1996-ல் அனுப்பப்பட்டது. அவர்களில் 16 பேர்கள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்கள் ஜூலை 1997-ல் பயிற்சியை முடிப்பார்கள்.

[1997 ஏப்ரல் 16

**தொழிற் பயிற்சி நிலையங்களில் ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி:**

சமுதாயத்தில் வறுமை கோட்டிற்கு கீழே மிகவும் பின்தங்கியுள்ள 18 முதல் 35 வயதுள்ள ஊரக இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு பெறும் வகையில் பல தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். வேலைவாய்ப்பிற்காக திறமை உடையவர்கள் கிராமங்களிலிருந்து, நகரங்களுக்கு குடியேறுவதை தடுப்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இந்த திட்டம் ஈரோடு, நாகை, நாகர்கோவில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தூத்துக்குடி, தேனி, உளுந்தூர்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் முழு நேர திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 27 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதி உதவியுடன் பகுதிநேர பயற்சியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்கள் மாவட்ட திட்ட அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். சுயவேலை வாய்ப்புகளுள்ள ஆறு மாதம் முதல் ஒரு வருட கால 23 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் சேர குறைந்த பட்ச கல்வித்தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. பயிற்சிக் காலத்தில், உதவித் தொகையான மாதம் ரூ.300/-ம் பயிற்சி முடிந்தவுடன் சுயமாக தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக ரூ.600/- பெறுமானமுள்ள கருவிப் பெட்டியும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்சமயம் 265 ஊரக இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதுவரையில் 23,251 ஊரக இளைஞர்கள் இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்:**

தொழிலாளர்கள் பயன பெற மாலை நேர வகுப்பு திட்டத்தினை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. பல்வேறு பணிமனைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கருத்தியல் அறிவு கற்றுத் தருவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். தொழிற்சாலை மிகுந்துள்ள பகுதிகளான வடசென்னை, கிண்டி, அம்பத்தூர், கோவை, மதுரை, மேட்டூர் அணை, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய 8 இடங்களிலுள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில்



1997 ஏப்ரல் 16]

இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொழிலாளர்கள் கருத்தியல் அறிவு பெறும் வாய்ப்புகள் மிகுதியாக உள்ளதால், இத்திட்டம் தொழிற் நிறுவனங்களின் திருப்திகரமான பாராட்டினை பெற்றுள்ளது. ஆண்டுதோறும் 1,925 தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகிறார்கள். இதுவரையில் 13,112 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள்.

**தொழிற்பிரிவுகளை மாற்றியமைத்தல்:**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில், வேலைவாய்ப்புகள் அதிகம் இல்லாத தொழிற்பிரிவுகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக வேலைவாய்ப்புகள் மிகுந்துள்ள தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை பலப்படுத்துதல்:**

புதிய தொழில் நுட்ப செயல் திறன் உள்ள கைவினைஞரின் தேவை பெருகி வரும் இந்நாளில் தொடர்ந்து மாறிவரும் தொழில் நுட்ப உத்திக்கு இணையாக தொழிற் பயிற்சி நிலையத்தில் புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தி பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இவ்வரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. நாட்டில் நிகழும் தொழிற்நுட்ப வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு மகளிருக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்க, குறுகிய கால பயிற்சிகளான அச்சுத் தொழிற்பிரிவு (Screen printing), ஏற்றுமதி ஆயத்த ஆடைகள் தையல் பயிற்சி, டெஸ்க்டாப் பப்ளிஷிங் ஆப்பரேட்டர் பயிற்சி போன்றவைகள் ஈரோடு, கிண்டி (மகளிர்) அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சமீபகாலத்தில் குழைவியல்பு (Plastic) தொழிற்பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் மிகுதியாய் உள்ளதைக் கருத்தில் கொண்டு குழைவியல் செய்முறை பணியாளர் பயிற்சி (Plastic Processing Operator Trade) கோயம்புத்தூர், கிண்டி, மதுரை, கடலூர் மற்றும் சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கிராமங்களில் குடிநீர்க் குழாயைப் பழுது பார்த்தல், மின் இணைப்புகள் பொருத்துதல் மற்றும் விவசாய கருவிகளைப் பழுது பார்த்தல், பராமரித்தல் போன்ற

[1997 ஏப்ரல் 16

பணி[illegible] அருகிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய பயிற்றுநர்களின் மேற்பார்வையில் பயிற்சியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

சமீப காலத் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கேற்றாற்போல் பயிற்சியாளர்களுக்கு கணினியின் உதவியால் கட்டுப்படுத்தப்படும் நவீன இயந்திரங்களில் (Computerised Numerical Controlled Machines) பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு அதன்படி சென்னை, கோயம்புத்தூர், ஓசூர், மதுரை, திருச்சி மற்றும் வேலூர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அவைகள் நிறுவப்பட்டுள்ளன. மற்ற தொழிற் பயிற்சி நிலையங்களுக்கும் இந்நவீன இயந்திரங்கள் படிப்படியாக நிறுவப்பட உள்ளன.

சென்னை மாநகரைச் சுற்றிலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாட்டில், சென்னை, தோல் சம்பந்தப்பட்ட தொழில் வளர்ச்சிக்கு மையமாகவும், தோல் பொருள்கள் தயாரித்து அவற்றை ஏற்றுமதி செய்யும் முக்கிய நகரமாகவும் திகழ்கிறது. சென்னைக்கருகில் நிறுவப்பட்டுள்ள வெளிநாட்டு ஏற்றுமதி மையத்தில் [illegible]ால் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. எனவே தோல் ஆடைகள் தைத்தல் என்னும் தொழிற் பிரிவில் மகளிருக்கு குறுகிய கால பயிற்சி அளித்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகுதியாகக் கிடைக்கும் என்பதனைக் கருத்தில் கொண்டு, கிண்டி, மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தோல் ஆடைகள் தைத்தல் தொழிற் பிரிவு புதிதாக அறிமுகப்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

செய்முறை பயிற்சிகளை பயிற்சியாளர்கள் மிகத் துல்லியமாகச் செய்வதற்கு ஏதுவாக தேவைப்படும் கைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் புது[illegible]கப்படல் வேண்டும். எனவே சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டு தேய்ந்த மற்றும் வழக்கொழிந்த, பழுதடைந்த கைக்கருவிகள் மாற்றம் செய்யப்பட்டு புதியவைகள் கொள்முதல் செய்யப்பட்டு 25 தொழிற் பயிற்சி நிலையங்களில் வழங்கப்பட்டுள்ளன.

**தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல்:**

தொழில் நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, நவீன நுண்கருவிகள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருவதால் வாழ்வியல் பயிற்சி மேம்பாட்டுத் திட்டம் முதலில் அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டம்/சர்வதேச தொழிலாளர் நிறுவன உதவியால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம்



1997 ஏப்ரல் 16]

தொழிற்சாலை பணியாளர்களின் செயல் திறனை மேம்படுத்திடும் வகையில் நவீன நுண்கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்களைக் கையாளவும், பராமரிக்கவும் தேவையான மேம்பட்ட தொழில் நுட்பவியலை வழங்குகிறது. இத்திட்டம் மேற்கொண்டு 1981-82-ம் ஆண்டில் கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் 1988-ம் ஆண்டில் ஓசூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டது. இதுநாள்வரை இத்திட்டத்தின்கீழ் 9,800 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். தற்போது 80 தொழிலாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்:**

தொழிற் பழகுநர் பயிற்சி, தொழிற் பழகுநர் சட்டம் 1961-ன் கீழ் 1963-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் நிறுவனங்களில் மாநில தொழில் பழகுநர் ஆலோசகரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற் பழகுநர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தொழிற் பயிற்சியின் தொடர்ச்சியாகும். சீரான முறையில் தொழிற் பயிற்சியை இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தி தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அத்தொழிற் நிறுவனங்களில் செய்முறை பயிற்சியும் மற்றும் தொடர் அறிவுரை மையங்களில் கருத்தியல் தொடர் அறிவுரை வகுப்பும் நடத்தப்படுகிறது. இத்தொழில் பழகுநர் பயிற்சிக் காலம் 6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை தொழில் பிரிவுகளைப் பொறுத்து அமைகிறது. இப்பயிற்சி காலத்தின் முடிவில் அகில இந்திய தொழிற் பழகுநர் தேர்வு நடத்தப்பட்டு தொழிற் பழகுநர் சான்றிதழ் வெற்றி பெற்றோருக்கு வழங்கப்படுகிறது.

11 தொடர் அறிவுரை மையங்களில் தொழிற் பழகுநர் சட்டம் அமலாக்கம் செய்யப்படுகிறது. இதுவரை 1,46,286 தொழிற் பழகுநர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தனர். தற்போது 2,07[illegible] தொழிற் நிறுவனங்களில் 15,800 தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**பழங்குடியினர் துணைத் திட்டம் :**

பழங்குடியினர் துணைத் திட்டம், விழுப்புரம்-ராமசாமி படை யாச்சியார் மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினரின் ச[illegible]

[1997 ஏப்ரல் 16

பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு எளிதில் வேலைவாய்ப்புகள் கிட்டும் சில தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் தொழிற் பயிற்சி நிலையம் பழங்குடியினர் மட்டும் பயன்பெறுவதற்கு 80 பயிற்சியாளர் இருக்கையுடன் 1986-87-ல் ஆரம்பிக்கப்பட்டது. கம்மியர் (டீசல்), கம்மியர் (மோட்டார் வண்டி) மற்றும் கம்பியாள் போன்ற தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பழங்குடியினர் நலனில் மிகுந்த அக்கறையுள்ள இவ்வரசு விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் கல்ராயன் மலைத் தொடரிலுள்ள கரியலூரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நிதி உதவியால் மைய அரசு தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.14.78 லட்சம் செலவில் பழங்குடியினருக்கென வாழ்வியல் பயிற்சி நிலையம் ஒன்றினைத் தொடங்க இசைவு அளித்துள்ளது. இந்நிலையத்தில் பழங்குடியினர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெறத்தக்க சில தொழிற் பிரிவுகளில் குறுகிய காலப் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**உலக வங்கி நிதி உதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டம்:**

பல்வேறு தொழில்களில் மனித ஆற்றலின் தேவைக்கேற்ப தற்போது உள்ள பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கமுடன் உலகவங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் மேம்படுபாட்டுத் திட்டம் செயலாக்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் ரூ.21,74.41 இலட்சம் செலவில் ஒன்பது திட்டங்கள் மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களாக 1989-90 முதல் 1995-96 வரை ஏழு ஆண்டுகளில் செயல்படுத்த மைய, மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன. (இத்திட்டம் 31-12-1996 வரை நீடிக்கப்பட்டது) தற்போது இத்திட்டம் மேலும் ஓர் ஆண்டுக்கு அதாவது 31-12-1997 வரை ரூ.16,55.54 இலட்சம் கூடுதல் நிதியுடன் நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய, மாநில அரசுகள் சரிசமமாக செலவிட பொறுப்பேற்றுள்ளன. இத்திட்டத்தில் கைவினைஞர் பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, மகளிர் வாழ்வியல் தொழிற் பயிற்சி மற்றும் திறமைமிகு தொழிலாளருக்கான வாழ்வியல் மேம்பாட்டுபயிற்சி ஆகியவைகள் உள்ளடங்கியவைகளாகும். இத்திட்டங்களின் விவரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.



1997 ஏப்ரல் 16]

**1. மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள்:**

தொழிற்சாலைகளில் திறமை மிகுந்த மற்றும் திறமை குறைவான மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மகளிரின் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தினை நிறைவானதாகவும் தாமுள்ளதாகவும் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதனை நிறைவேற்றிட ஏற்கெனவே உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர ஐந்து மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் சேலம், புள்ளம்பாடி, கோவை, மதுரை மற்றும் அம்பத்தூரில் மகளிர் தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கத் துவக்கப்பட்டுள்ளன. இதனால் 742 மகளிர் பயிற்சியாளர்கள் ஆண்டு தோறும் பயன் அடைந்து வருகின்றனர்.

**2. இயந்திர பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை நிறுவுதல்:**

தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு அவற்றின் மூலம் பயிற்சியின் தரத்தினை உயர்த்திட சென்னை, கோவை, திருச்சி, பேட்டை, மதுரை மற்றும் சேலம் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு இயந்திர பராமரிப்பு மையமாக ஆறு மையங்களும், அம்பத்தூரில் மாநில அளவிலான பராமரிப்பு பணிமனை ஒன்றும் நிறுவப்பட்டு உள்ளன. தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள பழுதடைந்த இயந்திரங்கள், முன்பு தனியார் தொழிற் சாலைகளில் பழுது பார்க்கப்பட்டு வந்த நிலைமாறி தற்போதுள்ள பராமரிப்பு மையங்களிலும் பணிமனையிலேயே அவைகள் உடனுக்குடன் பழுதுபார்க்கப்பட்டு சீர் செய்யப்படுகின்றன.

**3. தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம்:**

மாறிவரும் தொழிற்சாலைகளின் தேவைக்குத் தகுந்தாற்போல் தேர்ச்சி பெற்ற கைவினைஞர்கள் மிகுதியாகத் தேவைப்படுவதினைக் கருத்தில் கொண்டு புத்தம் புதிதான பல தொழிற்பிரிவுகள் இவ்விரிவாக்கத் திட்டத்தின்கீழ் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கம்மியர் இயந்திரப் பராமரிப்பு, பம்ப் மெக்கானிக், கம்மியர் கருவிகள், கம்மியர் பராமரிப்பு (இரசாயன சாதனம்) கம்மியர் மின்னணுவியல், கணினி போன்ற 25 புதிய நவீன தொழிற்பிரிவுகள் தேவையின் அடிப்படையில் 16 தொழிற்பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் ஆண்டுதோறும் 848 பயிற்சியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**4. வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்ட விரிவாக்கம்:**

புதுமைமிகு இயந்திரங்களைக் கையாளுவதில் தேவையான மேம்பட்ட தொழில் நுட்பவியலைத் தெரிந்து கொள்ளும் வகையில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேம்பட்ட பயிற்சி அளிக்கத் தேவையான வசதிகள் செய்யப்பட்டு கோவை தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் மூன்று பயிற்சி பிரிவுகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**5. இயந்திரங்களை நவீனப்படுத்துதல்:**

பதினைந்து முதல் இருபது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வரும் 31 தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவைகள் வழக்கொழிந்தவைகளாகவும், பழுதுபட்டவைகளாகவும் ஆகிவிட்டன. எனவே அவைகளை நவீனப்படுத்தி பழையனவற்றை மாற்றி அமைத்து பற்றாக்குறைவான இயந்திரங்கள் புதிதாக படிப்படியாகக் கொள்முதல் செய்யப்பட்டு பயிற்சியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் புதுமை மிகு நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்து பயிற்சியாளர்களுக்கு மேம்பட்ட தொழிற் பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**6. ஒலி, ஒளி சாதன வசதிகள் அமைத்தல்:**

பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உபயோகமானதாகவும், திறம்பட அமையவும் வகுப்புகளில் கற்றுக் கொடுக்கப்படும் பாடப்பயிற்சிகளும் திறம்பட அமையவும், ஒலி, ஒளி சாதனங்கள் படிப்படியாகக் கொள்முதல் செய்யப்பட்டு 38 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**7. அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்கள் நிறுவுதல்:**

வேதியியல் மற்றும் தோல் பிரிவுகளைக் கொண்ட அடிப்படைப் பயிற்சி மையம் ஒன்று இராணிப்பேட்டையிலும், உணவகம் மற்றும் உணவளிப்பு தொழிற் பிரிவுகளைக் கொண்ட மற்றொரு அடிப்படைப் பயிற்சி மையம் அம்பத்தூரிலும் ஆக இரு அடிப்படைப் பயிற்சி மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. பெருமளவில் தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறும் வகையில் வடசென்னை, அம்பத்தூர், இண்டி மற்றும் கோவை ஆகிய நான்கு தொடர் அறிவுரை மையங்களும் விரிவு





படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 2160 தொழிற் பழகுநர்கள் அடிப்படைப் பயிற்சி மையம்/தொடர் அறிவுரை மையங்களில் பயன் பெறுகின்றனர்.

**8. மாநில திட்ட செயலாக்கப் பிரிவு:**

உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாநில திட்ட செயலாக்கப்பிரிவு ஒன்று தனியாக ஆணையரகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. செயலாக்கப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களைச் செவ்வனே அமல்படுத்தி அவைகளைத் திறம்பட நடைமுறைப்படுத்துதல், பல்வேறு பயிற்சி நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
216831
சென்னை 600 008
V211, 3 '497
N 97. 31.

அத்தியாயம் - 12

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1956 கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனமாகும். அது முழுமையாக தமிழக அரசுக்குச் சொந்தமானது.

அயல்நாட்டில் பணிபுரிய விரும்பும் மனுதாரர்கள் அந்நாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெற உதவுவதற்காக அரசால் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. அதனுடைய அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 50 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் இதுவரை ரூ.25 இலட்சமாக இருந்தது. கடந்த ஆறு ஆண்டுகளாக இந்நிறுவனம் லாபத்தில் இயங்கி வந்துள்ளது. 31-3-1996 நிலவரப்படி இந்நிறுவனத்தின் சேர்ந்து வந்த ஆதாயம் ரூ.8.89 இலட்சம் ஆகும். செலுத்தப்பட்ட மூலதனமான ரூ.25 இலட்சத்தில் ரூ.10 இலட்சத்தை தவணைக் கடனாக மாற்றுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி செலுத்தப்பட்ட மூலதனமான ரூ.25 இலட்சத்தை ரூ.15 இலட்சமாகக் குறைத்து மைய அரசு ஆணையிட்டுள்ளது.

ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 31-1-1997 வரை இந்நிறுவனம் 4,810 மனுதாரர்களை அயல்நாடுகளில் வேலைவாய்ப்பில் அமர்த்தியுள்ளது. அதன் விவரங்கள் செயலாக்க நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. 1-4-1996 முதல் 31-1-1997 வரையில் வெளிநாடுகளில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ள 182 மனுதாரர்கள் இதில் அடங்குவர்.

அயல்நாடுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் வேலையளிப்போர்களிடம் இந்நிறுவனம் நற்பெயரை ஈட்டியுள்ளது. சவூதி அரேபியாவிலுள்ள சுகாதார அமைச்சகம் இந்நிறுவனத்தின் வாயிலாக மருத்துவர்களை, பல ஆண்டு[illegible] பணியில் அமர்ந்[illegible] வருகிறது. சமீபத்தில் குவைத் நாட்டின் மின்சாரம் மற்றும் குடிநீர் அமைச்சகம் கணிசமான எண்ணிக்கையிலான மின்சாரப் பொறியாளர்கள் மற்றும் தொழில் திறனுள்ள பணியாளர்கள் காலியிடங்களை நிரப்ப, சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் அலுவலகத்தில் நேர்முகப் பேட்டி நடத்தி 70 மனுதாரர்களைத் தேர்வு செய்துள்ளது. அவர்கள் வேலைக்காக குவைத் நாட்டுக்குச் செல்ல ஆணை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து



31-1-1997 வரை ரூ.14.15 இலட்சம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டியுள்ளது.

தனது பணியைப் பரவலாக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் விமான பயணச்சீட்டு விற்பனை செய்யும் பணியைத் துவக்கியுள்ளது. தவிர அதன் மனுதாரர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்நிறுவனம் 'பாஸ்போர்ட்' எடுத்துக் கொடுக்கும் பணியையும் செய்கின்றது.

மனுதாரர்களைத் தேர்வு செய்யும் பணியைத் திறமையாகவும், [illegible]ரைவாகவும் முடிக்க கணினிமயமாக்கப்பட்ட புள்ளி விவர வங்கியை [illegible]நிறுவனம் பராமரித்து வருகிறது.

216831

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and [illegible]ed by the Director of Stationery and Printing, Chennai-600 002.